
வல்லமை தந்துவிடு

ரமணிசந்திரன்



வல்லமை தந்துவிடு

ரமணிசந்திரன்

அருணோதயம்
புதிய எண். 5,
பழைய.எண்.3, கௌடியாமடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	: வல்லமை தந்துவிடு
ஆசிரியர்	: ரமணிசந்திரன்
மொழி	: தமிழ்
முதல் பதிப்பு	: ஜூன், 2000
இரண்டாம் பதிப்பு	: ஜனவரி, 2003
மூன்றாம் பதிப்பு	: அக்டோபர், 2004
நான்காம் பதிப்பு	: மே, 2006
ஐந்தாம் பதிப்பு	: செப்டம்பர், 2007
ஆறாம் பதிப்பு	: டிசம்பர், 2008
ஏழாம் பதிப்பு	: ஜூன், 2010
எட்டாம் பதிப்பு	: ஆகஸ்ட், 2011
உரிமை	: ஆசிரியருக்கு
மொத்தப் பக்கங்கள்	: 288
நூலின் அளவு	: 1 x 8 கிரவுன்
தாள்	: 11.6 Kg. வெள்ளைத் தாள்
அச்சு எழுத்து	: 10 புள்ளி
பைண்டிங்	: சாதா அட்டை
நூல் வெளியிடுவோர்	: அருணோதயம் 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14.

விலை: ரூ.100.00

அச்சிட்டோர்	: ஜீ.எம்.கிராபிக்ஸ் சென்னை-14.

பதிப்புரை

திருமதி ரமணி சந்திரன் இன்றைய மிகச் சிறந்த எழுத்தாளர் வரிசையிலே மதிக்கத் தக்கவர். எண்ணற்ற வாசகர்களின், வாசகிகளின் மனக்கோயிலில் வீற்றிருப்பவர். அன்றாடக் குடும்ப நிகழ்வுகளைச் சொல்லி மக்கள் மனங்களை ஈர்க்க முடியும் என்பதை நன்கறிந்தவர்.

படிப்பவர்களை, படித்த நாவல்களை திரும்பத் திரும்ப படிக்கத் தூண்டும் ஆற்றல் படைத்தவர்.

"உங்கள் நாவல்களைப் படித்தால் எங்கள் நீண்ட நாள் குடும்பப் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்ந்தது"

'உங்கள் எழுத்துக்களைப் படித்ததால் கவலைகள் மறந்து மகிழ்வுடன் கூடிய மன நிறைவு ஏற்படுகிறது.' என்று பல ஆயிரம் வாசகர்கள் திரும்பத் திரும்ப எழுதும் கடிதங்களே இதற்கு எடுத்துக்காட்டாகிறது.

எங்களுக்கும் இதுபோன்ற ஆசிரியர்களை அறிமுகப்படுத்தி, நாளடைவிலே வெற்றி கண்ட பெருமை மன நிறைவு தருகிறது.

நல்ல எழுத்துக்களுக்கு நாடறிந்த வரவேற்பு உண்டு என்பதற்கு ரமணிசந்திரன் நாவல்கள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தொடர்ந்து படியுங்கள், மகிழ்ந்து எழுதுங்கள்.

— அருணோதயம் அருணன்

வல்லமை தந்துவிடு

1

"அம்மா!" என்று அழைத்தபடி, சட்டைக்கையை மடித்து விட்டவாறு, மாடியிலிருந்து இறங்கி வந்த இளைய மகனை, ஏறிட்டு நோக்கிய கோகிலாவின் பார்வையில் பெருமிதம் இருந்தது! கூடவே சிறுவியப்பும்!

எப்படி? இது எப்படி சாத்தியம்?

பார்க்கப் போனால், பெரியவன் சத்யாகர்தான், வித்யாதரை விட நல்ல நிறம்! கண், மூக்கு, வாய், என்று எதிலும் குறைவற்ற முகம். திருத்தப்பட்டவைபோன்று, நீண்டுவளைந்த புருவங்கள் வேறு! உயரமும் கிட்டத்தட்ட ஒரே அளவுதான்!

நிறம் மங்கிவிடும் என்று, சத்யாகர் வெயிலில் நின்றுவிளையாடும் விளையாட்டுகள் எதிலும், படிக்கும் காலத்தில் கூடக் கலந்து கொண்டது கிடையாது. இப்போதும் அதே போலத்தான்.

திருமணமாகி, மூன்று பிள்ளைகளுக்கு, அப்பா ஆகிவிட்டவன் என்று இப்போதும் முகத்தைப் பார்த்துச் சொல்ல முடியாதபடி ஒரு குழந்தை முகம் அவனுக்கு! சற்றே சதைப் பிடிப்பான குழந்தை! அமைதியான குழந்தை!.

ஆனால், இளையவனைக் குழந்தைத் தனத்துடன் இணைத்துப் பார்க்கவே முடியாது! விளையாட்டுகளில் விருப்பம் அதிகம். ஆனால், டென்னிஸ் ஆடித்தான். கறுத்தான் என்பதற்கில்லை! பிறக்கும் போதே நிறம் மட்டுதான். கறுத்து அடர்ந்து, நீண்டு, ஏறி இறங்கிய

புருவங்கள்! நீளமான கண்கள்! மூக்கு, உதடு எல்லாம் அழுத்தம் காட்டுபவை! கிள்ளி எடுக்கச் சதையில்லாதது போலத் தோன்றினாலும், ஒல்லி என்று சொல்ல முடியாது! முறுக்கேறிய நாண்போல ஒரு நிமிர்வு!

ஒரு வேளை, அதுதான், வித்யாதருக்கு அந்தக் கம்பீரத்தைத் தந்ததோ?

"என்ன அத்தை? உங்கள் இரண்டாவது பிள்ளைக்குத் தலையில் கொம்பு ஏதாவது முளைத்துவிட்டதா? அப்படிப் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்களே!" என்று பரிகாசமாய்க் கேட்டபடி, பக்கவாட்டு அறையிலிருந்து வந்த மருமகளை சத்யாகருடைய மனைவியைத் திரும்பிப் பார்த்த கோகிலத்துக்கு உள்ளம் சோர்ந்தது.

இவன் எங்கோ வெளியே கிளம்பப் போகிறான்!

"அதெல்லாம் ஒன்றும் இல்லை பாமா! வித்யா கூப்பிட்டான்! என்ன என்று பார்த்தேன்!" என்று பதிலுரைத்துவிட்டு, மீண்டும் மகனிடம்திரும்பி," என்னடா, ஏன் கூப்பிட்டாய்! சிற்றுண்டி எடுத்துவைக்கச் சொல்லட்டுமா? அலுவலகத்துக்குச் சீக்கிரமாய்ப் போகப் போகிறாயா?" என்று கேட்டபடி உட்புறம்திரும்பினாள்.

"அலுவலகத்துக்கா? எங்கே, கையில் ப்ரீஃப் கேசைக் காணோமே! அய்யய்யோ! இன்றைக்கு நீங்கள் அலுவலகம் போகவில்லையா, வித்யாதர்! அப்புறம் வேலை எப்படி நடக்கும்? மாமா திட்டப் போகிறார்!" என்றாள் பாமா, கண்களை உருட்டி.

"ஒன்றும் மாட்டார்! நேற்று என் மேஜையில் ஒரு வேலை கூட பாக்கி இல்லாமல் முடித்துவிட்டுத்தான் கிளம்பியிருக்கிறேன்...."

"இன்றைய வேலை?"

வெறுமனே தோளைக்குலுக்கினான் வித்யாதர்.

"அப்படி என்றால் என்ன அர்த்தம்? இன்றைக்கு உங்களுக்கு அலுவலகத்தில் வேலையே இருக்காதா?" என்று, பாமா விடாமல் கேட்டாள்.

"ஒன்றிரண்டு அவசரவேலை நேர்ந்தால், சத்யா பார்த்துக் கொள்வான்! மற்றது நான் வந்து..." என்றவனை இடைமறித்து, "நினைத்தேன்!" என்றாள் பாமா

"என்ன நினைத்தீர்கள்?"

"இவர் சாது! என்ன சொன்னாலும் 'சரி சரி' என்று கேட்டுக் கொள்கிறவர்! அதனால் உங்கள் வேலையை இவர்தலையில் கட்டிவிட்டு ஜாலியாகச் சுற்றப் போகிறீர்கள் என்று நினைத்தேன்! சரியாகத்தான் இருக்கிறது!"

"சத்..." என்று வித்யாதர் தொடங்கியபோது, "என்னடா, சாப்பிட வா என்றேனில்லையா? வாயேன்!" என்று அழைத்தாள் தாயார்.

தாயின் முகத்தில் இருந்த சிறு கெஞ்சலைக் கவனித்து ஏற்றுத் தலையாட்டிவிட்டு, "அண்ணி, இன்றைக்கு எனக்கு ஃபாக்டரி பார்க்க வேண்டிய நாள். அதனால், எப்படியும் அலுவலகத்தில் இன்று முழுவதும் பார்ப்பது அண்ணன்தான். நான் போகாததால் அவனுக்குத் தனி வேலை என்று இல்லை!" என்று அமைதி காத்து விளக்கினான், வித்யாதர்.

"நீங்கள் தொழிற்சாலைக்கும் போகவில்லையே! அங்கே தகராறு வந்தாலும் இவர்தானே பார்த்தாக வேண்டும்?"

"அங்கேயிருந்து தகராறு என்று ஒன்றும் வராது!"

"வந்தால்?"

எரிச்சலைக் காட்டாதிருக்க, வித்யாதர் சிரமப்பட வேண்டியிருந்தது. அவன், தொழிற்சாலை சென்றால், காக்கி உடுப்பை அணிந்து கொண்டு தொழிலாளிகளோடு

சேர்ந்து வேலை செய்வான். அவர்களது கஷ்ட நஷ்டங்கள், குறை நிறைகள் மனப்போக்கை அறிந்து கொள்வதுதான் அதன் முக்கிய நோக்கம். ஆனால், இது போல் சத்யாகர் செய்யமாட்டான். அவனுக்கு ஏசி அறையில் அமர்ந்து, அழுக்குப் படாமல் வேலை செய்வதுதான் பிடிக்கும்! இதை வாய்விட்டுச் சொன்னால், வீட்டில் வீண்தகராறுவரும்! தாய்மனம் வருந்தும்! எனவே, சினத்தை அடக்கிக் கொண்டு" இல்லை அண்ணி அங்கு பிரச்சினை ஏற்படாமல் 'ஓர்க்ஸ் மானேஜர்' பார்த்துக் கொள்வார். அதனால் வீணாகக் கவலைப் படாதீர்கள்!" என்று அமைதியாகவே முடித்தான்.

"பின்னே நீங்கள் மட்டும் அங்கே ஏன் போகிறீர்கள்?"

அது உங்களுக்குப் புரியாது அண்ணி! விடுங்கள்!"

"புரியாமல் போவானேன்? சத்யா ஏமாளி! அவர் தலையில் வேலையைக் கட்டிவிட்டு, ஃபாக்டரிக்குப் போகிறேன் பேர்வழி என்று அவ்வப்போது ஜாலியாகச் சுற்றுகிறீர்களாக்கும்! ஊம்! இவருக்கு என்றைக்குத்தான்.." என்று கையைத் திருப்பிப் பார்த்தவள். பக்கவாட்டு அறையை நோக்கிக் குரல் கொடுத்தாள்." என்ன சத்யா, சின்னது பாலைக் குடித்து முடித்ததா இல்லையா? இல்லையென்றால், பாட்டிலோடு அவனைத்தூக்கி வந்து அத்தையிடம் கொடுத்து விட்டுக் கிளம்புங்கள்! நேரம் ஆகிறது!"

"சத்யாவின் குணம் எங்கள் எல்லோரையும் விட உங்களுக்குத்தான் நன்றாகத் தெரிகிறது, அண்ணி!"

மைத்துனனின் குரலில் இருந்து கேலியைக் கவனியாமல், "பின்னே? கணவனைப் பற்றி மனைவிக்குத்தானே முழுமையாகத் தெரிய முடியும்!" என்று பெருமை பேசியபாமா; சட்டென முகம் மாற, "அவரைச் சத்யா என்று சொல்லாதீர்கள் என்றேன்னில்லையா? நானும்

சத்யா என்கிறேன் நீங்களும் அப்படிக் கூப்பிட்டால் நன்றாகவே இல்லை!" என்று உதட்டைப் பிதுக்கினாள்.

"அண்ணி! நீங்கள் இங்கு வந்து ஆறே ஆண்டுகள் தான் ஆகின்றன! அதற்குமுன்பாக, இருபத்து மூன்று ஆண்டுகள், அவன் இங்கே சத்யாதான்! உங்கள் அழைப்பு, தனியாக இருக்க வேண்டுமானால், சது, சத்துமா, என்று நீங்கள் வேறே பேர் வைத்து அவனைக் கூப்பிடுங்கள்! டார்லிங், டியர் என்றாலும் சரி தான்! இல்லை, பழைய காலத்திரைப் படத்தில் வருவது போலப் 'ப்ராணநாதா' என்று மூக்கால் அழைத்தால் கூட நாங்கள் ஆட்சேபிக்கமாட்டோம்!" என்று வித்யாதர் சிரிக்க, பாமா முகத்திலும் புன்னகை அரும்பியது!

"சே! நான் ஒன்றும் அப்படியெல்லாம் கூப்பிட-மாட்டேன்!" என்று அவளும் சிரித்தாள்.

சத்யாகரும் ப்ராமில் குழந்தையோடு வந்துவிட, "அத்தை, பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள்! 'நாங்கள்', ஷாப்பிங் போய் விட்டு வருகிறோம்!" என்றாள்.

சங்கடத்துடன் நோக்கி, "பாமா, நீ இன்னொரு நாள் கடைக்குப் போயேன்... அல்லது மதியம் போயேன்! நான் இப்போது கோயிலுக்குக் கிளம்பிக் கொண்டு இருக்கிறேனே!" என்றாள் கோகிலா.

"கோயில் தானே, அத்தை! அதற்கு இன்றைக்குப் போனால் என்ன? நாளைக்குப் போனால் என்ன? கோயிலும், சுவாமியும் அதே இடத்தில்தான் இருப்பார்கள்! சுவலைப்படாமல் நாளைக்கே போய்க் கொள்ளுங்கள்!" என்றாள் பாமா, சற்று அலட்சியமான குரலில்.

ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு, முகம் இறுக, ஜன்னல் புறம் சென்றான் வித்யாதர்.

"கடையை மட்டும் இடத்தைவிட்டுக் கிளப்பிக் கொண்டாபோய் விடுவார்கள்? நீதான் நாளைக்கு

'ஷாப்பிங்' போயேன்!" என்றாள் கோகிலாவும், குரலில் கோபம் துலங்க.

"கடையை எடுத்து கொண்டுபோய் விடமாட்டார்கள்! ஆனால், கடையில் உள்ள சுரிதார் செட்டை வேறுயாராவது வாங்கிக் கொண்டுபோய் விடுவார்கள்! நேற்று சாயங்காலம் பார்த்துவிட்டு நளினி சொன்னாள்; காலையில் முதல் ஆளாய்ப் போய் வாங்கி விடவேண்டும்!

"கோயிலில் அபிஷேகத்துக் கொடுத்திருக்கிறேன், பாமா! நான் போயாக வேண்டும்!"

"அபிஷேகத்துக்கு இன்னொரு நாள் ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்! என்ன சத்யா, தயார்தானே? பணம் எடுத்துக் கொண்டீர்கள் அல்லவா? கிளம்புவோமா..."

"அண்ணீ, ஒருநிமிடம்! சுரிதார் செட் யாருக்கு?"

"ஏன் எனக்குத்தான்! நன்றாய்த்தான் கேட்டீர்கள்!"

"அதற்கில்லை, அண்ணி! உங்கள் சினேகிதி பார்த்துச் சொன்னாள் என்று வாங்கப் போகிறீர்களே, 'சைஸ்' சரியாக இருக்குமா?"

"எல்லாம் சரியாக இருக்கும்! நான் ஃப்ரீசைஸ்தானே வாங்கப் போகிறேன்!"

"ஆனால், அதுகூட உங்களை முழுவதாகச் சுற்றி வரவேண்டுமே!" என்று வித்யாதரன் கூறிய பிறகுதான், மைத்துனன் தன் குண்டான உருவத்தைக் கேலி செய்கிறான் என்பதைப் பாமா புரிந்து கொண்டாள்!

அவள் பதில் கூறுமுன் கோகிலா இடையிட்டு, "வித்யா, சுரிதார், கமீஸ் பற்றி உனக்கு என்ன தெரியும்? அதைவிடு! நேற்றே சொன்னேனே! ஞாயிறன்று வருவதாகச் சொல்லிவிடலாமா?" என்று பேச்சை மாற்ற முயன்றாள்.

ஆனால் ஒரு சீண்டலுக்குப் பதில் சொல்லாமல்

விடுகிறவள், பாமா வாக இருக்க முடியுமா? சொன்னாள். "நான், சும்மா, என் விருப்பம் போல இருந்திருக்க வேண்டும். தாலிகட்டியவர் சொல்கிறாரே என்று இந்த வீட்டுக்காக நான் தியாகங்கள் செய்த பாவம், இந்தப் பேச்சு கேட்க வேண்டியிருக்கிறது!" என்று புலம்பினாள்.

பிள்ளைகளும், தாயுமாக மூவருமே அவளை ஆச்சரியமாய் நோக்கினர்! வீட்டில் ஒருதுரும்பு எடுத்துப் போடாதவள்! தியாகம் செய்தாளா?! அதிலும், தியாகங்கள் என்று பன்மைவேறு! வித்யாதர் கேட்டே விட்டான்." "என்ன தியாகங்கள், அண்ணி?" என்று.

"கேட்க வேறு வேண்டுமா? கஷ்டப்பட்டு மூன்று பிள்ளைகள் பெற்றிருக்கிறேனே! அதைவிடப் பெரிய தியாகம் என்ன இருக்கிறது?

"சேச்சே! பிள்ளைகள், நமக்குக் கடவுள் கொடுத்த வரங்கள், பாமா! பிள்ளை பெறுவதைப் போய் தியாகம் என்று சொல்லாதே!" என்று கோகிலா சற்று அழுத்தத்துடன் மறுத்தரைத்தாள்.

"கிழவயசு ஆகிவிட்டாலே, இப்படித்தான் அர்த்தமில்லாமல் பேசுகிறார்கள். பிள்ளையே பெறாமல் உடம்பை அழகாக வைத்துக் கொள்ளவேண்டும், குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகளாவது பிள்ளை பெற்றுக் கொள்ளக்கூடாது என்று நினைத்திருந்தேன். சத்யாவுக்கும் அதே ஆசைதான். ஆனால், நீங்கள் எல்லோரும் வீட்டில் குழந்தைகள் விளையாடுவதைப் பார்க்க ஆசைப்-படுவீர்களே என்றார்! அவர் சொல்லுக்காகச் 'சரிசரி' என்று பெற்றுக் கொண்டதற்கு எனக்கு இதுவும் வேண்டும்! இதற்கு மேலும் வேண்டும்! என்ன? நீங்கள் பிடித்துக் கொள்ளாவிட்டால் 'பாரம்' விழுந்துவிடுமா? விட்டுவிட்டு வாருங்கள்! பணம் எடுத்துக் கொண்டீர்கள்தானே? கிளம்புங்கள்!" என்றபடி, அவள் மடமடவென்று

வாயிலுக்குச் சென்று விட, அவளுடைய கணவனும், தாயிடம் ஓர் அசட்டுப் பார்வையுடன் கூடிய தலையசைப்புடன் மனைவியைப் பின்தொடர்ந்தான்.

"ஊப்... என்று, அடக்கி வைத்திருந்த மூச்சை வெளியேற்றினான், வித்யாதரன். தாயிடம் திரும்பி, "இதற்கு மேலும், இன்னொரு மருமகளைக் கொண்டுவரத் துணியும் உங்கள் தைரியத்தை என்ன சொல்லிப் பாராட்டுவது என்றே எனக்குத் தெரியவில்லை, அம்மா! 'உலகமகா தைரியசாலி' என்று ஏதேனும் பட்டம் உண்டு என்றால், அதைப் பெறும் தகுதி, முழுக்க முழுக்க உங்களுக்கே... உங்களுக்கு மட்டுமேதான் இருக்கிறது" என்றான் கிண்டலாக!

மகனை ஒருதரம் கூர்ந்து நோக்கி, "இன்றும் மாலியை நினைத்துக் கொண்டு இருக்கிறாயாடா!" என்று கேட்டாள் அன்னை "அம்மா!" என்றான் வித்யாதரன் ஆத்திரமாக!

2

வித்யாதரின் கோபம், அவன் தாயை வருத்தமோ, எரிச்சலோ அடையச் செய்யவில்லை! மாறாகக் கோகிலாவின் முகத்தில் ஏமாற்றம் பரவியது! "உன் கோபமே சொல்லுகிறதே, நீ அவளை மறக்க வில்லை, என்று!" என்றாள் சோர்வுற்றகுரலில்.

தலையசைத்து, "எல்லோரும், அந்தக்காலத்திலிருந்து சொல்லுகிறார்கள்! என்னவோ, பெற்றவளுக்குத்தான், பிள்ளைகளைப் பற்றி நன்றாகத் தெரியும், அப்படி, இப்படி என்கிறார்கள்! சொல்லுங்கள் அம்மா, நிஜமாகவே நான், நீங்கள் பெற்ற பிள்ளைதானே?" என்று சந்தேகப் பட்டான் மகன்.

"என்..ன்னடா இப்படியெல்லாம் உளறுகிறாய்?!" என்றாள் தாய் சலிப்புடன்.

"பின்னே இத்தனை ஆண்டு காலத்தில் என்னைப் பற்றி உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லையேம்மா! அம்மா, நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்! எனக்கு.. இப்போது... மாலி மேல் ஒருகோபமும் இல்லை! இந்தக் காலப் பெண்களைப் பற்றி எனக்குப் புரிய வைத்ததற்காக அவளிடம் ஓர்ளவு நன்றி உணர்ச்சிதான் என் மனதில் இருக்கிறது! 'தாங்க் காட்' என்பது போல, அவ்வப்போது, 'தாங்க் மாலி!' என்று மனதிற்குள் நினைத்துக் கொள்கிறேன். அவ்வளவே!"

"பின், ஏன், கோபப் பட்டாயாம்!" என்று மடக்க முயன்றாள் அன்னை.

"என் கோபம் உங்கள் மீது! இன்னமும் நான் தகுதியற்ற அந்தப் பெண்ணை நினைத்துக் கொண்டு இருப்பதாக, என்னைத்தப்பாக எடைபோட்டு விட்டீர்களே, என்று! சொல்லுங்கள் அம்மா, நான் என்ன, அவ்வளவு பெரியமுட்டாளா?"

சற்றுயோசித்துவிட்டு, "இல்லை என்று நீ இலகுவாக நிரூபித்து விடலாம்!" என்று முற்றுவலித்தாள் அன்னை.

"ம்ம்...? எப்படியாம்!"

"ஞாயிற்றுக்கிழமை அவர்கள் வீட்டுக்கு என்னோடு வரவேண்டும்!"

"நோ!" என்றான் வித்யாதர் ஒற்றைச் சொல்லாக.

"ஏன், கண்ணா! நல்ல குடும்பம்! ஒரேபெண்! நல்ல அழகு வேறு..."

"வேறே வினையே வேண்டாம்!" என்ற மகனின் பேச்சுக் காதில் விழாதது போலக் கோகிலம் தொடர்ந்தாள். "இரண்டு ஆண்டுகளாகக் காத்திருக்கிறார்கள்..."

"நானா காத்திருக்கச் சொன்னேன்?" என்று தோளைக் குலுக்கினான் மகன்!

தன் விட்டேற்றியான பதிலில், தாயின்முகம்வாடுவது கண்டு, "அம்மா, உங்களுக்கு ஏன் புரியமாட்டேன் என்கிறது? இந்த வீடு ரணகளம் ஆக வேண்டுமா! அதைவிட, இன்னொருத்தி வந்து, உங்களை, இப்படிக் கொத்திப் பிடுங்குவதைச் சகித்துக் கொண்டு இருக்க, என்னால் முடியாது! கோவிலும் சாமியும் இடத்தை விட்டு ஓடிவிட மாட்டார்களாமே! உங்கள் முகத்துக்காகத்தான் பேசாமல் இருந்தேன்; தெரியுமா? பார்வையாலேயே, பயங்கரமாகக் கெஞ்சினீர்களே?" என்று, கிண்டலில் முடித்தான்.

"அதாவது, உன் மனைவி வந்து ரணகளம் ஆக்குவதைவிட, நீயே இந்த வீட்டைக் குருசேஷத்திரம் ஆக்கிவிடப் போவதாகச் சொல்கிறாய்!" என்று பாயின்டைப் பிடித்தாள் பெற்றவள்!

"என்னோடு, அண்ணி, குடுமிபிடிச் சண்டைபோட முடியாதே? என் தலையைப் பாருங்கள்! முடி எவ்வளவு கட்டையாக இருக்கிறது!" என்று குனிந்து தலையைக் காட்டிவிட்டு, வித்யாதர் நகைத்தான்.

"அப்படி வேண்டுமானால் வருகிறவளை, 'டயானா' ஸ்டைலில் கூந்தல் அலங்காரம் செய்து கொள்ளச் சொன்னல் போயிற்று!" என்று பெரியவள் பதில் கொடுக்கவும், "அம்பேல்!" என்று, தோல்வியை ஒத்துக் கொண்டவனாய், மகன் கைகளை உயர்த்தினான்.

தொடர்ந்து, "பெண்களைப் பேச்சில் வெல்ல முடியாது என்று தெரியும், அம்மா! ஆனால், உங்களிடம் கூடத் தோற்றுப் போவேன் என்று நான், கொஞ்சமும், எதிர்பார்க்கவில்லை!" என்று மகன் கூறவும் கோகிலத்தின் முகம் மீண்டும் வாடியது.

பெண்களிடம் இவனுக்கு இருக்கும் இந்த வெறுப்பு, எப்போது மறையும்?

தாயின் முகவாட்டத்தைக் கவனியாதவன் போல, வித்யாதரன், 'பிரா'மில் கிடந்த குழந்தையிடம் சென்றான். அண்ணன் மகளுக்குச் சொடக்குப் போட்டு விளையாட்டுக் காட்டியபடி, உன் காலத்தில், உன் முன்னிலையில் யாரையாவது வாய் திறந்து பேச-விடுவாயோ, என்னவோ?," என்று சிரித்தான்.

"குழந்தையின் பொக்கைவாய்ச் சிரிப்பில் ஈடு பட்டு, "என் செல்லக் குட்டி!" என்று கோகிலமும் கொஞ்சினார்!" இந்தத் தங்கத்தைப் பெறுவது, தியாகமாம்! என்ன பேச்சுபாரேன்! என்று குறைப்பட்டாள்.

"அதிலும் மூன்றாவது தியாகம், அம்மா!" என்று கிண்டலாக நினைவூட்டினான் மகன்.

"போடா! நீயும் பெரியவனைப் போல, இருபத்து மூன்று வயதில் திருமணம் செய்து கொண்டு, இரண்டு பிள்ளைகளையும் பெற்றிருந்தால், உன் அண்ணி இப்படிப் பேசுவாளா? சொன்னால்; காதிலேயே வாங்க மாட்டேன் என்கிறாயே!"

"வாங்காமல், என்ன, அம்மா? உங்களுக்குத்தான் விஷயமே புரிய மாட்டேன் என்கிறது. நிறையப் பேச்சு நடந்திருக்கிறது, அம்மா! இந்தத் தறுதலைத்தம்பி, மனைவி, குடும்பம் என்று எதையும் ஏற்படுத்திக் கொள்ளப் போவது இல்லை! அதனால், ஏதோ, குடும்பம் தழைக்க நம்மாலான உதவி... ஊகூம், தியாகம்! - இந்த உதவாக்கரை கணக்குக்கும் சேர்த்துப் பெரியவர்களுக்கு அதாவது, உங்களுக்கும் .ஐப்பாவுக்கும் தேவையான பேரன் பேத்திகளை நாமே பெற்றுப் போட்டு விடலாம் என்பதுதான் திட்டம். நிஜம், .அம்மா! வேண்டுமென்றால் பாருங்கள், இன்னும் ஒன்றோடு நின்றுவிடும்! இரண்டுக்குப் பின் எப்போதும் வேண்டாம்! ஆளுக்கு இரண்டு கணக்கு! இரண்டும் இரண்டும் நாலு... கணக்கு சரிதானா?

"உளறாதே, வித்யா!"

"சந்தேகமாக இருந்தால் ஒருநாள், தனியாக, சத்யாவிடம் பேச்சுக் கொடுத்துப் பாருங்கள்!"

ஏக்கத்துடன் கோகிலா, மகனை நோக்கினாள்! "எனக்கு ஒருவாக்குக் கொடுப்பாயா, வித்யா?"

"என்ன வாக்கு?"

"ஓரேயடியாக முரட்டடியாகத் திருமணம் வேண்டாம் என்று முசுடு பிடிக்கக் கூடாது!" என்றவள், ஏதோ சொல்ல வாயெடுத்த மகனை அடக்கி, "பொறு. நான் சொல்லி முடித்து விடுகிறேன்! நீ விரும்புகிறமாதிரிப் பெண் எதிர்ப்பட்டால் இப்போதும் கூட இந்த வறட்டுப் பிடிவாதத்தினால், திருமணத்தைத் தவிர்த்துவிடக் கூடாது! சரிதானா?"

ஏதாவது கேலிபேசி, மறுத்துவிட எண்ணிய வித்யாதர், தாயின் ஏக்கம் மிகுந்த பார்வை உறுத்த, "சரி, அம்மா!" என்றான் சுருக்கமாக.

அப்படி ஒரு பெண், இந்த உலகில் இருந்தால் தானே! என்றது அவனது மனது!

"சரி அம்மா! உங்களுக்கு முக்கியமானதைப் பேசிமுடித்து விட்டதால், இனியேனும் இன்றைய விஷயம் பேசலாமா?" என்று தொடங்கினான்! "கோவையில், 'டூர்னமெண்ட்' தொடங்குகிறது அம்மா! அதற்காக, நாளைமாலை நானும் நீலாவும் கோயமுத்தூர் கிளம்புகிறோம்.

"சே! முழுப் பெயரையாவது, சொல்லித் தொலைடா! யாரோ, பெண்ணோடு நீ கிளம்புவது போலக் கேட்பவர்கள், தப்பாக எண்ணுவார்கள்!" என்றாள் தாயார் சற்று எரிச்சலுற்ற குரலில்"

"அப்படியானால் 'வித்யா' என்னவாம்?"

"வித்யா'வை வித்யாதர் என்று எளிதாக நீட்டிவிடலாம். ஆனால்..."

"நீலாவை நீலநாராயணன் என்று நீட்டலாம்! மேலும், மற்றவர்கள் என்ன நினைத்தாலும், அதுபற்றி எனக்கு, அக்கறை இல்லை! அதனால், இந்தப் பேச்சை விடுங்கள்! டீரிலிருந்து நான் திரும்பிவர ஒருவாரம் ஆகும்!.

"ஒருவாரமா?! அப்பாவிடம் கேட்டுவிட்டாயா?

"அப்பாவிடம் சொல்லிவிட்டேன்" என்றான் அவன் சற்று அழுத்தமான குரலில்.

இதற்குமேல் இவனிடம் கேட்டால், இவனே எரிச்சல் படுவான்! 'அந்தப்பக்கம், ஒருவாரம் - ஏழு முழு நாட்கள், வேலையைப் போட்டுவிட்டுப் பந்து விளையாடப் போய் விட்டான், உன் செல்லப் பிள்ளை!' என்று இவன் தந்தை பாடுவார்! மருமகள் வேறு, சத்யாகரை உசுப்பி விடுவாள். அவன் வேறு 'நொண நொணப்பான்!'

யாரிடம், என்ன பேசினாலும், இந்த எரிச்சல் குரலைத்தான் கோகிலா கேட்டாக வேண்டும். இந்த நாட்டில், பெண்ணாகப் பிறந்தது போல பெரிய பரிதாபம், உலகில் ஒன்றுமே இல்லை! அதிலும், ஒரு கூட்டுக் குடும்பத்தலைவியாக... தலைவி என்கிற பெயரில் ஒரு உதைபந்தாக...

"என்னம்மா, சத்தத்தையே காணோம்" என்று அவன், ஓரக் கண்பார்வையால், தாயாரை ஆராய்ந்தான்.

"சொல்வதற்கு என்னடா இருக்கிறது? கடைசியில், ஊளாளுக்கு என்மேல் பாய்வீர்கள்! சரிசரி! அது என்பாடு! விடு இப்போது என்றைக்கு... அடுத்து... அவர்கள் வீட்டுக்கு, அடுத்த வாரம் வேண்டுமானால் போய்ப்பார்த்து விட்டு வரலாமா? பார்த்தாலே, திருமணம் பண்ணித்தான் ஆகவேண்டும் என்று கட்டாயமில்லையே! ஒருவேளை, உனக்கு ஒத்து வருவாள் போல இருந்தால்... வித்யா,

சற்றுமுன் தானே வாக்குக் கொடுத்தாய்?" "பார்த்தால் தானம்மா, உனக்கு ஏற்றவளா, இல்லையா என்று தெரியும்?"

முறுவலித்து, "விடமாட்டீர்களே! அம்மா, ஒரு-வீட்டிற்குப் போய், ஓர் அலங்கரித்த பொம்மையைப் பார்த்து, என்னம்மா முடிவு செய்யமுடியும்? நீங்கள் சொல்லுகிற பெண்ணை, நான் அங்கங்கே பார்த்திருக்-கிறேன். மாலி உபயத்தில், அவளைப் புரிந்து கொள்ளவும் முடிந்தது. அதனால்தான் அந்தப் பெண்வேண்டாம் என்கிறேன். அத்தோடு... வாக்குக் கொடுத்திருக்-கிறேனில்லையா? காரணமின்றி மறுக்கமாட்டேன், நம்புங்கள்!" என்று முடித்தான் மகன்.

அன்று டென்னிஸ் பயிற்சி முடிந்து, பேசிக் கொண்டிருக்கும் போது, வித்யாதரன், தன் நண்பனிடமும் தாயுடனும் பேசியதை விவரித்தான்.

"பாவீ! பாவீ! பெற்றதாயை ஏமாற்றுகிறாயேடா! உன்னை.. சா.. சாரி வித்யா, ஏதோ வேகத்தில், 'டாப் போட்டுப் பேசிவிட்டேன். மன்னித்துவிடு! என்றான் 'நீலா' என்கிற நீலநாராயணன்.

"அதில் என்ன நீலா, தப்பு? மன்னிக்க வேண்டிய குற்றம் எதுவும் உண்டு என்றால், அது நீ என்னிடம் மன்னிப்புக் கேட்டதுதான்!" என்றான் வித்யாதரன் பதிலுக்கு! "ஆனால், நான் அம்மாவை ஏமாற்றவில்லை, நீலா! மெய்யாகவே, அப்படி ஒரு பெண் கிடைத்தால், அவளை மணந்து கொள்வது நிச்சயம் தான்!" என்றான், தொடர்ந்து!

"ஆனால், அப்படி ஒரு பெண் கிடைக்க மாட்டாள் என்பதும் உனக்கு நிச்சயம் தானே? "ஏ... ஏ..." என்று நீலா நகைக்க, வித்யாதரும் முறுவலித்தான்.

டென்னிஸ் தொடர் போட்டியில், வித்யாதரன் முதலில், ஜெயித்துக் கொண்டே வந்தான்.

கால் இறுதி ஆட்டம் வரை உடனிருந்து, நண்பனை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்த நீலன் அதன்பின், தன் விளையாட்டுக்கு நண்பனிடம் அனுமதி கேட்டான்.

முகம்மாற, "ஏய், ஏய்... என்னடா இது? இத்தனை நாட்கள் சும்மா இருக்கவில்லையா? அப்படி இருந்து, உடம்பைத் தேற்றுவதற்கென்ன? அநியா...யமாய், நல்ல உடம்பை வீணாக்குகிறாயே!" என்று வருத்தத்துடன் நின்றான் வித்யாதரன்.

ஒருசிறு அமைதியின்பின், "நல்ல உடம்பாயிருந்தால், வீணாக்குவேனா, வித்யா?" என்று நீலன் மெதுவாக இயம்பவும், அவன் நண்பன் வாயடைத்து நின்றான்.

"இருக்கட்டும்! அடுகிறவரை ஆட்டம்! இப்போது அதுபற்றி என்ன? என்னை உணர்ந்து, எந்தக் கேள்வியும் கேட்காமல், என் மேல் முழு அன்பு செலுத்துகிற நண்பன், நீ ஒருவன் கிடைத்திருக்கிறாயே! இந்த உலகில், எனக்கு, வேறு என்ன வேண்டும்?" என்று தொடர்ந்து அவன், குரலில் உரிய ஏற்றதாழ்வுகளுடன், உணர்ச்சியோடு கூறவும், அவனுடைய நண்பனுக்கும் கண்கலங்கிவிட்டது.

நீலனின் கரத்தைப்பற்றி, "எனக்கு நீயும் அப்படித்தானேப்பா? எல்லாவகையிலும் என்முன்னேற்றத்துக்கு நீதானே காரணம்? இந்த விளையாட்டையே எடுத்துக் கொள்! இவ்வளவு பெரிய ஆட்களுடன் விளையாடி, இதுவரை வருவேனா?" என்றான் வித்யாதரன்.

"இதுவரை வந்தது பெரிய காரியம் அல்ல! இன்னும் நீ கடைசிவரை வெற்றியே பெற வேண்டும்! எப்போதும், எதிரே நிற்பவன் பெரிய ஆள் என்று மட்டும் நினைக்கவே நினைக்காதே! 'இவனிடம், இன்னின்ன பலவீனங்கள் இருக்கின்றன; இவனை என்னால் தோற்கடிக்க முடியும்' என்று மட்டும் எண்ணிச் செயல்படு! அப்புறம்..."

இன்னோரன்ன சில உரையாடல்களின் பின்,

நீலநாராயணன், வித்யாதரிடம் விடை பெற்றுத் தன்வழியே சென்றான்.

வித்யாதரன், கால் இறுதிப் போட்டியில் வென்று, அரை இறுதிப் போட்டியிலும் வெற்றிபெற்றான்.

அந்த வெற்றியைக் கொண்டாட, மற்ற நண்பர்களோடு சென்ற போதுதான், அவன் அவளைப் பார்த்தான். கண்ணால் கண்டதுமே, பாரதியாரின், 'மங்கிய தோர் நிலவினிலே' பாடல் தான் அவனுக்கு நினைவு வந்தது!

'பொங்கிவரும் பெருநிலவு போன்ற வொளி முகமும்...

இத்தனைக்கும் மிகமிக எளிமையான அலங்காரட தளரப்பின்னிய கூந்தல்; பொட்டுப்போல் ஒரு தங்கத் தோடு; கருமணிமாலை; கறுப்பு வளையல்கள்; நூல் சேலை; இவ்வளவு எளிமையில், இவ்வளவு அழகாக ஒரு பெண்... என்று எண்ணிக் கொண்டே போன வித்யாதரின் உடல் சட்டென விறைப்புற்றது! மாலி!

'தாங்க்' மாலி! எளிமையில் அழகு காட்டும் இந்த அலங்காரத்துக்காக, இந்தப் பெண், எவ்வளவு செலவழித்திருப்பாள்!

3

மாசு மறுவற்று, பொன்னிறமும், மென்மையுமாகப் பளபளக்கும் இந்த சருமத்துக்கு! வில்லாய் நீண்டுவளையும் புருவங்களுக்கு! கூந்தலுக்கு! உடம்போடு ஒட்டினாற்-போலத் தைக்கப் 'பிளவு' சுக்கு என்ன கூலி கொடுத்-திருப்பாள்! பொருத்தமான கைத்தறிச் சேலைக்கு... சேலைக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாய் 'ஸ்டார்ச்' பயன்படுத்தியிருக்கலாமோ? அல்லது, அலைந்து திரிந்ததில் கஞ்சி மொடமொடப்பு குறைந்து போயிருக்கலாம்!

மாலியோடு 'ஃபிஷர்மென் கேவ்' போனது, வித்யாதருக்கு நினைவு வந்தது! திரிந்து அலைந்துவிட்டுத் திரும்பி வரும்போது, அவள் இப்படித்தான் இருந்தாள்! கிட்டத்தட்ட! அங்கே, அறையெடுத்துத் தங்கவும் தயாராக இருந்தாள்...

அவளைமறந்து, இந்தப் பெண்ணின் அலங்காரத்தை உள்ளூரப் பாராட்டத் தொடங்கி விட்டானே! சரியான முட்டாள்!

வித்யாதரன், தன்னைத் தானே, கண்டித்துக் கொண்டு, இருந்த போது, அந்த நிலா முகத்துப் பெண்ணும், இன்னொருத்தியும், 'ஐஸ்கிரீம் பார்'வரை அடைந்தார்கள்.

அந்த அழகி - அழகுபடுத்திக் கொள்வதை அறிந்திருந்த அந்தப் பெண், கைப்பையில் இருந்து, தினசரிப் பத்திரிகையின் ஒருபகுதியை எடுத்து, கல்லாவில் இருந்தவரிடம் நீட்டினாள்!

கைப்பையும் கொஞ்சம் சாதாரணம்தான்...

"இது நீங்கள் கொடுத்த விளம்பரம்தானே?" என்று மென்குரலில் வினவினாள் அவள்.

பரவாயில்லை! மயிலுக்குக் கிடைத்தது போல அல்லாமல், இவள் குரல், உருவத்துக்குப் பொருத்தமானது தான்!

"ஆமாம்மா," என்று ஐஸ்கிரீம் கடைக்காரர் ஒத்துக் கொள்ள, "கஸாட்டா பால் தருவீர்களா?" என்று விசாரித்தாள் அவள்.

"கட்டாயமாகத் தருவோம்மா! ஆனால், ஸ்டாக் இருக்கிறதா இல்லையா, என்றுதான் தெரியவில்லை! இதோ, பார்க்கிறேன்!" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்த மூன்று பெரிய ஃபிரிஜ்களிலும் தேடத் தொடங்கினார் அவர்.

கடைசியாக, "ஆகா! உங்கள் அதிஷ்டம் அம்மா! ஒன்றே ஒன்று மிச்சமாய் இருக்கிறதே! என்றபடி, அந்த ஐஸ்கிரீம் பந்தை உள்ளிட்டுத் தருவதற்காக, ஓர் அட்டைப் பெட்டியை எடுத்து வந்தார்.

"லேகா, இங்கே இரண்டு துண்டு சாப்பிட்டுவிட்டு, மீதியைக் கொண்டுபோவோமா?" என்று அந்தப் பெண் கேட்டுக் கொண்டு இருக்கும் போதே, பெண்களும், ஆண்களுமாக நால்வர் தடதடவென்று உள்ளேவந்தனர். "கஸாட்டா ஐஸ்க்ரீம் இதோ இருக்கிறதே!" என்றபடி ஒருவன் அதைத் தூக்க, ஒருபெண் ஒரு நூறுரூபாய் நோட்டை விற்பனையாளரிடம் அலட்சியமாக நீட்டினாள்.

"அது... வந்து..." என்று வாய் தயங்கிய போதும், அவரது கை, ரூபாய் நோட்டை நோக்கி நீள்வது நன்றாகவே தெரிந்தது.

உடனடி வருமானம்! கொழுத்த வாடிக்கை! விடமனது வராதுதான்! இதற்கு, இந்த எளிமை அலங்கார நாயகி, என்ன செய்யப் போகிறாள்?

நேர், எதிர்ப்புறமாய் அமர்ந்திருந்த வித்யாதரனுக்கு, ஐஸ்கிரீம் பார்லர்காரரின் செயல் ஆத்திரமூட்டிய போதும், அந்தப் பெண் என்ன செய்யப் போகிறாள் என்று அறிந்து கொள்ளும் ஆவல் தான் அதிகமாக இருந்தது!

இவளும், ஒரு நூறுரூபாய் நோட்டை விசிறியடிக்கப் போகிறாள் என்று வித்யாதரன் எதிர் பார்த்ததற்கு நேர் விரோதமாக, கையில் இருந்த பத்திரிகையை ஒருதரம் பார்த்துவிட்டு, "பரவாயில்லை, சார். அவர்களுக்கே அதைக் கொடுத்துவிடுங்கள்! இந்தச் சலுகை நாளையும் செல்லும் தானே!" என்று முறுவலித்தாள்.

"ஆமாம், ஆமாம்! நாளைக்கு இருக்கிறது! என்ன, நீங்கள் கொஞ்சம் சீக்கிரமாய் வந்து விடுங்கள்!" என்று,

அவகாசமாக உரைத்த விற்பனையாளரின் கைகள், மின்னல் வேகத்தில், ரூபாய் நோட்டை வாங்கி உள்ளே வைத்துவிட்டு. ஐஸ்க்ரீமை, அட்டைப் பெட்டியுள் வைத்து, பாலிதீன் பையுள் இட்டுப் புதியவர்களிடம் கொடுத்தார்.

எண்ணிக்கூடப் பாராமல், மீதிச் சில்லறையை வாங்கிப் பையினுள் திணித்துக் கொண்டு, காரை நோக்கி ஓடியவர்களை வெறித்து நோக்கிவிட்டுத் தன் தோழியைச் சற்று ஒதுக்குப்புறமாய் இழுத்து நிறுத்தி "என்னடி இது, பைத்தியக்காரத்தனம்?" என்று சீறினாள், அந்த லேகா!

"வேறு என்ன செய்திருக்க வேண்டும், என்கிறாய்?" என்று புன்னகை மாறாமலே கேட்டாள் மற்றவள்.

"என்னவா? கஸாட்டா ஐசை முதலில் கேட்டது நீ! அதன் மீது முதல் உரிமையும் உனக்குத்தான்! நீயும் முதுகெலும்பு உள்ளவள் தான் என்று காட்டியிருந்தால்..."

"படுகேவலமாய்த் தோற்றிருப்பேன்!" என்று சிரித்தாள் அவள். "பார் லேகா, அந்த நாலுபேரும் வசதி உள்ளவர்கள். கார், உடை, கத்தை நோட்டில் ஒன்றை எடுத்து வீசிய விதம் பார்த்தாயல்லவா? பார்லர் காரர் கையும் பணத்துக்காக நீளத் தொடங்கிவிட்டது! இதில், தகராறு என்று வந்தால், யார்பக்கம் ஜெயிக்கும்? தோல்வி நிச்சயம் என்று தெரிந்த பிறகு சண்டையிட்டு நம்மைநாமே தாழ்த்திக் கொள்வதை விட, வெற்றிகரமாகப் பின்வாங்கிவிடுவது மேல் அல்லவா?" என்றாள் வாடாத புன்னகையுடனேயே!

"ஆ...மாம்! சிரி! இப்போது, என்னைவேறு ஐஸ்கிரீம் சாப்பிட என்று அழைத்து வந்துவிட்டாயே? என்ன செய்யப் போகிறாயாம்?"

"ச்சு! என்னடி செய்வது? என்னோடு தோழமைபூண்ட பாவம், நீயும் நாளைதான்..."

"அதெல்லாம் வேண்டாம்!" என்று சுற்று முற்றும் பார்த்தாள் லேகா!" அதோ, அந்த இரட்டை சீட்டில் போய் உட்கார். நான் இரண்டு ஸ்ட்ராபெரி கப் வாங்கி வருகிறேன்! கவலைப்படாதே! என்செலவு! மறுக்கவும் நினைக்காதே! நாளைக்கு உன் செலவில் நான் சாப்பிடப் போகிறேன்!" என்றபடி, பார்லரை நோக்கி நடந்தாள்.

அடுத்து, சுவர் ஓரமாய் இருந்த மேஜையை நோக்கி வந்த, அந்தக் கைத்தறிச் சேலைப் பெண்ணை, இப்போது வித்யாதரனால் மிக நன்றாகவே பார்க்கமுடிந்தது.

ஆக, இவள் அவ்வளவாக வளம்படைத்தவள் இல்லை என்றாலும், இந்த அலங்காரம் விலைமதிப்பானதுதானே?

ஐந்தாறு ஆண்கள் சேர்ந்து அமர்ந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தபோதும், அவர்கள் மீது விழிமலர்த்தி ஒரு பார்வை கூடச் செலுத்தாமல், அதே சமயம் வேறிடம் தேடி ஓடவும் இல்லாமல், நிதானமாய் அவள் நடந்துவந்து அமர்ந்த விதம் அவனுக்கு நன்றாய்த்தான் தெரிந்தது.

அதற்குள் லேகாவும் இரண்டு கப்புகளுடன் வந்துவிட, இருவரும், ஐஸ்கிரீமை ரசித்து உண்ணத் தொடங்கினர்.

அதிலும், கைத்தறிச் சேலை, ஒவ்வொரு ஸ்பூன் ஐசையும் அதன் சுவையை உணர்ந்து, அதில் லயித்து உண்டவிதம், தன்செயலில், அவளது, மேஜையை ஐஸ்கிரீமால் நிரப்பும் ஆவலை வித்யாதருள் நிரப்பியது!

சே! என்ன பைத்தியக் காரத்தனம், என்று எண்ணியவாறு, தன்னை அழைத்துவந்த மற்றவர்களின் பேச்சில் தன் கவனத்தை வித்யாதர் திருப்பினான்.

ஆனால், "நீ அளந்தது எல்லாம் சரிதானடி! ஆனால், நாளையும் இதேபோல நடந்துவிட்டால் என்ன செய்வாய்?" என்று லேகா கேட்கவும் மீண்டும் அவன், அந்தப் பெண்களின் பேச்சையும் கவனிக்கலானான்.

"இதே போலவா?" என்று கேட்டபடி, வாயில் இருந்ததை மெல்ல விழுங்கிவிட்டு மற்றவள் சொன்னாள். "வேறு ஏதாவது - அந்த அளவுக்கு வாங்கிக் கொள்வேன்!"

"ஆனால் உனக்கு விருப்பம் கஸாட்டாதானே?"

"ம்ம்... ஆசை அதுதான்! ஆனால், எத்தனையோ பேருக்கு, என்னென்னவோ, ஆசைகள்! அத்தனையும் நிறைவேறுமா? அதற்காக அழுது, ஆர்பாட்டம் செய்து கொண்டிருந்தால் நன்றாயிருக்குமா? ஏதோ சொல்-வார்களே, விரும்பியது கிடைக்காவிட்டால், கிடைப்பதை விரும்பத் தொடங்கிவிட வேண்டியதுதான்!"

"முடியுமாடி?" என்றாள் மற்றவள் பரிவுடன்.

சன்னமாய் முறுவலித்து, "முதலில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். நம் நிலைமை இது; நமக்குக் கிடைக்கக் கூடியது இதுதான் என்பதைப் புரிந்து கொண்டுவிட்டால், எல்லாம் இலகுவாகிவிடும்!" என்றாள் அவள் தெளிந்த குரலில்!

ஒரு சிறு அமைதியின்பின், "ரம்யா உன் சம்பளத்தைக் கூட்டினார்களா? அல்லது, அதேதானா?" என்று லேகா விசாரித்தாள்.

"அதேதான்! ஆனால், புருவம் த்ரெட்டிங், ஃபேஷியல், எல்லாம் இலவசமாகச் செய்து கொள்ள அனுமதி-கந்திருக்கிறார்கள்!"

"பெரீ...ய்ய சலுகைதான்! உனக்குக் கொஞ்சமும் பயன்படாத சலுகையைத் தந்துவிட்டுக் கொடுத்தேன் என்று பேர் தட்டுகிறார்களாக்கும்! எப்போதுமே உனக்கு இதே வில்புருவம் தானே! ஒருசிறு புள்ளிகூட இல்லாத இதே சருமம்! பரவாயில்லை! உன் முதலாளிக்கு நல்ல லாபம் தான்! கருமி!"

"சேச்சே! மேடத்தைத் திட்டாதேடி! பார், இந்தப்

பேப்பர் விளம்பரத்தை எடுத்து என்னிடம் தந்ததே அவர்கள்தான்! கொஞ்சம் தாமதம் ஆனால், ஆட்டோவுக்குப் பணம் தந்து விடுவார்கள்... ஓ.டி. உண்டு. அண்ணனுக்குக்கூட, நல்ல 'ஹோம்' ஒன்று இலவசமாய்க் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!

சொல்கிறேன் என்று தப்பா எண்ணாதேப்பா! அந்த விபத்தில் உன்பெற்றோரோடு உன்..."

"வேண்டாம் லேகா! அப்படிச் சொல்லாதே! அந்த அதிர்ச்சியை அவனால் தாங்கமுடிய வில்லை! ஓடிந்து விட்டான்! ஆனால், எப்படி இருந்த போதும், அண்ணன் என்ற பெயரில் அவன் இருப்பதே ஒரு பெரும் பாதுகாப்புதான்!"

"ஆ...மாம்! பெரிய்ய பாதுகாப்பு! உதவி என்று ஒரு விரல் அசைக்காத பாதுகாப்பு!"

"ஆனால், அண்ணன் அப்படி விரல் அசைக்க மாட்டான் என்பது மற்றவர்களுக்குத் தெரியாதே! அதனால், அனாதை என்பதற்கு, அண்ணன் இருக்கிறான் என்பது பெரும்பாதுகாப்புதான்!

"சரிசரி. இந்தவிஷயம் விடு! நீ, நாளை வருவாயல்லவா? இதே நேரம்! சரிதானா?"

"சீக்கிரம் வருமாறு, பார்லர் காரர் சொன்னாரேடி!"

"சொன்னார்தான்! ஆனால், சீக்கிரம் வருவதற்கு, உன் வேலையும் இடம் தராது; என்வேலையும் அனுமதிக்காது! அதனால், இதேசமயம் வருவோம்! வந்து இங்கே இருப்பதில் பிடித்தது வாங்கி உண்போம்! சரிதானா?

"சரிமாதங்கி!" என்றாள் லேகா!

மாதங்கி! அப்பாடி! இவ்வளவு நேரம் கழித்தாவது, அந்தக் கைத்தறிச் சேலைக்காரியின் பெயரை அந்த லேகா சொன்னாளே என்று வித்யாதரன் எண்ணினான்.

மாதங்கி என்ற பெயரில் சங்கீதம் இருப்பது போல அவனுக்குத் தோன்றியது.

ஆனால், சங்கீதம் மட்டும் வாழ்க்கைக்குப் போதாதே... என்று எண்ணம் ஓடும் போதே, வித்யாதருள் வேறோர் யோசனை ஓடியது.

அதன் விளைவாக, மறுநாள், ரம்யா அழகு நிலையத்தின் இருப்பிடம் அறிந்து சென்றான். அவர்கள் மூலம் மாதங்கியின் வீட்டு விலாசம் கண்டுபிடித்தான்.

உள்ளூரக் குமிழியிடும் உற்சாகத்தோடு, 'டூர்னமென்டை'வென்று வீடு திரும்பியவன் நேராகத் தாயைத் தேடிச் சென்றான். "அம்மா, இந்த வீட்டுக்கும், உங்களுக்கும், ஏற்ற மருமகளைக் கண்டுபிடித்துவிட்டேன்!" என்றுரைத்து, அவளைத் திகைக்க வைத்தான்!

4

நடப்பதை நிஜமென்று முழுமையாக நம்ப, மாதங்கியால் இன்னமும் முடியவில்லை!

சுற்றிலும் மின்விளக்குகளின் ஒளி வெள்ளம்! ஜரிகைப்பட்டும், பொன் வைர நகைகளுமாக வந்திருந்த விருந்தினர் கூட்டம்! காதைச் செவிடாக்காத அளவில், மென்மையாக ஒலித்த இனிய சங்கீதம்! அவளே அணிந்திருந்த தங்கத்தகிடிச் சேலை, மாலை!

இவை அனைத்தையும்விட, அவளருகே, கம்பீரமாய் நிற்கும் அவன்!

இதெல்லாம் எப்படி சாத்தியம்?!

மாதங்கி ஒன்றும் செல்வச் செழிப்பையே அறியாதவள் அல்ல! அவளுடைய பெற்றோர் உயிரோடு-இருந்தபோது இது போல... இந்த அளவுக்கு இல்லை என்றாலும், ஓரளவு

உயர்மட்ட வைபவங்களுக்குச் தாயோடு சென்றது உண்டுதான்.

என்றோ ஒருநாள், இதுபோல ஒரு விழாவாக அவளது திருமணம் நடக்கும் என்பதும், ஒரு தூரத்துக் கனவாய், அந்தச் சமயங்களில், மனதில், தோன்றியதும் உண்டுதான்.

ஆனால், அவளுடைய பெற்றோர் இருவரும் ஒரு விபத்தில் மறைந்தபின், இந்த மூன்று ஆண்டுகளில், அந்த மாதிரி எண்ணங்கள் அவளது கனவுகளில் கூடத் தோன்றியது இல்லை.

மாதங்கியுடைய தந்தை எங்கேனும் வேலை பார்த்திருந்தால் கூட, காப்புநிதி, வைப்புநிதி என்று ஏதாவது கிடைத்திருக்கும். வாரிசுகளுக்கு வேலை' என்று, சிவா, மாதங்கி இருவரில் யாருக்காவது வேலையேனும் கிடைத்திருக்கும்!

ஆனால், அவர், ஒரு மத்திய தரத்து வியாபாரி! வந்த லாபம் எதேஷ்டமாகவே இருக்கவும், தாராளமாகச் செலவு செய்தார். இயற்கையான ஆயுள் காலத்தை எதிர்பார்த்தவர், தன் வாழ்நாளிலேயே, தன் மகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்து விட முடியும் என்ற நம்பிக்கையில் வேறு எந்த விதப் பாதுகாப்பும் - எல்.ஐ.சி, டெப்பாசிட் என்று எதுவும் செய்து கொள்ளாமலே இருந்துவிட்டார்.

ஆனால், அவரது எதிர்பாராத இறப்பில், எல்லாமே நிலைகுலைந்து போயிற்று! இதற்கெல்லாம் பணம் கொடுக்கவில்லை என்று, கடையில் சாமான் போட்ட பலசப்ளையர்கள் வந்து, சாமான்களை அள்ளிக் கொண்டு போயினர்: சிலர் கடன் தரவேண்டும் என்று வந்தார்கள்; படிப்பு, நண்பர்கள், விளையாட்டு என்றிருந்த சிவாவுக்கு இதில் மெய், பொய் ஒன்றும் புரியவில்லை!

பொறுப்பு தங்களது ஆகிவிடுமோ என்று அஞ்சி,

உறவினர் கூட்டமும் ஒதுங்கிப் போய்விட, இரு மக்களும் நிலை கலங்கி நின்றனர்.

அப்பாவுடைய செல்லப்பிள்ளையாக, எந்நேரமும் பையில் பணத்துடன் சுற்றிய சிவா உடைந்துவிட, மாதங்கி, இழப்பின் வேதனையைப் பிடிவாதமாக ஒதுக்கிச் சிந்தித்து முடிவெடுத்தாள். மீந்திருந்த சில நகைகளை விற்று, அழகு நிலையம் ஒன்றில் பயிற்சி பெற்றாள். அங்கேயே வேலையும் கிடைத்தது.

இனி, இந்த வருமானத்தில் முடிந்த அளவு சேமித்து, தானே ஒரு 'பார்லர்' தொடங்கி...சம்பாதித்து... என்று, மாதங்கியின் கனவுகள் அந்த அளவில்தான் நின்றன!

ஆனால்... இப்போது...!

இப்படி ஒரு பெரிய குடும்பத்தின் இளைய மருமகளாக வாழும் வாய்ப்புக் கிடைத்திருப்பது எவ்வளவு பெரிய அதிசயம்! ஆனந்தமான அதிசயம்!

மெய்யாகவே இதெல்லாம் உண்மைதானா? அல்லது, மிக மிக சுகமான ஒரு நீண்ட கனவா? ஒரு வேளை, கனவேதானா?

இல்லை என்று தெளிவாகத் தெரிந்த பிறகும்கூட, ஒரு சந்தேகத்துக்கு, மாலைமறைவில், மாதங்கி, தன்னைத்தானே, கிள்ளிப் பார்த்தாள்! வலித்தது! ஆக நிஜமேதான்!

முன்னிருப்போர் கண்ணை மாலை மறைக்கலாம்! ஆனால், பக்கவாட்டில்?

"எல்லாமே நனவுதான்! நம்பு!" என்று, வித்யாதரனின் குரல் காதோரம் கேட்கவும், திகைத்துப் போனாள் அவள்!

அவளைக் கண்டு கொண்டானே!

வியப்பும், பெருமிதமுமாய் சிறு வெட்கத்துடன் அவள் கணவனை ஏறிடுகையில் தோழியின் குரல் கேட்டது.

"என்னடீ. ஆளைவிழுங்குகிற மாதிரியாய் அப்படி ஓர் அதிசயப் பார்வை?"

கோவையிலிருந்து, மாதங்கியின் திருமணத்துக்காகச் சென்னை வந்திருந்த சிறு குழுவில் அவளும் ஒருத்தி! மற்றவர்கள், அவள் பணிபுரிந்த 'ரம்யா' நிறுவனத்திலும், அக்கம் பக்கத்தில் வசித்தவர்களும். தனக்காக இவ்வளவு தூரம் வந்தார்களே என்று மாதங்கிக்கு மிகுந்த மகிழ்ச்சி!

"லேகா!" என்று முலுவலித்தவளை முந்திக் கொண்டு, "அவளுக்கு இன்னமும் எதையும் நம்ப முடிய வில்லையாம்!" என்றான் வித்யாதரன்.

"ஏன்? என்ன நம்பமுடியவில்லையாம்... ஓ! பழைய கால ராஜகுமாரன் கதை மாதிரி நடந்திருக்கும் இந்தத்-திருமணத்தையா? ஏன் நம்ப முடியாது, மாதங்கி? என்னைப் பொறுத்தவரை, உனக்கு உரியதுதான் நிகழ்ந்திருக்கிறது என்பேன்...இவள் மற்றவர்களுக்காக ரொம்பவும் பார்க்கிறவள் சார்! இப்போது என்னையே எடுத்துக் கொள்ளுங்கள்! என் பெயர்..." என்று பேச்சில் குறுக்கிட்டு "லேகா!" என்றான் வித்யாதர், சிறு கிண்டல் குரலில்.

"அதுதான் இல்லை!" என்றாள் அவள், வெற்றிப் புன்னகையோடு "என் பெயர் சுலேகா. எல்லோரும் அதைச் சுருக்கி, 'சூலி' என்பார்கள். என்ன அர்த்தம் பாருங்கள்! என்ன சொன்னாலும், என் அம்மாகூட, என்வருத்தத்தைப் பொருட்படுத்தியதே கிடையாது! இது பற்றி, இவளிடம் நான் சொன்னது கூடக் கிடையாது! ஆனால், என் முகத்திலிருந்தே கவனித்து விட்டு, என்னை 'லேகா' என்று தான் அழைப்பாள். இது வெறும் அழைப்பு தான்! சின்ன விஷயமாகவே இருக்கலாம்! ஆனால், இதன்பின் இருக்கும் அவளது அன்பு..."

"ஷ். சும்மாயிரு லேகா!" என்று மாதங்கி அவளை நிறுத்த முயன்றாள்.

ஆனால், அவள், "மற்றவர்களது மகிழ்ச்சி பற்றிய அவளது அக்கறை, பரிவு எல்லாம் அதில் வெளிப்படுகிறது அல்லவா?" என்று நினைத்ததை விடாமல் சொல்லி முடித்தாள். "பெற்ற தாய்க்கு இல்லாத கனிவு மாதங்கிக்கு உண்டு சார்!"

ஏற்பாக முறுவலித்து, "விட்டால், 'பால்நினைந்தூட்டும் தாயினும்' சாலப் பரிந்து வந்து...' என்று பாடியே விடுவீர்கள் போல இருக்கிறதேலேகா?" என்று கேலி போல அவன் உரைக்க, எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

இந்தத் திருமண வரவேற்பில், திருஷ்டிபரிகாரம் போல, மாதங்கிக்கு வருத்தம் தரும் விதமாகவும் ஒன்று நடந்தது. உறவு, நட்பு சக தொழில் துறையினர் அளித்தது என்று, வித்யாதரின் பக்கம் பரிசுப் பொருட்கள் குவிய, மாதங்கியின்பக்கம், நாலைந்து பாக்கெட்டுகளுடன் நின்றுவிட்டது.

இதில் வருந்துவதற்கு ஒன்றும் இல்லை என்பது தான் முதலில், மாதங்கியின் அபிப்பிராயமும். கோவையிலிருந்து வந்தவர்கள் தவிர, அவளை, இங்கேயாருக்குமே தெரியாதே!

இந்தப் பரிசளிப்புகள் எல்லாம், ஒரு வகையில், வட்டியில்லாக் கடன் போலத்தானே! வித்யாதருடைய வீட்டிலிருந்து, யார் யாருக்கு எவ்வளவு பரிசளித்-தார்களோ, இப்போது, திருப்பி வருகிறது! அப்பா, அம்மா, இருந்திருந்தால்... இந்த அளவுக்கு இல்லை என்றாலும், ஓரளவேனும், அவள்பக்கமும் நிரம்பியிருக்கும்! ஆனால், அவர்கள் மறைந்து, ஏறத்தாழ நாலு ஆண்டுகளுக்குப் பிறகும், அதை எதிர் பார்ப்பது முட்டாள்த்தனம்!

இவ்வளவுதான் மாதங்கி நினைத்தது.

ஆனால், கல்யாணப் பெண்ணுக்கு வாங்கியதை விட விலை உயர்ந்தது வேண்டும் என்று, சேலை முழுக்க சரிகை வேய்ந்த சேலையை வாங்கி சற்றுப் பருமனான உடம்பில்

சுற்றிக் கொண்டு, சேலையின் அதிகப்படி ஜரிகை மொடமொடத்து நிற்க, ஒரு பீப்பாய் போல நடமாடிக் கொண்டிருந்த பாமாவுக்கு, வந்திருந்த புதுப் பெண்ணை மட்டம் தட்ட இது ஒருவாய்ப்பாகப் பட்டது!

மட்டம் தட்டியாக வேண்டியது, கட்டாயமாகவும் பட்டது!

பாமா எவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள்! திருமணமாகி வரும் போது, தன் பங்குச் சொத்தாய் அவள் கொண்டு வந்தது எவ்வளவு?! அணிந்து வந்த நகைகளின் மதிப்புதான் என்ன இருக்கும்?

அவள் இந்த வீட்டு மூத்த மருமகள்! இந்த அன்னக்காவடி, அவளுக்குச் சமமாய் வாழ வந்திருக்கும் இளைய மருமகள்! சே! எங்காவது குடும்பமாகப் போக நேர்ந்தால், இவளும், சம அந்தஸ்தில் அவளோடு கூட வந்து நிற்பாள்! எவ்வளவு கேவலம்!

வேண்டுமென்றே, மாதங்கியின் பக்கமாகச் சென்று நின்று கொண்டு, "அப்பன் ஆயிதான் கிடையாது என்றார்கள்! அடுத்தடுத்த உறவுமா கிடையாது? எண்ணி நாலே பேர்தானே திருமணத்துக்கு வந்திருப்பார்கள் போல! அச்சச்சோ! இல்லை! நாலு இல்லை! கூட! ஒன்று இரண்டு...ம், ஐந்து மலிவுரக 'கிஃப்ட் ராப்பர்' போட்ட அட்டைப் பெட்டிகள் கிடக்கிறதே!" என்றாள் இளக்காரமாக.

மாதங்கி, கவனியாதது போல நிற்கவும், அவளிடம் நேரடியாகவே பேசினாள். "எங்கள் கல்யாணத்தின் போது, என் பக்கத்திலிருந்து வந்த பரிசுகளை வைக்க மேடையில் இடமே இல்லை! அதனால், பரிசுகள் வரவர, பெண் வீட்டார் அறைக்குள் கொண்டு வைத்தார்கள். பிறகு அந்த அறையும் நிரம்பி, வெளியில் அடுக்கினார்கள். இப்போது உனக்கு வந்திருப்பதைப் பார்த்தால் எனக்கு ஒரே சிரிப்பாக

வருகிறதே!" என்றுரைத்துக் 'கிக்கிக்கீ' என்று உரக்கச் சிரித்தாள்.

கையில் இருந்த கைக்குட்டையைக் கசக்கிக் கொண்டு, மாதங்கியின் கை விரல்கள் இறுகுவதைக் கீழ்க் கண்ணால் கண்டும், கவனியாதது போலவே, வித்யாதரன் சற்றுநேரம் சும்மா இருந்தான். பிறகு என்ன தோன்றியதோ, அன்னையை அருகில் வரவழைத்து, "இந்தச் சாமான்கள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அறைக்குள் போடச் சொல்லுங்கள், அம்மா! இங்கே ஒரே இடைஞ்சலாக இருக்கிறது!" என்றான்.

மகனை எறிட்டு நோக்கிய கோகிலம், சட்டென ஊகித்து, ஆட்களை வரவழைத்து, பரிசுப் பொருட்களை அங்கிருந்து அகற்ற ஏற்பாடு செய்தாள்.

அதுமட்டுமின்றி, மாதங்கியின் புறமாக வந்து நின்று, அவளிடம் இதமாகப் பேசவும் தொடங்கினார்.

மாதங்கியின் உள்ளம், மகிழ்ச்சிச் சிறகை அடித்துக் கொண்டு, உற்சாகக் கோபுரத்தின் உச்சிக்கே போய் விட்டது! அவள் முகம் வாடுவது தாங்காமல். அவளை ஒருவர் ஒன்று சொல்வது பொறுக்காமல், செயல்படும் கணவன்! அவனுக்குத் துணை செய்யும் மாமியார்!

ஒரு பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்?

ஆனால், இந்த அதிருஷ்டம் அவளுக்கு நிலைக்குமா?

நாய்க்கு முழுத் தேங்காய் ஒட்டுமா என்பார்களே!

அதுபோல எதுவும் ஆகிவிடுமா?

பளபளக்கும் மாருதி எஸ்டீமிலிருந்து, இறங்கிவந்து, கோகிலாவும் கருணாகரனும் திருமணப் பேச்சைத் தொடங்கியதில் இருந்து, அவ்வப் போது அவளுள் எழுந்து, அவளை அலைக்கழித்த அச்சம், அப்போதும்

மாதங்கிக்கு உண்டாயிற்று. அன்றுவரை, ஏதாவது நேர்ந்து, இந்தத்திருமணம் தடைப்பட்டுவிடுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்தவளுக்குத் திருமணம் நடந்தேறிய பிறகும் கலக்கம் முழுமையாக மறைய மறுத்தது.

அவ்வளவு எளிதாக, ஒருவருக்குப் பூலோகத்தில் சுவர்க்கம் கிட்டிவிடுமா? ஒருவேளை, பாகைத்துரும்பாக, இந்தப் பாமாதான் இருக்கப் போகிறாளோ?

அப்படியே இருந்தாலும், பிரச்சினை என்று வரும் போது, அதை எதிர் கொண்டால் போதுமே! எப்போது புலிவருமோ, பூதம்வருமோ என்று இப்போதே கலங்குவது மடத்தனம் அல்லவா, என்று தனக்குத்தானே, அறிவுறுத்திக் கொண்டு, மாதங்கி மீண்டும் நடப்புக்கு வந்தாள்.

இரவுக்கான எளிய அலங்காரமும் மாதங்கியை எழிலரசியாகவே காட்ட, கோகிலா, பெருமையோடு, மருமகளுக்குத் திருஷ்டி கழித்தாள்.

பார்த்துக் கொண்டே இருந்த பாமாவுக்கு மனம் கொதித்தது. மாமியார் அப்புறமாய்ச் சென்ற நேரத்தில், மாதங்கியின் அருகில் வந்து இவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு, உதட்டைப்பிதுக்கினாள்! "நீ என்ன, இப்படிப் பஞ்சத்தில் அடிபட்ட மாதிரி, வற்றிக் காய்ந்து போய் இருக்கிறாய், மாதங்கி? அங்கே உனக்குச் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டாயா?" கனிவுபோலக் குத்தினாள்.

"அப்படி ஒன்றும் இல்லை, அக்கா! ரம்யாவில் எனக்கு நல்ல சம்பளம்தான். ஆனால், பொதுவாக, என் உடல் வாகே ஒரளவு ஒல்லிதான்!" என்று முகம் வாடாமல், மாதங்கி பதிலுரைத்தாள்.

"என்னவோ?!" என்று, தன் பெரிய தோள்களைக் குலுக்கிவிட்டு, "வித்யாவுக்கு. இதுபோலச் சப்பட்டை உடம்புகளைப் பிடிக்கவே பிடிக்காது! பஞ்சப் பரதேசி

என்பார்! அதிலும், மாலிமாதிரி வாளிப்பான ஒருத்தி மேல் ஆசைப்பட்டுவிட்டு, உன்னை எப்படித்தான் மணந்தா-ரோ?" என்று மீண்டும் ஒரு தரம் தோளைக் குலுக்கி விட்டுச் சென்றாள் பாமா!

அவள் விரும்பியது நடந்து விட்டது! நெஞ்சு கலங்கிப் போனாள் மாதங்கி!

இன்னொருத்தியை விரும்பியவனா வித்யாதரன்? அதிலும் வாளிப்பான ஒருத்தியை!

மெல்லிய மேனி என்றாலும் 'மெலிவு' என்று மாதங்கியின். உடலின் அமைப்பைச் சொல்லமுடியாது! 'கொடி போல' என்று உடன் வேலை செய்யும் பெண்கள் கூடப் பாராட்டித்தான் அவளுக்குப் பழக்கம்! ஆனால் வாளிப்பு என்று சொல்ல முடியாதே!

கலங்கிய மனதை முயன்று, உடனே சமன் செய்து கொண்டாள் மாதங்கி. இந்த பாமாவுக்கு அவளைப் பிடிக்கவில்லை! அதற்காகக் கூட ஏதாவது சொல்லியிருக்கக்கூடும்! அத்தோடு, வித்யாதரன் வேறு யாரையேனும் முன்பு விரும்பியிருந்தாலும், அது கடந்தகாலம்; முடிந்து விட்ட ஒன்று. அதை நினைத்து நிகழ்காலத்தை வீணடிப்பது பிழை.

ஆனாலும் மனம் லேசாக உறுத்த, இரவின் தனிமையில், கணவனிடம் மெல்லக் கேட்டாள். "வந்து...என்னை ஏன்...நீங்கள்.." என்று தயக்கத்துடன் வினாவினாள்.

எத்தனையோ காரணங்கள் மனதுள் தோன்றியபோதும், மனைவியாகிவிட்டவளின் எழில்தாக்க, "நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய், தெரியுமா?" என்றான் வித்யாதரன். அந்தவானத்து 'மதி' இறங்கி வந்து விட்டதாகத்தான் சொல்ல வேண்டும். இனி உன்னை மதி என்றுதான் கூப்பிடப் போகிறேன்."

அதன்பின், இருவருக்குமே, சுற்றியுள்ள உலகம் மறந்து போயிற்று.

5

திருமண ஆரவாரங்கள் எல்லாம் பெருமளவு ஓய்ந்துவிட, மணமான மூன்றாம் நாள், புதுமணத்-தம்பதியர், தேனிலவுக்குக் கிளம்பினர்.

அதற்கு முன், அந்த வீட்டுப் பழக்க வழக்கங்கள், முறைமைகள் குறித்துக் கோகிலம், தன் இளைய மருமகளுக்கு எடுத்துரைத்தாள்.

வீட்டுத்தலைவர் கருணாகரனிலிருந்து, வீட்டில் எல்லோருக்கும் எடுபிடியாய், ஏவிய வேலைகளைச் செய்து கொண்டு சுற்றிய சிறுவன் பாண்டி வரை, அனைவரைப் பற்றியும் விளக்கினாள்.

வேலையாட்களைப் பற்றி வெகுவாக விவரித்தவள், வீட்டினர் பற்றி அதிகம் பேசவில்லை என்பதோடு, மூத்த மருமகள் பாமா பற்றி எதுவுமே சொல்லவில்லை என்பதைக் கவனித்த போதும், மாதங்கி, அதுபற்றி எதுவும் கேளாமல், மாமியார் கூறியதை எல்லாம் அப்படியே உள் வாங்கி வைத்தாள்.

ஆக, எல்லா வீடுகளிலும் உள்ள, 'குடும்பப் பாலிடிக்ஸ்' இங்கேயும் இருக்கத்தான் செய்கிறது! காசுபணத்துக்குப் பஞ்சமில்லை என்பதற்கும் இந்த உள் உரசல்களுக்கும் சம்பந்தம் இல்லை!

மருமகள், துளைத்துத் துளைத்துக் கேளாமல், சொன்னதை, அப்படியே ஏற்றுக் கொண்டது, கோகிலத்-துக்கும் நிம்மதியாய்த்தான் இருந்தது. இருமருமகள்-களுக்கும் இடையே, ஏற்ற தாழ்வு காட்டுகிறவளாகத் தான் தோன்றிவிடக் கூடாது என்ற எண்ணம் அவளுக்கு.

அத்தோடு, யாரைப் பற்றியும் தான் குறை கூறியதாக வந்து விடக் கூடாது என்பதும் கூட.

இந்த மாதங்கி ஒன்றும் முட்டாளாகத் தெரியவில்லை. எல்லாம் அவளே நேரடியாகத் தெரிந்து கொள்ளட்டுமே! மூத்தவளும், அப்படி ஒன்றும் கெட்டவள் அல்ல! அபூர்வமாய், அவளுக்கு, இவளைப் பிடித்தும் போகலாம். ஏதாவது சொல்லி, அநாவசியமாய், அதைக் கெடுத்து வைப்பானேன்?

"உன் சாமான்களை எல்லாம், பக்கத்து அறையில் அடுக்கிக் கொள்ளம்மா! இதுவரை, வித்யா. அவனது பழைய ராக்கெட்டுகள், பந்துகள், பரிசுகள் என்று அவன் சாமான்களை எல்லாம் போட்டு வைத்திருந்தான். அதை எல்லாம் ஒதுக்கிக் கடைசிச் சின்ன அறையில் போடச் சொன்னேன்... எதிர்ப்பக்க அறைகள் கூடக் காலியாகத்தான் இருக்கின்றன! நீயும் அவனுமாகப் பேசி, எது வசதியோ அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்..." என்று கோகிலா சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, லேசாக முச்சுவாங்க, பாமா வந்து சேர்ந்தாள்.

"அத்தை, ஆளை விட்டு, எங்கள் அறைகளையும் நன்றாகச் சுத்தம் செய்யச் சொல்லுங்கள். நாங்களும் இங்கேயே வந்து விடலாம் என்று இருக்கிறோம்!" என்று அவள் கூறவும், கோகிலா சற்றுத் திணறிப் போனாள்.

எதிர்ப்புற அறைகளும் காலியாகத்தான் இருக்கின்றன என்று, சின்னமருமகளிடம், அவள் சொல்லி வாய் மூடுமுன், இப்படி வந்து நிற்கிறாளே!

"மாடி ஏறச் சிரமமாய் இருக்கிறது என்று நீதானேம்மா..." என்றவளை இடைமறித்து, " சிரமமா? நான் எப்போது அப்படிச் சொன்னேன்? பழனி, திருப்பதி படி ஏறக்கூட நான் கஷ்டப்பட்டது இல்லை! இந்தமாடிப்படி எம்மாத்திரம்?" என்றாள் பாமா, படபடப்பாக.

அவளுக்குத் தன் குண்டுஉடலை, மாமியார் குறிப்பிடு-கிறாளோ என்று தோன்றிவிட்டது. உடல்பெருத்து, மாடி ஏற மூச்சுவாங்கியதால்தான், அவள், கீழ்த்தளத்து அறைகளுக்குக் குடிபெயர்ந்ததே. ஆனால், உண்மையைச் சொன்னால், உடம்பு எரியும் தானே? அதனால், விஷயம் அப்படி அல்ல என்று சாதித்தாள்.

"சின்னது பிறந்த பிறகு, ரொம்பவும் பலவீனமாகி விட்டேன் இல்லையா? அதனால் டாக்டர், என்னை மாடிப்படி ஏறவேண்டாம் என்று சொன்னதால்தான், நான், கீழ்த்தள அறைக்குச் சென்றது! மாடி ஏறக் கஷ்டப்பட்டு அல்ல! உங்களுக்கு எப்படித்தான் இப்படி ஓர் எண்ணம் தோன்றியதோ? எனக்குத் தெரியவே இல்லை, அத்தை!" என்று எரிச்சல் பட்டாள்.

மாதங்கிக்கு விஷயம் புரிந்தது! மாமியார், ஏன் இந்த ஓரகத்தி பற்றிய பேச்சைத் தவிர்த்தாள் என்பதும் புரிபட்டது. ஒருவார்த்தையைப் பிடித்துக் கொண்டு ஆடுகிறவளைப் பற்றி என்னவென்று சொல்லமுடியும்?

வீட்டினுள் வந்த மறுநாளே, இவர்கள் பேச்சில் தலையிடுவது தவறென்று கருதியவளுக்கு, அந்த இடத்தில் தொடர்ந்து இருப்பதும் ஒரு மாதிரியாகப் பட்டது. மெல்ல, "அத்தை, நான் என் சாமான்களை எடுத்து வைக்கிறேன்." என்றவாறு எழுந்தாள்.

"எங்கே? எங்கே எடுத்து வைக்கப் போகிறாய்? அதுதானே இப்போது கேள்வி?" என்றாள் பாமா, சுதி ஏறிய குரலில்.

மாமியாரின் தவிப்பையும், பாமாவின் சண்டைக் கோழிச் சிலுப்பலையும் கவனித்த மாதங்கி முறுவலித்தாள். "பெட்டியில்தான் அக்கா! நாங்கள் நாளைக்குக் கிளம்புகிறோம் இல்லையா? அதற்காகச் சாமான்களை எடுத்து வைக்கப் போகிறேன்." என்று இனியகுரலில் அவள்

கூறவும், பாமாவுக்குச் சொத்தென்றாகிவிட்டது.

இந்தப் பெண், பெட்டி அடுக்கப் போவதைப் போய், என்ன, ஏது என்று கேட்டு, அசடுவழியும்படி ஆகி-விட்டதே!.... அல்லது, அவளை, அசடு வழிய வைப்பதற்-காகவே இந்த மாதங்கி, மாமியாரோடு பேசிக் கொண்டிருந்த விஷயத்தை மாற்றிச் சொல்கிறாளா? சே! மாடிப்படி ஏறுவது இலகுவாக இருந்து, இன்னும் சில நிமிஷங்கள் முன்பாகவே வந்திருந்தால், இவர்கள் பேச்சை முழுதாகக் கேட்டிருக்கலாம்!

என்ன கூர்ந்து கவனித்தும், மாதங்கியின் முகத்திலிருந்து எதையும் கண்டு கொள்ள முடியாமல் போய் விட, "உன் சாமான்கள் எல்லாம், வித்யா தம்பி அறையில் ஒரே குழப்படியாக அடைத்துக் கொண்டு கிடக்குமில்லையா? அதை எல்லாம் எங்கே எடுத்துவைக்கப் போகிறாய், மாதங்கி? என்று, உரையாடும் பாவனையில், கேட்டபடி அவளும், மாதங்கியோடு கிளம்பினாள்.

கீழ்த்தள அறைகளில், ஒருபுறம் முழுமையும், விருந்தினர் அறை உட்பட, அவளது குடும்பத்துக் கென்று எடுத்துக் கொண்டதால், மாடி அறைகளை, மாமியார், புதுமருமகளுக்குக் கொடுக்கக்கூடும் என்பது பாமாவின் எதிர்பார்ப்பு. படி ஏறுவது கஷ்டமாக இருந்ததால், அவளே வேண்டாமென்று விட்டுப் போன அறைகள்தான்! ஆனால், அந்த அறைகளைப் புதிதாக வந்த இளையவள் பயன்படுத்துவது பாமாவுக்குப் பிடிக்கவில்லை. அத்தோடு, இளையவள் மேலே இருக்கத் தான் கீழே இருப்பது என்றாலும், ஏதோ, தரம் இறங்கிப் போய்விட்ட மாதிரித் தோன்றிவிட, அதுவும் அவளுக்கு வெறுப்பாக இருந்தது. திருமணமாகிவந்து, தான் இருந்த அறைகளைப் பூட்டியாவது வைக்கலாமே தவிரப் புதிதாக வந்தவளுக்கு அவை போய்விடக் கூடாது என்று நினைத்தாள். பாமா.

கணவன், மாமியார், இருவரின் அபிப்பிராயம் தெரியாமல் இதற்குப் பதில் சொல்லக் கூடாது என்று தோன்றிவிட, "என்ன அவசரம், அக்கா? நாளைக்குக் கிளம்பினால், ஒரு வாரம் பொறுத்துத்தானே திரும்பி வரப் போகிறோம்! வந்தபிறகு எடுத்து வைத்தால் ஆயிற்று!" என்று அதைப் பற்றிய அக்கறையே இல்லாதவள் போலப் பதிலுரைத்தாள் மாதங்கி.

உள்ளூர, அதைப் பற்றிய அக்கறை அவளுக்கு, அப்போது, அதிகமாய்த் தோன்றவும் இல்லை. யாரோடு, என்ன பேசிக் கொண்டிருந்தாலும், அவள் மனதில், வித்யாதரனே வலம் வந்துகொண்டிருந்தான். அவனைத் தன்னோடு இணைத்து, தன்மைப் பன்மையாக வருகிறோம், போகிறோம் என்று பேசுவதே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது!

வரப் போகும் தேனிலவைப் பற்றிய எதிர்பார்ப்பும், கணவனைப் பற்றிய பெருமையுமாக இருந்தவளுக்கு, இதெல்லாம் வெறும் சுண்டைக்காய் பெறுமானதாகத்தான் தோன்றிற்று.

இதே பாணியிலேயே, மறுநாள் தேனிலவுக்குக் கிளம்புகையில், அவர்களது பயணச் சாமான்களைப் பார்வையிட்ட பாமா, "அய்யய்யோ இதென்ன, வித்யாதம்பியின் பெட்டி உன்னுடையதைவிடப் பெரிதாகத் தெரிகிறதே! இந்த ஒரே ஒரு பெட்டிதானா, உனக்கு? நான் திருமணமாகி வந்த போது, என்னிடம் நாற்பது பட்டுச் சேலைகள், இருநூறு மற்ற சேலைகள், எண்ணமுடியாத அளவு சுரிதார் செட்டுகள் இருந்தன! எதைஎதை எடுத்துப் போவது என்று குழம்பி, என் பெட்டிகளை மூன்று எடுத்துப்போனோம்! பெரிய பெட்டிகள்! தேனிலவுக்குப் போகிறீர்களா, குடித்தனம் வைக்கப் போகிறீர்களா என்றுகூட யாரோ கேட்டார்கள்..."

என்றதுகூட மாதங்கியை அவ்வளவாக உறுத்திவிட-வில்லை.

அவள் ஒன்றும், அவளது நிலைமையை மறைத்து, ஏமாற்றி, வித்யாதரனை மணக்கவில்லையே!

இதற்குப் பதில் சொல்லாமல் அலட்சியப்படுத்தி விடலாம்! ஆனால், பலசமயங்களில், அதுபோன்ற அலட்சியமே, அதிக ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டு விடுவதுண்டு.

ஒருகசப்போடு தேனிலவைத் தொடங்கமனமற்று, "அப்படியெல்லாம், பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுக்க, எனக்குப் பெற்றோர் இல்லையக்கா!" என்று, ஒருவருத்த-மான முறுவலுடன் கையைவிரித்தாள் மாதங்கி.

சற்றுத் திகைத்துவிட்டு, "நா... நான் அதை மறந்தே போனேனே, மாதங்கி!" என்று, சா... சாரி! என்றாள் பாமா, சிறுத்துவிட்ட குரலில்.

"இனிமேல் தயவுபண்ணி மறக்காதீர்கள், அக்கா! ப்ளீஸ்!" என்று, கெஞ்சுதலாகக் கூறிமுடித்தாள், மாதங்கி.

அதற்குள், டிரைவர் காருடன் வந்துவிட, "ஏறிக் கொள், மாதங்கி!" என்ற கணவனின் குரலில், கனிவு கூடியிருந்தது-போல, மாதங்கிக்குத் தோன்றியது.

ஒருநாள் கைகோர்த்தபடி ஊரெங்கும் சுற்றி அலைந்து மகிழ்ந்தார்கள்.

மறுநாளே வித்யாதரன், மனைவியைக் கடைத்-தெருவுக்கு அழைத்துச் சென்றான். மாதங்கியிடம் சில ரூபாய் நோட்டுக் கட்டுகளைக் கொடுத்து, "இந்த இடம் பெண்களுக்கான சாமான்களுக்குப் பெயர்பெற்றது. துணிமணிகள், செருப்பு, கைப்பை என்று அலங்காரச் சாமான்களும் கூட இந்தக்கடையில் கிடைக்கும். வேண்டியதை வாங்கிக் கொள்!" என்றான்.

"இவ்வளவு பணத்துக்குமா?" என்று கண்களை விரித்தாள் அவள்.

"நாலுகடை ஏறி இறங்கு! இது போதாது என்பாய்!" என்று அவன் சிரித்தான்.

அவன் அழைத்துச் சென்ற கடையை, முதலில் சுற்றிப் பார்த்த மாதங்கியின் முகம் மலர்ந்து விகசித்தது. "இதுபோலெல்லாம் நிறைய நிறைய விலை உயர்ந்ததாக வாங்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவு நாட்களாக ஆசை தெரியுமா?!" என்று, கணவன் காதில், மகிழ்ச்சியோடு கிசுகிசுத்தாள் - இதுவே, அவனது மனதின் பீடத்திலிருந்து தன்னைக் கீழிறக்கப் போவது தெரியாமல்!

தோளைக் குலுக்கி, "வாங்கேன்!" என்றான் வித்யாதரன், குரலோ, முகமோ மாறாமல்.

6

புது மணமக்கள் தேனிலவுக்குப் போவது, பிறர் இடையூறின்றி, அன்றாட வேலை, தொழில் என்று எந்தவித இடைஞ்சலும் இல்லாமல், அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்காகவே, என்பார்கள். ஆனால், இது, எந்த அளவுக்குச் சரி என்பதில், மாதங்கிக்குச் சற்று சந்தேகம்தான்.

வித்யாதரும் அவளுமாகத் தனித்திருந்த அந்த ஏழு நாட்களில், இருவருமாக ஊர் சுற்றினார்கள்; அல்லது காதல் செய்தார்கள்!... காதல் செய்த நேரம்போக மிஞ்சிய பொழுதில் ஊர் சுற்றினார்கள் என்றும் சொல்லலாம்! இடையிடையே 'ஷாப்பிங்'!

இதற்கிடையே, ஒருவரை ஒருவர் அடுத்தவரின் குணநலன்கள், விருப்பு வெறுப்புகள், குறை நிறைகள் எல்லாம் அறிவது எப்படி?

ஆயினும், கணவனைப் பற்றி, நிறையத் தெரிந்து கொண்டுவிட்டதாகவே மாதங்கி நினைத்தாள். வித்யாதர், மாதங்கியிடம், அவளைப்பற்றிய விவரங்கள் எதையும் கேட்டது இல்லை! அவளது சிறுவயது, பெற்றோர் உடன் பிறந்தவன், வாழ்க்கை முற்ற... எதையுமே அறிந்து கொள்ள அவன் ஆர்வம் காட்டியது இல்லை!

அதற்காக, அவளைப் பற்றிய அக்கறை இல்லாதவன் என்று சொல்லிவிடமுடியாது! ஏனெனில், அவளுடைய அண்ணன் சிவாவை, மறுவாழ்வு மையத்தில் சேர்த்தது அவன்தான். 'ரம்யா' பார்லரின் உரிமையாளர் இடம்காட்டி உதவிய போதும், இலவசமாக வேண்டாம் என்று, பணம்கட்டி, சற்று உயர்தர மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்திருந்தான்.

எனவே, அவளது கடந்தகாலத்தைப் பற்றி அவன் அவளிடம் விசாரியாததின் காரணம், அதுபற்றிய அக்கறையின்மை அல்ல என்பது மாதங்கியின் கருத்து. நேர்மாறாக, அவள் மீது, அவன் கொண்டிருந்த பரிவின் விளைவே இந்தப் போக்கின் காரணம் என்றும் எண்ணினாள்.

இறந்த காலத்தை, இறந்துவிட்ட காலமாக விட்டுவிட வேண்டும். அதிலும், வருத்தமான இறந்த காலத்தை, மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்து, அந்த வேதனையை மீண்டும் ஒருதரம் அனுபவிப்பது மடத்தனம் என்று எத்தனையோ அறிஞர்கள் எடுத்துரைக்கிறார்களே! அவனது வருத்தமான கடந்த காலத்தை நினைவுபடுத்தி மீண்டும் வேதனைப்பட வைக்கக்கூடாது என்கிற நல்ல மனம் வித்யாதரனுக்கு.

வித்யாதரன் நல்லவன்! மற்றபடி, அந்தஸ்து வேறுபாடு பாராமல் அவளை மணந்திருக்கமாட்டான்!

பெருந்தன்மை உடையவன்! அவனது வீட்டுக்குத் தகுந்த

அளவில், நல்ல துணிமணிகள் அவளிடம் இல்லை என்பது உணர்ந்து இவ்வளவு பணம் தந்து வாங்கச் சொல்கிறான்!

மரியாதை தெரிந்தவன்! உணவருந்தச் செல்லும்போது, அவளது அபிப்பிராயமும் அறிந்தபிறகே 'ஆர்டர்' பண்ணுவான்!

ஆசைமிக்க கணவன்!

இதற்குமேல், அவனைப்பற்றி அறிய என்ன இருக்கிறது?

கணவனைப் பற்றி உள்ளும் புறமும் முழுமையாய் அறிந்துவிட்டதாகக் கருதிப் பெருமிதப்பட்டவளுக்கு மூன்றாம் நாள் காலையில் ஒரு சிறு அதிர்ச்சி ஏற்பட்டது.

சற்றுத் தொலைவில் இருந்த ஓர் அழகிய, பழங்கால அரண்மனையைப் பார்த்துவிட்டு வருவதாகக் கணவன் மனைவி இருவரும் திட்டமிட்டிருந்தனர். குளித்துவிட்டு வந்த மாதங்கி, "அவசியம் என்றால் தயங்காமல் சொல்லுடா! இங்கே எல்லாவற்றையும் ரத்துபண்ணி-விட்டு, உடனே கிளம்பி வந்துவிடுகிறேன்! என்று வித்யாதரன், டெலிஃபோனில், சொல்லிக் கொண்டி-ருப்பதைக் கேட்டுத் திகைத்து நின்றாள்.

யாருடைய அவசியத்துக்காக இவன் தேனிலவையே, இடையில் முடித்து விட்டுக் கிளம்புவதாகச் சொல்கிறான்?

வீட்டில் யாருக்கும் ஏதாவதுமா? அவளது துரதிருஷ்டம் இன்னமும் தொடர்கிறதா? ஆனால், அப்படி ஏதாவது என்றால், அவசியம் என்றால் சொல்லுடா என்று கேட்டுக் கொண்டிருப்பானா? 'டா'?

வேறுயாருக்கு என்ன, என்ற குழப்பம் ஒருபுறம். இந்த சொர்க்கத்தைப் பாதியில் இழக்க நேரிடுமோ என்ற அச்சமும் கவலையும் வேறு, கணவன் தன்னிடம் ஒருவார்த்தை கலந்து ஆலோசிக்கக்கூட இல்லையே என்பது வேறு மாதங்கியை வாட்டியது. கேவலம், ஓர்

உணவு அயிட்டம் விஷயத்தில் கூட அவளது விருப்பத்தைக் கேட்பவன், இப்போது, அவள் இருப்பதையே மறந்தவன் போன்று, 'வருகிறேன்' என்று, ஒற்றைப் படையில் உரைக்கிறானே!

கலக்கத்துடன் அவள் நிற்பதைச் சற்றும் கவனியாமல், வித்யாதர் ஃபோனில் தொடர்ந்தான். "நீலா, நீ எனக்காகப் பார்த்துக் கொண்டு இப்படிச் சொல்லவில்லையே? உனக்குத் தெரியுமில்லையா, எனக்கு உன்னைவிட, இந்தத் தேனிலவு, மண்ணாங்கட்டி என்று எதுவும் முக்கியம் கிடையாது!...ம்' என்னது? சொல்லாமல் திருமணம் செய்து கொண்டேனா? பின்னே, என்ன செய்வதாம்? நீதான் ஆள், அட்ரசே இல்லாமல் ஒருமூணுமாதத்துக்கும் மேலாகக் காணாமல் போய்விட்டாயே! எப்படிச் சொல்வதாம்? சரிசரி. அதைவிடு! உன் விஷயம் பேசுவோம்! மெய்யாகவே, உனக்கு ஒன்றும் இல்லைதானா? எதற்கும், ஓட்டல் 'ரிசப்ஷ'னில் சொல்லி வைக்கிறேன். வெளியே போனாலும், அவ்வப்போது இங்கே தொடர்பு கொண்டு விசாரித்துக் கொள்கிறேன்! ஆனால், நீ மட்டும் எதற்காகவும் ஒத்திப் போடக்கூடாது! ஓகே? ப்ராமிஸ்? சரி வைக்கிறேன்." என்று, ஒருவாறு பேச்சை முடித்தான்.

ரிசீவரை வைத்த பிறகே, மனைவி நிற்பதைக் கவனித்தவன், கண்கள் பளிச்சிட விசிலடித்தான்! "பிரமாதம்! ஒன்று சொல் மதி, இன்று நாம் வெளியே போகாமல் அறையிலேயே இருந்துவிடலாமா?" என்று கண் சிமிட்டிக் கேட்கவும், உள்ளிருந்த குழப்பத்தையும் மீறிக் கொண்டு மாதங்கியின் கன்னங்கள் சிவந்தன!

இப்படிக் கொஞ்சுகிறவன், தேனிலவு மண்ணாங்கட்டி... என்று எப்படிச் சொன்னான்?

"என்ன? பார்வையில் பயங்கர ஆராய்ச்சி? அக்குவேறு, ஆணிவேறாய் என்னை அணுஅணுவாய்ப் பிரித்து அறிந்து கொள்கிற மாதிரிப் பார்க்கிறாயே! என்ன விஷயம்?"

டெலிஃபோன் பேச்சு பற்றி, அவளாகக் கேட்பதைவிட, அவனாகச் சொல்வது நல்லதோ?

"ஒ...ன்றுமில்லை! பசி வயிற்றைக் கிள்ளுகிறது! நீங்கள் எப்போது 'ஷேவ் பண்ணி, குளித்து... எப்போது சாப்பிடப் போகப் போகிறோமோ என்று நினைத்தேன்!" என்றாள் அவள் கேலிபோல.

"பாவி! அப்படியே 'மூடை' அவுட்டாக்கிவிட்டாயே! கணவனும் மனைவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும்!, பசியே எடுக்காது என்று எதிலோபடித்தேன்! நீயானால், தேனிலவிலேயே பசிக்கிறது என்கிறாயே! என்னடி நியாயம் இது?"

"நியாயமோ, அநியாயமோ? நேற்றிரவும் இப்படித்தான் பட்டினி போட்டீர்கள்..."

சிரித்துவிட்டு, "அலமாரியில். ஒரு பிஸ்கட் பாக்கெட் இருந்ததே!" என்றான் அவன்.

"பாக்கெட் இருக்கிறது! உள்ளேதான் ஒன்றும் இல்லை? விவரத்தை உங்கள் வயிற்றிடம் தான் கேட்கவேண்டும்!"

"அடடா! ஆமாம்! விடிகாலையில் விழித்தேனா, நல்லபசி! அத்தனையும் முடித்துவிட்டேன்! அதனால்தான் உன்னளவு எனக்கு அவ்வளவாய் பசிக்கவில்லைப்போல! மதி இனி நான் குளித்துவிட்டு வந்து, சாப்பிடப் போவது என்றால் அதிக நேரமாகிவிடும். அதனால், நீ ரூம் சர்வீசுக்கு ஃபோன் செய்து, உனக்குப் பிடித்தமானதை வரவழை! அதற்குள் நான் குளியலை முடித்து விடுகிறேன். சீக்கிரமாகச் சாப்பிட்டு விடலாம்!" என்றுவிட்டுக் குளியலறைக்குள் புகுந்தான் வித்யாதரன்.

மாதங்கியின் மனம் குளிர்ந்தது. இவ்வளவு கனிவும், கரிசனமும் கணவனுக்கு இருக்கும் போது அவள் ஏன் கலங்கவேண்டும்?

இந்த டெலிஃபோன் பேச்சு பற்றிக்கூட அவனாகவே சொல்லக் கூடும்!

இந்த இரண்டுநாள்ப் பழக்கத்தில் அறிந்ததை வைத்து வித்யாதரனுக்குப் பிடித்தமானதாயிருக்கக்கூடும் என்று அவளுக்குத் தோன்றிய உணவு வகைகளை, அறைக்கு அனுப்பும்படி 'ரூம் சர்வீசில்' சொல்லிவிட்டு உற்சாகத்துடன் மாதங்கி கணவனுக்காகக் காத்திருந்தாள்.

குளித்து முடித்துத் தலையைச் சரியாகத் துவட்டாமல் குளியலறையிலிருந்து வந்து, மனைவியின் அருகில் நின்று, தலையை உளுக்கி அவள் மீது நீர் தெளித்து விளையாடிய போதும், கேலியும் கிண்டலுமாகப் பேசியபடி உண்ட போதும், பிறகு ஊர் சுற்றிய போதும், எப்போதுமே அன்றைய டெலிஃபோன் உரையாடலைப் பற்றி வித்யாதரன் ஒருவார்த்தை கூடச் சொன்னானில்லை!

அப்படிச் சொல்லும் எண்ணமே அவனுக்கு இல்லாதது போலத் தோன்றி விடவும், அவளாகவே, "காலையில்... யார் ஃபோன்... யாருடனோ பேசிக் கொண்டு இருந்தீர்களே..." என்று விசாரித்தாள்.

அவன், மறைக்கவும் இல்லை! "என் நண்பன்! மிக மிக நெருங்கிய நண்பன். பெயர் நீலநாராயணன். நான் 'நீலா' என்று சொல்வேனா, அம்மாவுக்குப் பிடிக்காது. பெண் பெயராக இருக்கிறதாம்!" என்று புன்னகையோடு விவரித்தான்.

கூடச் சேர்ந்து முறுவலித்த போதும், மேலும் விவரம் அறிய விரும்பி, "எதோ, அவசியம் என்றால் உடனே வருவதாகச் சொன்னீர்களே! என்ன தேவை..." என்று கேட்கும் போதே அவளுக்குத் தயக்கம் உண்டாகிவிட்டது. கணவனே என்றாலும், அவன் என்ன எண்ணுவான் என்று அதற்குள் என்ன தெரிகிறது?

அனாவசியமாக அவன் விஷயத்தில்... அவன் நண்பன் விஷயத்தில் அவள் தலையிடுவதாகக் கணவன் நினைத்து விட்டால்?

சும்மா சும்மா எதிலும் மூக்கை நீட்டுகிற ரகம் என்று தன்னை மட்டமாக எண்ணிவிடக்கூடாதே என்று அஞ்சி, "தப்பாக நினையாதீர்கள். ஏதோ தேவை என்றீர்களே! பணத்தேவை என்றால் உடனே அனுப்பி விடலாமே என்று நினைத்தேன்..." என்று வேகமாக விளக்கம் கூறிச் சமாளித்தாள் அவள்.

கணவன், குறைவாக நினைத்துவிடுவானோ, கோபப்-பட்டுவிடுவானோ என்றெல்லாம் அவள் கலங்கியதற்கு-மாறாக, அவன் சாதாரணமாகவே பதில் சொன்னான். அவனுக்குத் தேவை, பணம் அல்ல, மாதங்கி! நீலாவுக்கு ரத்தச் சிவப்பணு உற்பத்தியில் ஒரு கோளாறு. தேவையான அளவு உற்பத்தி ஆவது இல்லை! அதனால், அந்தச் சிவப்பணுத் தேவையை அவ்வப்போது பூர்த்தி செய்யவேண்டும்..."

"அதாவது ரத்தம் கொடுக்க வேண்டும்! இல்லையா? ஆனால், அதற்கு நீங்கள்..."

"என் ரத்தமும் நீலாவின் ரத்தமும் ஒரே பிரிவு. அதனால் அவ்வப்போது நான் அவனுக்கு ரத்தம் கொடுப்பேன்... அதாவது தேவைப்படுகிறபோது!" என்றான் வித்யாதரன் இயல்பாகவே!

ஆனால், மாதங்கிக்குத்தான், மனம் பதைத்துப் போயிற்று.

தேவைப்படும் போதெல்லாம் ரத்தம் கொடுப்பானாமே? தேவை அதிகரித்தால்?

"தேவைப்படும் போதெல்லாம் நீங்களே கொடுக்க வேண்டுமா? மாற்று ஏற்பாடு ஏதாவது செய்யலாமே!" என்றாள் கவலையுடன்.

மனைவியிடம் வித்யாதர் செலுத்திய பார்வை, அன்று வரை, அவள் அறியாதது!

"இது போலக் கரிசனம் காட்டிடப் பேசினால் எனக்கு உவப்பாக இருக்கும் என்று எண்ணிச் சொன்னாயோ, என்னவோ? ஆனால், இதுபோல், எனக்குப் பிரியமற்ற வார்த்தைகள் வேறு எதுவும் இல்லை... இராது எனலாம். நீலா என் உயிர் நண்பன்! அவனுக்குக் கொடுக்கக் கூடாதது என்று என்னிடம் எதுவுமே இல்லை! டாக்டர் மட்டும் அனுமதித்தால், தினமுமே அவனுக்கு நான் ரத்தம் கொடுப்பேன்!" என்றான் வெகு அழுத்தமாக குரலில், தெளிவாக.

உயிர் நண்பனா? உயிர் குடிக்கும் நண்பனா? 'டிராகுலா' மாதிரி, வித்யாதரனின் ரத்தத்தை அல்லவா, உறிஞ்சுகிறான்.

நோயாளி, பாவம் என்று தனக்குள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும், அதையும் மீறிக் கொண்டு, அந்த நீலநாராயணனின் மேல், மாதங்கிக்கு வெறுப்பு உண்டாயிற்று.

7

ரத்த தானத்தின் மகிமை பற்றி ஒன்றுமே அறியாதவள் அல்ல மாதங்கி. அது எவ்வளவு பெரிய மனிதத் தொண்டு, உயிர்காக்கும் சேவை என்பதெல்லாம், அவளுக்கும் தெரியும் தான். விட்டால், சொற்பொழிவே ஆற்றுவாள்.

கல்லூரியில் நடந்த ஒரு ரத்ததான முகாமில், அவளும் கூட ரத்தம் கொடுத்திருக்கிறாள்.

ஆறுமாதங்களுக்கு ஒருதரம், அதிகப்படியாக நாலுமாதங்களுக்கு ஒருமுறை ரத்தம் கொடுப்பதால், ரத்ததானம் செய்பவருக்கு ஒருகேடும் நேராது என்பதும் அவள் அறிந்த விவரம் தான்.

ஆனால், அதில், அளவு பற்றியும் ஒன்று இருக்கிறது. பிறந்த குழந்தை ஒன்றுக்கு, அனீமியா வந்துவிட, குழந்தையின் வகை ரத்தம் உடைய உறவினர் ஒருவர், ஒன்றுவிட்டு ஒருநாள் பத்து மில்லி விட்டார் ரத்தம் கொடுத்துக் குழந்தையைக் காத்ததையும் மாதங்கி அறிவாள்.

வித்யாதரன் என்ன அவகாசத்தில், எந்த அளவு ரத்தம் அந்த நீலநாராயணனுக்குக் கொடுத்துவந்திருக்கிறானோ? கொஞ்சம் என்றால் பரவாயில்லை! கொசு, மூட்டைப்பூச்சி பலரிடம் பேன் கூட உதிரம் உறிஞ்சுவதில்லையா?

எப்படியும், கொடுப்பவனுக்குக் கேடுவந்து விட, வைத்தியர் விடமாட்டார் என்கிற அளவில் மாதங்கி ஆறுதல் அடைய வேண்டியதாயிற்று.

ஆனால், அவள் மனதை உறுத்தியது இன்னொன்று. வித்யாதரன் தன் , நண்பன் என்கிற பாசத்தில் ரத்தம் கொடுத்துக் கொண்டே இருக்கிறான். ஆனால், அதே பிரியம், அந்த நீலநாராயணனுக்கும் இருந்தால், மீண்டும் மீண்டும் இவனிடமே ரத்தத்திற்கு வந்து நிற்பானா? இதை, வித்யாதரன் என்றாகிலும் யோசித்துப் பார்த்திருப்பானா? இல்லை என்பது தெளிவு! ஒருதரம் சிந்தித்திருந்தால் கூட இந்தத் தானம் நின்று போயிருந்திருக்கும்.

ஆயினும், கணவன், விஷயத்தைச் சொன்னவிதம், அது பற்றிய மாறுபட்ட எந்தக் கருத்தையும் ஏற்பதாக இல்லை என்று எச்சரிப்பது போலத் தோன்றவும், மாதங்கி, தன் மனதில் எண்ணிய எதையும், வெளிப்படையாகக் கூறவில்லை.

பயனற்ற ஒரு விவாதம் செய்து, இருக்கிற சுமூகமான, மனநிலையைக் கெடுத்துக் கொள்வானேன்? நிலைமை அளவு மீறும் போலத் தோன்றினால், அப்போது பார்த்துக்

கொள்ளலாம், அவனைக் காக்கும் முயற்சியில், மாமியார்... எல்லோருமே உடனிருப்பார்கள்!

வித்யாதரும் ஒரு சொற்போரை எதிர்பார்த்துத் தயாராக இருப்பது போலத் தோன்றவும், இந்த விஷயத்தை அடியோடு கைவிட்டு, "எனக்குத் திருமணத்தின் போது வாங்கிய சேலைகளைத் தேர்ந்தெடுத்தது யார்? அத்தையா, உங்கள் அண்ணியா?" என்று முழுக்க முழுக்க வேறு விவரம் விசாரித்தாள்.

கணவனின் முகத்தில், கணம் தோன்றி மறைந்த வியப்பை, மாதங்கியால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால், அதைத் தொடர்ந்து, பெருமிதமும், திருப்தியும் கலந்த முகபாவம் தான் அவளைக் குழப்பியது. குழப்பியது மட்டுமின்றி அவளுக்கு அது பிடிக்கவும் இல்லை!. ஒருவேளை, குரலைச் சற்று அழுத்திப் பேசியதால், மனைவி பயந்து அடங்கி விட்டதாக எண்ணுகிறானோ? தப்பாயிற்றே!

அவளது பயத்தில் திருப்தி அடைவது தவறு என்பது மட்டுமின்றி, அப்படிப் பயப்படுகிறவள், பெற்றோரை இழந்து இந்த நாலு ஆண்டுகள் எப்படிப் பிழைத்திருப்பாள் என்று யோசிக்க வேண்டாமா என்று எண்ணமிட்டவள், அதையும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

"அம்மாதான்! அண்ணிக்குத்தான், எடுப்பதும், மாற்றுவதுமாக, அவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் வாங்கி முடிக்கவே, நேரம் சரியாக இருந்ததே!" என்ற அவனது பதிலை மட்டும் கவனத்தோடு கேட்டுக் கொண்டாள்.

கூடவே, அவனுடைய தந்தை, அண்ணன், அண்ணி, குழந்தைகள் என்று வீட்டின் மற்ற அங்கத்தினர் பற்றியும் பேசி விவரம் சேகரித்தாள்.

மாமியார் அளவுக்கு இல்லை என்றாலும், வித்யாதரும்

அண்ணன், அண்ணி பற்றி அதிகம் பேசவில்லை. பொதுப்படையாக, அப்பா தொழில் தொடங்கி வளர்த்தது, படித்து முடித்ததும் சத்யாகர் தொழிலில் சேர்ந்தது, பெற்றோர் விருப்பப்படி திருமணம் செய்து கொண்டது எல்லாம் தேர்வில் 'சுருக்கி எழுதுக' என்று வருமே, அதுபோலச் சொன்னான்.

ஆனால், அண்ணன் மக்களின் பெயர் தனலட்சுமி, செல்வக்குமாரன், ஐஸ்வர்யா என்றுரைத்தபோது, அவனையும் மீறி அவனது உதடுகள் ஏளனமாய் வளைந்தன.

"நீங்கள் எல்லாம் சேர்ந்து வைத்த பெயர்கள் தானே' அல்லது உங்கள் அப்பா அம்மா வைத்ததா?

"என் பெற்றோருக்கு நாங்கள் இரண்டே பையன்கள். அண்ணா பெயர் 'சத்யாகர்' என் பெயர் 'வித்யாதர்' இப்படிப் பெயர்வைப்பவர்களா தனம், செல்வம், ஐஸ்வரியம் என்று வைப்பார்கள்? எல்லாம் அவர்கள் வீட்டில் வைத்தது!" என்றான் அவன். "அதாவது, அண்ணி வீட்டில்."

இடைப்பட்ட நான்கு ஆண்டுகள் நினைவுக்கு வர, "யாரும் வாழ்க்கைக்கு அத்தியாவசியம்தான். ஆனால், பெயரில் எல்லாம்... ஒருவேளை, நியூமராலஜி பார்த்து அல்லது பிறந்த வேளை பார்த்து வைத்திருப்பார்கள்! எனக்கும், அண்ணனுக்கும் அப்படித்தான் பெயர் வைத்ததாக, அம்மா சொல்லியிருக்கிறார்கள். என்றாள் மாதங்கி!

"அதாவது, நீங்கள் கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருந்தாலும், உங்களுக்கு வைக்கப்பட்ட பெயர்களின் மகிமையால், அறுபத்தி நாலு கலைகள், பதினாறு வகைச் செல்வங்கள், அஷ்டமாசித்திகள் எல்லாம் கைகூடிவிடுமாக்கும்!" என்றான் வித்யாதர் பரிகாசமாக.

வியப்புடன், விழிவிரித்து, மாதங்கி, கணவனைப் பார்த்தாள். "இதுவரை நான் அந்த மாதிரி யோசித்துப் பார்த்ததில்லை! ஆனால், சொல்லுங்களேன், நீங்கள் என்னை மணந்து கொண்டது அப்படித்தானே? நம்மை மீறிய ஒரு சக்தியின் செயல்தானே?" என்றாள் குரலில் நெகிழ்வுடன்.

உதட்டைப் பிதுக்கினான் வித்யாதரன். "உன் பெயரின் சக்தி, உன்னிட மும் என்னை இழுத்து வந்து விட்டதாக்கும்? சுத்தப் பேத்தல்! உதாரணத்துக்கு உன் அண்ணன் நிலையையே எண்ணிப்பார்! அவனுக்கும் உனக்கும் மாதிரிதானே பெயர் வைத்ததாகச் சொன்னாய்?"

மாதங்கியின் மலர்முகம் சட்டென வாடிப்போயிற்று. வித்யாதர் சொல்வது சரிதானே? சிவாவிற்கு, அவன் பிறந்த நட்சத்திரம், ஜாதகம், நாடி, ஜோசியம், என் சோதிடம் எல்லாம் பார்த்து அலசி, ஆராய்ந்து பெயர் வைத்ததாகத்தான் கேள்விப்பட்டிருக்கிறாள். இப்படி ஆகிவிட்டானே! ஆனால்...

கணவனை ஏறிட்டு, "கஷ்ட நஷ்டங்கள் எல்லார் வாழ்விலும் நேர்வதுதான். இன்றைய நிலையை மட்டும் வைத்து நாம் அபிப்பிராயம் சொல்லிவிடமுடியுமா? பிற்காலத்தில் அண்ணன் எப்படி இருக்கப் போகிறார் என்று இப்போது எப்படிச் சொல்லமுடியும்?" என்று கேட்டாள் மாதங்கி.

"விதை ஒன்று போடச் செடி வேறொன்று முளைப்பதில்லை, வாழ்வில் வெற்றிபெற மனக் கட்டுப்பாடுவேண்டும். இப்போது இல்லாதது என்றைக்கு..." என்றவன் சட்டெனப் பேச்சை நிறுத்தித். தலையசைத்து, மேலே தொடர்ந்தான். "இந்தப்பேச்சு இப்போது எதற்கு? தேவையான முயற்சி எதுவும் இல்லாமல், வெறும் பெயரினால் மட்டும் ஒருவர் முன்னேறிவிடப் போவது

இல்லை என்பது உனக்கும் தெரியும், எனக்கும் தெரியும்! விடு வேறு பேசலாம்! அந்தச் செம்பட்டைத் தலைக்காரர், தலையைச் சொறிவதற்காக, 'விக்கைக் கழற்றியபோது, அதைக் காற்று அடித்துக் கொண்டு போனதே, நினைவிருக்கிறதா? அவர் கறுப்புநிற 'விக்'கோடு வந்திருக்கிறார், பார்! பாவம், மனிதர்! இனிமேல் என்னமாதிரி அரிப்பு எடுத்தாலும் மனிதர் கையை தலைப்பக்கம் உயர்த்தக்கூடமாட்டார் என்கிறேன்! நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான்.

அண்ணனைப் பற்றிய பேச்சு அவளை வதைக்கக் கூடும் என்று எண்ணிப் பேச்சை மாற்றுகிறான்! நன்றியால் இமைகள் லேசாக நனைய, "பிராணபதி சொல்வதை அட்டியின்றி ஒத்துக் கொள்கிறேன்!" என்று மாதங்கி சிரிக்க அவனும் முகம் மலர்ந்தான்.

தேவலோகம் போலத் தோன்றிய ஹோட்டலையும், கோவாக் கடற்கரையையும் விட்டுவரவே மாதங்கிக்கு மனசில்லை! ஆனால், சிவா விஷயமாய் மாதங்கி நன்றி தெரிவிக்க முனைந்த போது, வித்யாதர் "நம் இந்தியத்-திருமணங்கள், ஓர் ஆணையும் பெண்ணையும் மட்டிலும் இணைப்பது அல்ல; இரு குடும்பங்களின் பிணைப்பு ஆகும். கணவன், மனைவி இருவருமே, அடுத்தவருடைய குடும்பத்தின் நன்மை தீமைகளுக்கும் பொறுப்பேற்க வேண்டியவர்களே!" என்று சொன்னது போல. சென்னையில், அவன் குடும்பத்தில் - இனி அவளுடைய குடும்பத்திற்கு, அவளது கடமையை ஆற்றச் செல்ல வேண்டும் தானே?

அங்கே யார் எப்படி இருப்பார்களோ என்று அஞ்சத் தேவையின்றி, ஒருநல்ல, அன்பான மாமியார் இருக்கிறார்! சித்தி, சித்தி என்று மழலையில் அழைத்தபடி அவளை ஆர்வத்தோடு சுற்றி வந்த இரு குழந்தைகள் இருக்கிறார்கள்.

மெத்து மெத்தென்று உடலில் உராய்ந்தபடி நின்ற குழந்தைகள் இருவரையும் நினைத்தபோது தானாக மாதங்கியின் முகம் மலர்ந்தது. செல்வத்தின் மழலை மாறாத பேச்சும், பெரிய மனுஷிபோலத் தனலட்சுமி அவனைத்திருத்துவதும், இதென்ன? அது ஏன்? என்று கேட்பதும்... வித்யாதரன் வேலை என்று செல்லும் சமயங்களிலும் பொழுது இனிமையாகத்தான் கழியும்!

இன்னொரு சின்னக் குழந்தை வேறு!

குழந்தைகளைத் தொடர்ந்து, அவர்களுடைய பெற்றோரும் முக்கியமாகத் தாயார் நினைவு வரவும் மாதங்கிக்குக் கொஞ்சம் கலக்கமும் உண்டாயிற்று. மைத்துனன் சத்யாகரைப் பொறுத்தவரை, சில பொதுவான நேரங்கள் தவிர, அவனிடம் பேசக் கொள்ளத் தேவையிராது! மாமனாரும் அப்படியே!

ஆனால் பாமா?

அவள் வீட்டிலேயே இருப்பவள்! மாதங்கியிடம் தன் பிரியமின்மையை ஓரளவு வெளிப்படையாகவே காட்டியவள்!

பெற்றோர் இல்லாதது குறித்து மாதங்கி நினைவூட்டியபோது பாமா ஒரு 'சாரி' சொன்னாள்தான்! ஆனால் அந்த 'சாரி' மனதின் ஆழத்திலிருந்து வந்ததல்ல; ஒப்புக்காக அதைச் சொல்லாவிட்டால் மற்றவர்கள் தன்னை மோசமாக நினைக்கக்கூடும் என்று தான் சொல்லப்பட்டது என்பது மாதங்கிக்கு நன்றாகப் புரிந்தது.

எனவே, அவளோடு சிலபல உரசல்களுக்கு மாதங்கி தயாராகத்தான் இருக்க வேண்டும்!

பாமாவின் பேச்செடுக்காமல், மாமியாரே ஒதுங்குவதை எண்ணிப் பார்க்கையில், சில இடிகள் பலமாகக் கூட விழக்கூடும் என்று அவள் உணர்ந்தாள்.

ஆனால் என்ன? அங்கே அவளுடைய ஆசைக் கணவனும் இருப்பானே! மனைவியின் முகம்வாடப் பொறுக்கா புருஷன் அப்படி அவளை யாரேனும் நோகடிக்க அவன் விட்டுவிடுவானா, என்ன?" நிச்சயமாக மாட்டான் என்று உறுதியாக நம்பினாள் அவள்.

ஆனால், அந்த நம்பிக்கை விரைவிலேயே; அடிப்-படையில்லாத கட்டிடம் போலப் பொடிப் பொடியாக நொறுங்கி அவளை நோகடிக்கப் போகிறது என்று அப்போது அவளுக்குத் தெரியாது!

8

வித்யாதரனும் மாதங்கியும், வீடு திரும்பியது ஒரு ஞாயிற்றுக் கிழமையில், சென்றதுமே வேலை, அது இது என்று பரபரக்காமல், ஒருநாள் இலகுவாக இருக்கலாம் என்பது வித்யாதரனின் எண்ணம். வீட்டிலும், எல்லோரும் இருப்பார்கள் அல்லவா?

அவன் கூறியதற்கிணங்க, லீவு நாளின் அசமந் தத்தனத்துடன்தான் வீடும் இயங்கிக் கொண்டிருந்தது.

விதிவிலக்காக, 'வாம்மா!' என்று வாய் நிறைய வரவேற்று, இருவரையும் உள்ளே அழைத்துச் சென்று காஃபி கொடுத்தாள் கோகிலம்.

"சித்தப்பா, வந்தாச்சு!" என்ற பிள்ளைகளின் ஆர்ப்பரிப்பில், பாமா வெளியே லேசாக எட்டிப் பார்த்தாள்.

"ம்! ஒருபெட்டி மூன்று பெட்டிகள் ஆகிவிட்டன? பார்த்தீர்களா?" என்றாள் கணவனிடம். "யார் பணம்?" என்றாள் ஆத்திரத்துடன்.

"ஏய்... என்னடி பேச்சு இது? நாம் தேனிலவிலிருந்து திரும்பி வந்தபோது, உன் மூன்று பெட்டி பனிரண்டு

ஆகிவிடவில்லையா? விகிதம் பார்த்தால், அவள் குறைவாகத்தானே வாங்கியிருக்கிறாள்!" என்று சத்யாகர், மனைவியை அமைதிப் படுத்த முயன்றான்.

"நாம் போனது சிங்கப்பூருக்கு! அத்தோடு, நான் வாங்கியதில் பாதி என் அப்பா தந்த பணத்தில், இப்படி, உரு மாற்றுக்குக் கூட ஒன்றுமில்லாமல் வந்தவள் இல்லை, நான்" என்று, போர்க் கொடி உயர்த்தினாள் அவன் மனைவி.

"அப்படிப் பார்த்தாலும்,.. "என்று தொடங்கியவன் உடனே குரலைத் தணித்து, "தம்பிமனைவி, அன்னக் காவடி என்பதுதான் தெரியுமே, பாமி! வெளியே கிளியே போனால், நம் வீட்டுக்குத் தகுந்தாற்போலக் கட்டிக் கொள்ள அவளுக்கும் நாலைந்து வேண்டுமில்லையா? அதுதான், தம்பி வாங்கிக் கொடுத்திருப்பான்! போகட்டும், விடு!..." என்றான் அவன்.

"நன்றாயிருக்கிறது நீங்கள் சொல்வது? அவளுக்கு எல்லாச்செலவும் இங்கிருந்தே செய்வீர்கள். என்றால், எனக்குச் செய்கிற என் அப்பா என்ன ஏமாளியா? இன்றைக்குத் துணிமணி! நாளைக்கு நகை! அப்புறம் கார்! எனக்குக் கார் கொடுத்த என் தந்தையும், கார் கொணர்ந்த நானும் பேக்குகள், அப்படித்தானே? என்ன நியாயம் இது" வேகம் கூடியது அவள் பேச்சில்.

சத்யாகர் சோர்வுடன் பெருமூச்செறிந்தான். "இப்போது அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாய்?" என்று அலுப்புடன் கேட்டான்.

"என்ன செய்வது?" சற்று யோசித்துவிட்டு, "என்ன தான் செய்வது?" என்று அவனையே திருப்பிக் கேட்டாள் அவன் மனைவி. "அப்பா செய்வதை வேண்டாம் என்றால், எல்லாம் எங்கள் அண்ணிக்குப் போய்விடுமே! இப்போது நான் என்னதான் செய்வது?"

வழிகண்டாற்போல, "உன் அண்ணி அடைவது மேலா, அல்லது, மாதங்கிக்கும் ஒன்றிரண்டு கிடைத்தால் பரவாயில்லையா என்று நீயே யோசித்து முடிவுக்கு வா. இப்போது, வந்தவர்களைப் பார்த்து, 'வா' என்று ஒருவார்த்தை சொல்லிவிட்டு வந்தால் நன்றாயிருக்கும், வா!" என்ற சத்யாகர், மனைவியின் முகம் கடுப்பதைக் கண்டு, "இல்லாவிட்டால், அப்பா தப்பாக நினைப்பார், பாமி! பிளீஸ், வாடா!" என்று கொஞ்சிக் கெஞ்சி, அவளை அழைத்துச் சென்றான்.

அவர்கள் இருவருமாகச் சென்றபோது, மாதங்கி, பெட்டியைத் திறந்து, வீட்டினருக்காக வாங்கி வந்தவற்றை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

பேரப் பிள்ளைகள் இருவரும் ஆளுக்கொரு புது விளையாட்டுச் சாமானுடன் நிற்க, மெல்லிய ஜரிகைக் கரையுடன் கூடிய நைசான நூல் சேலை ஒன்றை கோகிலம் கையில் வைத்துக் கொண்டிருந்தாள்.

"எனக்குப் பிடித்த நிறம்! எப்படிக் கண்டு பிடித்தாய், மாதங்கி?!" என்று மகிழ்ச்சியோடு கேட்டாள்.

"எனக்குத் திருமணச் சேலைகள் எல்லாம் நீங்கள் தான் தேர்ந்தெடுத்தாக உங்கள் பிள்ளை சொன்னார், அத்தை! அதிலிருந்து ஊகித்தேன். என்று முறுவலித்தாள் மாதங்கி.

"ஓகோகோ! இதைத் தெரிந்து கொள்ளத்தான், சேலைகளை யார் வாங்கியது என்று தூண்டித் துருவினாயா?" என்ற வித்யாதரின் குரலில் பெருமிதம் தொனித்தது.

கணவன்கையைப் பிடித்து நிறுத்தி, "பாருங்கள்! என்னமாய் காக்காய் பிடிக்கிறாள் என்று! வெல்லப்-பிள்ளையாரைக் கிள்ளி அவருக்கே நெய்வேதியம் செய்கிற மாதிரி இங்குள்ள பணத்திலேயே வாங்கி... அதுவும் நூல்சேலை!..." என்று பாமா பொருமினாள்.

"அது கூட நீ செய்யவில்லையே! அதிகமாகச் சேர்ந்த ஒன்பது பெட்டிகளில் இருந்த பொருட்களில், ஒரு துரும்புகூட நீ அடுத்தவருக் கென்று வாங்கி வரவில்லையே என்று நினைத்ததைச் சொல்ல முடியாமல்," போகிறதுபோ, அவளென்ன உன் போலப் பணக்காரியா, தன் பணத்திலிருந்து வாங்க? கிடைத்த பணத்தில், அவளுக்குத் தெரிந்ததை வாங்கியிருக்கிறாள்! அதுவே, அவள் தகுதியைக் காட்டுகிறது என்று, விட்டுவிடம்மா! வா!" என்று சமாளித்து, மனைவியை அழைத்துச் சென்றான் சத்யாகர்.

தம்பியின் தோளில் தட்டி, "என்னடா வித்யா, ஒருவாரத்தில் ஒரு சுற்று பெருத்துவிட்டாய் போல? ஜாக்கிரதை! இப்படியே ஏறினால், இரண்டு மாதங்களில், என்னை மாதிரி ஆகிவிடுவாய்!" என்றான் விளையாட்டாக.

"இங்கே டென்னிஸ் பயிற்சி இருக்கிறதே! விரைவில் சரியாகிவிடுவேன் சத்யா!" என்று வித்யாதர் பதிலிறுக்க, "நீ இனி மேல் குடும்பஸ்தனடா! முன்போலக் காலையில் எழுவது, டென்னிஸ் பயிற்சிக்கு ஓடுவது... எங்கே? அதெல்லாம் நடக்காது, பார்!" என்று பெரியவன் கூற, சின்னவன் அவன் காதில் கிசுகிசுக்க, "இத்தனைபேர் நடுவில் ரகசியமா?" என்று மாதங்கி ஆட்சேபிக்க, "அது..." என்று தொடங்கிவிட்டு, ஆண்கள் இருவரும் அசடுவழிய, கோகிலம் ரசித்துச் சிரித்தாள்.

பெட்டிக்குள் தேடி, "பெரியத்தான், இது உங்களுக்கு வாங்கினோம்!" என்று மாதங்கி ஒரு சால்வையை எடுத்துக் கொடுத்தாள்.

"ஊகூம்! இதில் என்பங்கு எதுவும் இல்லை! சத்யா! எண்ணம், செயல் எல்லாம், மாதங்கியுடையது தான். திட்டமிட்டது வாங்கியது எல்லாம் சொல்லப் போனால், இந்தச் சால்வையை, நானும் உங்களோடுதான்

முதல்தடவையாகப் பார்கிறேன்!" என்றான் வித்யாதரன்.

"பெண்டாட்டிக்குப் பெருமை சேர்க்கிறாயா? பரவாயில்லை! பிழைத்துக் கொள்வாய்!" என்று தம்பியிடம் கூறிவிட்டு, மாதங்கியிடம் திரும்பி, "சால்வை, நன்றாக இருக்கிறதம்மா!" என்றான் சத்யாகர்.

"என்ன நன்றாகியிருக்கிறது ஹிந்தி சினிமாக்களில், வயதாகிவிட்டால், அல்லது நோயாளிக்கு சால்வையைப் போர்த்திவிடுவார்கள். உங்களுக்கு வயதும் ஆகவில்லை, நோயும் இல்லை! பிறகு, எதற்கு இது?" என்று பாமா படபடத்தாள்.

"இதற்காகத்தான் நான் முதலிலேயே கழன்று கொண்டேனாக்கும்!" என்று, இலகுப்பேச்சையே வித்யா தொடரமுயன்றான்.

"என்ன கழன்றீர்கள்? நீங்கள் அறியாமல், அவள் எப்படி வாங்குவாள்? காசுகொடுக்க வேண்டாம்?" என்றாள் பாமா, ஏளனமாக. "நீங்களும் சேர்ந்துதான் சத்யாவை நோயாளி-யாக்க முயற்சிக்கிறீர்கள்!" என்றாள் பிடிவாதமாக.

'காசு'பற்றிய குத்தலைக் கவனியாதது போல ஒதுக்கி "அப்படியில்லை, அக்கா! மழைநாளில் பெரியத்தானுக்குச் சளிபிடிக்கும்; ஸ்வெட்டர்' போட்டுக் கொள்ளச் சொன்னால், பிடிக்கவில்லை என்பதாக அத்தை வருத்தப்பட்டார்கள். 'ஷால்' என்றால் சும்மாமேலே லேசாகவும் தோளில்... தோளைச் சுற்றிப் போட்டுக் கொள்ளலாமே என்று வாங்கினேன்." என்று விவரம் கூறினாள் மாதங்கி.

"எப்படியும் நோயாளியாகத்தானே? சளிப்பிடித்து, 'கர் கர்' என்று மூச்சுத் திணறிக் கொண்டு... கண்ணறாவி! இதைப் போய்க் கற்பனைசெய்து, அதற்குச்சரியாக எப்படித்தான் வாங்கினாயோ?"

இப்படி இல்லாத அர்த்தம் கற்பிப்பவளிடம் என்ன விளக்கம் தருவது?

"அதில்லை, பாமா! தேவைப்பட்டால் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று... இப்போது நாம் வீட்டில் தர்மாமீட்டர் வாங்கிவைக்கவில்லையா?..." என்ற மாமியார், சும்மாவே இருந்திருக்கலாம் என்று மாதங்கிக்குத் தோன்றியது.

அதற்குச் சரியாக, "சளிபோதாதென்று ஜ்வரமும் வரவேண்டும் என்கிறீர்களா?" என்றாள் பாமா ஆத்திரமாக.

பெற்றதாய் அப்படி நினைப்பாளா? யோசிக்காமல் பேசுகிறாளே... என்று எண்ணியபோதும், அமைதிகாக்க விரும்பியவளாய், "அச்சோ! அப்படியெல்லாம் இல்லை, அக்கா! நோய், நொடி என்கிற நினைப்பே இல்லாமல் சும்மா... ஏதோ வாங்கிவந்துவிட்டேன். பிடிக்கா விட்டால், சும்மா அலமாரி அடித்தட்டில் போட்டுவையுங்களேன்... இதோ... இதைப் பாருங்கள்..." என்று மாதங்கி இன்னோர். அழகிய சேலையை எடுத்துக் கொடுத்தாள்.

இதுவும் நூல் சேலைதான். ஆனால் அழகிய பெரிய சித்திர வேலைப்பாடுடன், கோட்டா சேலை போன்ற மொடமொடப்புடன் இருந்தது. மாதங்கி முதலில் அதைத் தனக்காகத் தான் எடுத்தாள். ஆனால், இந்த அழகான சேலை பாமாவின் அன்பை ஈட்டித்தரக்கூடுமோ என்று எண்ணித்தான், அவளிடம் கொடுத்தாள்.

ஆனால், சேலையைத் தூக்கிப்பார்த்துவிட்டு, "நூல் சேலை!" என்று முகம் சுளித்தாள், பாமா! "காரியஸ்தர் பெண் கல்லூரிக்குக் கட்டிக் கொண்டு போகச் சேலை வேண்டும் என்று கேட்டாரே, அந்தப் பெண்ணுக்காக வாங்கி வந்தாயா?" என்று அவள் தொடர்ந்து கேட்கவும் சொல்வது அறியாமல் எல்லோரும் திகைத்தனர்!

'கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசனை?' 'உன் பீப்பாய் உடலைவிட, இந்தப் பெண் கட்டினால் நன்றாகத் தான் இருக்கும்!... இது போன்ற வாக்கியங்கள் தொண்டையுள் துடித்த போதும், கோபத்தில் எதையாவது சொல்லித் தான் வாயாடி என்று ஏற்பட விட்டு விடக் கூடாது என்று எண்ணி, மாதங்கி, வாயை இறுகமூடிக் கொண்டு நின்றாள்.

இருமுறை மனதுள் பத்து வரை எண்ணி விட்டு, "ஒரு வகையில் உங்கள் அபிப்பிராயம் சரிதான், அக்கா! பூசினாற் போல உங்கள் உடம்பை நூல் சேலை குண்டாகக் காட்டிவிடும். நான் வாங்கி வந்ததில் வேறு ஏதாவது எடுத்துக் கொள்ளுங்கள் இதை நான் வைத்துக் கொள்கிறேன்; அல்லது, காரியஸ்தர் மகளுக்குக் கொடுக்கிறேன். அவளுக்கு, நல்லதாகக் கட்டவும் ஒன்றிரண்டு வேண்டுமில்லையா?" என்று சாதாரண-மாகவே சொல்லவும் பாமா தடுமாறிப் போனாள்.

அவளது குண்டு உடலை அசிங்கமாகக் காட்டும் என்பதால் இந்தப் பருத்தி நூல் சேலையை மறுப்பதாகக் கொண்டு வந்ததோடு, அந்தச் சேலை நல்ல சேலை என்றும் தோன்றச் செய்கிறாளே!

கூலிக்கு மாரடிக்கிற கூட்டத்தைச் சேர்ந்த இவளுக்கு இவ்வளவு கொழுப்பா?

மாதங்கியின் மண்டையில் எப்படிக் குட்டுவது என்று பாமா யோசித்துக் கொண்டு இருந்த போது, அங்கே, கருணாகரன் வந்து சேர்ந்தார்.

"என்னடா, கடை வீதி மாதிரி சத்தம் கேட்கிறதே என்று நினைத்தேன். நீதிரும்பி வந்து விட்டாயா? வந்ததும் வராதது மாக மாநாடு வேறு கூட்டி விட்டாய் போல! என்னையும் சின்னதையும் தவிர எல்லோரும் இருக்கிறீர்களே?" என்றவாறு சுற்றிலும் நோக்கினர்.

பாமாவின் முகம் புன்னகையைப் பூசிக் கொண்டது.

'சொத்து இருக்கிறது! ஆனால், எல்லாம் சுய சம்பாத்தியம்! உன் மேல் கோபப்பட்டு, யாராவது தெருவில் போகிற பிச்சைக்காரனுக்கு எல்லாவற்றையும் எழுதிவைத்தாலும் அது செல்லும். அதனால், அவர் சுமுகமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்! மற்றவர்களைப் பற்றிப் பரவாயில்லை! ஏனெனில், உன் மாமனார் அடுத்தவர் சொல்லைக் கேட்கிற தினுசு இல்லை...

திருமணமான புதிதில், பெற்றோர் கூறிய புத்திமதிகளை, பாமா, ஒரு நாளும் மறந்ததில்லை. செல்லப் பெண்ணாக வளர்ந்த அவள், இயல்பான துடுக்கில், மாமியார், மைத்துனனைத் தூக்கி எறிந்து பேசியபோதும், மாமனாரிடம் மரியாதை, மிகுதியாகவே காட்டுவாள்; அவர் முன்னிலையில், மற்றவர்களிடமும் நல்லபடியாக நடந்து கொள்வாள். அதுவே, இப்போதும், அவளது பேச்சை நிறுத்தியது எனலாம்.

அதற்குள், சுற்றிலும் வலம் வந்த கருணாகரனின் பார்வையில் எல்லோர் கைகளிலும் இருந்த பொருட்கள் பட, "சின்ன மருமகள் கைங் கரியமா?" என்று சைகையால் அவற்றைக் காட்டிக் கேட்டார்.

"ஏனப்பா, நான் வாங்கி வரமாட்டேனா? 'மருமகள்' என்று என்ன நிச்சயம்?" என்று புன்னகையோடு வித்யாதர் வினவினான்.

"நிச்சயம்தான்! என் பிள்ளைகளுக்கு இந்த மாதிரிக் 'கெட்ட' பழக்கங்கள் எல்லாம் கிடையாது என்று எனக்குத் தெரியாதாப்பா?" என்று கேலி போலக் குட்டுவைத்தார் தந்தை!

மகன்களின் பார்வைப் பரிமாற்றத்தைக் கவனியாதவர் போல, மாதங்கியிடம் திரும்பினார். "என்னம்மா,

எல்லோருக்கும் வாங்கி வந்திருக்கிறாய்! அதுவும் அவரவருக்குப் பொருத்தமாக! என் மனைவி, அவ்ளுக்குப் பிடித்த நிறத்தில் ஒரு சேலையை வைத்துக் கொண்டு நிற்கிறாள். பெரிய மருமகள் அதைவிடப் பிரமாதமாய் ஒன்று வைத்திருக்கிறாள்! பிள்ளைகளின் கையில் வியாபாட்டுச் சாமான்... ஆமாம், எனக்கு என்னம்மா, கொண்டுவந்தாய்?" என்று கேட்டார். "வாங்கிவந்தாய்-தானே?"

"பின்னே?!" என்று முறுவலித்த மருமகள், பெட்டி-யிலிருந்து மெலிதான நீண்ட டப்பா ஒன்றை எடுத்தாள்.

"இது உங்களுக்கு, மாமா! திருமணத்தின் போது, உங்கள் பேனா காணாமல் போய் விட்டதாகச் சொல்லிக் கொண்டு இருந்தீர்களே..."

"அந்த நேரத்திலும் கவனித்து, நினைவுவைத்து வாங்கி வந்திருக்கிறாயே! கெட்டிக் காரிதான்!" என்று மருமகளைப் பாராட்டினார் குடும்பத்தலைவர்.

பொறுக்கமாட்டாமல், "நான்கூட, இதைவிட நல்லது ஒன்று, விலை உயர்ந்ததாக உங்களுக்கென்று வாங்கி வைத்திருக்கிறேன், மாமா! " என்று இடைப்புகுந்தாள் பாமா.

"விலை உயர்ந்ததா? யார், அடித்துக் கொண்டு போய் விடுவார்களோ என்று அதிலேயே கவனமாக இருக்க வேண்டும். இது, கிட்டத்தட்ட முன்னதைப்போல! இதுவே இருக்கட்டும், அம்மா! மாதங்கி முதல் முதலாக வாங்கி வந்தது... ஒகோ! நீயும்..." என்றவர் சட்டென வாக்கியத்தை இடையில் நிறுத்தி, "சரிதான். நீவாங்கியதையும் கொடுஅம்மா! நான் இனி இரண்டையுமே வைத்துக் கொள்கிறேன்." என்று மாற்றிப் பேசிச் சமாளித்தார்.

பாமாவின் முகம் கன்றிப் போயிற்று. சற்றுத்-தடுமாறிவிட்டு, "அது...அதை வாங்கி, அம்மா வீட்டில்

ப..பத்திரமாய் வைத்திருக்கிறேன், மாமா. இங்கே, இந்தக் குரங்குகள் எடுத்து உடைத்துவிடும் என்... அடுத்தமுறை அங்கே போகும் போது எடுத்து வருகிறேன்.' என்று அவள் பங்குக்குச் சமாளித்து வைத்தாள்.

அன்றைக்குப் பல வகையிலும் தான் தோற்று விட்டதாகப் பாமா உணர்ந்தாள். திருமணமாகி, இந்த ஆறு ஆண்டுகளில், பாமா, மாமனாருக்கு புகுந்த வீட்டாருக்கே எதையும் வாங்கியதில்லை என்பது குறிப்பால் உணர்த்தப்பட்டது; இப்போதும் அவள் வாங்கியிருக்க வில்லை என்பதும் தான்.'

நேர்மாறாக, மாதங்கி, வீட்டில் எல்லோருக்கும் ஏதாவது ஒன்றை வாங்கி வந்து நல்ல பெயரைத் தட்டிக் கொண்டு போய் விட்டாள்.

இதை எப்படிச் சகிப்பது?

9

பாமாவுக்கு, அவளுடைய கணவனிடம் ஒருவிதமான சுதந்திரம் இருந்தது. அவன்தவறாக எண்ணுவானோ என்ற கவலையே இல்லாமல், அவள் நினைப்பதை அது, அவனுடைய பெற்றோர், உடன் பிறந்தவனைப் பற்றி என்றாலும்... ஏன், அவனைப் பற்றியும் கூட, மனதில் தோன்றுவதை, அப்படியே, பொரிந்து கொட்டிவிடுவாள்.

நான் செல்வத்தில் பிறந்தவள்; பணக்காரி; திருமணமாகி வரும்போது, நகை, பணம், சொத்து, கார் என்று பல்வகைச் செல்வங்களைக் கூடவே கொணர்ந்தவள்! எனவே, எதைச் சொல்லவும் எனக்கு உரிமை உண்டு! கேட்பது கணவனின் கடமை என்று கருதுகிறவள்.

மூத்தது மோழை என்பதற்கிணங்க, சத்யாகர் எப்போதுமே சாது! தந்தைக்கு அடங்கி, அவர்

சொன்னதைப் படித்து அவரது கட்டளைக்கிணங்கத் தொழிலிலும் ஈடுபட்டவன். மனைவி குரல் உயர்த்திப் பேசிய போது அவளிடமும் மாறு சொல்லு அவனுக்குத் தோன்றியது இல்லை!

கோகிலத்திடம் பாமா நடந்து கொள்ளும் விதம், அவனுக்கு பிடிக்காது தான்! ஆனால், அதை வாய் திறந்து சொல்லி மனைவியிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள விருப்பமின்றிப் பேசாமலே இருந்து விடுவான்.

வீட்டுத்தலைவரான கருணாகரனிடம் அவன் மனைவி, மரியாதையோடு நடந்து கொண்டாள்! அதுவே அவனுக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது. தாயோ, தம்பியோ, தந்தையிடம் போய் கோள் மூட்டுகிறவர்கள் இல்லை! அதிலும், தாயாருக்குக் குடும்ப அமைதி வெகுமுக்கியம். தம்பியையும் அன்னை கட்டுப்படுத்தி வைத்துக் கொள்வார்கள். அப்படிக் கட்டுப்படுத்துவதைப் பலமுறை சத்யாகர் கண்டும் இருக்கிறான்.

ஆனால், வந்திருக்கும் புதிய மருமகள் அப்படி அடங்கிப் போவாளா?

தம்பி மனைவி, பாமாவின் மறுபதிப்பாக இருந்து விடுவாளோ, என்ற அச்சத்தினாலேயே, சத்யாகர், தம்பியின் திருமணப் பேச்சுகளை, ஒரு நாளும் ஊக்குவித்தது கிடையாது! 'மாலி நினைவில் வித்யாதர் திருமணமே செய்து கொள்ள மாட்டான்' என்ற மனைவியின் பேச்சை நம்பியது வேறு.

வித்யாதரே, தனக்கு ஒரு பெண்ணைப் பார்த்து வந்து விட்டது, அவனுக்கு அதிர்ச்சிதான். ஆனால், பணமோ, பின்புலமோ அவளுக்குக் கிடையாது என்று அறிந்ததும், அடங்கிப் போய் விடுவாள் என்று எண்ணி ஒருவாறு நிம்மதி அடைந்தான். ஆனால் மாதங்கியின் போக்கு

அவனைக் கலக்கியது. பெண், கொஞ்சம் தெட்டிடக்-காரியாகத் தோன்றுகிறாளே!

பாமாவுக்கு அடங்கிப் போகமால், இரு பெண்களுக்கும் இடையே தகராறு நேர்ந்து அது தந்தை வரை எட்டிவிட்டால்? அல்லது, இந்த மாதங்கியே மாமனாரிடம் வத்திவைத்து விட்டால்? செய்ய மாட்டாள் என்று என்ன நிச்சயம்?

அதுதான், ஏற்கனவே பேனாவாங்கிக் கொடுத்து, காக்காய் பிடித்து வைத்திருக்கிறாளே!

சத்யாகர், இயல்பிலேயே, தந்தைக்குப் பயந்தவன்! மாமனார் வீட்டு அறிவுரைகளும் சேர்ந்து கொள்ளத் தந்தையின் நல்லெண்ணம் இன்றியமையாததாக, அவனுக்குத் தோன்றியது. எனவே, முடிந்தவரை மனைவியை அடக்கிவைக்க முயன்றான்.

ஆனால், கணவன் சொன்னதை உடனே கேட்டுக் கொண்டால், அவள் பாமா அல்லவே! ஆயினும், கணவன் சொன்ன' 'மாமனார்' சற்று மிரட்ட, அவர் வரை கொண்டு செல்ல முடியாத வழி ஒன்றை, மாதங்கியை மட்டம்தட்டுவதற்காக் அவள் கண்டு பிடித்தாள். அப்படி அவள் கண்டுபிடித்த ஆயுதம், மாலி!

மாலியின் அழகை ,அடிக்கடி வியந்து பேசுவாள். மாலியின் கண அப்படி, சிரிப்பு அப்படி, நடையின் ஒயில் எப்படி என்று வர்ணிப்பாள்.

திருமணத்தன்றே, இந்தமாலிவெடி ஒன்றைப் பாமா வெடிக்க முயன்றது நினைவில் அப்படியே இருந்ததால், வெறும் 'ஒகோ!'வுக்கு மேலாக, மாதங்கி, அந்தப் பெயரில் அக்கறை ஏதும் வெளிப்படையாகக் காட்டினாளில்லை!

யார் அந்த மாலி என்று கேளாத, மாதங்கியின் கல்லுளி மங்கத்தனம் ஆத்திரமூட்ட, அடுத்த முயற்சியாக, பாமா,

மாலியோடு வித்யாதரனை இணைத்துப் பேசலானாள்.

'மாலி இங்கே வீட்டுக்கு வந்தால், வித்யாதம்பி, குட்டி போட்ட பூனை மாதிரி, அவள் இருக்கும் இடத்தையே சுற்றிக் கொண்டு இருப்பார்!' என்று தொடங்கி, 'அவளைவிட்டுக் கண்ணை அகற்றவேமாட்டார்!' என்று தொடர்ந்து, "இரண்டுபேரும் தனியாகப் போய் மணிக்கணக்காகப் பேசுவார்கள்!...பேசத்தான் செய்வார்-களோ? அல்லது..." என்று, வெளிப்படையான ஊகத்தில் முடிப்பாள்.

சற்றும் சலனமின்றிக் கைவேலையில் அப்போ.. கண்ணாடி அலமாரியில் இருந்த கலைப் பொருட்களைத் துடைத்து அடுக்கிக் கொண்டு இருந்தாள் மாதங்கி! அதிலேயே கவனமாக இருந்தபடி, "அப்படியா" என்று விட்டு, அடுத்த யானைச் சிலையை அவள் எடுக்கவும், பாமா அடியோடு பொறுமையிழந்தாள்.

"ஏன் மாதங்கி, மாலியைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் உனக்கு மெய்யாகவே இல்லையா, அல்லது அப்படி நடிக்கிறாயா?" என்று நேரடியாகவே கேட்டாள்..

அப்போதும் அமைதியாகவே, "நடிப்பானேன், பாமாக்கா நீங்கள் கூறுவது எல்லாம் கடந்த காலம்தானே? சுவாமி போதானந்தா என்ன சொல்லியிருக்கிறார், தெரியுமா? கடந்த காலம் என்பது இறந்த காலம்! இறந்ததை இறக்க விடாமல் இழுத்துப் போட்டுக் கொண்டு நம்மை நாமே வருத்தப் படுத்துவது முட்டாள்த்தனமாம்! வித்யாவின் வாழ்வில், ஏதோ ஓர் இறந்த காலத்தில், என்ன நடந்திருந்தாலும், அதுபற்றி இப்போது எனக்கு என்ன? இன்றைக்கு நான், வித்யாவுடைய மனைவி! நாங்கள் இருவரும் சந்தோஷமாக இருக்கிறோம்! இதற்குமேல், அவசியமற்ற ஒன்றை அறிந்து, அனாவசியமாய்க் கவலைப்பட வேண்டாம் என்பது என் கருத்து... என் முடிவு!

சொல்லுங்கள் அக்கா, இந்த யானைகள் இரண்டையும் அடுத்தடுத்து வைப்போமா? அல்லது... இரண்டு ஓரங்களிலும் வைத்தால் இன்னமும் நன்றாயிருக்கும் அல்லவா?" என்று, செய்து கொண்டிருந்த வேலையில் கவனம் போல மாதங்கி கேட்கவும், பாமாவின் முகம் சிறுத்து விட்டது!

அப்படியென்றால், அந்த போதானந்தாவின் அறிவுரை எல்லாம் படித்து அவைகளை வாழ்வில் அச்சுப் பிசகாமல் கடைப் பிடித்து வாழும் இந்த அம்மாள் மகா புத்திசாலி; அப்படி நடவாத பாமா படுமுட்டாள் என்றல்லவா ஆகிறது!.

இன்னமும் தோண்டிப் பார்த்தால், மாதங்கியை வருத்தப் படுத்தக்கூடிய பழைய நிகழ்ச்சிகளை பற்றிக் கூறியதாலேயே, பாமா கொடியவள் என்றுமல்லவா ஆகிறது?!

அது, உண்மையோ, பொய்யோ? ஆனால், இந்த மாதங்கி எப்படி அப்படி நினைக்கலாம்? கணவனைப் பற்றி மாதங்கி நன்றாக அறிந்து கொள்ளட்டும் என்கிற நல்ல எண்ணத்தினாலும் கூடப் பாமா, முன்புநடைந்ததைச் சொல்லியிருக்கக்கூடும் அல்லவா?

இப்படி நல்லதை நினைத்து, பாமா சொன்னதை அவள் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்திருக்கலாம் அல்லவா? அதைவிட்டு விட்டு, மகா மேதாவி மாதிரி, அவளைவிடப் பெரியவளை முட்டாளடிப்பதா? இந்த அதிகப் பிரசங்கித் தனத்துக்குத் தண்டனை கொடுத்துத்தானே ஆகவேண்டும்?

என்னவோ, இறந்தகாலத்தைக் காதில் வாங்க மாட்டேன் என்றாளே! நடப்பிலேயே படட்டும்!

மறுநாள், ஹாலில் உள்ள டீவி முன் அமர்ந்து, பிபிசியில் ஒரு 'க்விஸ்' நிகழ்ச்சியை, மாதங்கி, மிகுந்த ஈடுபாட்டுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அடுத்த சோபாவில் வந்து அமர்ந்த பாமா, 'ரிமோட்' கண்ட்ரோலை எடுத்து, நிகழ்ச்சியை மாற்றி, ஒரு மகா அழுகை நாடகத்தைப் பார்க்கத் தொடங்கினாள்.

மாதங்கி, சற்று நேரம் திகைத்து விழித்தாள்!

இதென்ன நேரடி மோதலா?

ஆனால், ஒரேயடியாக ஒதுங்கிப் போவதும் கூடாது என்று கருதி, "அக்கா, நான் அந்த நிகழ்ச்சி பார்த்துக் கொண்டு இருக்கிறேன். பிபிசிக்கு மாற்றுங்கள்!" என்றாள்.

டீவி திரையிலிருந்து கண்ணை அகற்றாமல், "நான் இதைப் பார்க்க வேண்டும்!" என்றவள், டீவியின் 'ரிமோட்'டை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டாள்.

"ப்ளீஸ்! நிகழ்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது மாற்றுங்கள்." என்றாள் மாதங்கி, எரிச்சலை உள்ளடக்கி.

"இந்த நாடகமும் நடந்து கொண்டுதான் இருக்கிறது!" என்றாள் பாமா, அலட்சியமாக.

"உங்கள் அறையில்தான் டீ.வி. இருக்கிறதே. அதில் பாருங்களேன்!"

பாமா காத்துக் கொண்டு இருந்தது இதற்குத்தானே?
"அந்த டீ.வி. எனக்கு, என் அப்பாவீட்டில் வாங்கிக் கொடுத்தது. அதைச் சும்மா சும்மா போட்டுப் போட்டுப் பழசாக்க முடியாது! உனக்கு வேண்டுமானால், உன் அண்ணனை ஒரு டிவி வாங்கித் தரச் சொல்லி, அதை வைத்துப் பார்த்துக் கொள்!

அடிபட்டுப் போனபோதும், "நான் தானே முதலில் பார்த்துக் கொண்டு இருந்தேன்? இடையில் வந்து மாற்றலாமா?" என்று கண்டனக் குரலில் மாதங்கி விடாமல் கேட்க, "அப்படியானால் காலையில் நான் தானே இந்த டீவி வைத்தேன், இடையில் வந்து பிபிசி மண்ணாங்கட்டி என்று வைத்தது நீதானே?" என்றாள் பாமா.

இதுவிதண்டாவாதம். வம்பு வளர்ப்பதற்காக மட்டுமே, சொல்லப்பட்டது! வலியச் சண்டைக்கு இழுக்கிறாள்!

இதற்குமேல், இந்தப் பிரச்சினையை எப்படிக் கையாள்வது என்று மாதங்கி குழம்பினாள்.

நேரடியாகப் பாமாவுடன் 'குழயாடிச் சண்டை' போட அவளுக்கு விருப்பமில்லை!

மாமியார் பிரியமாகப் பழகுகிறவள். மூத்த தலைமுறை! வீட்டுத்தலைவி! என்றாலும், அந்தப் பதவிக்குரிய அதிகாரம் அவளிடம் இருப்பதாக - சமையல் கட்டுதவிர மற்ற இடங்களில் இருப்பதாக மாதங்கிக்குத் தோன்ற-வில்லை! கருணாகரனோ, அவருடைய பிள்ளைகளோ, கோகிலத்திடம் எதற்கும் அனுமதி, அபிப்பிராயம் கேட்டு மாதங்கி பார்த்ததில்லை; கோகிலமாக முன்னின்று எதுவும் சொன்னதும் இல்லை! அதிலும், பாமா விஷயத்தில் வெகு சுத்தம்!

மற்றவர்களாவது, வெளியே செல்லும் போது, 'சென்று வருகிறேன்;' 'கிளம்புகிறேன்' என்று ஏதாவது சொல்-வார்கள். பாமாவின் 'டிரைவர் காரெடு'வில் அவள் வெளியே செல்வதைக் கோகிலம் அறிந்து கொள்ள வேண்டும்! அல்லது, பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லும் போது' அதைவிட முக்கியமான விஷயம், கோகிலமும் இதைக் கண்டு கொள்வது இல்லை!

இப்படி ஒதுங்கிப் போகிறவளிடம் போய், பாமாவைப் பற்றிப் புகார் செய்து, ஒருதரும சங்கடமான நிலைமையை, ஏற்படுத்துவானேன், இவளுக்காகப் பேசினால் மாமியார், பாமாவிடம் வாங்கிக் கட்ட வேண்டும்; பேசாவிட்டால் சின்ன மருமகள் முன் தலைகுனிந்து நிற்க வேண்டும்!

கணவனிடம் சொல்லலாம்! ஆனால், பொதுவாகப் பெண்களிடம் அவனுக்கு அவ்வளவாக நல்ல

அபிப்பிராயம் இல்லை என்பதை மாதங்கி ஓரளவு கவனித்திருந்தாள். 'கடுகை மலையாக்கி, மலையை மகாதேவன் ஆக்குகிறவர்கள் பெண்கள் என்று கூட ஒரு நாள் கேலி போலக் கூறினான். எந்தத்தகராறிலும் அடிப்படைக் காரணமாக ஒரு பெண்தான் இருப்பாள் என்றான்.

பத்திரிகையில் வந்த பாகப் பிரிவினை வழக்கு ஒன்றைக் காட்டி, "அண்ணனும் தம்பியும் சொத்துக்காக அடித்துக் கொள்கிறார்கள். நீங்கள் பெண்களைச் சொல்கிறீர்களே!" என்று மாதங்கி சிரித்த போது, "அந்த அண்ணனும் தம்பியும் பிரியும் எண்ணமே இல்லாமல் ஒற்றுமையாகவே, இருந்திருப்பார்கள்! இருவருடைய மனைவிமாரும் கொடுத்த சாவியால் தான், பாகப்பிரிவினை என்கிற எண்ணமே இருவருக்கும் தோன்றியிருந்திருக்கும்." என்று திருப்பினான் அவன்.

கடைசிவரை, கலகத்தின் அடிப்படை பெண்தான் என்றே சாதித்து முடித்தான்.

ஆனால், சிரித்துக் கொண்டே சொன்னதால், அப்போது, அதையாரும் சீரியசாக எடுத்துக் கொள்ள-வில்லை!

ஆயினும், இப்போது, ஓரகத்தியுடன் தகராறு என்று - அது மற்றவளின் பிழையே என்ற போதும், கணவனிடம் கூற மாதங்கி தயங்கினாள்.

கூடாவே அந்த 'மாலி' விவகாரம் வேறு.

பாமா அடிக்கடி 'மாலி' பற்றிப் பேசுவதைக் கவனித்துவிட்டு, கோகிலமே மாதங்கியிடம் சுருக்கமாக விளக்கினாள்.

சுவர்ணமாலா என்பது அவள்பெயர். பாமாவுக்குத் தூரத்துஉறவு. சத்யாகர், பாமாவின் திருமணத்திலிருந்து,

வரப்போக இருந்தாள். வித்யாவுக்கும் அவளுக்கும் திருமணப் பேச்சுகூட எழுந்தது. எல்லோருக்கும் சம்மதம்தான். கிட்டிமுட்டி வருகிற நேரத்தில், வித்யாதர் வேண்டாம் என்று விட்டான். இந்தக் காலப் பெண்கள் எப்படிப்பட்டவர்கள் என்று தெரிய வைத்துவிட்டாள் என்றான். ஆறு ஆண்டுகளாகத் திருமணமே கூடாது என்று இருந்தவன்,. மாதங்கியைப் பார்த்தபிறகு தான் மனம் மாறினான்.

கோகிலம், மாதங்கிக்குத் தெளிவு படுத்த விரும்பிய விஷயங்கள் இரண்டு, ஒன்று, மாலியோடான திருமணத்தை மறுத்தவன் வித்யாதர்தான். அடுத்தது அவன், மாதங்கியை விரும்பி மணந்திருக்கிறான்!

மாதங்கியும், உள்ளூர இருந்த 'மாலி' உறுத்தல் அடியோடு மறைந்து ஆனந்தமாகவே இருந்தாள்.

ஆனால், ஒருபிரச்சினை என்று வரும்போது, சட்டென்று அதைக் கணவனிடம் கொண்டு செல்ல அவளால் முடியவில்லை! இந்தப் பெண்களே இப்படித்தான் என்றுவிட்டால்?

பிரச்சினை பெரிதானால் - அவளால் சமாளிக்கமுடியாத அளவு பெரிதானால், அப்போது பார்த்துக் கொள்ளலாம். என்று எண்ணிப் பொறுத்துப் போனாள்.

ஓடுகிறவரைக் கண்டால் தெருநாய் விரட்டும் என்பார்கள். பாமாவும் அப்படித்தான் நடந்து கொண்டாள். முடிந்த அளவு மாதங்கிக்குத் தொல்லை கொடுத்தாள்.

ஹாலில் இருந்த டீவி முன் பழிகிடந்தாள். மாதங்கி, அதை வைத்துப் பார்த்துவிடக் கூடாதாம்! வேலையாட்கள், மாதங்கிக்காக எதையும் செய்யாமல் பார்த்துக் கொண்டாள். மாதங்கியின் அறை பெருக்க

வேலைக்காரி வந்தால், இடையில் அவளை நிறுத்தி, வேறு வேலை ஏவினாள். காஃபி கொண்டுவந்தால், தான் கொடுத்துவிடுவதாக வாங்கிச் சென்று வாஷ் பேசினில் ஊற்றினாள்.

ஒவ்வொரு தரமும், இதைக் கணவனிடம் சொல்லி-விடலாமா என்று மாதங்கி நினைப்பதுண்டு! சற்று யோசித்து விட்டுப் பிறகு பார்க்கலாம் என்று, தனக்குள் சொல்லிக் கொள்வாள்! இவையெல்லாம் சமாளிக்க முடியாத தொல்லைகள் அல்லவே! அறையை அவளே-கூட்டிப் பெருக்கிக் கொள்ளலாம்! உடலுக்குத் தேவையான தேகப் பயிற்சி ஆயிற்று! காஃபி நேரம் அவள் நேராகப் போய் சாப்பாட்டு அறையில் உட்கார்ந்து கொண்டு வரச் சொன்னால், சுடச்சுட உடனே வந்து சேரும்! இதையெல்லாம் பெரிய பிரச்சினை என்று வித்யாதரிடம் கொண்டு செல்வதா?

பொறுமை, பொறுமை என்று, மாதங்கி பொறுத்துப் போகப் போகப் பாமா மிஞ்சிக் கொண்டே போனாள்.

கடைசியாக, அன்று, கோகிலம், தன் சின்னமருமகளிடம் ஒருசிறு வேலை சொன்னாள். நாலாவது தெருவில் இருந்த ஒரு பெரிய நூல் நிலையத்தில், அவள் படித்துமுடித்த புத்தகம் ஒன்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, வேறு எடுத்து வரமுடியுமா என்று அவள் கேட்க, மாதங்கியும் உடனே சரியென்று கிளம்பினாள்.

லேசாக நலுங்கியிருந்த ஆடையைமாற்றிக் கொண்டு அவள் வெளியே வந்தபோது, வீட்டுக் காரில் ஏறுவதற்குத் தயாராகப் பாமா நின்று கொண்டிருந்தாள்.

ஒருகணம் தயங்கிவிட்டு, "நீங்கள் திரும்பிவர நேரமாகுமா அக்கா? அல்லது அந்தப் புத்தகம் மாற்றிக் கொண்டு வந்தபிறகு போகிறீர்களா? சீக்கிரம் வந்துவிடுகிறேன்." என்று கேட்டாள்.

"மற்றவர்கள் வசதிக்காகக் காத்திருந்து எனக்குப் பழக்கமில்லை! நான் எட்டு மணி வாக்கில் திரும்பி வருவேன். அதற்குப் பிறகு நீ போய்க் கொள்." என்றாள் பாமா அலட்சியமாக.

"எட்டு மணிக்கு வாசக சாலை மூடி விடுவார்கள். அக்கா! இன்றைக்கு, இந்தப் புஸ்தகம் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடைசி நாள்..."

அருகிலேயே நின்று கொண்டிருந்த பாமாவின் சீதனக் காரின் டிரைவர் "நான் வேணுமானால், அந்தக்காரை எடுக்கட்டுமா, சின்னம்மா?" என்று பாமாவிடம் கேட்டான்.

உதவியாக எண்ணித்தான் டிரைவர், பாமாவிடம் சொன்னது! ஆனால், அவள் தீயெழ விழித்து, "நான் சொல்லி நீ செய்யத்தான் இங்கே உனக்குச் சம்பளம். அதிகப் பிரசங்கித்தனமாக எதாவது பேசினால், தொலைத்து-விடுவேன். ஜாக்கிரதை!" என்று சீறவும், அப்படியே நடுநடுங்கிப்போனான்.

அவனது மன்னிப்பு வேண்டலைக் காதிலேயே வாங்காமல், "அப்படி அவசரம் என்றால் ஆட்டோவிலோ, நடந்தோ போவது தானே? முன்னெல்லாம் அதுதானே வழக்கம்? நாலேதெரு! இதற்குக் கார் என்ன புதுப் பழக்கம்?" என்றவள் காரில் ஏறி அமர்ந்து கொண்டு, டிரைவரைக், "காரெடு!" என்றாள்.

கார் கண்ணுக்குமறையும் வரை, மாதங்கியால், அசைய முடியவில்லை! இரண்டு டிரைவர்கள், தோட்டக்காரன், சுற்று வேலை செய்யும் பெண்! அத்தனை பேர் முன்னிலையில் எவ்வளவு பெரிய அவமதிப்பு! இனியும் பொறுத்துப் போவதில் அர்த்தமில்லை..

மெல்லத்தலையை நீட்டி, "அந்தப் புத்தகத்தில் இன்னும் கொஞ்சம் படிக்க வேண்டும், மாதங்கி! அதனால்,

அபராதத்துடன் நாளைக்கே திருப்பிக் கொடுத்துக் கொள்ளலாம்!" என்று மாமியார் நிலைமையைச் சமாளிக்க முயன்றது, நேர் எதிர்ப் பலனையே தந்தது. தொடர்ந்து மனதுள்குமுறிக் கொண்டே உள்ளே சென்றாள்.

...வித்யாதருடைய மனைவி அவள். அவனை நம்பி இந்த வீட்டுக்குள் வந்தவள். இதுபோன்ற அவமதிப்புகள் அவளுக்கு நேராமல் காப்பது அவனது கடமை...

இரவில், கணவனிடம் தன் கொதிப்பை எல்லாம் அவள் கொட்டி முடித்தபோது, முதலில் அவன் எதுவும் சொல்லவில்லை. ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு, 'சிட்அவுட்'டின் கதவைத் திறந்தான். புகையை ஒருதரம் ஆழ இழுத்தான் வெளியே விட்டவன், மீண்டும் உள்ளே திரும்பி, மனைவியை நோக்கி கேட்டான். "உன்னை நான் ஏன் மணந்து கொண்டேன், தெரியுமா?"

திகைப்புடன் விழிவிரித்து கணவனைப் பார்த்தாள் அவள்.

10

வித்யாதரன் அன்று வரை ஓர் அன்பான, ஆசையான கணவனாகத்தான் நடந்து கொண்டிருந்தான்.

அதுவும் முதலிரவன்று, அவளை மணந்து கொண்டதன் காரணமாக அவளது அழகைக் குறிப்பிட்டவன் அவன்.

எனவே, கணவன் 'கண்டதும் காதல்' ஸ்ரீராமன் ரகம் என்று எண்ணி மாதங்கி மிகவும் பெருமிதப்பட்டுக் கொண்டுமிருந்தாள். அந்த மயக்கத்தில் 'மாலி'யை மறந்துமிருந்தாள்.

ஆனால் இப்போது வித்யாதரன் திடுமெனத் தான் அவளைத் தேர்ந்தெடுத்ததின் காரணம் பற்றிக் கேட்கவும் மாதங்கிக்குத் திகைப்புடன் உள்ளூர ஒரு கலக்கமும்

உண்டாயிற்று. ஏன் இப்படிக் கேட்கிறான்? திகைப்பும் பயமுமாக அவள் நோக்க வித்யாதரன் அவனது காரணத்தை-அவனது மிக முக்கியமான காரணத்தை மனைவியிடம் விளக்கினான்.

மாதங்கியை அவன் கோவையில் ஐஸ்கிரீம் பாரில் முதல் நாள் அவளைப் பார்த்தபோது சுலேகாவுடன் அவளது உரையாடலைக், கேட்டது பற்றிச் சொன்னான். முதல் பார்வையிலேயே மாதங்கி அவன் கண்ணைக் கவர்ந்தபோதும் உலகத்தில் அழகான பெண்கள் எத்தனையோ பேர் இல்லையா? விட்டுக்கொடுத்து நடந்து கொள்வாள், வீண் தகராறு செய்ய மாட்டாள் என்கிற ஒரே காரணத்துக்காகத்தான் வித்யாதர் மாதங்கியை மணக்க முடிவு செய்தான்.

நம்பமாட்டாமல் அவனை வெறித்துப் பார்த்தாள் மாதங்கி "நீ நீங்கள் உண்மையாகத்தான் சொல்கிறீர்களா?"

"ஆமாம்! இதில் பொய் சொல்ல என்ன இருக்கிறது? அண்ணன் திருமணமாகி ஆறு ஆண்டுகள் ஆகின்றன. இத்தனை ஆண்டுகளில் எத்தனையோபேர் பணம், அந்தஸ்துடன், 'ஓடிஓடி வந்த போதும், அவர்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, வேறு எதற்காக உன்னை நான் தேர்ந்தெடுத்தேன் ன்று நினைக்கிறாய்?"

"பாருங்கள், நீங்கள் பேசுவது நன்றாக இருக்கிறதா? ஒரு பெண்ணை அன்புக்காக, ஆசைக்காக - இல்லை, அவளது சொத்துக்களுக்காகக் கூட மணக்கலாம். எல்லாமே ஏதோ ஒரு வகையில் அவளுக்கு மதிப்பு அளிப்பது தான். ஆனால் வீட்டில் உள்ளவர்களுக்குப் பணிந்து போவதற்காக ஒருத்தியை மணப்பது என்றால் அது அவளுக்கு அவமானம் அல்லவா?" என்று வருத்தத்தை உள்ளடக்கிக்-கொண்டு மாதங்கி கேட்டாள்.

லேசாகப் புருவம் சுருக்கி, "இதில் அவமானப்பட என்ன

இருக்கிறது? ஒவ்வொருவருக்கு ஒரு தேவை. என் தேவை இது. தேவையைப் பூர்த்தி செய்ய முடிந்தது. செய்து கொண்டேன்! அவ்வளவே" என்றான் அவன் சற்று விட்டேற்றியாகவே.

நோவைக் காட்டிக்கொள்ளாமல், மாதங்கி கேலி போலவே பேச முயன்றாள். "இப்படிச் சொல்கிறீர்களே, நானும்இதேபோல் உங்களை, உங்கள் பணத்துக்காகவே மணந்ததாகச் சொன்னால், உங்களுக்கு எப்படி இருக்கும்?" என்று கேட்டாள்.

"ஒளிவு மறைவின்றி உண்மை சொல்கிறாய் என்று சந்தோஷப்படுவேன்" என்றான் அவன் சற்றும் தயங்காமல். அவள், கொஞ்சமும், எதிர் பாராமலும்கூட.

"உண்மையா?" சிறிது நேரம் மாதங்கிக்குப் பேச்சே வரவில்லை. பிறகு, ஒருவாறு சமாளித்துக்கொண்டு. "என்ன வித்யா, இப்படிச் சொல்கிறீர்கள்? இந்தப்பேச்சு என்னை எவ்வளவு வருத்தப்படுத்தக்கூடும் என்று உணராமல் ஏதேதோ பேசுகிறீர்களே! அல்லது நீங்கள் என்னைக் கிண்டல் செய்கிறீர்களா?" என்று சற்று வருத்தத்துடன் வினவினாள்.

வித்யாதரனின் முகத்தில் ஒரு கடினத்தன்மை பரவியது. உதட்டோரம் ஓர் ஏளன வளைவுடன், "ஏன், இதில் கிண்டலுக்கும் கேலிக்கும் என்ன இருக்கிறது?" என்று கேட்டான் அவன். "இப்படிப்பேசாதீர்கள் வித்யா. திருமணம் என்பது இருமனங்கள் சங்கமம். ஒருவரை அவருக்காகவே-" என்றவளின் பேச்சில் இடையிட்டு "எப்படி எப்படி? மனம் ஒருமித்த காதலா? எங்கே, என் முகத்தைப் பார்த்துச் சொல்லு. நீ என் மேல் கொண்ட காதலுக்காகவே என்னை மணந்து கொண்டாயா?" என்று வித்யாதரன் எகத்தாளமாக அவளிடம் கேட்க, மாதங்கி திகைத்தாள்.

அவன் கூறுவது சரிதானே?

இன்றைக்கு வித்யாதர் மாதங்கியின் உயிராகி விட்டிருக்கலாம். ஆனால் அவன் அவளைப் பெண் கேட்டு வந்தபோது அவள் அவனை அப்படிக் கருதியிருக்க-வில்லையே! அவன் தோற்றம் அவள் மனதைக் கவர்ந்தது மெய்யே! ஆனால் மாதங்கியைச் சம்மதிக்க வைத்ததில் அவனது செல்வநிலைக்குப் பெரும்பங்கு உண்டுதானே? எண்ணி எண்ணிச் செலவழிப்பது, அண்ணனின் வைத்தியச் செலவுக்கு எங்கே பீராய்வது, இதில் பின்பு தொழில் செய்ய எப்படிச் சேர்ப்பது என்று இந்தக் கவலைகளில் இருந்து விடுதலை என்பதுதானே, முக்கியமாக அவளை உந்தியது?

அவள் எப்படிப் பிற்கால வாழ்வைப்பற்றி யோசித்து நன்மை தீமை ஆராய்ந்து அவனை மணக்க ஒப்பினாளோ, அது போலவே, அவனது எதிர்காலத்தேவையைக் கருத்தில் கொண்டு அவளுடைய கணவன், மனைவியாக அவளைத் தேர்ந்தெடுத்திருக்கிறான். இதில் தப்பென்று சொல்ல என்ன இருக்கிறது?

எல்லாம் சரி தான். இவ்வளவு நாட்களில் மாதங்கி கணவனை உயிராகக் கருதத் தொடங்கி விட்டாள் என்பதும் சரியே. ஆனால், வித்யாதரும் அதே போல, மனைவியை நேசிக்கத் தொடங்கியிருந்தால் மிக நன்றாய் இருந்திருக்கும்!

ரொம்பவுமே என்று மாதங்கி ஏக்கத்துடன் நினைத்தாள். ஏக்கம் தான்! ஏனெனில், வித்யாதரன் அப்படி ஒன்றும் மனைவியை நேசிக்கத் தொடங்கிவிட்டது போலத் தெரிய வில்லையே! இம்மெனுமுன் அவன் முகத்தில் தோன்றிய கடினமும் ஏளனமும் ஒரு காதல் கணவன் முகத்தில் காணப்படக் கூடியவை அல்லவே!

அவனது அணைப்பும் தழுவலும் நெஞ்சார்ந்த

நேசத்தின் அறிகுறி அல்ல. அப்படி நினைத்த மாதங்கி தான் முட்டாள். காதலில் மட்டும்தான் அணைப்பார்களா, என்ன?

"என்ன பதிலையே காணோம்" என்ற கணவனின் குரல் மாதங்கியை நிகழ்காலத்துக்குக் கொண்டு வந்தது.

கணவனை ஏறிட்டுப் பார்த்தாள், மாதங்கி. "என்ன இன்னமும் அன்று நான் உன்னைக் காதலிக்கத்தான் செய்தேன் என்று சாதிக்கப் போகிறார்யா" என்பது போல ஒரு பாவனையை அவன் முகத்தில் கண்ட மாதங்கி சட்டென ஒரு முடிவுக்கு வந்தாள். கணவனை நோக்கி மெலிதாகப்புன்னகை செய்து, "நீங்கள் சொல்வது சரிதான், வித்யா. அன்றைக்கு உங்களை மணக்கச் சம்மதித்தபோது, நான் காதல் வயப்பட்டிருக்கவில்லை என்பது மெய்தான். சொல்லப்போனால், நம் நாட்டுத் திருமணங்கள் பெரும்பாலும் காதலை அடிப்படையாகக் கொண்டவை அல்லதானே? ஆனால் கல்யாணம் ஆகிவிட்டால் தம்பதிகளிடையே காதல் தானாக ஏற்பட்டு விடுகிறது." என்றாள்.

தலையசைத்து, "எனக்கு அந்தத் தத்துவத்தில் நம்பிக்கை இல்லை. மாதங்கி. அதேபோல் காதலிலும் எனக்கு நம்பிக்கை கிடையாது! இப்போது நம்மையே எடுத்துக்கொள், எனக்கு வேண்டியது எனக்கும் உனக்கு வேண்டியது உனக்கும் கிடைத்து வருகிறது. இயற்கையில், ஆண், பெண், ரசாயனமும், நம்மிடையே நல்லபடியாகச் செயல் படுவதால், நாமும் திருப்தியோடு இருக்கிறோம். மகிழ்ச்சியோடும் இருக்கிறோம். இதற்குப் போய்க் காதல் கண்ணராவி என்று கண்டபெயர் வைப்பானேன்? ம்ம்... திருப்தி என்றதும் நினைவு வருகிறது. குடும்பத்தின் அமைதி எனக்கு மிகமிக முக்கியம், மாதங்கி. அதற்கு உன்னால் ஒருபோதும் பங்கம் வரக்கூடாதும்மா. அண்ணியை மாற்றுவது முடியாத காரியம். அவர்களிடம், அம்மாவே

துங்கிப் போய்விடுவதைப் பார்த்திருப்பாயே நீயும் இனி அவர்கள் மாதிரியே நடந்து கொள்ள வேண்டும்! என்ன?" ன்று சற்றுக் கொஞ்சலாகக் கூறி, லேசாகக் குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

கணவனின் எண்ணம் மாதங்கிக்குப் புரிந்தது. வீட்டில் சுராறை விரும்பாத வித்யாதரன் சுமூகமாகவே தன் ருப்பத்தை வலியுறுத்தி நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கிறான். முதலில் அவன் முகத்தில் தென்பட்ட டினத்தன்மையை நினைக்கையில் மேற்கொண்டு பேசி, அவனது கோபத்தைக் கிளறிவிட அவளுக்கும், யக்கமாகத்தான் இருந்தது. ஆனால், ஒரு கடினமான முறையில், வாழ்க்கைத் தத்துவத்தை, அவள் அறிய நேர்ந்த போதும், அவளும், ஒன்றும், முதுகெலும்பில்லாத கோழை போல, எதற்கும் பணிந்து போகிறவள் அல்ல.

அத்தோடு, பாமாவும், கோகிலத்தைத் தேடிச் சென்று, ம்பு வளர்ப்பது இல்லையே!

எனவே, "வித்யா, நான் என்ன சொல்கிறேன் என்றால்..." என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, வித்யாதர் குறுக்கிட்டான். "நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். நான் சொல்வதைக் கவனித்து அதன் படி நடந்து கொண்டாலே போதும். கவனி, மாதங்கி, அண்ணி, ணக்கார வீட்டைச் சேர்ந்தவர்கள். செல்லமாக வளர்ந்தவர்களும் கூட. நினைத்ததை நிறைவேற்றியே பழக்கம். அப்படிச் செய்யும் போது, தப்புசரி, மட்டு-மரியாதை, எதையும் பார்க்கிற வழக்கமும் கிடையாது..."

"அதற்காக?"

"சொல்லி முடிக்கும் வரைக் கொஞ்சம் வாயை மூடிக்கொண்டு கேளேன்!" என்று எரிந்து விழுந்தான், அவன்.

நியாயமற்றது என்று தெரிந்துகொண்டே, அதற்கு

வக்காலத்து வாங்கும் போது, இப்படி, ஆத்திரம் வரத்தானே செய்யும்? மனதினுள் நினைத்த போதும், கணவனின் கோபக்குரலை எதிர்த்துப் பேசும் தைரியமும், மாதங்கிக்கு அப்போது வரவில்லை.

உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு அவள் பேசாதிருக்க, அவன் தொடர்ந்தான். "அண்ணி, இந்த வீட்டுக்கு வந்தபோது, அவர்களோடு, நிறையச் செல்வங்-களையும் - கார், நகைகளோடு நிறையப் பணமும் கொண்டு வந்தார்கள்..."

"ஓகோ! அப்படி என்றால், வரதட்சிணை கொண்டு-வந்ததால், அவர்கள், என்ன செய்தாலும் சரிதான் என்கிறீர்களாக்கும்? சட்டப்படி...."

"வாயை மூடு! வரதட்சிணையாம்! உன்னைத்திருமணம். செய்தேனே? உன்னோடு, என்ன கொண்டு வருவாய் என்று உன்னிடம், யாராவது, கேட்டோமா? அண்ணி விஷயத்திலும், அப்படித்தான் நடந்தது. ஆனால், ஒரு பெண் பிறந்தால், அவளை ஒன்றுமில்லாமல், ஓட்டிவிட வேண்டுமா? அண்ணியுடைய பங்கு என்று, அந்த மாமா, நிறையப் பணம் கொடுத்தார்கள். அந்தப்பணத்தைத் தொழிலில் முதலீடு செய்து, அதற்குரிய பங்குகளை, அப்பா, அண்ணிக்குக் கொடுத்திருக்கிறார்கள். தொழிலிலும் பங்கு உள்ளவர்கள், அண்ணி. எனவே, இந்தக்குடும்பத்தில், உன்னை விட, அதிக உரிமை அவர்களுக்கு உண்டுதான். அம்மாவே ஒதுங்கிப்போகிற போது, கொஞ்சம் பணிந்துபோவதால், நீ, ஒன்றும், குறைந்து போய்விட மாட்டாய்!" என்றான் அவன், மிகவும் கடுமையான குரலில்.

மாதங்கி, திகைத்தாள்.

பாமாவுடைய தந்தை, அவளுக்காகப் பணம் கொடுத்ததும், கருணாகரன், அதைத் தொழிலில், முதலீடு செய்ததும் அவர்கள், விஷயம்! அதற்காக, மாதங்கி,

ஓரகத்தியின், அகம்பாவத்துக்குப் பணிந்து போயாக வேண்டும் என்றால், அது, அநியாயம் அல்லவா? அதிலும், இதைச் செய்யச் சொல்லுகிறவன், அவளது கவுரவம் காக்க வேண்டிய கணவன்!

மனைவியின் கலங்கிய தோற்றம், வித்யாதரைப் பாதித்ததோ என்னவோ? குரலைத் தணித்து, "பார், மாதங்கி, வீட்டுக்குள் சண்டை, சச்சரவு என்று வந்து விடக்கூடாது என்று அம்மா, அவ்வளவு பெரியவர்கள், பொறுத்துப் போகிறார்கள். அதே, காரணத்துக்காகவே, 'நானும், இவ்வளவு காலம், திருணம் செய்து கொள்ளாமலே இருந்தேன். அம்மா எவ்வளவு வற்வுறுத்தியும் கூட. கடைசியாக, 'கண்டேன் சீதையை' என்கிற மாதிரி, என் மனைவி எனக்குக் கிடைத்திருக்கிறாள் நான் சந்தோஷப்பட்டுக் கொண்டு இருக்கும் போது, ப்ளீஸ், அதைக்கெடுத்துவிடாதேம்மா! ப்ளீஸ்மா..." என்றான். கெஞ்சலும், கொஞ்சலுமாக.

பெரிய 'ப்ளீஸ்' இது முன்பே தெரிந்திருந்தால், இந்தத் திருமணத்துக்கே சம்மதித்திருக்க மாட்டேனே... என்று எண்ணமிட்ட மாதங்கி மீண்டும் திகைத்தாள்.

சம்மதித்திருக்கமாட்டாளா? ஊகூம்! எதிர்காலத்-தைப்பற்றிய கணக்குகள் ஒரு புறமிருக்க, வித்யாதரனை, அடியோடு இழக்க அவளால் எப்படி முடிந்திருக்கும்? அன்றும் கூட?

மனைவியின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்த வித்யாதரனின் முகத்தில், வெற்றிப் புன்னகை மலர்ந்தது.

அருகில் சென்று, மனைவியின் கைகளைப்பற்றி, "நான் சொல்வது உனக்குப் புரியும், புரிந்து நடந்து கொள்வாய், என்று, எனக்கு நன்றாகத் தெரியும் மது. நீ, என்னை, ஒருபோதும், ஏமாற்றமாட்டாய் என்பதும், எனக்கு,

சர்வநிச்சயமே" என்றுரைத்து, மனைவியை ஆவலுடன், அணைத்து, முத்தமிட்டான். அவன்.

11

கணவனின் பேச்சு, மாதங்கிக்கு, உள்ளூர வருத்தமாகத்-தான், இருந்தது. இருக்கத்தானே செய்யும்?

சில திருமணங்களில், 'பெண், நன்றாக, விதரணையாக, வேலை செய்வாள்:, அதனால் மகனுக்குக் கட்டி வைத்தோம்.' என்பார்கள். என்னவோ, பெண்ணுக்குப் பாராட்டுப்பத்திரம் கொடுப்பது போல ஒரு நினைப்புதால் ஆனால், இந்தப்பேச்சு, அநாகரீகம் என்பது, அவர்களுக்குப் புரிவதே இல்லை. கேட்டுக் கொண்டிருக்கும் மணமகளுக்கு, நான் என்ன இவர்கள் வீட்டு வேலைக்காரியாகவா, இங்கே, வந்திருக்கிறேன், என்று, தோன்றாமல், இருக்குமா?

வித்யாதரனின் பேச்சும் கிட்டத்தட்ட அது போன்றது-தான். மாதங்கியும், ஓரளவு, அவமானமாகத்தான் உணர்ந்தாள். ஆனால், வாழ்க்கைக் கல்லூரியில், அனுபவப்பாடத்தை - பணம் எவ்வளவு வலிமை மிக்கது? பணக்காரர்களின் சக்தி எப்பேர்ப்பட்டது? என்பதை-யெல்லாம், மிகவும், கஷ்டப்பட்டுப் பல்வேறு சிரமங்களை அனுபவித்துக் கற்றவள் ஆயிற்றே அதனால், இதற்காக அவள், ஒரேயடியாக, நொந்து போய்விடவில்லை.

மாறாக, இந்த நிலைமையை, எப்படிச் சமாளிப்பது, நல்லபடியாக எப்படி வாழ்வது என்று யோசித்தாள்.

மாதங்கியின், பெரும் பிரச்சனை பாமா! அந்த வீட்டு மருமகள்கள் என்கிற முறையில், பாமாவுக்கு, தான், எந்த விதத்திலும், குறைந்தவள் அல்ல என்பது மாதங்கியின், உறுதியான அபிப்பிராயம். வித்யாதரன் என்ன சொன்னபோதும், அந்தக் கருத்தில், அவளுக்கு, எந்தவித மாற்றமும் இல்லை.

ஆனால், பாமாவின் வாய் நீளம், பிடிவாதம், ஆணவம், பலமான பின்னணி எல்லாவற்றையும், எண்ணிப்பார்க்கும் போது, அவளோடு மோதுவதும், நல்ல உறுதியான கருங்கல் பாறைமீது மோதுவதும், ஒன்றே என்பதையும் அவளால், நன்றாகவே, புரிந்து கொள்ள முடிந்தது. இரண்டு மாமாங்கங்களுக்கு மேலாக, அந்த வீட்டின் தலைவியாக இருந்து கோலோச்சிய கோகிலமே, பாமாவை எதிர்க்க முடியாமல், ஒதுங்கி இருந்தாள் எனும்போது, மாதங்கி, அந்த முயற்சி, செய்வது மடத்தனமே. அதேபோலச் சும்மா பாமாவிடம் அவமானப்பட்டுக்கொண்டே இருப்பதும், சரியல்ல...

வெகுவாக யோசித்து, மாதங்கி, சிறு வருத்தத்துடன், ஒரு முடிவுக்கு வந்தாள்.

பொதுவாக, சாட்சிக்காரன் காலில் விழுவதை விட, சண்டைக்காரன் காலில், விழுவதே மேல் என்று சொல்வார்கள்.

ஓரகத்தியின் அழிச்சாட்டியத்துக்குப் பதில் கொடுக்-காமல், பணிந்து போக, மாதங்கிக்கு மனமில்லைதான். ஆனால், கொண்டவன் துணையிருந்தால், கூரையேறிக் கத்தலாம். அது, இல்லாதபோது?

அனாவசியமாகக் கூரையேறிக் கத்தும் விருப்பம், மாதங்கிக்கு கிடையாது! ஆனால், அவள் கொண்ட கணவனின் இயல்பு, அவளது நியாயமான குரல் வெளிவருவதைக் கூடவிரும்ப வில்லையே.

அதற்காக, ஒரு தீமைக்கு, ஊமையாகப் பணிந்து போகவிரும்பாமல், வேறுவிதமாய் நிலைமையைச் சமாளிக்க, அவள் முயன்றாள்.

அநியாயத்துக்குத்தானே, பணிய மனம் வரவில்லை அநியாயம் செய்ய விடாமல், தடுத்து விட்டால்? அப்போது பிரச்சனை இராதல்லவா?

பாமா விஷயத்தில், இந்தத்திட்டத்தை நிறைவேற்றுவது, கடினம்தான் என்றாலும், மாதங்கி முயன்று, ஓரளவு வெற்றியும் கண்டாள்.

விரோதியை நண்பனாக்குகிற முயற்சி.

கன்றை இழுத்தால், பசு, தானே வரும். நல்லவேளையாக, சத்யாகர், பாமாவுடைய பிள்ளைகளிடம், மாதங்கிக்கும், தங்கள் சித்தியிடம், பிங்க்கி, வின்னி ஐசுக்கும் 'மெய்யான பிரியமும் இருந்ததால், குழந்தைகளிடம் பாமாவின், கண்காண அன்பு காட்டுவது, மாதங்கிக்கு எளிதாக இருந்தது. பிள்ளைகளின் பொறுப்பை, இளையவள் எடுத்துக்கொண்டது, பாமாவுக்கும், மிக வசதியாகிவிட, அவள் மனம் சற்றே, சின்னவள் பால், இளகியது.

அடுத்து, மனச்சாட்சியின் கண்ணையும், வாயையும் இறுகப்பொத்திவிட்டு மாதங்கி, மூத்தவளுக்கு, அவ்வப்-போது வைத்த ஐஸ்.

கடைசியாக், கார், டீவி என்று பல வசதிகளைப் பாமா. அறிய மற்றவள் பயன்படுத்தாதது.

இன்னும், பேச்சிலும் செயலிலும், மாதங்கி கவனத்-துடன், நடந்து கொண்டதும் சேர்ந்து கொள்ள, வித்யாதரன் விரும்பிய அமைதி வீட்டில் நிலவியது.

அவ்வப்போது, மட்டம் தட்டும் வார்த்தைகள், பாமாவின் வாயிலிருந்து வந்தபோதும் - வரத்தான் செய்யும். அடுத்தவரைக் குறைவாக அவ்வப்போது பேசாமல் இருக்க, அவளால் முடியாது. ஆனாலும், அவள், அப்படிப் பேசும்போது, அதைப் பொருட்படுத்தாமல், இருந்து விட, மாதங்கி பயின்று கொண்டாள். அவளது சகிப்புத்தன்மை, அடியோடு, கவனிக்கப்படாமல், விட்டுப்போய் விடவும் இல்லை.

நடப்பதை, மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்த

கோகிலத்துக்கு, மாதங்கி, மிகவும், அருமையான மருமகளாகிப் போனாள்.

வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிடினும், அவளது சிறுசிறு செய்கைகள், பேச்சுகள் மூலம், அதை உணர்ந்ததால், மாதங்கியும், மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். அவளது தியாகங்களுக்கு, அடியோடு மதிப்பில்லாமல் போய்விடவில்லை.

வித்யாதரனும்கூட, நேரடியாக, எதுவும், சொல்லாத போதும், தன் மகிழ்ச்சியின் அறிகுறியாக, அவளிடம், மிகவும் ஆசையாக, நடந்து கொண்டான்.

அவள், கேளாமலே, மாடி ஹாலில், ஒரு டீவி குடியேறியது.

அலுவலகத்தில், இறங்கிக்கொண்டபின், வித்யாதரன் சென்ற கார், மீண்டும், வீட்டுக்குத் திரும்பி வந்தது. வீட்டுப்பெண்மணிகள், இரண்டு வெவ்வேறு இடங்களுக்குச் செல்ல வசதியாக இருக்கும் பொருட்டு, என்று காரணம் கூறப்பட்டது.

அது பற்றிப் பேசிய போது, "அம்மா சொன்னதால் செய்தேன்" என்று காரணம் சொன்னான், வித்யாதரன்.

அம்மாவிடமே கூட 'எதற்கம்மா' என்று சொல்லிவிடக் கூடியவன் வித்யாதரன் என்று அறிந்திருந்ததால், அப்படியின்றி, 'செய்தானே' என்று உள்ளூரச் சந்தோஷப்பட்டுக் கொண்டாள், மாதங்கி.

'செய்த'தால் வசதி அனுபவிப்பது, மாதங்கி தானே! அப்படியானால், அவன் 'செய்தது' அவளுக்காக என்றுதானே அர்த்தம்?

இப்படி எண்ணித் திருப்தி அடைந்தாள், மாதங்கி.

மனதில் இருப்பதை எல்லாம் கணவனிடம் கொட்டிப்

பகிர்ந்து கொள்ளும் பாங்கு மறைந்து விட்டபோதும், மற்றபடி அவள் மகிழ்ச்சியாகவே இருந்தாள் எனலாம்.

இந்தக்கால கட்டத்தில்தான் மாதங்கியின் மகிழ்ச்சிக்கு அடுத்த சோதனை நேர்ந்தது!

கொஞ்ச காலமாக வித்யாதரின் முகத்தில் அவ்வப்போது கவலைக் குறியைக் காண நேரவும், மாதங்கியின் மனம் கலக்கமுற்றது.

மாமனார், மைத்துனன் இருவருமே உற்சாகத்துடன் இருந்ததால், இது, தொழிலைப்பற்றியது இல்லை என்று, உணர்ந்தவளுக்கு, வித்யாதரனுக்கு மட்டுமாக அப்படி பெரும் கவலை என்ன என்று மனம் துடித்தது.

அவள், மெல்லக் கணவனிடம் விசாரித்தபோது முதலில், அவன் ஒன்றும் சரியாகச் சொல்லவில்லை. "உனக்கு ஒன்றும் இல்லை, மாதங்கி" என்று, முடித்துவிடவே முயன்றான்.

ஆனால், "இப்படிக் கவலையே உருவாக நீங்கள், இருந்துகொண்டு, அதில், எனக்கு ஒன்றும் இல்லை என்றால், அது, நியாயமாகப் படுகிறதா, வித்யா? நான், உங்கள் மனைவி என்பதை, அடிக்கடி, மறந்து விடுகிறீர்களே" என்று இலகுவாகவே, ஆனால், விடாமல், மாதங்கி கேட்டாள்.

தன்னை மீறித்தோன்றிய முறுவலுடன், "விடமாட்டாயே" என்ற வித்யாதரன், தொடர்ந்து, தன்னை வாட்டிய விஷயம் பற்றிச் சொன்னான்.

அவன், சொல்லத் தொடங்கியதுமே, மாதங்கிக்கு, ஏன் கேட்டோம் என்று ஆகிவிட்டது.

ஏனெனில், அவள் கணவன் கவலைப்பட்டது, நீல நாராயணனைப்பற்றி. இடையில், ஒரு டெலிஃபோன் கால் தவிரக் கிட்டத்தட்ட, மூன்று மாதங்களாக, நண்பனிட-

மிருந்து, ஒரு தகவலுமே இல்லையே என்று உருகிக் கொண்டிருந்தான். அவன்.

மிக முக்கியமான வருத்தம், அந்த நண்பன் நீலநாராயணனுக்கு ரத்தம் கொடுக்க வேண்டிய நாள். நெருங்கிவிட்டதாம்! "அதுதான், பெரும் கவலையாக இருக்கிறது" என்றான், அவன், வருத்தத்துடன்.

கண்ணால் கண்டே அறியாத அந்த நீலநாராயணன் மீது மாதங்கிக்கு அக்கறையோ, கரிசனமோ கிடையாதுதான். சொல்லப் போனால், கணவனின் ரத்தத்தை அவ்வப்போது தயக்கமின்றி வாங்கிக் கொள்ளுகிறான் என்பதால் அவளுக்கு அவன் மீது சிறு வெறுப்பும் உண்டுதான்.

ஆயினும் கணவனின் கவலை மனதைப் பாதிக்க, "அவசியம் என்றால் அவரே தொடர்பு கொள்ள மாட்டாரா? ஏன் அனாவசியமாகக் கவலைப் படுகிறீர்கள்?" என்று கொஞ்சம் கனிந்த குரலிலேயே வினவினாள்.

அந்த குரலிலேயே அமைதி அடைந்தவன் போல வித்யாதரன், மனைவியை நோக்கி முறுவலித்தான். "நீ சொல்வது சரிதான், மாதங்கி. எந்தவிதத் தயக்கமும் வேண்டாம் என்று நானும் அவனிடம் ஏற்கனவே சொல்லியும் இருக்கிறேன். ஆனால், இப்போது, எனக்குத் திருமணமாகிவிட்டதால் தயங்குகிறானோ என்று ஒரு சிறு உறுத்தல் அதுதான்." என்றான்.

"அப்படியென்றால் அவரிடமே பேசித்தெரிந்து கொள்ள வேண்டியதுதானே? டெலிஃபோன் தொடர்பு கிடைக்க வில்லையா?

"அவன் டெலிஃபோன் எண்ணே என்னிடம் இல்லையே! அவன் எங்கிருக்கிறான் என்பதே யாருக்கும் தெரியாது! மன உறுத்தலை அதிகமாக்குவதே அதுதான்."

வியப்புற்று, "அதெப்படி? உயிர் நண்பன் என்கிறீர்கள்.

உங்களுக்குக் கூடச் சொல்லாமல்... அதிருக்கட்டும், எப்படியும், உங்கள் நண்பர் வேலை செய்யுமிடத்தில் கேட்டால் அவர் முகவரி கிடைக்குமல்லவா?" என்றவள் கணவன் சட்டெனச் சிரிக்கவும், காரணம் புரியாமல், கேள்வியாய் அவனை நோக்கினாள்.

சிறுமுறுவலுடன், "நீலன் வேலை செய்வதே நம்மிடம்... அதாவது என்னிடம்தானே" என்று இயம்பவும், "பின்னே, மாதக்கணக்கில் அவர் இருக்குமிடம் தெரியாது என்கிறீர்களே, அதெப்படி?" என்று மிகுந்த ஆச்சரியத்துடன் விசாரித்தாள், மாதங்கி.

அப்போதுதான் அவளுக்கு நீலநாராயணனைப் பற்றிய முழு விவரமும் தெரிய வந்தது. நீலநாராயணனோடு, வித்யாதரனுக்கு நெருங்கிய பழக்கம், சுமார் ஐந்து ஆண்டுகளாகத்தான். சிறுவயதில் கூடப்படித்தவன் என்ற போதும், அதற்கு முன் இவர்கள் இருவருக்குமிடையே, அவ்வளவு நெருக்கம் இருந்ததில்லை.

'அதாவது அண்ணன் சத்யாகரின் திருமணம் முடிந்து, மாலியின் அறிமுகம் வித்யாதருக்குக் கிடைக்கிற வரை' என்று நினைத்தது, மாதங்கியின் மனம். அல்லது... அவளோடான பழக்கம் முடிவடைந்த போதுதான் இந்த நெருக்கம் தொடங்கியிருக்குமோ?

ஆனால், வித்யாதரனின் வாழ்வில், ஒரு முக்கியமான திருப்பம் நேர்ந்த அதே தருணத்தில், நீலன் வாழ்விலும், கிட்டத்தட்ட அதேபோல ஒரு துன்பம் நிகழ்ந்தது.

'துன்பம்' என்றால்...? எப்படியும், அந்த 'திருப்பமும்' ஒருதுன்பமே என்கிறான்.

திருப்பம், மாலியைச் சந்தித்தா? அல்லது, அவளைப் பிரிந்ததா?

அறிந்துகொள்ளும் ஆவலில் மாதங்கியின் மனம்

துடித்தது. ஆனால், அந்தத் துன்பம் என்ன என்பதை விவரிக்காமலே வித்யாதரன் மேலே விஷயத்தைச் சொல்லலானான். மாதங்கியும் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

நண்பர்கள் இருவருக்குமே ஒரேமாதிரித் துன்பமே என்றாலும் நீலநாராயணனின் பாதிப்பு மிக அதிகமாக இருந்தது. சில வகையான வியாதிகளுக்கும் அவன் ஆளானான். ஏற்கனவே, இருந்த நோய்கள் அதிகப்பட்டன. முக்கியமானது, இந்த ரத்தப் பிரச்சனை.

தன்னைப் போலவே ஏமாற்றத்துக்கு ஆளானவன் என்பதால் தோன்றிய நட்புணர்ச்சி, நீலனின் நோய்கள் பற்றி அறிந்ததும் பேரன்பாக மாறிவிட்டது.

அதனாலேயே, தந்தையிடம் சொல்லி, தன் கீழேயே, நீலனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்து அருகிலேயே வைத்துக் கொண்டேன். வேண்டிய உதவிகளும் செய்தேன்.

'அதில் ஒன்றுதான் ரத்தம் கொடுப்பதும் போலும்' என்று நினைத்த போதும், அதை மாதங்கி வாய்விட்டுச் சொன்னாளில்லை. அதுதான் ஏற்கனவே வித்யாதர் எச்சரித்து விட்டானே!

அத்தோடு, அவளது தவிப்பே வேறு. மாலி பற்றியது. கணவனின் துன்பம், திருப்பம் எல்லாம் மாலியின் பிரிவினால் ஏற்பட்டதுதானா? அந்தக் காயமும் வலியும் இன்னமும் நிலைத்திருக்கிறதா? அதனால்தான், அவளைப்பற்றிய பேச்சைத் தவிர்த்து விட்டு நண்பனைப் பற்றிப் பேசுகிறானா?

ஏதேதோ எண்ணி மனம் குழம்பிக் கொண்டிருந்தாள் அவள்.

12

ஆனால், தன்குழப்பத்தைப் பற்றிக் கணவனிடம் கேட்கவும், அவளுக்குப் பிடிக்கவில்லை. அவன் 'ஆமாம்' என்றுவிட்டால்?

எனவே, அவள் வேறு விஷயம் கேட்டாள். "நீங்கள் இப்படிச், சும்மா ஒருவருக்கு வேலை கொடுத்தால், மாமா சரியென்று விடுவாரா? இப்படி ஆள் அட்ரசே இல்லாமல், மாதக்கணக்கில் போவதை, என்ன, ஏது என்று கேட்க மாட்டாரா?" என்று விசாரித்தாள்.

"நீயும் ஓர் இடத்தில் வேலை செய்தவள் தானே? எந்த நிறுவனத்திலாவது அப்படி ஒருவருக்குச் சும்மா வேலை கொடுப்பார்களா? "

"பின்னே, நீங்கள்தானே "

"பொறு, நான் சொல்லி முடிக்கும் வரைகொஞ்சம் பொறுத்திரேன். நீலன் ஒன்றும் நம்மிடம் ஓசிச் சம்பளம் வாங்குகிறவனில்லை. அதே சமயம் தினந்தோறும் அவன் அலுவலகம் வந்து கையெழுத்துப் போட்டாக வேண்டும் என்பதும் இல்லை. அவனது வேலை நமக்கு வாடிக்கையாளர்களைப் பெருக்குவது!

இப்படி வெளியூர் சென்றானென்றால், நாலைந்து கொழுத்த வாடிக்கைகளாவது பிடித்து வந்துவிடுவான்."

"ஆனாலும், நிறுவனத்து வேலையாகப் போனால், எங்கே, என்ன செய்கிறார் என்று நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டுமல்லவா?"

"செலவு போக, நிறைய லாபம் கொண்டுவருகிறான், அதற்கு மேல் அனாவசியமாகக் கேள்வி கேட்பானேன்? ஒவ்வொரு திறமைசாலிக்கும் ஏதேனும் ஒரு பலவீனம் இருக்கும். அதை ரகசியமாக வைத்துக் கொள்ள அவன்

விரும்பினால், அப்படியே இருக்கட்டும் என்று நாங்கள் விட்டுவிடுவதுதான்." என்று வித்யாதரன் விளக்கம் கூறியது மாதங்கிக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

ஆனால், வெற்றிகரமாகத் தொழில் நடத்திக் கொண்டு இருக்கும் அவர்களைப் பற்றி, அது போன்ற பின்னணியில்லாத தான் விமர்சிப்பது நன்றாயிராது, என்பதை உணர்ந்தவளாய், அது பற்றி, எதுவும் கூறாமல், பேசாதிருந்து விட்டாள்.

சிறு அமைதியின் பின், ஒரு விதமான புன்னகையுடன், "உனக்கு, என்னிடம் எதுவும் கேட்க வேண்டுமா, மாதங்கி?" என்று வித்யாதரன் வினவினான்.

"கேட்டால், உங்களுக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ? அது தெரியாமல் பேசி, உங்களுக்கு எரிச்லூட்டி விடக் கூடாதே" என்றுரைத்து, ஓரக்கண்ணால்கணவனை நோக்கினாள், அவள்.

"வாழைப்பழத்தில் ஊசியாக்கும்?" என்று ஏளனமாக உதட்டைப் பிதுக்கிய போதும், தொடர்ந்து, "பரவா-யில்லை, கேள்." என்று புன்னகையுடனேயே அவளை ஊக்கினான், அவன் வாய்ப்பு கிடைத்தது என்று, சற்றுக் கவனத்துடன் வார்த்தைகளை அமைத்து, மாதங்கியும், கணவனிடம் கேட்டாள். "மிஸ்டர் நீலநாராயணனுக்கு ஏதேதோ நோய்களெல்லாம் உண்டு என்றீர்களே, அவர், வெளியூர் செல்லும் போது, வந்து நிறுவனம் அனுமதிக்கும் பணம் அவர் செலவுக்குப் போதுமா?"

நீலநாராயணனைப் பற்றி அவளுக்கு அவ்வளவாக நல்ல அபிப்பிரயாம் கிடையாது. நிறுவனத்துக்காக வெளியூர் செல்கையில், அவன், ஏதாவது பணம் அடிக்கிறானா என்று அறிந்து கொள்ளவே, மாதங்கி, இந்தக்கேள்வி கேட்டது.

ஆனால், கணவன் சொன்ன பதில், அவளைத்

தூக்கிவாரிப் போட வைத்ததோடு, நீலநாராயணனைப் பற்றி அவள்மனதில் இருப்பதை அப்படியே, கணவனிடம் சொல்லுவது, அவ்வளவு நல்லதல்ல என்று அவளை எச்சரிக்கவும், செய்தது. ஏனெனில், "நோய், நொடி இல்லாமலே, நீலன் கொஞ்சம் அனாவசியச் செலவு செய்கிறவன்தான், மது. அவனுக்குச் சட்டப்படி அனுமதிக்கிற பணம் போதாதுதான். ஆனால், வாடிக்கை பிடிக்கிறானே, அவர்களிடம் 'கமிஷன்' வாங்கிச் சமாளித்துக் கொள்வான் என்று நினைக்கிறேன்." என்று சாதாரணமாக, ரொம்பவும் சாதாரணமாகச் சொன்னான், அவன்

வித்யாதரன் கூறிய அந்தக் கமிஷனுக்கு அர்த்தம் லஞ்சம்தானே? இதை இவ்வளவு சாதாரணமாகச் சொல்லுவது என்றால், அதுவும், சம்பளம் கொடுக்கிற முதலாளியாக இருந்து கொண்டு சொல்வது என்றால், அவன், அந்த நீலனிடம், எவ்வளவு அன்பு கொண்டிருக்க வேண்டும்? எனவே, அவனைப்பற்றிய பேச்சை அடியோடு விட்டுவிடுவதுதான் மாதங்கிக்கு மிகமிக நல்லது!

மாதங்கி யோசித்துக் கொண்டிருக்கும் போதே, அவளுடைய கணவன் இன்னொன்றும் சொன்னான். "நீலுவைப் பற்றி, நீ, இவ்வளவு அக்கறையோடு பேசுவது, எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? இதற்கு முன், உனக்கு அவனைப் பிடிக்கவில்லையோ என்று எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியது உண்டு நல்ல வேளையாக இப்போது, அந்தக்கவலை தீர்ந்தது" என்று அவன் நிம்மதியோடு கூறவும் மாதங்கிக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. அவளுடைய கணவன் கெட்டிக்-காரன் என்று நினைத்தாளே அது தப்பா? மாதங்கி, நீலநாராயணனைப் பற்றிப் பேசியதே, அவன், அலுவலகப் பணத்தைக் கையாடுகிறானா என்று அறிந்து கொள்ளவும். அது பற்றி வித்யாதரனுக்குத் தெரிய வைக்கவும் தான்.

ஆனால், அதையே அவன், அவனுடைய நண்பனிடம், மாதங்கி காட்டும் அக்கறையாகக் கருதுவான் என்றால், அவனை என்னவென்று மதிப்பிடுவது?

பொதுவாக வீட்டில் தொழில் பிரச்சினைகளில் மாமனார் கருணாகரன் கலந்து ஆலோசிப்பது வித்யா-தரனுடன் தான். மாமியார் கோகிலம் தன்வேலைகளுக்கு நம்பியிருப்பது, இளைய மகனைத்தான். பணியாட்கள் உடனடியாகப் பணிவதும், தங்கள் கோரிக்கைகளை முன்வைப்பதும், இளைய சின்னையாவிடம் தான்.

இதையெல்லாம் பார்த்துத்தான், தன் கணவன் மகாசாமர்த்தியசாலி என்று, மாதங்கி நினைத்தது. ஆனால் என்று எண்ணமிடும் போதே, மாதங்கிக்கு, விஷயம் புரிந்து போயிற்று.

வித்யாதர் கெட்டிக்காரனேதான். மனைவிக்கு நண்பனைப் பிடிக்கவில்லை என்பதை அவன் ஏற்கனவே, கண்டு கொண்டிருக்கிறான் தானே? இப்போது, நண்பன் பாசம், அறிவை மறைத்து, அவன் விரும்பியதை, மனைவியிடம் காண வைத்திருக்கிறது.

எவ்வளவோ கவனத்தோடு இருந்தும், நீலநாரா-யணனிடம், அவளுக்கு இருந்த வெறுப்பை, வித்யாதரன் ஓரளவு ஊகித்துவிட்டிருக்கிறான் என்றால், இனி, அந்த நீலனின் விஷயத்தில், வெகுகவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று மாதங்கி எண்ணினாள்.

இப்போதைக்கு, அந்த நீலநாராயணனிடம், தனக்கு அக்கறை ஏதும் இல்லை என்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் எதுவும் இல்லை, காட்டிக் கொள்ளவும் கூடாது என்று அவள் முடிவு செய்தாள்.

ஆனால், அந்த முடிவே, பின்னொரு காலத்தில், அவளது

வாழ்வை நாசப்படுத்துவதில், பெரும்பங்கு வகிக்கப்-போகிறது என்று அப்போது அவளுக்குத் தெரியாது.

மாலிபற்றி அறிய, மாதங்கி விரும்பியபோது, வேறு பேசிய வித்யாதரன், இப்போதும், அவள் எதிர்பாராததைப் பேசினான்.

உதட்டோரம் சின்னச் சிரிப்பும், கண்களில் பளபளப்புமாக, வித்யாதரன், மனைவியை நோக்கினான். "என் வாழ்வில் நேர்ந்த அந்தத் 'துன்பம்' என்னவென்று நீ கேட்கப் போவதே இல்லையா, மாதங்கி? அல்லது, எப்படிக் கேட்பது என்றுதான், இவ்வளவு யோசனை செய்து கொண்டு இருக்கிறாயா?" என்று ஒற்றைப்புருவம் உயர்த்திக் கேலியாகக் கேட்டான், அவன்.

விழி உயர்த்திக் கணவனைப் பார்த்தாள், மாதங்கி. விளையாட்டுப் போலவே எதையோ, வித்யாதரன், சொல்லப் போகிறான் என்பதை உணர்ந்து, "நீங்களாகவே சொல்வீர்கள் என்றல்லவா, நான் நினைத்தேன்." என்று அவனைப் போலவே, பதில் சொன்னாள், மனைவி.

விழிகளில் மேலும், பளபளப்பும், கூர்மையும் ஏற. "மாலி அவளைப்பற்றி, இன்னமும், உனக்கு ஒன்றுமே, தெரியாது என்றால், என்னால், அதை, நம்ப முடியாது, மாதங்கி" என்றான், அவன், பரிகாசக் குரலில்.

கணவன் வாழ்வில், முன்பு இடம் பெற்றிருந்த, ஒரு பெண்ணைப் பற்றி, அவனே, சொல்லப் போகிறான். இதைத் தானாகவே பேச்செடுத்துச் சொல்லுமளவு, தன்னிடம், மனம் ஒன்றிவிட்டான், கணவன் என்று மகிழ்ச்சி ஒருபக்கம் இருந்தாலும்கூட, அவளுக்கு, நெஞ்சுக்குள் லேசாகப் பிசையத்தான் செய்தது.

ஏனெனில், அவளோடு பகிர்ந்து கொள்ளும் தன்மை-நட்பு தோன்றியிருந்தாலும், காதலிக்கவில்லை என்று

திட்டவட்டமாகக் கூறியிருக்கிறானே. அந்த உயிர்நேசம் உண்டாக முடியாததின் காரணம், அந்த மாலிதானோ என்று அவள் மனம் கலங்கியது.

ஆயினும், அதைக் காட்டிக்கொள்ளாமல், முயன்று, அவனைப்போலவே, "அதெப்படித் தெரியாமல் போகும்? இப்போது நீங்களேதானே சொன்னீர்கள், உங்கள் அண்ணியை மாற்ற முடியாது, என்று?" என்று அவளும் இலகுக்குரலில், கிண்டலாகக் கூறவும், வித்யாதர், சட்டெனச் சிரித்தான்,

கண்களில், வேறு விதமான ஒளியுடன், "என் வார்த்தைகளைக் கொண்டே, என்னையே மடக்குகிறாயா? உன்னை" என்றபடி, அவளை, அவன் நெருங்க, லாவகமாக விலகிக்கொண்டு, "நைசாகப் பேச்சை மாற்றுகிறீர்களா? அதெல்லாம் முடியாதாக்கும். முதலில், அந்த மாலியைப் பற்றிச் சொல்லுங்கள் " என்று, விளையாட்டுப் போலவே, விடாமல் கேட்டாள் அவள்.

"பரவாயில்லையே" என்று, புன்னகையோடு பாராட்டியவனின் முகம் உடனே மாறியது. "மாலியைப் பற்றித்தானே? தாராளமாகச் சொல்லுகிறேன். அவள் விஷயத்தில் எனக்கு மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. உண்மைதான், மாதங்கி மறைக்க வேண்டிய தப்பு எதையும், நான், அவளோடு சேர்ந்து, செய்தது இல்லை. இதை, நீ முழுமையாக நம்பலாம்." என்றான், உறுதியான குரலில்.

ஒத்த குரலில், "நம்புகிறேன்" என்றாள் மாதங்கி. "ஆனால் வித்யா, நீங்களும் அவளும் முன்பு, நெருங்கியே பழகியிருந்தாலும் கூட, இப்போதைய நம் வாழ்விற்கும் அதற்கும், ஒரு சம்பந்தமும் இல்லை." என்றாள் இதமாக.,

அவள் கூறியதை, ஒத்துக் கொள்ளாதவன் போலத் தலையசைத்து. "ம்கூம், பின்னே, மாலி பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டுமென்று, விடாமல், ஏன்,

கேட்டூர்களாம்?" என்று கேட்டுச் சிரித்தான், வித்யாதரன். மனைவியை, மடக்கி விட்டானாம்.

கூடச் சேர்ந்து முறுவலித்து விட்டு, "அது, என் ஆருயிர்க் கணவரைப்பற்றி அறிந்து கொள்வதற்காக." என்றாள், அவள், இன்னமும், இலகுவாகவே.

"ஓகோ இப்போது, என்னைப் பற்றி, ரொம்பவும் அறிந்து கொண்டுவிட்டாயாக்கும்? அப்படி என்ன தெரிந்து கொண்டாயாம்? சொல்லேன்,"

வேடிக்கை போலக் கேட்ட போதும், கணவன்-கண்களில், கூர்மை இருப்பதைக் கண்ணுற்ற மாதங்கி "அதைச் சொல்லக் கூடாதே. சும்மாவே, இது குளிர்காலம். இந்த நேரத்தில், உச்சந்தலையில் ஒரேடியாய் ஐசைக் கொட்டினால், அப்புறம், உங்களுக்குச் சளி பிடித்துக் கொள்ளுமே. அப்புறம், உங்கள், 'ஞாண நமன'வைக், கேட்டுச் சகிப்பது யார்?" என்று கேட்டுச் சிரித்தாள்.

"இதைவிடப் பெரிய ஐஸ், இந்த உலகத்தில், வேறே, ஒன்று இருக்கிறதாக்கும்? அ-ஆ அச்சூ " என்று வித்யாதரன் தும்மிக் காட்ட, இருவரும் இணைந்து நகைத்தனர்.

இதெல்லாம், நன்றாகத்தான் இருக்கிறது என்று, மாதங்கி, உள்ளூர வருந்துகையிலேயே வித்யாதரன், மீண்டும் பேசினான். "அதிருக்கட்டும். இப்போது, நாம் பேசிக் கொண்டிருந்தது, என்னைப் பற்றியல்ல. மாலி-விஷயம். அதைத்தொடருவோம். மாலி அண்ணியுடைய அத்தையோ, சித்தியோ, யாரோ ஒருவருடைய மகள், பார்க்க " என்று, மாதங்கியின் முகத்தை ஒரு விரலால் தூக்கி, ஆராய்ந்தான். அவளது கன்னத்தை லேசாக வருடிவிட்டுவிட்டு, மீண்டும் பேசினான். "பார்வைக்கு அவள் உன்னைப் போல அழகியல்ல. ஆனால், கவர்ச்சியாக இருப்பாள். அப்படிக் காட்டிக் கொள்ள அவள் பயங்கரமாகச், செலவு செய்திருப்பாள் என்று இப்போது

தோன்றுகிறது. ஆனால், அன்று-அவளும், என்னைச் சுற்றி சுற்றி வரவும், சற்று மயங்கி விட்டேடன் போல. இழுத்த இழுப்புக்கு வர, அவள், தயாராக, இருந்ததுதான் முதலில், என்னை, யோசிக்க வைத்தது என்று நினைக்கிறேன். ஆயினும் என் கண்ணை முழுமையாகத் திறந்து விட்டவள், மாலி என்கிற அந்த சுவர்ணமாலாவேதான். எப்படித் தெரியுமா?

"தற்பெருமை, தற்கொலைக்குச் சமம் என்று மகாபாரதத்தில் கிருஷ்ணர், அர்ஜுனனுக்குச் சொன்னதாக வரும். என்னை மயக்கிப் பிடித்த விதம் பற்றி, விலாவாரியாக அளந்ததை, ஒரு வார்த்தை விடாமல், அவளறியாமல் கேட்கும் பாக்கியம், எனக்குக் கிடைத்தது அப்படிப் பிடித்தது. பணத்துக்காக என்பதையும் கூட அவள் விட்டுவைக்கவில்லை.

"பெண்களின் இயல்பு பற்றி, மிகவும் பிரமாதமான பாடம் அன்று, எனக்குக் கிடைத்தது" என்று முடித்தான், அவன்.

பெண்களின் இயல்பா? இவன், ஒருத்தியிடம் ஏமாந்ததால் எல்லாப் பெண்களையும் மோசம் என்பதா? அவனுடைய மனைவி, மாதங்கியும், ஒரு பெண்தான் என்பதை மறந்து விட்டானா, அல்லது, அவளையும் சேர்த்துதான் சொன்னானா?

"உலகப் பெண்களுக்கெல்லாம், ஒட்டுமொத்தமான பிரதிநிதி அந்தமாலிதான் என்று, உங்களுக்கு யார் சொன்னார்கள்?" என்று கொஞ்சம் சுள்ளென்றே, மாதங்கி கணவனைக் கேட்டுவிட்டாள்.

வித்யாதரனின் முகத்தில், தோன்றிய வியப்பு, உடனே மறைந்தது. புன்னகையோடு, "ஓகோ பெண்ணியல்பு என்று மொத்தமாகச் சொன்னதால் உனக்குக் கோபம் வந்து விட்டதாக்கும்?" என்று கூறிச் சிரித்தான் அவன்.

அப்போதும், உன்னை அப்படிச்சொல்லவில்லை என்று அவன் கூறவில்லையே! உள்ளூரக் குமைந்த போதும், தன்னைச் சொல்லிக் கேட்க மனமின்றி, "உங்கள் அம்மா?, அவர்களும் பெண்தானே? இதை யோசியாமல், இப்படிப் பொதுவாக ஒன்றைச் சொல்லி விடுவதா?" என்று கேட்டாள் மாதங்கி.

"அம்மா, முந்திய தலைமுறை, மாதங்கி இன்றையப் பெண்களில், நான் பார்த்த அளவில் மாலி, அண்ணி, இருவருமே, ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். இன்னும் பல பெண்கள் பணத்துக்காக, எவ்வளவுக்கு இறங்கி விடுகிறார்கள், தெரியுமா? எல்லாம் அதே, மாடு அச்சுதான். வெறுத்துப் போயிற்று.

"ஏதோ, நீ கொஞ்சம், வித்தியாசமாகத் தெரிந்தாய் மணந்து கொண்டேன் " என்று எதையோ யோசித்தபடி, கூறினான், அவள் கணவன்.

என்ன யோசிக்கிறான்? இவளை மணந்தது சரியா, தவறா என்றா?

'ஏதோ கொஞ்சம் வித்தியாசமாய்' என்று அவன் கூறியது வேறு மாதங்கியின் மனதை வருத்தியது. கொஞ்சம்தானா?

ஆனால், இது விஷயமாய்ப் பேசவும் அவளுக்கு விருப்பமில்லை. கல்லைக் கட்டிக் கொண்டு கடலில், இறங்குவது போல, வித்யாதரனின் 'மாலி' நினைவு மாதங்கிக்கு ஒரு பெரிய தடைக்கல்.

மனிதர்கள், ஒருவரைப் போல ஒருவர், நினைப்பது இல்லை. கணவன் மனைவி, என்றாலும் கூட அப்படித்தான். கூடு பட்ட பூனை வித்யாதரன். அவன் கருத்துக்குக் கொஞ்சம் மாறாக மாதங்கி நடந்தாலும் உடனே, இவளும் மாலி போலத்தான் என்று மட்டமாகத்தானே

என்னுவான்? அவளுக்கும் ஓர் அபிப்பிராயம் இருக்கும், அது, சரியாகவும் இருக்கக்கூடும் என்று நினைத்துப் பார்க்கவே, அவனுக்குத் தோன்றாதே!

பேராசைப்பட்டவள் மாலி. ஆனால், அதற்காக, வாழ்நாள் முழுவதும், தண்டனை அனுபவிக்கப் போகிறவள் மாதங்கியா? மனம் சோர்ந்துதான் போயிற்று, அவளுக்கு.

கடந்த நான்கு ஆண்டுகளாக, மாதங்கி கற்ற அனுபவப்பாடத்தின் படி, சிரமப்படாமல், எதுவும், கிடைக்காது, என்று மாதங்கி நன்றாகவே, அறிந்திருந்-தாள்தான். ஆனால், திருமணமும் அதைத்தொடர்ந்த இன்ப வாழ்வும், கஷ்டப்படாமல் கிடைக்கவும், பழைய பாடம் சற்று மறந்து போயிற்று போலும். பரவாயில்லை, இப்போதாவது, நினைவு வந்ததே.

இனி, யோசித்து, இந்த இடையூறையும் எப்படியாவது வெல்ல வேண்டும் அவ்வளவே.

ஆனால், இதுபற்றி யோசித்துச் செயல்படவே இடமளிக்காமல், நீலநாராயணனின் வரவு மாதங்கியைக் கலங்கடித்து விட்டது.

13

நீலநாராயணன், சுவர்ணமாலா, இருவரையும் பற்றி, ஒளிவுமறைவின்றி, வித்யாதரன் பேசியது ஒருவகையில், மாதங்கிக்கு வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும். மனைவிக்கு மறைத்த ரகசியம், இனி அவனிடம் இல்லை.

அந்த அளவில் அவள் சந்தோஷப்பட்டுக் கொண்டு இருந்த போது, மாலையில், வித்யாதரன், வீட்டுக்கு டெலிஃபோன் செய்தான். மனைவியை அழைத்து, "மது, ஒரு, சந்தோஷச் செய்தி நீலன் ஃபோன் செய்தான். இங்கே

வந்தாயிற்றாம் அவனைப் போய்ப் பார்த்துவிட்டு நாளை வீட்டுக்கு வருகிறேன்." என்று உணர்ச்சி வசப்பட்ட குரலில், கூறியவன், மாதங்கி, எதுவும் பேசுமுன் ரிசீவரைக் கீழே வைத்துவிட்டான்.

மாதங்கிக்கு சற்று நேரம், ஒன்றுமே ஓடவில்லை. ஏதோ ஒரு வகையில், கணவன் தன்னை அலட்சியப்படுத்தி விட்டது போல், அவள் உணர்ந்தாள்.

என்ன இது? இப்போதுதானே, கணவன், மனதளவிலும், பெருமளவு, நெருங்கி வந்திருப்பதாக எண்ணி மகிழ்ந்தாள். அதற்குள் இப்படியா?

வித்யாதரன், நண்பனைப் பார்க்கப்போவது பற்றி, அவளுக்குக் குறையொன்றுமில்லை ஆனால், அவன், அதைச் சொன்ன, செய்கிற விதம்தான் அவளைக் கலங்கச் செய்தது.

என் சினேகிதன் வந்துவிட்டான், இனி, நீ அவசியம் இல்லை, என்று சொல்லாமல் சொல்வது போல, அவளிடம், இரண்டு வார்த்தை பேசக்கூட அவனுக்குத் தோன்றவில்லையே.

வழக்கமாக, மாதங்கியல்லவா 'நேரமாகிறது, வையுங்கள்.' என்று டெலிஃபோனை வைக்கச் சொல்லுவாள். இன்றைக்கு அவள் குரலைக் கேட்கக் கூடத் தோன்றவில்லையே. அல்லது கேட்கப் பிடிக்க வில்லையோ. என்று உள்ளே எழுந்த குரலை உடனே அடக்கினாள். எவ்வளவு ஆசையாகப் பேசுபேசு என்று பேசச்சொல்லிக் கேட்டுக்கொண்டிருப்பவன், வித்யா இன்று, என்ன அவசரமோ? ரொம்ப முக்கியமான வேலைக்கு இடையில் கூட பேசியிருக்கலாம். திரும்பி வந்தபின் எல்லாம் விவரமாகச் சொல்லுவான் என்று நம்பிக்கையை இழுத்துப்பிடித்து வைத்துக்கொண்டுதான், மாதங்கி காத்திருந்தாள்.

ஆனால், திருமணமானதிலிருந்து, அன்று வரை இருந்திராத பழக்கமாய், வித்யாதரன் இல்லாத அறையில், தன்னந்தனியே, கொட்டக்கொட்ட விழித்துக்கொண்டு கிடந்தபோது, அந்த நம்பிக்கை மறையாமல் காப்பது, அவளுக்கு, மிகவும் கடினமாக இருந்தது.

மறுநாள் காலையிலிருந்து, கணவனின் கார் சத்தத்துக்காகக் காத்துக்கிடந்தவளுக்குக் கிடைத்ததும் ஏமாற்றமே.

காலைமதியமாகி, மதியம் மாலையாகும்வரையும் கூட, வித்யாதரன், வீடு வந்து சேர்ந்தானில்லை.

அவன், அலுவலகத்துக்கும் அன்று செல்லவில்லை என்று, விசாரித்து அறிந்ததும். மாதங்கி கவலைப்-படலானாள்.

என்னசெய்கிறானோ, நண்பனுக்கு எவ்வளவு ரத்தம் கொடுத்தானோ என்றெல்லாம், கண்டபடி எண்ணி மனம் குமைந்தாள் அவள்.

அப்படியே, ரத்தம் கொடுத்தாலும், தேவைக்குக் கொடுப்பதில், தப்பு இல்லை, ரத்தம் கொடுக்காமல் சும்மா, நண்பர்கள் இருவரும் பேசிக்கொண்டு கூட இருக்கலாம், அல்லது வித்யாதரன், வேறு வேலையாகக் கூட எங்கேனும் சென்றிருக்கலாம்...என்று தனக்குத்தானே பல்வேறு சமாதானங்களைச் சொல்லிக் ஒகண்ட போதும், அவளது மனம் சங்கடப் பட்டுக் கொண்டேதான் இருந்தது.

இதில், எதைச் செய்தாலும், இடையில் மனைவிக்கு ஒரு டெலிஃபோன், செய்ய முடியாதா, என்ன? வேண்டியது, மனம்தானே? அது கணவனுக்கு இல்லையே என்று, அவளுக்கு உள்ளே வருத்தம்தான்.

வெளியே, எதையும், காட்டிக் கொள்ளாமல், வீட்டில், வழக்கம் போலவே நடமாடிக் கொண்டிருந்தவள், பின்

மாலைப் பொழுதில், கணவனின் கார்ச் சத்தம் கேட்கவும், மற்றதெல்லாம் மறந்து, வாயிலுக்கு ஓடோடிச் சென்றாள்.

கார் அருகே, கணவனோடு நின்று கொண்டிருந்த புதியவனைக் கண்டு ஒரு கணம் மலைத்தவளுக்கு உடனே புரிந்து போயிற்று.

இவன் அந்த நீலநாராயணன். சற்றே நறுங்கிய தோற்றம், எலும்பெடுத்த முகம், கச்சல் உடம்பு. ஆரோக்கியமற்ற வெளுத்த சருமம். இவனிடம், வித்யாதரன், எதைக்கண்டு இவனைத் தன் தோழனாக ஏற்றான்? ஒட்டுப்புல் மாதிரி நேற்று மாலையிலிருந்து, அவனை ஒட்டிக்கொண்டு இன்று இங்கேயும் வந்துவிட்டானே.

அல்லது, ஓட்டுண்ணிமாதிரியா?

எண்ணம் போகும் போக்கை உணர்ந்த மாதங்கி சட்டெனஉதட்டைக் கடித்துக்கொண்டாள்.

இது வித்யாதரனுக்குப் பிடிக்காது.

கார்ச் சாவியை வீட்டிலிருந்த டிரைவர் ஒருவனிடம் வித்யாதரன் கொடுத்துக்கொண்டிருக்க, பார்வையைச் சுழற்றிய படிஅருகில் நின்றுகொண்டிருந்த நீலநாரர்யண-னின் கண்களில், மாதங்கியின் இந்தத் தோற்றம்தான் முதலில் பட்டது.

மனதைச் சமனப்படுத்திக்கொண்டு மாதங்கி நிமிர்கையில் வித்யாதரும் அவளைப் பார்த்து விட்டான். புன்னகையோடு, "என்ன அங்கேயே நின்று விட்டாய்? நம் நீலுதான்." என்றவன், நண்பனிடம் திரும்பி, "மாதங்கி என்மனைவி உன்னிடம் சொன்னேனே. அவளுக்கும் நீ என் உயிர் நண்பன் என்பது தெரியும்." என்று அறிமுகம் செய்து வைத்தான்.

மாதங்கி சம்பிரதாயப்படி, வணக்கம் தெரிவிக்க, பதிலுக்குக் கை கூப்பியவாறு, "இப்போது தெரிகிறது,

கம்பியார் சொல்லாமல் கொள்ளாமல் திருமணம் செய்து கொண்டது ஏன் என்று" என விளையாட்டுக்குரலில் நீலநாராயணன் இயம்பினான்.

ஏதோ பெரிய வேடிக்கையைக் கேட்டுவிட்டது போல வித்யாதரன் நகைக்க, மாதங்கியின் உள்ளம் சிணுங்கியது. ஏன், சொல்லியிருந்தால் திருமணத்தை நிறுத்தியிருப்-பானாமா என்று உள்ளூரக் குமுறியது. வெளியே காட்டிக் கொள்ளாமல், "உள்ளே வாருங்கள்." என்று வரவேற்றாள்.

அன்றிலிருந்து, வித்யாதரனின் ஓய்வுப் பொழுது பெரும்பாலும், அவன் நண்பனுடனேயே கழிந்தது.

மாலையில் தாமதமாக வீடு திரும்பினான். அப்படித் திரும்பும் போது, பெரும்பாலும், நீலன், அவனோடு கூடவே வந்தான், கொஞ்சமோ, அதிகமோ, எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தாலும், அதன் பிறகு, வித்யாதரன், நண்பனை, அவன் இருப்பிடம் கொண்டு போய் விட்டுவிட்டு, அப்போதும், கொஞ்சநேரம், அவனோடு பேசியிருந்து விட்டுவருவான்.

மாதங்கி, மெல்லமெல்லப் பொறுமையிழக்கலானாள்.

"உங்கள் நண்பருக்கு, உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டது என்பதே நினைவில்லை போல" என்று ஒருநாள் ஜாடையாகப் பேசினாள்.

கம்ப்யூட்டரில் ஏதோ குறிப்பெடுத்துக் கொண்டிருந்த வித்யாதரனின் கவனம், அவள் பேச்சில், அவ்வளவாகப் பதியவில்லை போலும். மனைவி பேசியதின் உள்ளர்த்தம் பாராமல், "இல்லையே இன்று கூட, உன் பூர்வாங்கம் பற்றி ஏதோ, கேட்டுக் கொண்டிருந்தானே." என்றான், அவன்.

"எ.. என்னைப் பற்றியா? என்னைப் பற்றிப்பேச- அ. அவர் பேச என்ன இருக்கிறது?" என்று உள்ளே, உறுத்த, மாதங்கி கேட்டாள்.

"ஏன்? நீ என் மனைவி இல்லையா? உன்னைப் பற்றி அறியும் ஆவல் அவனுக்குத் தோன்ற, இது போதாதா? கேட்க மாட்டானா? என்னவோ நீலா கேட்டது தப்பு மாதிரிக் கேட்கிறாயே!" என்றான் கணவன்.

"நான் அப்படிக் கேட்கவில்லை" என்ற முணுமுணுப்-புடன், அவள்தான், பேச்சை முடிக்க வேண்டியதாயிற்று.

நல்வேளை, அதற்கு மேல் பேச்சை அலசி ஆராயவில்லை அவன்.

இன்னுமொருநாள், இரவில் வெகு நேரம் கழித்து வித்யாதரன் திரும்பிவரவும், "மனைவி இருப்பதே உங்களுக்கு மறந்து போய்விடுமோ என்று எனக்குப் பயமாய் இருக்கிறது" என்று எரிச்சலை அடக்க முயன்றபடி, மாதங்கி கூறினாள்.

"ஊகூம், அதெப்படி? எங்கே எப்படியிருந்தாலும், இங்கே வந்து விட்டால், நான், உன்னைத்தவிர வேறு எதையுமே நினைப்பது இல்லையே" என்று குறுஞ்சிரிப்-போடு கட்டிலைக் காட்டினான், அவன்.

"ச்சு, இதற்காக மட்டும் தானா மனைவி?" என்று சிணுங்கினாள், அவள்.

"இந்த நேரத்துக்கு இது" என்றவன் உல்லாசமாக மனைவியை நோக்கி, "இன்று, நீலு இந்தப் பயணத்தில் நடந்த கதை ஒன்று சொன்னான். அப்போதே உன் நினைவு வந்து விட்டது. நினைத்துக் கொண்டேவந்தேனா..." என்று கண்ணால் அழைத்து, அவள் புறமாய் ஓர் எட்டு எடுத்து வைத்தான்.

நீலு சொன்னானா?

சட்டென விலகி, "உங்களிடம் பேச வேண்டும்." என்றாள் அவள்.

"பேச்சா? போச்சுடா மூடையே கெடுக்கிறாயேடா!

கட்டாயமாய்ப் பேசித்தான் ஆக வேண்டுமா?" என்று கெஞ்சலும் கொஞ்சலுமாக வித்யாதரன் கேட்டான்.

"ஆமாம், பேசித்தான் ஆகவேண்டும்" என்றாள் அவள் பிடிவாதமான குரலில்.

"ஓ.கே.! என்று பெருமூச்சு விட்டான் அவன். கட்டிலில், சப்பணமிட்டு அமர்ந்து கொண்டு," சொல்லு என்ன பேச வேண்டும்?" என்று கேட்டான்.

என்ன சொல்லுவது? சற்றுத் திகைத்து விட்டு, ஏதாவது பேசுவது. கணவன் மனைவி என்றால் சும்மா, ஏதாவது பேசிக் கொண்டிருக்க மாட்டார்களா?" என்று வினவினாள் அவள்,.

முன்பெல்லாம், வெளியே செல்லும்போது இது நடந்தது, திரும்பி வரும் போது அது நடந்தது, அலுவலகத்தில் ஓர் அதிகப் பிரசங்கியை முட்டாளடித்தது- இப்படி எத்தனை சொல்லுவான்! இப்போது இவை எல்லாவற்றையும் நண்பனிடம் கொட்டியாகிறது போல!.

வெறுப்பை முகத்தில் காட்டிக்கொள்ளாமல், "நண்பன், நண்பன் என்று எல்லாவற்றையும் அவரிடமே கொட்டி விடுகிறீர்கள், இங்கே , வீட்டுக்கு வந்தால் மனைவியிடம் பேச விஷயமே கிடைப்பது இல்லை, அப்படித்தானே?" என்று சற்றுக் கொஞ்சலாகக் கேட்டு, ஓரக்கண்ணால் கணவன் முகத்தை நோக்கினாள்.

வித்யாதரனின் உணர்ச்சியற்ற பார்வை ஓரிரு கணங்கள் மாதங்கியின் முகத்தில் கூர்மையுடன் படிந்தன. "சில-சில என்ன, எல்லாப் பெண்களுக்குமே கணவன் தன்னைத்தவிர, வேறு யாரிடம் பேசினாலும் பிடிக்காது. அதில், ஆண்பெண் பேதமே கிடையாது. கணவனுக்கு எல்லாமே தானாக இருக்க வேண்டும் என்று நினைப்பது. நீயும், அந்த ரகம் தான் என்று இப்போது தெரிகிறது." என்றான், சிறு வெறுப்புகலந்த குரலில்.

நீலநாராயணனைப்பற்றிக் கவனத்துடன் பேச வேண்டும் என்பதை மறந்ததற்காகத் தனக்கே மனதுள் ஒரு குட்டுக் கொடுத்துக் கொண்டாள், மாதங்கி. அவனைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கக் கூடாது. அவனைக் குறிப்பிட்டிராவிட்டால் கணவன் இப்படி எகிறியிருக்க மாட்டான்.

குடும்பத்துக்கு வெளியே உள்ள ஒருவனால், தங்களுக்-குள் தகராறு வரும்படி விடக்கூடாது என்றெண்ணிய-வளாய், இலகுவான குரலில், "அப்படித்தானே-எல்லாம் தானாக... அதாவது நண்பனாக, ஆசிரியனாக, தாயாக, தாசியாக என்று எல்லாமே, தானாக மனைவி இருக்க வேண்டுமென்றுதானே அந்தக் காலத்திலிருந்து, சொல்லி வந்திருக்கிறார்கள்!" என்று கூறி லேசாகச் சிரித்தாள் அவள்.

கணம் தயங்காமல் அவனிடமிருந்து பதில் வந்தது. அதற்காக, எல்லாமே அவள் மட்டுமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது பேராசை. அத்தோடு, அதற்கான தகுதிகளும் அந்த மனைவிக்கும் இருக்க வேண்டும் அல்லவா?" என்று உதட்டைப் பிதுக்கினான்.

பொறுமையிழந்து, "அதாவது, அந்தமாதிரித் தகுதிகள் எதுவும் எனக்குஇல்லை என்கிறீர்களா?" என ஆத்திரமாகக் கேட்டு விட்டாள் அவள்.

அப்போதும், "புரிந்து கொண்டால் சரி" என்று, வித்யாதரன் தோளைக் குலுக்கவும், மாதங்கிக்குப் பொங்கி விட்டது.

"அப்படித் தகுதியே இல்லாத ஒருத்தியை, ஏன், தேடிவந்து திருமணம் செய்து கொண்டீர்கள் என்று தெரிய வில்லையே." என்று கோபமாகக் கேட்டாள்.

அப்போதும் அவன் அலட்டிக் கொள்ளாமலே பதிலிறுத்தான். "அதுதான், முன்பே சொல்லியிருக்கி-

றேனே, விட்டுக் கொடுத்து நடந்து கொள்வாய் என்றுதான். அப்படி என்ன பார்வை? ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு தேவை, ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சிறப்பு. பச்சை வண்ணம் வேண்டுவோர், அந்த நிறத்தில், துணி வாங்குவார்கள், சிவப்பு பிடித்தவர்கள், சென்னிறத்தில் எடுப்பார்கள். என் தேவையே உன் தனிச் சிறப்பு என்று நினைத்தேன், ஆனால், இப்போது ஏமாந்து விட்டேனோ என்று சந்தேகமாக இருக்கிறது."

காயப்படுத்தி விட்டு அவன் எளிதாகத் தூங்கிவிட்டான். ஆனால், வலியும், வேதனையும் அவளுக்குத்தானே? தூக்கமின்றித் தவித்தாள்.

கடந்த மூன்று மாதங்களாக மாதங்கி பட்ட பாடெல்லாம், விழல்நீர் என்பார்களே, அதுபோல வீண் வேலைதானோ? குடும்ப அமைதி, குடும்ப அமைதி என்றானே என்று, தன்மதிப்பை விட்டு, பாமாவுக்குத் தாளம் போட்டு, அவள் பிள்ளைகளுக்குச் சம்பளமில்லாத ஆயா வேலை பார்த்து-என்னதான் சின்னப் பிள்ளை-களோடு இருக்க மாதங்கிக்குப் பிடிக்கும் என்றாலும், அடுத்தவர் மக்களை, எவ்வளவு நேரம் தான் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? பரவாயில்லை, கோவையில், 'கிரஷ்' ஒன்றில் வேலை செய்த தோழி, வானதிக்கு அவ்வப்போது உதவியது' போல எண்ணிக்கொள்வோம் என்று நினைத்துச் செய்தது பாமாவின் வசதி கவனித்து, தன் வெளி வேலைகளை வைத்துக்கொண்டது... எல்...லாம் வீண்.

கணவனுக்கு வேண்டிய குடும்ப அமைதி காத்து, அவன் மனதில் இடம் பிடிக்க நினைத்தது, ஒரு பிரயோஜனமும் இல்லை.

ஒரேயடியாகப் பிரயோஜனமே இல்லை என்றும் சொல்லிவிட முடியாதுதான். மாமியாரின் பாசமும்,

கனிவும், கிடைத்திருக்கிதே. பெற்ற தாய் இறந்தபின் இன்று வரை, எண்ணி எண்ணி, ஏங்கிக்கொண்டிருந்த சுகம், இப்போது கிடைத்திருப்பது, மாதங்கியின், இந்த உழைப்பின் பயன்தானே? இந்த அன்புக்கு, இந்த விலை கொடுக்கலாம்தான், மேலேகூட.

ஒருவாறு, அமைதியுற்றவளாய், மாதங்கி, மெல்ல, உறங்கத் தொடங்கினாள்.

ஆனால், மறுநாள், நீலநாராயணன் டெலிஃபோன் செய்து, "ஹல்லோ, மாதங்கி, எப்படியிருக்கிறீர்கள்? வித்யாவுக்குச் செம மூடு ஏற்றி அனுப்பினேனே, இரவு, உன்னைக் கொஞ்சமாவது, தூங்க விட்டானா?" என்று கேட்டதும், அந்த நிம்மதி அடியோடு மறைந்து போயிற்று. எதிர்பாராமல், சேற்றை வாரித் தெளித்து விட்டாற்போல, அவள், உடம்பெல்லாம், அருவருப்பில் கூசிச் சிலிர்த்தது.

14

அனிச்சைச் செயல் போலத் தன்னையறியாமல் "சீ" என்றவள், ரிசீவரைப் பட்டென்று, கீழே போட்டாள். என்னதிது?

வித்யாதரனோடு வரும்போது, மரியாதைக்காகவும், கணவனுக்குப் பிரியமானவன் என்பதற்காகவும், மாதங்கி, நீலநாராயணனோடு ஒருசில வார்த்தைகள் பேசுவது, உண்டு.

முகமன், வழியனுப்பலோடு, என்ன சாப்பிடுகிறீர்கள், ஏது பிடிக்கும் என்பன போன்ற பொதுவான வார்த்தைகள். அதுபோக, நண்பர்கள், இருவரும், கலகலப்பாகப் பேசிக் கொண்டிருக்கும் போது, இடையில் எழுந்துபோனால், நன்றாயிராது, என்பதோடு, அப்படிப் போகக் கூடாது என்று, வித்யாதரனும் அவளிடம் கூறியிருந்ததால், அவர்களோடு கூட [illegible] கார்ந்திருப்பாள்.

பேச்சு, வெகு சுவாரசியமாக இருந்தால், கூடச் சேர்ந்து, ஓரிரு வார்த்தைகள் கூறுவதுண்டு.

ஆனால், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், தன் தனிப்பட்ட விஷயங்கள் பற்றி, நீலநாராயணன் முன்னிலையில், மாதங்கி பேசியது, கிடையாது, மற்றவர் பேச, இடம் கொடுத்ததும், கிடையாது.

எப்போதாவது, அது போன்ற பேச்சுத் தொடங்குகிற மாதிரித் தோன்றினாலும், உடனே, அதை, மாற்றி விடுவாள்.

அப்படியிருக்க, இன்று, எந்தத் தைரியத்தில், நீலநாராயணன், இதுபோல, அவளிடம், பேசினான்?

வேறு என்ன? வித்யாதரன் கொடுத்த தைரியமாகத்தான் இருக்க வேண்டும். சொந்த விஷயங்களையும், நண்பனிடம், அவன், சாதாரணமாகப் பேசியிருக்க வேண்டும். அவனுக்காகச் சொல்லத் தோன்றியிராவிட்டாலும், நீலன், துருவிக் கேட்டால், தன் அந்தரங்கங்களை மறைக்கவும், அவன், எண்ணியிருக்க மாட்டான். நண்பனிடம், அவனுக்கு, அவ்வளவு நம்பிக்கை, நம்பிக்கை இல்லாத-போதுதானே, ஒளிவுமறைவு எல்லாம்?

அன்று கூட, அவளைப்பற்றி நீலன் விசாரித்தான் என்று, வித்யாதர் கூறவில்லையா?

இப்படி, அவன் என்னவெல்லாம் கேட்டு, இவன் என்னவெல்லாம் சொன்னானோ?

நினைக்கும்போதே மாதங்கிக்கு, உள்ளம் கூசியது.

முன்தினம், 'நீலு சொன்ன கதை, மூடு...' என்றெல்லாம், வித்யாதரன் கூறியது நினைவு வர, அவளுக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது.

இந்தமாதிரி, மாதங்கி, வித்யாதரனைப்பற்றி, சுலேகா-விடம் சொன்னால், அவனுக்கு, எப்படி இருக்கும்?

அப்புறம், சுலேகாவை, அவனால், நிமிர்ந்து பார்க்க முடியுமா? இதை யோசியாமல் பேசுவதா?

கொதிப்பு, கொஞ்சம், கொஞ்சமாக அடங்க, மாதங்கியின் மனம், மற்ற விஷயங்களையும், கவனத்தில் எடுக்கத் தொடங்கியது.

நீலநாராயணன், அவளது மிகமிக அந்தரங்கமான ஒன்றைப் பற்றிச் சர்வசாதாரணமாக, அவளிடம் பேச முற்பட்டது மட்டுமின்றி, 'உன்னை' என்று அவளை, ஒருமையிலும் குறிப்பிட்டான்.

பேச்சும் பழக்கமும், அதிகரிக்க, அதிகரிக்க, அவ்வப்-போது, நீலநாராயணன், மாதங்கியை, ஒருமையில் குறிப்பதும், மெல்லமெல்லக் கூடித்தான் வந்திருக்கிறது. நேரடியாக, 'நீ' என்று, அவளை விளிக்காவிட்டாலும், மற்றபடி, மரியாதைப்பன்மை குறையத் தொடங்கி-விட்டிருப்பதை, மாதங்கியே அன்றுதான், முழுமையாக உணர்ந்தாள்.

திட்டமிட்டுச் செய்கிறான். ஆனால், ஏன்?

திருமணமாகிவிட்ட வித்யாதரன், தன்னந்தனியனாய் வாழும் தன்னைவிட்டுப் பிரிந்து விடுவானோ என்ற பயத்தில், அவன் மனைவியையும், தன் நட்பு வட்டத்துக்குள் இழுத்துக்கொள்ள முயற்சிக்கிறானா?

இது, மெய்யாயிருந்தால், பரிதாபம்தான். பாவம் நீலன்! என்று இரங்கத்தான் வேண்டும்.

ஆனால், இந்த விளக்கத்தை அவளால் நம்ப முடியவில்லை.

இதில், வேறே, ஏதோ, விஷயமிருக்கிறது, என்று வெகு நிச்சயமாக மாதங்கி எண்ணினாள். ஆனால், அது என்னவென்பதைத்தான் அப்போது அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இப்போது என்ன செய்வது?

உங்கள் நண்பன், நம் அந்தரங்கங்களைப் பற்றித் தரக்குறைவாகப் பேசினான் என்று, வித்யாதரனிடம் போய்ச் சொன்னால், அவன், அதை, நிச்சயமாய், நம்பப்போவது இல்லை.

அதிலும், நேற்று, இவ்வளவு வாக்குவாதங்களுக்குப் பிறகு, அவன், இந்த விஷயத்தில், அவளை, அடியோடு, நம்பப் போவது கிடையாது.

எனவே, இப்போதைக்கு, அவள், சும்மாதான் இருக்க வேண்டும். சும்மா என்றால், வெளிப்படையாக, எதையும் செய்யாதிருத்தல் மட்டுமே. உள்ளே, மிகுந்த கவனத்துடன், நீலநாராயணனின் செயல்களை, உற்று நோக்கியவாறே இருக்க வேண்டும். அதுவும், வெளியே, எதையும் காட்டிக் கொள்ளாமல்.

அப்படிக் கவனித்தபோதுதான், நீலநாராயணனின் பார்வையில் இருந்த வேறுபாட்டை, மாதங்கி கண்டுபிடித்தாள்.

வித்யாதர் கோபப் பட்டால் முகம் இறுகும். ஆனால், சிரிக்கும் போது, கூடச்சேர்ந்து சிரிக்கத் தூண்டும் வண்ணம், அவன் கண்களிலும் அந்தச் சிரிப்பு இருக்கும். நீலநாராயணனின் சிரிப்பு, அவன் கண்களை எட்டவே இல்லை.

மாறாக, அவன் பார்வையில் எப்போதும் ஒரு கவனம் மட்டும் இருப்பதை மாதங்கி கவனித்தாள்.

நீலன், என்ன செய்த போதும், அதற்கு மற்றவர்களின் பிரதிபலிப்பை, அவன் பார்வை அளவிட்டுக் கொண்டே இருந்தது. மற்றவர்கள், ஒருவருக்கொருவர் பேசும்-போதுகூட அப்படித்தான்.

ஏன்?

என்னேரமும், ஒரு பறவையைப் போலச் சுற்றிலும், இங்கும், அங்குமாகக் கவனம் செலுத்திக் கொண்டே, இருக்கிறானே எதற்காக?

இயல்பாக வாழ்வை அனுபவியாமல், எதற்காக, இந்த இறுக்கம்?

என்னதான் யோசித்தும், நீலனின் நடத்தைக்கான காரணத்தை மாதங்கியால் கண்டு கொள்ளவே, முடியவில்லை.

நட்பின் எல்லையைத் தாண்டி, நண்பனின் சொந்த வாழ்வுக்குள் மூக்கை நீட்டும் இவனது குறிக்கோள் என்னவாக இருக்கும்?

அந்த நண்பனின் சொந்த வாழ்வு, அவளது சொந்த வாழ்வுமாக இருந்ததால், மாதங்கி சற்றுக் கவலை-யுடனேயே, நீலநாராயணனைக் கவனித்து வந்தாள்.

வீட்டிற்குக் கணவனோடு அவன் வரும்போது, முடிந்த அளவு கூடவே இருந்தாள். மற்றபடியும், வித்யாதர், அவனுடைய நண்பனோடு கழித்த நேரம் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள முயன்றாள். பின்னொரு காலத்தில் இதுவும், அவளை, அவள் கணவன் வெறுத்து ஒதுக்க ஒரு காரணமாகப் போகிறது என்பது தெரிந்திருந்தால், நீலனை அவள் நினைவில் கூட ஒதுக்கித் தள்ளிவிட்டிருப்பாள்.

பொதுவாக, வித்யாதரன், உம்மணாமூஞ்சி இல்லை. ஒருநாள் கோபத்துக்கு ஒன்பது நாள் முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டிருப்பவனும் அல்ல. அன்றையக் கோபம் அன்றோடு தீர்ந்துவிட மறுநாள் இயல்பான உற்சாகத்தோடு பழகத்தொடங்கி விடுவான். எனவே, மாதங்கியும், கணவன், பழசை மறந்துவிட்டான் என்றெண்ணி, நிம்மதியாக இருக்க முடிந்தது.

ஆனால், பிரச்சனைகளை, நாள் கணக்கில், கொண்டு செல்லாவிடினும், வித்யாதர், அதை, அடியோடு மறக்கிறவன் அல்ல. அவன் வழியில் அதை அலசி ஆராய்ந்து, ஒரு முடிவுக்கு வந்து, அதை அப்படியே உள்ளே பதிய வைத்துக் கொள்ளுவான். அந்தக் கருத்தை, அவன் லேசில், மாற்றிக் கொள்கிறவனும் அல்ல.

முதலிலேயே, வித்யாதரனுக்கு, நீலனை, மாதங்கி வெறுக்கிறாள் என்றோர் சந்தேகம் தோன்றியிருந்தது. அப்படி இல்லாமல் இருக்க வேண்டும் என்கிற ஆவலும் இருந்த போதும், அந்த ஆவலே மெய் என்பதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து, அவ்வப்போது சந்தோஷப்பட்ட போதும், அடிப்படை சந்தேகம், அப்படியேதான் இருந்தது.

அவனுக்கு, இயல்பாகவே பெண்களிடம் இருந்த நம்பிக்கையின்மையினால், 'இம்'மெனுமுன், அவனது சந்தேகமே தலை தூக்கிவிடும். கணவன், மனைவிக்குள் கொஞ்சம் புகையும். அது வெடிக்குமுன், மாதங்கி சமாளித்துக் கொள்வாள். அரும்பாடு பட்டுப், பழைய நிலையைக் கொண்டு வருவாள்.

இந்தமாதிரிப் புகைச்சல்களின் காரணம், கணவன் மனைவிக்கிடையே, சச்சரவைக் கிளப்புவதே நீலநாராயணன்தானோ என்கிற சந்தேகம் மாதங்கிக்குத் தோன்றி, வலுப்பெற்றுக்கொண்டே வந்தது.

வித்யாதரனின் முன்னிலையில், 'சிஸ்டர், சிஸ்டர்' என்று மரியாதை தவறாமல் பேசும் நீலன், நண்பன் எதற்கேனும் எழுந்து அப்புறம் சென்றால், ஒருமையில் விளித்தான்.

இதைக் குற்றமென்று வித்யாதரனிடம் சொல்வது ஒருவகையில், அசட்டுத்தனமாகக் கூடத் தோன்றும். ஏனெனில், வித்யாதரே, 'மாதங்கி, உன்னை விடச்

சின்னவள். சும்மா பெயர் சொல்லிக்கூப்பிடு.' என்று அவள் முன்னிலையிலேயே, அன்புத் தோழனுக்கு, அனுமதி வழங்கியும் இருக்கிறான், நீலநாராயணன், 'மற்றவர்களுக்கு அது சரியாகப் படாது' என்று மறுத்துமிருக்கிறான்.

அனுமதிக்கப்பட்ட ஒன்றைச் செய்தானென்று எப்படிக் குற்றம் சாட்டுவது?

ஒரொருசமயங்களில், முகம் கழுவிவிட்டோ, தாயிடம் ஏதாவது பேசி விட்டோ, வித்யாதரன், திரும்பி வரும் போது, ஒன்று, மற்றவன் முகம் சோகமாக இருக்கும், அல்லது, திகைப்பும், கவலையுமாக உட்கார்ந்திருப்பான் முன்னவன், ஏனென்று கேட்டால், பேச்சை மாற்றுவான், அல்ல, ஒன்றுமே இல்லை என்று ஒரேயடியாக மறுப்பான்.

விஷயம் அத்தோடு நில்லாது. நீலனைக் கொண்டு-விட்டுவிட்டு வரும் போது, அல்லது மறுநாள், சிநேகிதனோடு மாதங்கி சரியாகப் பேச வில்லை என்று, வித்யாதர், மனைவியை வறுத்தெடுப்பான்.

எதற்கு இந்த வம்பு என்று, அவளும் வித்யாதரனோடு சென்று விட்டால், நீலனை, அந்நியனாக நடத்துவதாகப் புகார் வரும்.

இப்படிப் பல நிகழ்ச்சிகளின் பின், கணவனுக்கும் தனக்கும் இடையே, நீலன் வேண்டுமென்றே, வெறுப்பேற்ற முயற்சிக்கிறான், என்ற முடிவுக்கு மாதங்கி வந்தாள். முழு நிச்சயமான முடிவு.

ஆனால், இது அவளுக்குமட்டும் தெரிந்து என்ன பயன்?

வித்யாதரனுக்கு இந்த உண்மையைத் தெரிய வைக்க, மாதங்கி, எவ்வளவு முயன்றும், ஒன்றும், பயனில்லாமல் போயிற்று.

அந்தப் பெண் மாலியினால் தனக்கு நேர்ந்த இழப்பு

எவ்வளவு பெரிது என்பதை, மாதங்கி முழுமையாக உணர்ந்தது, அப்போதுதான்.

மனைவி ஒரு பெண் என்பதாலேயே, அவளிடமிருந்து வரும் எந்த ஒரு புகாரையும், வித்யாதரன் நம்பத் தயாராக இல்லை. அதிலும், நண்பனைக் குற்றம் சாட்டி, அவள் ஒரு வார்த்தை பேசினாலும், அதைச் சகிப்பதாகவும் இல்லை.

இதற்கு, எங்கே போய் முட்டிக் கொள்வது?

அலுத்துப்போனாள் மாதங்கி.

சரி, சும்மா பொறுத்துப் போய் விடலாம், என்று இருப்பதற்கும் வழியின்றி, நாளுக்குநாள் நீலநாராயணனின் தொல்லை அதிகரித்துக்கொண்டே போயிற்று.

என்ன செய்வது என்று தவித்தவளுக்கு, மாமியாரிடம் சொல்லிப் பார்க்கலாமா, என்று ஒரு தரம் தோன்றியது. ஆனால், மாமியாரே, பல விஷயங்களில், வித்யாதரனிடம், ஆலோசனை கேட்பவள். அப்படிக், கோகிலமே, மகனைக் கூப்பிட்டு, ஏதாவது சொன்னாலும், 'உங்களுக்கு ஒன்றும் தெரியாதம்மா' என்று அவள் வாயை மூடி விடக்கூடியவன் அவளுடைய இளைய மகன்.

மாமனார், இதற்கெல்லாம், அப்பாற் பட்டவர். இந்தமாதிரி விவகாரங்களோடு, யாரும், அவரிடம் போய் நிற்பதில்லை. மேலும், நிரூபிக்கக் கூடிய, அதே சமயம் தீவிரமான ஏந்தக் குற்றச் சாட்டை, அவர் முன் கொண்டுபோய் வைப்பது?

மாதங்கி, செய்கையற்றுத் தவியாய்த் தவித்துக்கொண்டு இருந்தபோது, நீலநாராயணனே, நல்லதொரு வாய்ப்பை. அவளுக்கு நல்கினான்.

15

எவ்வளவோ முயன்றும், நீலநாராயணனிடம், கணவன், கொண்டிருந்த பிரியத்தையோ, மதிப்பையோ, ஓர் எள்ளளவு குறைக்கக் கூட, மாதங்கியால், முடியவே இல்லை.

அவள் கூறுவதை, வித்யாதரன், காது கொடுத்துக் கேட்டாலல்லவா, கொஞ்சமாவது, அது, அவனது கருத்தை எட்டுவதற்கு?

ம்னைவி பேச்சைக் கவனிக்கக் கூடாது., அதிலும், நண்பனைக் பற்றிச் சொல்லவே, விடக்கூடாது என்று விரதம் இருப்பவனை, என்னதான் செய்ய முடியும்?

நீலநாராயணன் விஷயத்தில் மட்டும், ஒரு கோடி காட்டினால்கூடக் கண்டுபிடித்துக் கொள்வான், வித்யாதர். கண்டுபிடிப்பின் தொடர்ச்சி, அவளிடம் கோபமாகவும் முடியவே, மாதங்கி, கவலையுற்றாள்.

ஒரு நல்ல கணவன் மனைவிக்கு இடையே இருக்கவேண்டிய ஒருமனத்தன்மை, தங்களுக்குள் முழுமையாக இல்லையே என்று, சும்மாவே, வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், மேலே பிளவும் நேர்ந்துவிடுமோ, என்று மாதங்கி, கலங்கிப் போனாள்.

அப்படிப் பிளவு நேர்ந்தால், அவளைத் தாங்கித் தடுக்க, அவளுக்கு, யாரும் இல்லை என்பது, வேறு விஷயம். ஆனால், அதுபோல எதுவும் நேர்ந்தால், அவளால், தாங்கிக் கொள்ள முடியாது என்பதால், அந்த மாதிரி நிலையைத் தவிர்க்கத் தன்னால் ஆனதைச் செய்தாள்.

ஓர் ஐந்து நிமிடம் கூட, நீலநாராயணனோடு தனியாக உட்கார நேர்வதைத் தவிர்த்தாள், அதாவது, நண்பனை, உட்காரச் செய்துவிட்டு, வித்யாதர், முகம் கழுவச்

சென்றாலும், கணவனோடு, கூடவே போனாள். ஆனால், அதற்கும், கணவனிடம் கொஞ்சம் வாங்கிக் கட்ட வேண்டியிருந்தது.

அவளுக்கு மரியாதை தெரியவில்லையாம். வீட்டுக்கு வந்த விருந்தாளியைத் தனியே உட்கார வைத்துவிட்டுக் கணவனுக்கு வால்பிடித்துக் கொண்டு, அவன் பின்னோடு வந்துவிட்டாளாம். விருந்தோம்பல் என்றால், என்னவென்றே அவளுக்குத் தெரியவில்லையாம். அவளுடைய தாயார் இருந்திருந்தால், கற்றுக் கொடுத்திருப்பாளாம். விதி வசத்தால், அந்த வாய்ப்பு இல்லாமல் போன போதும், மாதங்கிக்கு, நல்ல மாமியார் கிடைத்திருப்பதால், அவர்களைப் பார்த்தாவது, அவள், இது போன்ற சமூகக் கடன்களைப் பற்றி அறிந்து கொண்டிருக்கலாமாம்.

திருமணமாகி, ஆறுமாதம்கூட ஆகியிராத கணவன், மனைவிக்கு இடையேபுகுந்து, கணவனை அட்டை மாதிரி ஒட்டிக்கொண்டு, இடையிடையே, அவனது ரத்தத்தையும் உறிஞ்சிக் கொண்டு இருப்பவனை, இந்த அளவு வீட்டுக்குள், வரவிடுவதே, பெரிய விஷயம், இதற்குமேல் விருந்து வேறு, ஓம்பவேண்டுமாமே. விருந்தோம்பலில், வீட்டினரைப் போலவே, விருந்தினருக்கும், சில கடமைகள் உண்டுதானே?

இந்த நியாயத்தை, அப்படியே எடுத்துச்சொன்னால், வித்யாதர் எரிச்சல் படுவான் என்பதால், சிரித்துக் கொண்டே, "என்ன, நீங்கள்? உங்கள் நண்பரை, விருந்தாளியாக்கி, அன்னியப் படுத்துகிறீர்கள்? அவருக்குத் தெரிந்தால், அப்புறம், 'விருந்தும், மருந்தும் மூன்று நாள்' என்று, மூன்று நாட்களுக்குமேல் நம் வீட்டுக்கு வருவதை நிறுத்திக் கொண்டுவிடப் போகிறார்." என்றாள், கிண்டலாக.

அந்த ஒட்டுண்ணி அவ்வளவு லேசில் விட்டுவிடுமா, என்றது, அவள் மனம்.

சற்றே முகம்வாட, "இரண்டுமே, நீலு விஷயத்தில், சரியாகாது, மாதங்கி. வெறும் மூன்று நாள் மருந்தோடு, தீருகிற நோயும் அவனுக்கு வரவில்லை, நம் வீட்டைப் பொறுத்தவரையில், அவன், வெறும் மூன்று நாள் விருந்தாளியும் அல்ல." என்ற கணவனின் பதில், மாதங்கி எதிர்பாராதது அல்ல. "தினமுமே, வந்தாலும்கூட, நீ, அவனை, ஒரு மதிப்புக்குரிய விருந்தாளியாகத்தான், நட்த்தவேண்டும்." என்றதையும்தான்.

ஆயினும், 'அவருக்காகத்தான், சிற்றுண்டி எடுத்துக் கொண்டிருக்கிறேன்,' 'உங்கள் நண்பருக்காகத்தான், காஃபி தயாரித்துக் கொண்டிருக்கிறேன்' என்று, ஏதாவது சொல்லி, நீலனுடன், பேசவேண்டிய சந்தர்ப்பங்களைத் தவிர்த்தாள். பிறகும், கொண்டுபோய்க் கொடுக்கும் வேலையைப் பணியாட்களிடம் தள்ளிவிட்டு, 'சின்ன-வளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி, உங்கள் அண்ணி அழைத்தார்கள்.' 'உணவுமெனு பற்றித் திட்டமிட, உங்கள் அம்மா கூப்பிட்டார்கள்.' என்று, அவர்களிடம் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அதன் பயனாக, "என்னப்பா, 'சிஸ்டர்' ஊரில்தான் இருக்கிறார்களா? கண்ணிலேயே காணவில்லையே?" நீலநாராயணன் கேட்டு, "உனக்குத்தான், நீலு, சாப்பிட, குடிக்க என்று, தயார்பண்ணி அனுப்பி இருக்கிறாள்." என்று, வித்யாரன் பதில் கூறுகிற சம்பவங்கள், அடிக்கடி, நிகழ்ந்தன.

"பரவாயில்லையே, இந்த அனாதையிடம், 'சிஸ்ட'ருக்கு, இவ்வளவு கருணை இருக்கிறதே. ஆச்சரியம்தான். "என்ற மறைமுகக் குத்தலுடன், நீலன், திருப்தி அடைய வேண்டியிருந்தது.

ஆச்சரிப்படத் தக்க விதமாக, வித்யாதரன், இந்தக் குத்தலைக் கண்டு பிடிக்கவே இல்லை., நீலனைப் பற்றி, மாதங்கி, லேசாகக் குறிப்புக் காட்டுமுன், அப்படிக் குதிக்கிறான்.

நண்பனிடம் உள்ள நம்பிக்கையும் அப்படி., மனைவி மீது இருந்த ஐயப்பாடும், அப்படி.

அடுத்த அறையிலிருந்து, அவர்கள் அறியாமல், நண்பர்களின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த மாதங்கிக்கு, அது, வருத்தமே என்றபோதும், அவளுக்காக, நண்பனிடம் தாங்கிப் பேசினான் என்பதில், உள்ளூரத் துள்ளல்தான். ஏதோ, முன்னேற்றம் தானே?

அந்தத் துள்ளலுடனேயே, தன் அடுத்த முயற்சியைத் தொடங்கினாள். எந்நேரமும் பார்வைக்குப் பளிச் சென்று தன் தோற்றம் இருக்கும்படி பார்த்துக் கொண்டாள்.

எப்போதுமே, வித்யாதரனுக்கு, இல்லற உறவில், சற்று அதிகப்படி ஆர்வம் தான்.. மாதங்கிக்குத்தான், இதற்கு மட்டும் தான் மனைவியா, என்று, மனம் முரண்டும். இப்போது, அந்த மாதிரிச் சிணுக்கத்தை எல்லாம், மூட்டைகட்டி வைத்துவிட்டு, கணவனோடு, மிகவும், இணக்கமாக நடந்து கொண்டாள்.

அது, ஓரளவு பயன் தந்தது என்றே, சொல்லலாம். நீலநாராயணன் திரும்பி வந்த பிறகு, தன் ஓய்வு நேரம் முழுவதையும், நண்பனோடேயே கழித்துக் கொண்டிருந்த வித்யாதரனுக்கு, இப்போது, மனைவி நினைவும், அடிக்கடி வந்தது, அதன் விளைவாக, அவன், அவளோடு கழிக்கும் நேரமும், அதிகரித்தது.

சிலசமயம், இதுபற்றி எண்ணுகையில், மாதங்கி, அவமானமாகவும், அருவருப்பாகவும் கூட உணர்வது உண்டு. ஆனால், அவள் போராடுவது, அவளது குடும்ப

வாழ்வுக்காக. இந்தப் போராட்டத்தில், அவள், மான அவமானம் பார்த்துச் சும்மா உட்கார்ந்துகொண்டு இருக்கமுடியாது. அவளது வாழ்வை அழிக்க முயற்சிப்பவனை, எந்த வழியிலேனும், அவள், விலக்கியே தீரவேண்டும். நேர்வழி, குறுக்கு வழி எல்லாம் பார்க்கிற நிலையிலும், அவள் இல்லை.

மாதங்கி, கணக்கிடாது விட்டது, ஒன்று, இருந்தது.

நீலனின் விழிப்புணர்ச்சி., விடாமுயற்சி.

மாதங்கி, தன் குறிக்கோளுக்காக ஒரு வழியில் முன்னேறினாள் என்றால், நீலநாராயணன், தன் இலக்கை நோக்கி, இன்னொரு வழியில், ஒவ்வோர் எட்டாக, எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

'தனியாக உட்கார்ந்திருக்க ஒருமாதிரி இருக்கிறதுப்பா.' 'உன்னோடேயே வருகிறேனே,' 'உன் வீட்டை நான், சரியாகப் பார்த்ததே இல்லையே' என்ற, இன்னோரன்ன வார்த்தைகளால், வீட்டில், தாராளமாக நடமாடும் உரிமையை, வித்யாதரனிடமிருந்து பெற்றுக் கொண்டான்.

அப்போதும், அவன், வித்யாதர் புழங்கிய பகுதியிலேயே, சுற்றி வரவும், அவனால், மற்ற யாருக்கும், எந்தவிதப் பிரச்சினையும் இல்லாதிருக்கவே, அவனை யாரும், தடுக்கவுமில்லை. வித்யாதரனுடைய உயிர் நண்பன், என்பது வேறு, தனி 'லைசன்ஸ்' அவனுக்கு இருந்ததே.

ஒருநாள், தங்கள் தனியறைக்குள் இருந்து, வித்யாதரனோடு பேசியபடியே, நீலன், வெளிவருவது கண்டு, மாதங்கி, திகைத்துப் போனாள்.

வித்யா அறியாதவாறு, பார்வையில் சவாலுடன், அவளைக் கவனித்தது, வேறு.

இனி, இவன் அணுக முடியாத இடம் என்று, இந்த வீட்டில், எங்கே, இருக்கிறது? இவன் இருக்கும்

இடத்தைவிட்டு, விலகிவிட்டால் போதும் என்று இருந்தது கூட, இனி, முடியாதா? ஆனால், இவன், ஏன், இப்படி, அவளை நெருங்குகிறான்? அல்லது, விரட்டுகிறான்?

சண்டைக்காரன் காலில், விழுகிற கதையாக, அவனிடமே, நேரில், கேட்டு விடலாம் என்கிற எண்ணம், மாதங்கிக்குத் தோன்றியது, அப்போதுதான்.

ஆனால், அப்படிக் கேட்பதுகூட, நீலனுக்குத் திமிரை ஏற்றிவிடக்கூடும் என்று தோன்றிவிட, அந்த எண்ணத்தைக் கைவிட்டு, மாதங்கி, கணவனிடமே, தன் கவனத்தைச் செலுத்தினாள்.

கணவன் மனதில், உரிய இடம் கிடைத்துவிட்டால், அப்புறம், அடுத்தவர்களைப் பற்றி என்ன கவலை?

அவளது முயற்சிகளின் பலனாக, காலை வேளைகளில், வித்யாதர், வெளியே செல்வது, மெல்லக் குறைந்து, அடியோடு நின்றே போயிற்று.

'டென்னிஸ்' பயிற்சி, உடல்பயிற்சி என்று வெளியே செல்வதும், அதைத் தொடர்ந்து நீலனோடு அளவளாவுவதும் கூட.

"இல்லைப்பா. இன்று வரவில்லை... ம்ம்... உடல் பயிற்சிதானே? இங்கே, வீட்டைச் சுற்றியே, இருவருமாக ஓடிக் கொள்கிறோம்." என்று சொல்லிவிட்டு, 'ரிசீவரை' வித்யாதர் கீழே வைக்கவும், மாதங்கியின் உள்ளம் துள்ளியது. இப்போது, அந்தப் பக்கம், நீலனின் முகம் எப்படியிருக்கும் என்று, கற்பனையில் காண, அவளுக்கு, இன்னும் ஆனந்தமாக இருந்தது.

மனைவியிடம் திரும்பி, "உன்னால், நான் 'கொளுக் மொளுக்' கென்று தொந்தியும், தொப்பையுமாக அசிங்கமாகி விடப்போகிறேன், பார். நீலனுக்குக் கூட அதுதான் கவலை." என்றான்.

'இருக்காதா பின்னே' என்று எக்களிப்புடன் எண்ணியவாறு, "அதெப்படி, அசிங்கமாக ஆவீர்களாம்? நீங்கள் எப்போதும், ஆண்சிங்கமாகத்தான் இருப்பீர்கள். வாருங்கள், ஓடிவிட்டு வரலாம்." என்று, அவனை அழைத்தாள், அவள்.

எப்போதுமே, கணவனின் உடல் ஆரோக்கியத்திலும், மாதங்கி கவனமாகத்தான் இருந்தாள். வெளியே சென்றுதான் உடல்பயிற்சி செய்தாக வேண்டும் என்பதில்லையே? வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓடினால், அதுவும், உடலுக்குப் பயிற்சிதானே? இவ்வளவு இடத்தை வளைத்துப் போட்டு, இவ்வளவு பெரிதாக, வீட்டை, எதற்காகக் கட்டி வைத்திருக்கிறார்களாம்?

"ஓட வந்தால், என்ன தருவாய்?" என்று, கண்சிமிட்டிக் கேட்டான், அவன்.

"கேட்டது, கிடைக்கும்" என்றாள் அவள், ஒரு மையல் பார்வையுடன்.

"ப்ராமிஸ்?" என்று கையை நீட்டினான். அவன்.

அவன் கையில், தன் கையை வைத்து, "ப்ராமிஸ்." என்றாள், அவள்.

ஓர் அரைமணி நேரம் நன்றாக ஓடிக் களைத்து, கொடிமல்லிகைப் பந்தலின் அடியில், சற்று நேரம் அமர்ந்து, ஓய்வெடுத்துத் திரும்பியதும், வித்யாதர், அவளது உறுதிமொழியை நினைவு படுத்தி அழைக்க, அவளும், மறுப்பின்றி, அவனிடம் சென்றாள்.

ஆழ்ந்த அந்த அணைப்பில், ஒரு கட்டத்தில், திடுமென, ஏதோ தோன்ற, மாதங்கி, விழிஉயர்த்தி நோக்க, அங்கே, அவன், நின்றான், நீலநாராயணன்.

எவ்வளவு நேரமாய் நிற்கிறான்?

மாதங்கி, கண்டுவிட்டதை அறிந்ததும், நீலன், திரும்பி நடந்தான்.

மனைவியின் ஈடுபாடின்மையை உணர்ந்து, "இதற்கு, நான், இந்தத் தூணையோ, ஒரு மரக்கட்டையையோ, கட்டிப் பிடித்திருக்கலாம்." என்று, வித்யாதர் எரிச்சலோடு விலகினான்.

அந்தக் கணத்தில் மாதங்கியின் திகைத்துக் கூசியிருந்த மூளைக்குள் மின்னல் வெட்டியது.

இந்தநேர இடையூறை, ஆண்மனம் தாங்காது. காரணம், நீலனென்று, காட்டிவிட்டால்? அத்தோடு, அவன் எவ்வளவு கீழ்த்தரமானவன் என்றும், உணர்த்தி விடலாமே?

"யா, யாரோ நின்று, பார்த்த மாதிரி, இருந்தது... உ.. உங்கள் நண்பர், திரும்பிப் போனார்..." சட்டென, அவளை ஒதுக்கி நிறுத்திவிட்டு, வேகமாக, வித்யாதரன், வெளியே சென்றான்.

உள்ளூர முறுவலித்தபடி, மாதங்கி, கணவனைப் பின்தொடர்ந்தாள்.

மாடிப்படியிறங்கி வெளியே ஓடிக்கொண்டிருக்கும் நீலனை, எப்படியும், வித்யாதரன் பிடித்துவிடுவான். பிறகு...

16

எப்படியும், படுக்கையறை வரை வந்து, பார்த்துக்-கொண்டு நின்றதற்கு, நீலநாராயணனால், எந்த விதமான விளக்கமும், கூறவே முடியாது. என்னதான், உயிர் நண்பன் என்றாலும், அவனது, இந்த அநாகரீகத்தை, வித்யாவால், சகித்துக் கொள்ள முடியாது. முடியவே முடியாது.

எனவே, இனி, அவன் வாழ்விலிருந்து, நீலனை, விலக்கியே தீருவான்.

நிம்மதியும், ஆறுதலுமான பல, சுகமான கற்பனை-களோடு, மாதங்கி, அறையைவிட்டு, வெளியே வந்து, மெதுவாக எட்டிப் பார்த்தாள், மிகுந்த ஆவலோடு.

கீழே, வித்யாதரன் வந்து அருகில் நிற்பது கூடத் தெரியாதவன் போலக் கவிழ்ந்த தலை நிமிராமல், பையிலிருந்த புத்தகத்துக்கு உள்ளேயே புதைந்து போய் விடுவான் போல், நீலநாராயணன், உட்கார்ந்திருந்தான்.

பேச மனமற்று, வித்யாதரன், தொண்டையைக் கனைத்ததே, ஓர் உறுமலைப் போலத்தான், இருந்தது.

திடுக்கிட்டாற் போல, லேசான ஓர் உடல்குலுங்கலுடன், நீலன், நிமிர்ந்து பார்த்தான். "ஓ, நீயா, வித்யா?" என்றவன், புத்தகத்தில், அவன் படித்துக்கொண்டிருந்த பக்கத்துக்கு, அடையாளம் வைத்துப் புத்தகத்தை, மூடி வைத்தான்.

மீண்டும் நண்பனை ஏறிட்டு, "ரொம்ரொம்ப அருமையான புத்தகம்ப்பா., நான், எப்போதே வந்து விட்டேன், தெரியுமா? டீபாயில், புத்தகம் இருந்தது. நீ வரும் வரை, புரட்டிப் பார்க்கலாம் என்று, அதை எடுத்ததுதான், தெரியும்., "என்றவன், கையைத் திருப்பிப் பார்த்துவிட்டு, "முழுசாக, இருபது நிமிடங்கள். நான், அசையவே, இல்லையே. மிகவும் பிரமாதம்பா, நீயும், ஒரு தரமாவது, இதைப் படித்துப் பார்." என்று புத்தகத்துக்காக, சிபாரிசு வேறு செய்தான்.

அவள் நினைத்தபடி, சினம், சீற்றம், எதுவும் காட்டாமல் வித்யாதரன், மெல்ல அமரவும், மாதங்கி, கலங்கிப் போனாள்.

'இல்லை, இந்த ஆள், இந்தப் புத்தகத்தைப் படிக்கவே இல்லை. சும்மா 'ரீல்' விடுகிறான், படித்த கதையைப் பற்றி, ஏதாவது கேள்வி கேட்டால், மாட்டிக் கொள்ளுவான்., கேட்டுப் பாருங்கள்., 'ப்ளீஸ்' வித்யா என்று கத்திக் கூப்பாடு

போடவேண்டும் என்று, மாதங்கியின் மனம், தவியாய்த் தவித்தது.

ஆனால், ஒரு வார்த்தை சொல்லக் கூட, அவளுக்குத் தைரியம் வரவில்லை.

ஒருவேளை, வித்யா, மறுத்து, அவளை அதட்டி, அடக்க ஏதேனும் சொன்னாலென்றால், நீலன் முன்னிலையில், மாதங்கிக்கு, அவமானம் ஆகிவிடாதா?

அத்தோடு. அவளுக்கு, இப்போது, இன்னொரு சந்தேகமும் தோன்றிவிட்டது.

ஒருவாறு துணிந்து, அவள், கணவனிடம் சொல்லி, அதிசயமாய் அவனும், அதை மதித்து நீலனிடம் குறுக்கு விசாரணை செய்தான் என்றே வைத்துக் கொண்டாலும், நீலன் முன்னரே, அந்த நாவலைப் படித்திருந்தால்? அப்படி, அது, நீலன், ஏற்கனவே படித்த கதையாக இருந்து, வித்யாதர் கேட்கும் கேள்விகளுக்கு, அவன், டாண்டான் என்று, பதிலைச் சொல்லித் தொலைத்துவிட்டால், 'சாண் ஏறி முழம் சறுக்கிய' கதையாகிவிடுமே.

இப்போதே, மாதங்கிக்கு, கதை, அப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறதோ என்ற அச்சம், தோன்றத் தொடங்கியிருந்தது.

கூசாமல் புளுகும் அந்தப் பாவி, அதைத் தானே, செய்து கொண்டிருக்கிறான்.

ஆனால், வித்யாதரன், இவ்வளவு எளிதாக ஏமாந்து விடுவானா?

'இல்லை' என்றது, அவன், அடுத்துக் கேட்ட கேள்வி. "அப்படி என்னப்பா இருக்கிறது. இந்தக் கதையில்?"

தணிந்துவிட்ட குரல்தான் என்றாலும், அவன், கேட்காமல் விட்டுவிடவில்லை.

"பெண்களைப் பற்றியது, வித்யா." என்று உற்காகத்துடன், தொடங்கினான், நீலன். "அவர்களைச் சட்டையுரித்து, தோலுரித்து, அப்படியே அப்பட்டமாய்ப் புட்டு வைக்கிறதுப்பா. மனதில் ஒருவனை வைத்துக்கொண்டே, இன்னொருவனோடு, எப்படி முழுமையாகக் காதலில் ஈடுபடுகிறார்கள்., பழி வாங்குவதற்காக, வயிற்றுப் பிள்ளையைக்கூட, எவ்வளவு குரூரமாகக் கொல்லுகிறார்கள்...."

கடவுளே!

உள்ளே போய்த் தலையில் கைவைத்துக் கொண்டு, மாதங்கி, சோர்வுடன் உட்கார்ந்தாள்.

இருந்திருந்து, இந்த நாவலா, அவன் கையில் அகப்பட வேண்டும்?

ஹாலில் உள்ள டீபாயின் கீழ்த்தட்டு, ஒரு புத்தக அலமாரியின் அமைப்பைக் கொண்டது. படித்து முடித்து, மீண்டும் 'லைப்ரரி'க்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியவை, மற்றும், வீட்டினர் படித்துவிட்டு அங்கங்கே வைத்த புத்தகங்கள் எல்லாம், இந்த டீபாய்க் கீழ்த் தட்டில்தான், அடுக்கப் பட்டிருக்கும்.

அரக்கப் பறக்க ஓடிவந்து உட்கார்ந்தவன், என்ன புத்தகம் என்று தேடிப் பார்த்து எடுத்திருக்க மாட்டான். ஏதோ ஒன்று, என்று, அவசரமாய் எடுத்தவன் கையில், இந்தப் புத்தகம் - அவன் ஏற்கனவே படித்த இந்தப் புத்தகம் கிடைத்தது. மாதங்கியின் கெட்ட நேரம். அவ்வளவுதான், மகா கெட்ட நேரம்.

அரவம் உணர்ந்து, திரும்பிப் பார்த்தாள்.

வித்யாதரன்தான்.

லேசான புருவச் சுளிப்புதான். ஆனால், கண்கள்தான்,

பளிங்கு போலக் கடுமை என்பார்களே, அதுபோலக் கல்லாக இருந்தன.

"என்ன இது?" என்றான், இறுகிய குரலில். "அங்கே ஒருவன் வந்து, அரைமணி நேரமாய் உட்காந்திருக்கிறான், வந்தவனுக்கு ஒருவாய் தண்ணீர் கூடக் கொடுக்காமல், மகாராணி, இங்கே வந்து, சொகுசாக உட்கார்ந்து விட்டாயே? இந்த வீட்டுப் பண்பாடு, கொஞ்சம் கூடவா, உடம்பில் ஏறவில்லை?" என்றான், கடுமையாக.

இந்தக் கடுமை, நீலனுக்குக் காஃபி, சிற்றுண்டி கொடுக்காததற்காக மட்டுமல்ல.

அவன்மீது குற்றம் சாட்டியதற்காகவும் தான். அவன் நிரூபிக்காத ஒன்று என்பதோடு, அவளது குற்றச்சாட்டே பொய் என்பதுபோலக் கிட்டத்தட்ட, நீலன் தெளிவுபடுத்தி விட்டதும்கூட. பாவீ பாதகா...

தவிப்பைக் கட்டுப் படுத்தி, "வித்யா, நான் சொன்னது எல்லாம் நீ...." என்றுதொடங்கியவளின் பேச்சைக் கை உயர்த்தி, அவள் கணவன் அடக்கினான்.

"உன் மெய், பொய்களைக் கேட்டுக் கொண்டிருக்க, இப்போது, எனக்கு நேரமில்லை. நான் கிளம்ப வேண்டும். நான், குளித்து முடிக்குமுன், சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்., எங்கள் இருவருக்கும் சேர்த்து" என்று கட்டளையுடன் குளியலறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

பேசக்கூட விடமாட்டேன் என்கிறானே என்ற வருத்தமும், இருந்திருந்தது, அந்தத் தரம் கெட்டவனைப் போய்க் கணவனுடன் உட்காரவைத்து, உணவு படைப்பதா, என்கிற அருவருப்பும், அதைத் தவிர்க்க முடியாத தவிப்புமாக, வேறு வழியின்றி, மாதங்கி எழுந்து சென்றாள்.

உணவின்போது, நீலநாராயணன், மாதங்கியிடம், மிகுந்த மரியாதை காட்டினான்.

தன்னால் வீண் தொல்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டான். எந்தப் பதார்த்தம் என்றாலும் மிகக் கொஞ்சம் போதும் என்றான். அந்த 'மிகக் கொஞ்ச'த்தை, அவள் எடுத்து வைத்தபோதும், மிக அதிகமாக நன்றி தெரிவித்தான்.

அவனது ஒவ்வொரு 'நன்றி'யின் போதும், 'பார்த்தாயா, இதுதான் பண்பு' என்று சொல்லாமல் சொன்னது, வித்யாதரனின் முகம்.

கடைசியாகக் கிளம்பும்போது, "அந்த 'சிட்னி ஷெல்டன்' புத்தகத்துக்கு, மிக்க நன்றி, மாதங்கி 'லைப்ரரி'யிலிருந்து. நீங்கள்தானே, அதை எடுத்துப் படித்துக்கொண்டு இருந்தீர்களாம். மிகமிக, அருமையான நாவல். கொஞ்சம், கடன் தந்தீர்கள் என்றால், இன்னும் ஒருதரம், படித்துவிட்டுத் திருப்பி விடுவேன். தயவு பண்ணித் தருகிறீர்களா, 'சிஸ்டர்?' என்று, அவளிடம், நீலன் கெஞ்சிக் கேட்டான்."

"அவ்வளவு பிடித்திருந்தால், புதிதாக ஒன்று, வாங்கி, வைத்துக் கொள்ள வேண்டியதுதானே?" என்றாள், அவள், எங்கோ கவனம் போலக் காட்டிக் கொண்டு.

"ஊகூகூம், எனக்குப் புதுப் புத்தக வாசனையே, பிடிக்காது. பழைய புத்தகம் என்றால், வைத்து, வைத்து, வாசனை பிடிப்பேன்." என்றான் நீலன்.

"இன்றைக்கு, இந்த நாவல் திருப்பிக் கொடுக்க வேண்டிய நாள்." என்றாள் மாதங்கி, மொட்டையாக.

"ச்சு அவன் தான் கேட்கிறானில்லையா? அந்த லெண்டிங்லைப்ரரிக்கு நீலன் திருப்பி தரும் நாள்வரை, அபராதம் கட்டிவிடு, அல்லது, புத்தகம் தொலைந்து போயிற்று என்று சொல்லி, அதன் விலையையே கொடுத்து விடு." என்று, வித்யாதரன் முடித்துவிடவே, அதற்குமேல், மாதங்கி, மவுனம் சாதித்தாள்.

இப்போது, நீலன் வித்யாதரனுக்கு நன்றி தெரிவித்தான். "எனக்காக, உன் மனைவியை, விட்டுக் கொடுக்க வைத்ததற்கு, மிக்க நன்றி, வித்தி." என்று, மேலும் கொஞ்சம், மாதங்கியின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான், அவன். 'வித்தி', அவள் கணவனை அழைக்கும் செல்லப் பெயர். அதுவும், ரொம்பவும், அந்தரங்கமான தருணங்-களில்.

விட்டுக் கொடுப்பதாமே? இருந்திருந்து இவனுக்கா?

உள்ளூரப் புகைந்தவளுக்கு, இதில், வேறு உள்ளர்த்தம் ஏதும் இருக்குமோ என்ற சந்தேகம் உண்டாயிற்று.

கிளம்புவதற்காகக் காரில் ஏறுமுன், நீலன் பார்த்த பார்வை, அவளது ஐயத்தை உறுதி செய்தது.

என்ன உள்ளர்த்தம்? அவளோடு மகிழ்வதைக் கூட விட்டுவிட்டு, வித்யா, தன்னோடு வந்துவிட்டான் என்று சொல்லிக் காட்டுகிறானா? கணவனைக் கவரும் அவளது முயற்சி முழுத் தோல்வி என்கிறானக்கும்?

இதை, இவன் சொல்லித்தான் மாதங்கி அறிய வேண்டுமாக்கும்?

அதுதான், தன் செய்கையாலேயே, வித்யாதரனே, தெளிவாகக் காட்டி விட்டானே. ஒரு வார்த்தை விளக்கு-வதற்குக் கூட, அவளை, அனுமதிக்கவில்லையே!.

ஆனால், வெறும் வைக்கோல்போர் நாய்த்தனம் தவிர, நீலனுக்கு இதில், என்ன லாபம்? 'நாய்நாய்' என்று தனக்குள்ளேயே திட்டுவது தவிர, அவளால், வேறு எதையும் செய்ய முடியவில்லை.

விஷயம், அத்தோடு, முடிந்து விடவில்லை.

அன்றைய இரவில், வித்யாதரனே, மனைவியை அழைத்து, இது பற்றிப் பேசினான்.

இந்த மாதிரிப் பொய்யெல்லாம், இனிமேல் சொல்லக் கூடாதாம். அவள் சொன்னதை ஏற்று, சற்றும் யோசியாமல், நீலனிடம் கேள்வி கேட்டதை நினைத்து, அவனுக்கு மிகவும் வேதனையாக இருக்கிறதாம். அதைவிட வேதனை, அவன் மனைவி, பொய் சொல்லியதாம்.

கடைசி முயற்சியாக, "வித்யா, நான் சொன்னது பொய்யில்லை, வித்யா. மெய்யாகவே, நீலன், அங்கே நின்று." என்று கூறத் தொடங்கியவளின் தோளை இறுகப் பற்றி, "போதும்" என்று உறுமினான், அவன். "இதற்கு மேல் நீலனைப்பற்றி நீ ஒரு வார்த்தை குறைவாகப் பேசினாலு அப்புறம் நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது, ஜாக்கிரதை?" என்று அதே உறுமல் குரலிலேயே அவளை எச்சரித்தான் அவன்.

மாதங்கி பிரமித்து நோக்கவும், அவளை விட்டு விலகிநின்று, ஒரு பெரிய மூச்சு எடுத்துக் கொண்டு, மேலே பேசினான். "இதோபார், காரணமின்றியே, சிலபேருக்குச் சிலபேரைப் பிடிக்கும்., அதேபோலப் பிடிக்காமலும் போகும். இப்போது, முதல் பார்வையிலேயே, உன்னைப் பிடித்துப்போய், நான் உன்னைத் திருமணமே செய்து கொண்டு விடவில்லையா? துரதிர்ஷ்ட வசமாக, உனக்கும், ஏனோ, நீலனைப் பிடிக்காமல் போயிருக்கிறது சரி., போகட்டும். அத்தோடு, அதைவிட்டு விடு. இந்தக் காரணத்துக்காக, நான், உன்னை, விலக்கி விடப் போவதில்லை. ஆனால் ஒன்று எனக்கும், அவனை வெறுக்கடிக்க வேண்டும் என்று முயற்சிக்காதே. அதற்காகப் பொய்யும், புளுகும் சொல்லிக் கொண்டு. சே. அதுதான், எனக்கு அருவருப்பாய் இருக்கிறது."

பொய்யும் புளுகும் அவள் சொன்னதாமா? என்ன அநியாயம்?

ஒன்று தோன்றவும், கணவனை நிமிர்ந்து நோக்கி, "ஒரு

விஷயம் யோசித்தீர்களா, வித்யா? நீலனை, நான் பார்த்திராவிட்டால், அவர் வந்தது, எனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

இதற்கு, இவன் என்ன விளக்கம் கொடுக்க முடியும்?

நம்பிக்கை, அவளுள் லேசாகத் தலை தூக்கும்போதே, "அவன் என்னைக் கூப்பிட்டது, உனக்குக் கேட்டிருக்கும். அவன்தான் இரண்டு, மூன்றுதரம் கூப்பிட்டானாமே." என்றான், வித்யாதரன்.

கூப்பிட்டானாமா? அதுவும், இரண்டு, மூன்று தடவைகளா? எதிர்பார்த்து, யோசித்து, திட்டமிட்டுக் கதையளந்து வைத்திருக்கிறானாக்கும்? ஆனால், இதற்கு என்ன விளக்கம் சொல்ல முடியும்?

உள்ளூர எக்களிப்புடன், கணவனை ஏறிட்டு, "சொல்லுங்கள், வித்யா? உங்கள் நண்பர் கூப்பிட்டது, உங்களுக்குக் கேட்காமல், எனக்கு மட்டும், எப்படிக் கேட்க முடியும்?" என்று தெளிவாகக் கேட்டாள்.

"நன்றாகக் கேட்கும்" என்றான் அவன், கசந்த குரலில். "ஏனென்றால், அப்போது, முழுமனதுடன் ஈடுபட்டிருந்தது, நான் மட்டும்தானே?" என்று வருத்தமும், கசப்புமாக விளம்பியவன், அதற்குமேல், அங்கே, நிற்கப் பிடிக்காதவன் போல, வெளியே சென்று விட்டான்.

பாறையில், அதுவும் நல்ல கருங்கல் பாறையாகப் பார்த்து, அதன்மீது, வேகமாகத் தலையை, மோதிக் கொண்டது போல உணர்ந்தாள், மாதங்கி.

17

ஆக, மாதங்கியின் அன்பில்கூட, அவளுடைய கணவன் சந்தேகப்படும்படி செய்துவிட்டானே, இந்த வைக்கோல் போர் நாய்,.

அவள், தன்னை மறந்து நெகிழ்ந்தால்கூட, இனி, அவன், அவளை, நம்புவானா?

காதலில், வித்யாதரன் மெய்மறந்து இருந்தபோது, அவள் மட்டும், ஊரில் நடந்ததை எல்லாம், கவனித்துக் கொண்டிருந்தாளாம். கவனித்து, அதைத் தனக்கு சாதகமாக்கிக் கொள்ளத் திட்டமிட்டு, திட்டத்தைச் செயல்படுத்தியும் விட்டாளாம்.

எப்படி இருக்கிறது கதை?

மாதங்கி மட்டும், கொஞ்சமேனும், அந்தமாதிரிச் சந்தர்ப்பவாதியாக இருந்திருந்தால், நீலனைக் கண்டதும், சிலவினாடிநேரம் மலைத்து நின்றாளே, அந்தப் பொன்னான வினாடிகளை அப்படி வீணடித்திருப்பாளா? அவனைக் கண்டகணமே, கணவனைத் திருப்பிக் காட்டியிருக்க மாட்டாளா?

நீலன் ஓடிப்போய், ஒரு புத்தகம் எடுக்கும்வரை, அவனுக்கு அவகாசம் கிடைக்கவிட்டுவிட்டாளே.

பெண் என்பவள் எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டும் என்பது, இது போன்ற வாய்ப்புகளை வீணாக்கி விடக்கூடாதே, என்று, அவளது நன்மைக்காகச் சொல்லப்பட்டதுதானா?

அதென்ன, ஆண்கள் மட்டும் என்ன உயர்வு? அவர்கள் மட்டும் ஜாலியாக, விருப்பம் போலத் தூங்கலாம்., பெண்கள் மட்டும், எப்போதும் எதையாவது செய்யத் தயாராக, விழிப்போடு இருக்க வேண்டுமா? என்று முன்னொரு காலத்தில், வாதாடியதெல்லாம், முழு மடத்தனமாக, இப்போது, அவளுக்குத் தோன்றியது.

நீலனை மாட்டி வைக்கக் கூடிய, ஓர் அருமையான வாய்ப்பை அல்லவா வீணாக்கிவிட்டாள்.

அதுவே, பெரும் வருத்தம் என்றால். கணவன்

பார்வையில், தப்பு செய்தவள், அவளாகிவிட்டது, மாதங்கிக்கு, இன்னும் பெரிய வேதனையைத் தந்தது.

இதை வைத்துக் கொண்டு, வித்யாதர், என்ன ஆட்டமெல்லாம், ஆடப்போகிறானோ என்று, அது வேறு, அவளுக்குக் கவலையாக இருந்தது. அலுப்பாகவும் எத்தனை விஷயங்களைத்தான், சகிப்பது?

மாதங்கி, பொறுமையிழந்து கொண்டிருந்தாள்.

ஆனால், ஆச்சரியப் படத்தக்க விதமாக, அதையே சொல்லி, குத்திக் குதறவில்லை, அவன்.

ஒருவேளை, இடைப்பட்ட காலத்தின் நெருக்கம், கணவனைக் கொஞ்சம் இளக வைத்திருக்குமோ என்னவோ?

அதற்காக, ஒரேயடியாக, அவன் சும்மா இருக்கவும், இல்லை. அவ்வப்போது, நொட்டென்று, ஒரு குத்திக் காட்டல், நீலனின் பேச்சு வந்தால், விழத்தான் செய்தது.

நரி, இடமாய்ப் போனால் என்ன? வலமாய்ப் போனால் என்ன? மேலே விழுந்து பிடுங்காமல் இருக்கும்வரை, சரிதான், என்று, மாதங்கி, அவனைப் பற்றிப் பேசாதிருக்கவே, குடும்ப வாழ்வு, ஓரளவு, அமைதியாகவே இருந்தது.

ஆனால், அது, வெளிப்பார்வைக்குத்தான். உள்ளே, 'இது என்ன அநியாயம்' என்று அவள்மனம் குமுறிக் கொண்டேதான், இருந்தது.

ஒன்றும் நடவாதது போல பழைய மாதிரியே, அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த நீலனைக் காணும் போதெல்லாம், அன்று நடந்தவை மாதங்கிக்கு நினைவு வரத்தான் செய்தன. இந்த புரட்டுக்காரப் பாவியை, ஒன்றுமே செய்ய முடியவில்லையே என்று, அவள் மனம் கொதிக்கத்தான், செய்தது.

இதில், எதையுமே புரிந்து கொள்ள மாட்டேன் என்று, பிடிவாதமாய் இருக்கும் கணவனிடம், எரிச்சலும், வந்தது.

இந்த எரிச்சல், கோபம், வருத்தம், எல்லாமே, போக்கிடமின்றி, அவளுள்ளேயே முட்டி மோதிக் கொண்டு இருந்தன.

அந்தச் சமயத்தில்தான், மாதங்கியின் பிறந்தநாள் வந்தது.

கடந்த நாலு ஆண்டுகளாக, மாதங்கிக்குப் பிறந்தநாள் என்றாலே, ஏன் வருகிறது, என்று தான் இருக்கும். அன்னை செய்த பாயசம், வாங்கித்தந்த புதிய ஆடைகள், கோயிலுக்குப் போவது.. ஒவ்வொரு கடந்தகால நினைவும், ஒவ்வொரு சித்ரவதையாக நினைவில் வந்துகொண்டே இருக்கும்.

இந்தப் பிறந்தநாள், இந்த நாலாண்டுத் துன்பத்துக்கு,நேர்மாறாக இருக்கும், என்று ஆவலோடு, எதிர்பார்த்தாள், அவள்.

அண்ணன் பிள்ளைகளின் பிறந்தநாட்களுக்கெல்லாம் கூட, யோசித்து நூதனமான பரிசுகளை வாங்கிக் கொடுத்து மகிழ வைப்பவன், வித்யாதரன், சொந்த மனைவிக்குச் செய்யாமல் சும்மா விட்டுவிடுவானா?

நள்ளிரவு பன்னிரண்டு மணியிலிருந்தே, என்னென்-னவோ ஆனந்தங்களை, மாதங்கி எதிர்பார்த்துக் கொண்டிருக்க, முந்திய நாள் அலுவலகம் சென்ற வித்யாதரன், அன்றிரவு, வீடு திரும்பவே இல்லை.

வித்யாதரின் கைப்பெட்டியை, அவளிடம் கொடுத்து-விட்டு, "அய்யா அவசரமா வெளியே போகிறாங்களாம்மா. அப்புறமா, கொஞ்சம் லேட்டா வருவாங்களாம், சொல்லச் சொன்னங்கம்மா." என்று வெகு பவ்யமாகக் கூறிச் சென்றான், கார் டிரைவர்.

தாமதமாகக் காரணம். ஒருவேளை, அவளுக்கு ஏதாவது

பரிசு வாங்குகத்தான், சென்றிருப்பானோ? ஆனால், இன்றுவரை, வித்யாதர், மனைவிக்குப் பரிசு வாங்காமலா, இருந்திருப்பான்? இருக்கலாம்., அவன் தேடிய 'ஸ்பெஷல்' பரிசு, இதுவரை, அவனுக்குக் கிடைக்கவில்லையோ, என்னவோ? நாளை, பிறந்த தினம் ஆயிற்றே., இன்று, எப்படியாவது, தேடி, வாங்கிக் கொண்டுதான் வருவான்.

கணவன் என்ன வாங்கி வரக் கூடும் என்று, மாதங்கி, கற்பனையில் சற்றுநேரத்தைக் கழித்தாள்.

ஆனால், அவளை மகிழ்விக்கப் பெரிதாக, ஒன்றும் வேண்டாமே. வெறுமனே, ஒரு பூங்கொத்து தந்தால்கூட அவளுக்குப் பேரானந்தம்தானே? அதிலும், சிவப்பு-ரோஜாப் பூங்கொத்து என்றால், மாதங்கி, அதைவிடப் பெரிதாக, வேறு எதை, மதிக்கப் போகிறாள்? அனாவசிய-மாகப் பரிசைத் தேடி, நேரத்தை வீணக்குகிறானே.

சீக்கிரமாகக் கணவன், அவளிடம் வந்துவிட வேண்டும்போல, மாதங்கியின் மனம் பரபரத்தது.

அவள் வாழ்வில், ஒரு முக்கியமான தினம், நாலு ஆண்டுகளுக்கு முன்புவரை, பெற்றோர் அண்ணன், புடை சூழ பெருமகிழ்ச்சியோடு கொண்டாடிய நாள் பெற்றோர் மறைந்து, அண்ணன், இருந்தும், இல்லாத நிலையில் கழித்த, நான்கு பாலைவன நாட்கள்.

எண்ணிப் பார்க்கையில் அந்தக் கொடிய காலத்தை எப்படித்தான் தாண்டி வந்தோமோ என்று மாதங்கிக்கு, மிகவும், ஆச்சரியமாக இருந்தது.

நல்லகாலமாக, அந்த அன்புவரட்சி, இனி அவள் வாழ்வில் இல்லை. காதல் காட்டக் கணவன் இருக்கிறான்., கனிவு சொரிய, மாமியார் இருக்கிறாள்.

வித்யா சீக்கிரமாய் வந்துவிட்டால், நன்றாய் இருக்குமே, என்ற தவிப்புடன், மாதங்கி, கணவனுக்காகக் காத்திருந்-தாள்.

ஒவ்வொரு நிமிடமும், குறைந்த பட்சம், ஒரு மணி நேரமாகத் தோன்ற, குட்டி போட்ட பூனை மாதிரி, மாதங்கி, இங்கும் அங்கும், இலக்கற்று அலைந்து, நேரத்தின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்தாள்.

இடையில், கண்ணில் பட்ட, மூத்தவனுடைய பிள்ளைகளில், மூத்த இருவரும், "சித்தி, சித்தி, கதை" என்று கெஞ்சிக் கொஞ்ச, அவர்களுக்குக் கதை சொல்வதில், சிறிது நேரம் கழிந்தது.

கோகிலம், ஒருதரம் வந்து, மறுநாள்ச் சமையலில், பிறந்தநாள்ப்பெண்ணின் விருப்பத்தைக் கேட்டுவிட்டுப் போனாள்.

அதன் பிறகு, மாதங்கி, மீண்டும் கணவனுக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள். இரவு பன்னிரண்டு மணிவரை நம்பிக்கையோடு காத்திருந்தவள், அதன் பிறகு, கொஞ்சம் கவலைப் படத் தொடங்கினாள். வித்யாதரனுக்கு ஏதேனும், ஆபத்து, நேர்ந்திருக்குமா?

சற்றுநேரம் அதிலேயே கலக்கத்துடன் உழன்றபின், அப்படியிராது என்ற முடிவுக்கு வந்தாள்.

இதற்கு முன்பும், இதேபோல, வித்யாதரன், ஒருநாள் வீடு திரும்பாமல், வெளியே - நீலனோடு, அவன் திரும்பி வந்த அன்று இரவு தங்கிப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, மறுநாள், அதுவும் மாலையில், ரொம்பவும் சாதாரணமாக வந்து நின்றது நினைவு வர, மாதங்கிக்கு ஆத்திரம் பொங்கியது.

அன்றைக்கும், இப்படித்தான், வித்யா ஒருதகவலும் தெரிவியாமலேதான், இருந்தான், நீலனின் சகவாசம், மற்ற உறவுகளை, அலட்சியம் பண்ண வைத்துவிடுமா? அப்படிஎன்ன பெரிய நட்பு, மனைவிகூட மறந்து போகும் அளவுக்கு?

இரவு எந்நேரமானாலும், தந்தையுடன் சேர்ந்துதான் உண்ணவேண்டும் என்று நிர்ணயித்து வைத்திருந்த தாயின் நினைவில், அவளுக்கு, நெஞ்சை அடைத்தது.

இந்த வீட்டில், யார், எந்த நேரம் வருகிறார்கள், எந்த நேரம் போகிறார்கள்? என்ன சாப்பிடுகிறார்கள் என்று மற்றவர்களுக்கு என்ன தெரிகிறது?

கொட்டுகொட்டு என்று அவள் மட்டுமாக விழித்துக் கொண்டு கிடந்து தவிக்கிறாளே, அம்மா இருக்கிற இடத்தில், இது, நடக்குமா? ஒருகரம், வகுப்புத் தோழர்களோடு சினிமாவுக்குப் போன சிவா கடைசி 'பஸ்'சை, விட்டுவிட்டு, நடந்தே, இரவு பத்தரைக்குத் திரும்பிவந்து சேரும்வரை, மற்ற மூவரும், சேர்ந்து, எப்படித் தவித்துக் கொண்டு இருந்தார்கள்?

இங்கே, ஒருவன் பத்துநாள் வராவிட்டால்கூட, யாரும் கவலைப்பட மாட்டார்கள்போல. அன்று, வித்யாதர் இரவு வராதது பற்றிப் பேசியபோதுகூட, கோகிலம், ரொம்ப சாதாரணமாகத் தானே எடுத்துக் கொண்டாள்? 'நீலன் ஊரில் இருந்தால், வித்யா இப்படித்தான், பாமா சொந்தக்காரர் வீடுகளுக்குப் போனால், சத்யா, அப்படித்தான்.' எனவில்லையா?

ஆனால், இன்று, அவளது பிறந்தநாள் இல்லையா? அதைக்கூட அலட்சியம் செய்வதா?

விடியும்வரை, பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருந்தவள், அதற்குமேல் தாங்கமாட்டாமல், சுனவனை, அவனது செல்ஃபோனில் கூப்பிட்டாள்.

அவள் எண்ணியது போலவே, வித்யுாதரன், அவன் நண்பனோடுதான் இருந்தான்.

கொதித்துப் போனாள், மனைவி. "இன்று என் பிறந்தநாள் என்பதுகூட நினைவில்லையா? திருமணமான

பின் வரும், முதல் பிறந்தநாள், இன்று கணவனிடமிருந்து, குறைந்த பட்சமாய், ஒருவாழ்த்தையேனும் எதிர்பார்க்கும் உரிமை, எனக்கும்கூட, உண்டுதானே? அல்லது, அதுபோல உரிமையெல்லாம் எதிர்பார்க்க, உங்கள் அண்ணி மாதிரிப் பணக்காரியாகப் பிறந்திருக்க வேண்டுமா?"

"ஷ் என்ன பேச்சு இது? இங்கே, நீலனுக்கு உடம்பு சரியில்லை..."

அந்த வைக்கோல்போர் நாயின் வேலைதானா? உடம்பு மட்டும் தானா, அவனுக்குச் சரியில்லாதது? உடம்பு, மனசு, மூளை எதுவுமேதான் சரி கிடையாதே அதைப் புரிந்துகொள்ளத் தெரியவில்லை.. 'ஷ்' என்று, அவளை, அடக்க வந்துவிட்டான்.

சினம் மிதமிஞ்சிவிட, "ஏன், ஓர் இரண்டு வார்த்தை ஃபோன் பண்ணிப் பேசக்கூட முடியாமல், அவர் என்ன, மரணப் படுக்கையிலா கிடக்கிறார்?" என்று மாதங்கி சீற, "சீ, வாயைமூடு" என்றவன், மேலே பேச்சுக்கு இடமின்றி, சட்டென்று, செல்லை 'ஆப்' செய்துவிட்டான்.

'சீ'யா? தொடர்பிழந்த 'ரிசீவ'ரை வெறித்து நோக்கிய மாதங்கி, அதை, அப்படியே கைநழுவ விட்டுவிட்டு, கட்டிலில் குப்புற விழுந்து, கண்ணீர் பெருக்கலானாள்.

18

பிறந்தநாளன்று அழக்கூடாது, அப்புறம், ஆண்டு முழுவதும் அழவேண்டி வரும் என்று அன்னை சொன்னது, நினைவு வந்த போதும், மாதங்கியால், அழுவதை நிறுத்த முடியவில்லை.

பிறந்தநாளும் அதுவுமாக, விடிந்தும் விடியாமலுமாக, அவள் முகத்தில் அடித்து, அவளுடைய கணவன், அவளுக்கு, அருமையான பரிசல்லவா, கொடுத்திருக்கிறான்.

ஆனால், விஷயம் இத்தோடு முடியவில்லை.

விரைவிலேயே, வீடுவந்த வித்யாதரன், ஒரு விலை உயர்ந்த கைக்கடிகாரத்தை, அவள்முன் வீசினான். "இந்தா. எடுத்துக் கொள். இதற்காகத்தானே, அவ்வளவு தரம் இறங்கிப் பேசினாய்? ஒன்று தெரியுமா? 'உன் மனைவியின் பிறந்தநாளில், நீ, இங்கு வந்ததே தப்பு, நான் என்ன மரணப்படுக்கையிலா கிடக்கிறேன்?' என்று என்னை, இப்போது இங்கே, அனுப்பியதே, நீலுதான். மரணப்படுக்கையிலேயே கிடந்திருந்தால்கூட, அவன், என்னை அனுப்பிவைத்திருப்பான். உனக்குத்தான், நாகரீகம் என்றால் என்னவென்றே தெரியவில்லை." என்று கடுமையான குரலில் உரைத்ததவன், "நான், நாளைதான் திரும்பி வருவேன். அதுவும், நீலனுக்குக் குணமாகி விட்டால்தான். இடையில் என்னோடு பேச முயலவேண்டாம்" என்று அதேகுரலில் உத்திரவிட்டுவிட்டுத் திரும்பிச் சென்றுவிட்டான்.

படுக்கையில், அருகே கிடந்து பளபளத்த கைக்கடிகாரத்தை வெறித்த மாதங்கிக்கு, மீண்டும், ஒரு மூச்சு அழுகை வந்தது.

தங்கச் சங்கிலியும், உள்ளே, எண்களுக்குப் பதிலாகப் பதிக்கப் பட்டிருந்த சிறு வைரங்களும், அதன்விலையைப் பறைசாற்றின. ஆனால். இதற்காகவா, ஒரு விலையுயர்ந்த பரிசுக்காகவா அவள், தன் கணவனை நாடினாள்?

வெறும் பூங்கொத்து போதுமே, என்று எண்ணியந்த நினைக்கையில், மறுபடியும் கண்ணீர் பெருகியது, அவள் விரும்பியது, கணவனின் அருகாமையையும், அவனது காதலின் சின்னமாய், ஒரு சிறு அடையாளத்தையும் தானே?

இதைக் கூட, அவளுக்குத் தர மனமில்லாதவன், அவளை, மணந்து கொள்ளாமலே, இருந்திருக்கலாமே. அவளும், அவள்பாட்டில், எங்கோ, கோவையில்

நிம்மதியாக இருந்திருப்பாளே....

எண்ணமிடும்போதே, மாதங்கியின் மனம் முரண்டியது.

வித்யா அவளை மணந்து கொள்ளவில்லை என்றால், அவனை, அவள் அறிந்து கொண்டிருக்கவே மாட்டாளே. அது எப்படி முடியும்? அவன் இல்லை என்றால், அப்புறம், மாதங்கி வாழ்வதில் அர்த்தமே இல்லாமல் போயிருக்குமே.

அப்படி, ஒன்றுமே இல்லாமல், ஒரு தாவரம் போல வாழ்வதை விட, என்ன வேதனைப் பட்டாலும், அவனோடு வாழும் இந்த வாழ்வு கூட மேலானதுதான்.

இந்த எண்ணம் தோன்றியதும், மாதங்கியின் கண்ணீர் நின்று போயிற்று.

எத்தனையோ வகையில், அவளுடைய கணவன் மிகவும் நல்லவனே. ஒரு கெட்ட நண்பனை நம்புகிறான். அவ்வளவே. அந்தக் கூடா நட்பிலிருந்து அவனை மீட்டுவிட்டால் போதுமே.அப்புறம் கவலைப்பட ஒன்றுமே இராதே.

ஒருவாறு, தனக்குத்தானே மனம் தேறி, முடிந்த அளவு இயல்பாக, மாதங்கி நடமாடினாள்.

சொல்லிச் சென்றதற்கு மாறாக, அன்றிரவே, வித்யாதரன் திரும்பி வந்தது, மாதங்கிக்கு ஆச்சரியம்தான். எப்படியோ, மனமிளகி வந்தானே என்று, ஆறுதலும்தான்.

ஆனால், அப்படி வரக் காரணம் நீலநாராயணன்தான் என்று, அறிந்தபோது, வெறுப்பாகத்தான் இருந்தது. இதில், என்ன சூதோ! ஐயமும் உண்டாயிற்று.

மாதங்கி சந்தேகமாய் நோக்கவும், "மெய்தான், மாதங்கி, 'சின்னப் பெண். இந்தக் காலப்பெண் வேறு. புருஷன், தனக்குப் பிறகுதான், மற்றவரை நினைக்க வேண்டும் என்கிற எண்ணம் இருக்கும், எல்லோரையும் போல இருப்பதைத் தப்பு என்று நினைக்கக் கூடாது.' என்று நிறைய புத்திமதி

சொன்னான். அப்புறம்தான், எனக்குக் கோபம், கொஞ்சம் ஆறிற்று. அவரவரை , அவரவர் இருக்கிறமாதிரியே, ஏற்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்றான். இப்போது அண்ணியை சத்யா எப்படி வைத்துக் கொள்கிறான் அதை அவன் சுட்டிக் காட்டிய பிறகுதான், எனக்கும் ஒருவாறு, விஷயம் புரிந்தது. நானாக, உன்னைப் பற்றி, ஏதேதோ நினைத்து, உன்னை மணந்தேன். இப்போது, நான் நினைத்த மாதிரி, நீ இல்லை என்று, உன் மேல், கோபப்படுவது, தப்புதானே? இதெல்லாம், அவன் எடுத்துச் சொன்ன பிறகுதான், எனக்குப் புரிந்தது. ஒரேஒரு விஷயம், நீ, புரிந்து கொள்ள வேண்டும், மாதங்கி, நீலன், உன் நன்மை விரும்பி. அதை நீ நம்ப வேண்டும் அதில் மட்டும் நீ தெளிவாயிருந்தால், நம் வாழ்வு, பெரும்பாலும் பிரச்சினையற்றுப் போகும். அவனது அறிவும், பிறர்மீது-முக்கியமாய், என்மீது அவனுக்கிருக்கும் அக்கறையும், அப்படிப் பட்டது. முன்பு, என்ன மாதிரியான சமயத்தில், அவன், என்னை நிமிர்த்தினான், என்று உனக்குத் தெரியாது, மாதங்கி. இன்றைய உதாரணத்தையே எடுத்துக் கொள்ளேன், அவன் தலையிடாமல் இருந்திருந்தால், இந்தப் பிறந்தநாளை, நீ, அழுது, கரைந்தே, முடித்துவிட்டிருப்பாய், இல்லையா? பார்., கண்ணெல்லாம் சிவந்து, எப்படி இருக்கிறாய், பார்." என்று, அவளை மென்மையாகப் பற்றி, அழைத்துச் சென்று, கண்ணாடியின் முன்னே, நிறுத்திக் காட்டினான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் பேசாது நிற்க, வித்யாதரே, மேலும் தொடர்ந்தான். "அப்போது, எனக்கிருந்த கோபத்தில், நீ அழக்கூடும் என்ற எண்ணமே, எனக்கு வரவில்லை. அவ்வளவு உடம்பு சரியில்லாத அந்த நேரத்திலும், நீலுதான், அதை எனக்கு எடுத்துச் சொன்னான். அப்போதுகூட, ஒரு சின்னப் பிள்ளை போல நீ. அழுவாயா என்று, எனக்குச் சந்தேகம்தான். அப்போதும்,

நினைத்தது நடக்கவில்லை என்றால், பெண்களும், பிள்ளைகளும் வேறு என்ன செய்வார்கள்? என்று, நீலன் கேட்டபிறகு, எனக்கு ஒருமாதிரியாகி விட்டது. உன் அழுத முகம், உள்ளே தோன்றி வதைக்கத் தொடங்கி விட்டது. அப்புறம், அண்ணன், அண்ணி பற்றிச் சொன்னானா, எனக்கு முழுதுமே, தெளிந்து விட்டது. சத்யா, சந்தோஷமாய்த்தானே இருக்கிறான்? அண்ணிக்கும் நிறைவுதான். இல்லையா?

"தானே சமாளித்துக் கொள்வதாகத்தான் சொன்னான்." ஆண்மகனுக்கு, அதுகூட முடியாதா? போ., போய், 'உன் மனைவியை மகிழவை' என்று என்னை விரட்டினான். ஆனால், காலையிலிருந்து, கொஞ்சம் கொஞ்சமாக, இவ்வளவு பேசும்போதே, பலமுறை சோர்ந்து போனான்., அவனைத் தனியே விட்டுவருவது, எப்படி? 'லாட்ஜ்' பையன், வேலைநேரம் முடிந்து போகிறவனிடம், பணம் கொடுத்துக் கூட இருக்கச் செய்துவிட்டு வர, இவ்வளவு நேரமாகிவிட்டது.

"இப்போது... கிட்டத்தட்ட, நாள் முழுவதும், முடிந்து போயிற்று. ஆனாலும்... இதோ, நான் குளித்துவிட்டு வருகிறேன். நீயும் தயாராகு. வெளியே போய்ச் சாப்பிட்டுவிட்டு, ஏதாவது சினிமாவுக்குப் போய்வரலாம்," என்று நீளமாய்ப் பேசி, தன்னைவிளக்கி, அதைவிடவும், தன் நண்பனின் மேன்மையைத் தெளிவாக விளக்கிவிட்டு, டவலை எடுத்துக் கொண்டு, குளியலறைக்குள் புகுந்தான், வித்யாதரன்.

மாதங்கி அயர்ந்துபோய் நின்றாள்.

வித்யாதரனின் கண்களில், அவன் மனைவியை, இதைவிட ஒருவரால், கீழிறக்கிக் காட்டமுடியுமா, என்ன?

சின்னப் பெண்ணாம்., அதிலும், இந்தக்காலப் பெண்ணாம். இந்தக்காலப் பெண்களைப் பற்றிய

வித்யாவின் அபிப்பிராயம் அறியாதவனா, இந்த நீலன்? 'எல்லோரையும் போல அவள் இருப்பதைத் தப்பு என்று நினைக்கக் கூடாதாமே.' நினைத்தது நடக்காவிட்டால், பிள்ளைகள் மாதிரிப் பெண்கள், அழுவார்களாமே. தான் அழுததை நினைத்து, அப்போது, மாதங்கிக்குத் தன்மீதே, மிகுந்த கோபம் வந்தது. மாதங்கியிடம், நல்லதாக எதுவுமே கிடையாது., எல்லாப் பெண்களும் மோசம் என்று அவர்கள் இருவரும் கணித்ததற்குச் சரியாக, இவளும் மோசமானவள் என்று முத்திரை குத்தி முடித்துவிட்டு, 'பாவம், பொறுத்துப் போ' என்று பரிந்துரைக்கிறானாம். என்னபரிவு, என்னேபரிவு, 'தேன் தடவிய விஷம்' என்பதற்கு இதைவிடச் சரியான உதாரணம், வேறு உண்டா, என்ன?

உள்விஷமம் ஒன்றும் அறியாமல், அதை அப்படியே விழுங்கி வைத்திருக்கிறானே, அவள் கணவன்.

இத்தனைக்கும் மீறி, மனைவியை வித்யா நன்றாக நினைத்து விடகூடாது என்று, பாமாவைப் பற்றிய எடுத்துக் காட்டு வேறு. பாமாவின் தன்னலம், அகம்பாவம், பணத்தாசை.... இது மாதிரியான, மாதங்கியின் கெட்ட குணங்களை, வித்யாதான் பொறுத்துப் போக வேண்டுமாம்.

அடே பாவீ., ஏண்டா இப்படி?

மாதங்கியை அவள் கணவன் வெறுத்து ஒதுக்குவதில், இந்த நாசகாரனுக்கு என்னலாபம்?

தெரிந்து கொண்டே ஆகவேண்டும் என்று, மாதங்கி முடிவு செய்தாள்.

இதைக் கணவனிடம் கேட்டுக் கொஞ்சமும் பயனில்லை 'நீலன் உன் நலம்விரும்பி' என்பவன் இதைப் புரிந்து கொள்ளவே போவதில்லை. அதைவிட....

"என்ன, இன்னும், நீ தயாராகவில்லையா?" என்று, குளித்து முடித்துவிட்டு வந்த கணவன் கேட்கவும், சற்றுத் திகைத்துவிட்டு, "இஇல்லை., அஅத்தை ஒரு சேலை தந்தார்கள். அதைத் கட்டலாமா, அல்லது உங்கள் அண்ணியோடு வெளியே போனபோது வாங்கிய சுடிதார் செட் ஒன்று அதுவும் புதிதுதான், அதை அணிந்து கொள்ளலாமா என்று யோசித்தேன்" என்று மாதங்கி சமாளித்து வைத்தாள்.

"அம்மா கொடுத்ததையே கட்டேன்" என்று முடித்தவன், தொடர்ந்து "முக்கியமான விஷயங்களைவிட ஆடை, ஆபரணங்களில், பெண்கள் அதிக நேரம் செலவழிப்பார்கள் என்று, நீலன் சொல்வது சரியாகத்தான் இருக்கிறது. இதைப்போய், இவ்வளவு நேரம் யோசித்திருக்கிறாயே." என்று கூறவும், மாதங்கிக்குத் தன்னைத்தானே ஓங்கிக் குட்டிக் கொள்ளலாம் போல இருந்தது.

நீலனின் இன்னொரு குசும்புக்கு, அவளே, அத்தாட்சி கொடுத்து விட்டாளே.

நீலநாராயணனின் இருப்பிடம் பற்றி, மாதங்கி விசாரித்ததும், வித்யாதரன் வியப்புடன் மனைவியைப் பார்த்தான். "என்ன திடீரென்று?"

இந்தக் கேள்வியை மாதங்கி எதிர்பார்த்திருந்ததால் "ஏதோ அவசரம், உங்களை, எங்கென்று தேடுவது? அலுவலக நேரம் தவிர, பெரும்பாலும், அவரோடுதானே-தப்பாக எண்ணவேண்டாம், உயிர் நண்பர், அத்தோடு, உடம்புவேறு சரியில்லாதவர். அதனால், முடிந்த அளவு அவருடன் இருப்பதில் தப்பே கிடையாது. அப்படி அவருடன் இருப்பதால், தேவை என்றால் தாமதமின்றித் தொடர்பு கொள்ள இலகுவாக இருக்குமே என்று கேட்டேன்." என்று, கோவையாக, அவளால் பதிலுரைக்க முடிந்தது.

அப்போதும், "அதற்குத்தான், 'செல்ஃபோன்' இருக்கிறதே." என்று கிண்டலாகக் கேட்டான் வித்யா.

"அதைத்தான், கண்டவனும் அறுப்பதால், பாதிநேரம் 'ஆஃப்' செய்து வைத்துவிடுவதாகச் சொன்னீர்களே? ம்ம்ம்... என்ன, இவ்வளவு தயக்கம்? நீலனோடு இருப்பதாகச் சொல்வது, நிஜம்தானா? அல்லது, அப்படிச் சொல்லிவிட்டு, வேறே எங்கானும் சவாரி விட்டுக்கொண்டு இருக்கிறீர்களா?" என்று, மாதங்கி, கேலிபோலத் தலையைச் சரித்து வினவவும், சிரித்தவாறு அவள் கன்னத்தை நிமிண்டிவிட்டு, வித்யாதரன், நீலநாராயணனின் முகவரியை, மாதங்கிக்கு எழுதிக் கொடுத்தான்.

பொதுவாக, மற்றவர்களைப்போல, நீலன், தினமும் அலுவலகம் சென்று கையெழுத்திடுவது, கிடையாது. நோயாளி நண்பனுக்கு, வித்யாதரன் கொடுத்திருந்த சலுகை, அது. நீலனும், அதை முடிந்த அளவில் பயன்படுத்துகிறவனே என்பது, மாதங்கி, அறிந்த விஷயம். பாவம், நீலனால், அலுவலகத்துக்கெல்லாம், அலைய முடியவில்லை. என்பான், வித்யா. அவன் மனைவி; வேறு நினைப்பாள்.

அலுவலகத்துக்குள் சென்றுவிட்டால், மேலதிகாரிகள் கேள்விகளுக்கு, இவன் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்., அந்தமாதிரிக் கீழான நிலையெல்லாம், இவனுக்கு ஒத்துவருமா, என்ன? இவன்தான், அலுவல் பயணத்தின் போதுகூட, தகவல் கொடுக்கப் பிடிக்காத துரையாயிற்றே.

அந்தக் காரணத்தினாலும், வெகு சமீபத்தில், மிகவும் நோயுற்று இருந்ததாய் காட்டியிருந்ததாலும், நீலன், அவனது அறையில்தான் இருப்பான் என்ற நிச்சயத்தோடு, மாதங்கி, அவன் இருப்பிடத்துக்குச் சென்றாள்.

அவளது அனுமானம் சரியாகி, நீலன், அங்கேதான் இருந்தான்.

ஆனால், அதுவரைதான் மாதங்கியின் கணிப்பு சரியாக இருந்தது.

அவளது திடும் பிரவேசம், நீலனை நிலைகுலையச் செய்துவிடும். அவன், குழம்பி நிற்கும் அந்த நேரத்தில், அவனை அதட்டி, மிரட்டி, அவனது திட்டங்களை அறிந்து விடுவது, எளிது, என்று அவள் நினைத்திருந்தாள்.

ஆனால், மாதங்கியின் வரவுக்காகப் பலநாள் காத்திருந்தவன் போல, நீலன், அவளை, வரவேற்றான் "வாவா, வா மாதங்கி, ஆனாலும், உனக்கு, மனசு திடம், ரொம்பவும் அதிகம்தான் போல. உன்னை, நான், எப்போதோ, ரொம்ப நாட்களுக்கு முன்னதாகவே, எதிர்பார்த்தேன்., இன்றுதான் உனக்கு வருவதற்கு வழி தெரிந்திருக்கிறது." என்றான் அவன் உற்சாகமாக.

திகைப்பும், குழப்பமும், மாதங்கியினவை, ஆயின.

19

'அடுத்தது காட்டும் பளிங்கு போல' என்பார்களே, அதுபோல, எண்ணியதை எல்லாம், மாதங்கி முகத்தில் காட்டி விடுகிறவள் அல்ல. ஆயினும், நீலநாராயணன், அவளை வரவேற்ற விதம், அவளை மிகவும் பாதித்தது. அந்த பாதிப்பை, வெளிக் காட்டவும் வைத்துவிட்டது.

நீலன் ஏதோ திட்டமிட்டிருக்கிறான் என்பது, மாதங்கி ஊகித்ததுதான்.

ஆனால், அவளது வரவினாலேயே, அந்தத் திட்டம் வெற்றி பெற்று விட்டமாதிரி, நீலன் பேசியதுதான், அவளைக் குழப்பிவிட்டது.

அவளது குழப்பம், அவனுக்கு மேலும், உற்சாக-மூட்டுவதைக் காணவும், பெருமுயற்சி செய்து, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள், அவள்.

அவள், தன் முயற்சியில் ஈடுபட்டிருக்க, நீலன், அவளை வரவேற்பதில் ஈடுபட்டான். ஒரு மோடாவை இழுத்துப் போட்டு, "உட்கார், மாதங்கி உன்னைப் போல, ஓர் அழகியை வரவேற்க, இந்த ஏழையின் குடிசை, என்ன புண்ணியம் செய்ததோ?" என்றான் உபசாரமாக.

'இருந்திருந்து, உன்னை வந்து சந்திக்குமாறு நேர்ந்ததற்கு நான் என்ன பாவம் செய்தேனோ' என்று எண்ணியபடி, நிமிர்ந்து பார்த்தவளை, அந்த இடத்திலிருந்த வசதிகள், வியக்க வைத்தன.

'பணக்கார' என்று சொல்ல முடியாது., ஆனால், சாதாரணத்துக்கு நிச்சயமாக மேம்பட்ட நிலைமை அங்கிருந்த பொருட்களில், தெளிவாகத் தெரிந்தது. இரண்டே அறைகள்தான். ஆயினும், டீவி, ஃபிரிட்ஜ் டெக்...

எல்லாம், அவள் கணவனிடமிருந்து நீலன் பெற்றதுதானே?

விசித்திரமான வகையில், மனம் திடமுற்று, சுதாரித்துக் கொண்டுவிட, "மற்றது எப்படியோ, இந்த இடத்தை ஏழையின் குடிசை என்று மட்டும் சொல்லாதீர்கள். யாராலும் ஒத்துக் கொள்ள முடியாது." என்றாள்.

மறுக்காமல், முறுவலித்தான், அவன் "உன் வருகைக்குத் தகுந்ததாக இருக்க வேண்டாமா?" என்று மட்டும் பதிலிறுத்தான், நீலன்.

'உன் வருகை.'

நிமிர்ந்து, நீலனை நோக்கி, "நான் வருவேன் என்று, அப்படி என்ன நிச்சயம்?" என்று மாதங்கி கேட்டாள்.

கடகடவென்று, சத்தமாகச் சிரித்தான். நீலநாராயணன்.

"எதற்குச் சிரிக்கிறீர்கள்?" என்று, முகம் சுளித்துக் கேட்டாள், அவள்.

"பின்னே? விடையைத் தெரிந்து வைத்துக்கொண்டே, கேள்வி கேட்டால், சிரிக்காமல் வேறு என்ன செய்வது?" என்று உதட்டைப் பிதுக்கினான், நீலன்.

ஒருகணம் திகைத்தவளின் முகம் சட்டெனக் கடுத்தது. ஓடைநீரின் குறுக்கே வலையைக் கட்டி வைத்துவிட்டு, மீன் கிடைப்பது நிச்சயம் என்று உட்கார்ந்திருப்பவன் போலல்லவா பேசுகிறான்?

மாதங்கியின் முகக்கடுப்பை அலட்சியம் செய்து, "என்ன சாப்பிடுகிறாய்? சூடு, குளிர்ச்சி, எதுவானாலும், வாங்கிவர, இங்கே, 'லாட்ஜி'ல் ஆள் இருக்கிறது. உனக்கு, என்ன பிடிக்கும்?" என்று கேட்டு, உபசாரம் செய்தான்.

'நீ, கண்காணாத இடத்துக்கு ஒழிந்தாயானால், அதுதான், மிகவும் பிடிக்கும்' என்று எண்ணியவள், வீண்பேச்சை விடுத்து, "ஏன், இப்படிச் செய்கிறீர்கள்?" என்று நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

"ம்..ம்..." என்று யோசிப்பது போலப் பாவனை செய்துவிட்டு மெல்ல நிமிர்ந்து, "நீ, ஒரு குற்றம் செய்துவிட்டாய்." என்றான் அவன்.

முதலிலேயே, கண்ணால் பார்க்குமுன்பாகவே, அவனை வெறுத்ததா? அதைக்கூட, வித்யாதரன், இவனிடம் சொல்லிவிட்டானா?, என்றெல்லாம் வேகமாக யோசித்தபடி, "என்ன குற்றம்?" என்று மாதங்கி கேட்டாள்.

"ஆள் மாற்றம் செய்துவிட்டாய்." என்றான் அவன், அவளையே பார்த்தபடி.

ஆளை மாற்றினாளா? அவளா? இதென்ன கதை? "புரியவில்லை?" என்றான் அவன் புருவங்களை நெறித்து.

இரண்டாம் முறையாக உதட்டைப் பிதுக்கினான் நீலன் "புரியாதவர்களுக்குச் சொன்னாலும், தெரியாது, புரியாதமாதிரிப் பாவனை செய்கிறவர்களுக்குச் சொல்லிப் பிரயோசனமே, கிடையாது." என்று தோளைக் குலுக்கினான், நீலநாராயணன்.

'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி' நினைவுதான், மாதங்கிக்கு வந்தது. அவள் கணவன் இப்படித் தோளைக் குலுக்கும்போது, பார்க்க எவ்வளவு கம்பீரமாக இருக்கும். இருந்திருந்து, அதையா, இந்த சொங்கி, காப்பி அடிக்க வேண்டும்?

ஆனால், இப்போது பிரச்சினை அதுவல்ல.

நீலனை நேராக நோக்கி, "மெய்யாகவே புரியவில்லை. நான் எப்போது, ஆள் மாறாட்டம் செய்தேன்?" என்று கேட்டாள் அவள்.

"தப்பாச் சொல்லுகிறாயே. ஆள் மாறாட்டம் பற்றி நான் பேசவே இல்லை. 'ஆள் மாற்றம்' தான் நான், சொன்னது."

"இன்னும் புரியவில்லை."

"அதுதான் சொன்னேனே, புரியாதமாதிரி, பாவனை செய்கிறவர்களுக்குச் சொல்லிப் பயன் இல்லை, என்று"

அவள் முகத்தைவிட்டு, இங்கே அங்கே அகலாத பார்வையுடன் நீலன் சொல்ல, மாதங்கியுள் ஏதோ, பொறி தெறித்துப் புகைந்து, எரியத் தொடங்கியது.

மீண்டும் புருவம் நெறித்து, "எப்போது... உங்கள்' ஆள் மாற்றத்தை நான் எப்போது செய்தேன்?" என்று வினவினாள், அவள்.

தலையைச் சற்று நீட்டி, உற்று நோக்கியவாறு, "உன் திருமணத்தின் போது." என்றான், அவன்.

மாதங்கியின் முகத்தில் திகைப்பு பரவவும், "புரியத்

தொடங்கிவிட்டது. இல்லையா, மாதங்கி? என்ன காரியம் செய்தாய். பார். இருந்திருந்து, கணவனைப்போய் மாற்றிவிட்டாயே." என்றான், தொடர்ந்து.

முதலிலிருந்து, அவள் நினைத்ததுபோல, இவன், நாயேதான். வெறும் வைக்கோல்போர் நாய் மட்டுமல்ல, தெருநாயும் கூட.

மிகுந்த வெறுப்புடன் நோக்கிவிட்டு மாதங்கி எழுந்தாள்.

"பதில் சொல்லாமல் கிளம்பினால், எப்படி? வந்த காரணத்தை மறந்து விட்டாயா? அதை, நிறுத்த, ஒரேவழி, என்னையும், உன் கணவனாக ஏற்று நடப்பதுதான். காலம் பூராவும் வேண்டாம். எனக்கே அலுத்துவிடும். ஒருசில நாட்கள்., அதுபோதும்."

அருவருப்பும், துச்சமுமான பார்வையுடன், மாதங்கி திரும்பி நடந்தாள்.

வேகமாக ஓடி, அவள் முன்னே வந்து நின்று, நீலன், அவள் வழியை மறித்தான்.

ஒரு வினாடி, மாதங்கியின் மனம் துணுக்குற்றது. யாரிடமும் சொல்லாமல், தனியாக, இவன் இருப்பிடத்துக்கு வந்தது, தப்போ? இவன் அத்து மீறினால்?

எண்ணும்போதே, மாதங்கியின் மனம் தெளிந்தும் விட்டது.

இந்த நரம்பனால் அவளை ஒன்றும் செய்துவிட முடியாது.

ஏனெனில், பெண் என்ற போதும், நீலனைவிட அவளுக்கு ஆரோக்கியத்தின் வலிமை அதிகம் இருந்த-தோடு, தற்காப்புக் கலைகளையும், ஓரளவு கற்றவள் அவள்.

எனவே, மாதங்கி, ஓர் அலட்சியப் பார்வையுடனேயே நின்றாள்.

அழுகை, ஆத்திரம் என்று மற்ற எதை எதிர்பார்த்திருந்த போதும், நீலனும், மாதங்கியின் இந்த அலட்சியத்தை எதிர்பார்க்கவில்லை போலும், சற்று நேரம், பேச்சுக்குத் திணறியவன் போல விழித்தான்.

பிறகு, ஒரு குரூரப் பார்வையுடன், "இவ்வளவு திமிர் உனக்கு நல்லதல்ல, மாதங்கி" என்று எச்சரித்தான்.

நல்லது கெட்டது பற்றிப் பேசுகிற மூஞ்சியைப் பார், என்று மனதுக்குள் கடுத்தபடி, "வழியை விடு" என்றாள் மாதங்கி, மரியாதையைக் கைவிட்டு.

'சீ நாயே' என்று, கல்லை எடுத்து வீசாத குறை.

அதைப் புரிந்து கொண்டவன்போல, நீலநாராயணனின் முகமும், செங்குரங்காய்ச் சிவந்தது. "கொஞ்சம் யோசித்துப் பேசு, மாதங்கி. நீ, இங்கே, ஏன் வந்தாய், எதற்காக வர நேர்ந்தது, என்பதை எல்லாம் மறக்காதே" என்று நினைவூட்டியவன், அதன் பிறகும், அவள் நிமிர்ந்தே நிற்கவும், "உன் பிரச்சினை, இப்படியே வளர்ந்து கொண்டேதான் போகும். விடாமல் வளர்ப்பேன். எதுவரை தெரியுமா? வித்யா, உன்னை விவாகரத்து பண்ணும்வரை., அல்லது, உன் கழுத்தைப் பிடித்து, அவன் வீட்டிலிருந்து, வெளியே தள்ளும்வரை. வேறு வகையில் உறவு, கிறவு என்று யாரும் இல்லாத நீ, அப்புறம், நடுத்தெருவில்தான் நிற்க வேண்டும். நடுத்தெருவில் நிற்கும் பெண்கள் கதி என்னவாகும், தெரியுமல்லவா? நினைவில் வைத்து நட" என்று மிரட்டினான்.

"சும்மா மிரட்ட வேண்டாம். என்னை வீட்டைவிட்டு வெளியேற்றுகிற அளவுக்கு. வித்யா முட்டாளல்ல., நானும் அப்படி விட்டுவிடமாட்டேன். முதலில் வழியை விட்டு விலகு." என்று அதட்டினாள், மாதங்கி.

கெக்கலி கொட்டிச் சிரித்தான், நீலநாராயணன்.

"விட்டுவிடமாட்டாயா? வேறென்ன செய்வாயாம்? முதலில், இதுவரை, இந்த விஷயத்தில், நீ, அப்படி என்ன சாதித்தாயாம்? அப்படி சாதிக்க முடிந்தவள், இன்றைக்கு, இங்கே, எதற்காக வந்தாயாம்?" என்று எகத்தாளமாகக் கேட்டான்.

இதற்கு என்ன பதில் சொல்லுவாள், மாதங்கி? என்னவென்றுதான் சொல்ல முடியும்?

20

நீலநாராயணனின் எகத்தாளமான கேள்வி, மாதங்கியை வாயடைத்துப் போகச் செய்தது.

அவன் கூறுவது சரிதானே? கணவனிடம் ஒன்றும் சாதிக்க மாட்டாமல்தானே, இவனிடம், இந்த வைக்கோல் போர் நாயிடம், அவள் பேச வந்ததே!

இருந்திருந்து, இந்த 'வில்ல'னைப் போய்க் கண்ணை மூடிக் கொண்டு, நம்புகிறானே, அவள் கணவன். ஆனாலும், இதைச் சொன்னால்...

நீலன் தன்னையே கவனித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து, "ஏன், இப்படிச் செய்கிறாய் என்று கேட்டுப் போகவே வந்தேன். இப்போது, அது தெரிந்து விட்டதல்லவா? இனி, அதற்கு தக, நடவடிக்கை எடுப்பேன்." என்றாள், அமர்த்தலாக.

"அப்படி என்ன நடவடிக்கை, உன்னால் எடுத்துவிட முடியுமாம்?" என்றான் அவன் ஏளனமாக. "அன்று, படுக்கையறைச் சம்பவத்தின் போது எடுத்தாயே, அது போலவா? அல்லது, உன் புருஷனிடம்போய், என்னைப் பற்றிப் புகார் கொடுக்க அதுதான், இந்த விவகாரமெல்லாம் சொல்லப் போகிறாயா? இதை, இப்படியே சொன்னாலும், இன்னும் கொஞ்சம் வண்ணம்

தீட்டிச் சொன்னாலும்கூட, அதில் ஒரு வார்த்தை, வித்யா நம்பமாட்டான். வேண்டுமானால், தாராளமாய் முயற்சி செய்துபார். உன்னைப் பற்றிய, அவனது இப்போதைய அபிப்பிராயம் தெரியுமல்லவா? நீ; என்ன முயன்றாலும், ஒரு பயனுமிராது. கொஞ்சம் யோசித்துப் பார். உன் பிறந்தநாளைப் போல, இன்னும், எத்தனை நாட்களை, நீ தாங்குவாய்? வீணாக, இந்தக் கஷ்டம், நீ, பட்டுத்தான் ஆக வேண்டுமா? நினைக்க எனக்கே பாவமாக இருக்கிறதே!"

"முதலைக் கண்ணீரா? பாதகா! அப்படிப் பாவப் படுகிறவர் பேசாமல் எங்கள் வாழ்வை விட்டு விலகிக்கொள்வதுதானே?" என்றாள் அவள், சுள்ளென்று.

"அங், அது எப்படி முடியும்? அப்புறம், உன்னை விட்டுவிட்டோமே என்று நானல்லவா, கஷ்டப்பட வேண்டும்? அது, நடக்காத காரியம். அய்யோ டாவம் என்று. உனக்கு ஒரு இலகு வழி சொல்லிக் கொடுத்தேன். அவ்வளவே. மற்றபடி, என்னிடம் கஷ்டப் படாமல் வருவதோ, அன்றிக் கஷ்டப் பட்டுவிட்டு, அதன்பின் வருவதோ, எதுவானாலும், உன் விருப்பம். ஆனால், ஒன்று மட்டும் நினைவிருக்கட்டும்., எப்படியும் நீ, வந்துதான் ஆகவேண்டும்." என்றான் அவன், கண்கள் பளபளக்க.

"சீ போடா."

"எ என்னது?"

விழிகள் தெறித்துவிடும் போல, அவன் திகைத்து நிற்க, மாதங்கி அவனைச் சுற்றிக் கொண்டு, வேகமாக அங்கிருந்து வெளியேறினாள்.

இப்போது, மாதங்கி, மிகவும் யோசித்துச் செயல்பட வேண்டியிருந்தது.

நீலநாராயணன் சொன்னதில், ஒரு விஷயம், அவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தாலும்கூட. ஒத்துக்-கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

அதுதான், அவளைப் பற்றிய, வித்யாதரனின் இப்போதைய அபிப்பிராயம்.

பெண்களே மோசமானவர்கள் என்று, மாலி என்கிற சுவர்ணமாலாவினால், வித்யாதரின் மனதில் விதைக்கப்-பட்ட விஷவிதைக்கு, நீலநாராயணன், உரமிட்டு நீரூற்றி, ஒரு மாபெரும் நச்சுமரமாக வளர்த்து வைத்திருந்தான்.

கப்பும்கிளையுமாகப் படர்ந்து விரிந்து, அவன் இதயம் முழுவதையும் அந்த மரம் அடைத்து விட்டிருந்ததால், பெண்களிடம், முக்கியமாக ழனைவியிடம் நல்லதைப் பார்க்க, அவனால் முடியவில்லை.

பார்க்கவைக்க மாதங்கி செய்த முயற்சிகள் எல்லாம், விழல்நீர் என்பார்களே, அதுபோல, நூற்றுக்கு, நூற்றைம்பது சதவீதமாய், அவன் கண்களில், முன்னிலும் அவளை மோசமாக்கிக் காட்டிக் கொண்டு இருந்தன.

வித்யாதரனின் இன்றைய கணிப்பின்படி, மாதங்கி ஒரு சுயநலமி, சந்தர்ப்பவாதி., பொய்சொல்லி, உத்தம நண்பன் நீலனைக் காரணமின்றி வெறுப்பவள்., அவனை விரட்டுவதற்காக, அவன்மீது அநியாயப் பழியுரைத்தவள்.

இத்தனையையும் சகித்து, அவன், அவளோடு, நல்லபடியாகவே வாழ்கிறான் என்றால், அதுகூட, அவனுடைய உத்தம நண்பன், நீலனின் புத்திமதிப்படிதான்.

இப்படி நினைத்துக் கொண்டு இருப்பவனிடம் சென்று, நீலநாராயணனைப் பற்றி, மேலும் குற்றம் கூறினால், அப்புறம், அவன், அவள் முகத்தில் விழிப்பதே, அரிதாகிவிடும்.

ஆனால், சும்மா இருப்பதும், நிச்சயமாக, ஆபத்தாக முடியக் கூடும். ஏனெனில், நீலன் அப்படிப் பட்டவன்.

எனவே, ஒருநாள் மாலை, காஃபியைக் கொடுத்துவிட்டு, மெல்லக் கணவனிடம் பேச்செடுத்தாள். "பாருங்கள்

வித்யா, உங்களிடம், ஒரு விஷயம் சொல்ல வேண்டும். வந்து... ஒருவன், சற்று சாதாரண நிலையில் இருப்பவன், கொஞ்ச நாட்களாக, என்னிடம்,... வாலாட்ட முயற்சிக்கிறான்..."

ஒரு காதல் கணவன் இப்போது, துப்பாக்கியைத் தூக்குவான், குறைந்த பட்சம், சட்டையை மடக்கிவிட்டுக் கொண்டு, 'எங்கே அவன்' என்றாவது, கிளம்புவான், என்பது, மாதங்கியின் கருத்து. வித்யாதரன், அப்படிக் கிளம்பும்போது, நீலனைக் கையும் களவுமாகப் பிடிப்பதற்கு; வழி வகுத்து, உள்ளூர, ஒரு திட்டமும் தீட்டியிருந்தாள்.

ஆனால், "பெரிய இடத்துப் பெண்கள் என்றால், இப்படி அப்படி நைச்சியம் பண்ண முயற்சிக்கத்தான் செய்வார்கள். வசமாகிவிட்டால், பணம், பொருள், என்று வேண்டியது பெறலாமே. இனம் கண்டு, ஒதுங்கியோ, எச்சரித்தோ, நிலைமையைச் சமாளித்து வாழ, உனக்கே தெரிய வேண்டும்." என்று, வாழும்முறை பற்றி, அவளுக்குத்தான், அவள் கணவன், எடுத்துச் சொன்னான்.

மாதங்கி எதிர்பார்த்தது என்ன, அவள் கணவன் சொல்வது என்ன, என்று உள்ளூர எரிச்சல் படும்போதே, அவளுக்கு, இன்னொன்று தோன்றியது. நீலனும், இந்த எண்ணத்தில்தான், அவளை வசப்படுத்த முயற்சிக்கிறா-னோ? பணம், பொருள், பலவும் தாராளமாகக் கிடைக்கும் என்று...

ஆனால், இப்போதே, வித்யாதரனைக் கைக்குள் போட்டுக்கொண்டு, அவன் அப்படித்தானே பணமாகவும், பொருளாகவும், நிறையப் பெற்றுக்கொண்டுதானே, இருக்கிறான்? இதற்குமேல் அவளுக்கும், இப்படி அசிங்கமாய், வலைகட்ட வேண்டுமா? ஒருவேளை, மாதங்கி தடுத்துவிடுவாளோ, என்று பயமா? அவளை,

ஒருவிதமாய் மாட்டி வைத்துவிட்டால், பிறகு, பிரச்சினையே இன்றி வாழலாம் என்கிற எண்ணமா?

பணத்துக்காக, என்னவெல்லாம் செய்கிறான், இந்தப் பாவி!

அவள் மனதிலிருந்த அருவருப்பு, முகத்தில் பிரதிபலித்து விட்டதோ, என்னவோ, "அப்படி என்ன முகச் சுளிப்பு? உங்கள் பெண்களில், வெறும் ஆசைநாயகிகளாகவே, எத்தனை பேர் வாழவில்லை? அதையே, ஆண்கள் செய்தால் மட்டும், முகத்தை, அப்படிச் சுளுக்குவீர்-களாக்கும்? தப்பைப், பெண் செய்தால், பாவம் அந்தப் பெண், அவளுக்கு, வாழ வேறு வழியே இல்லை, என்று பரிதாபம் வேறு பட்டுக் கொள்வீர்கள். சரியான முரண்பாட்டுப் பிறவிகள் என்று நீலன் சொல்வது சரியாகத்தான் இருக்கிறது." என்றான், வித்யாதரன், ஏளனமாக.

'நீலன் சொல்வது'

அதற்குள் வேலையைத் தொடங்கிவிட்டானா? அல்லது, எப்போதுமே, அவன், வித்யாதரிடம், இப்படித்தான் பேசுவதா?

"உங்களுக்கு என்ன தோன்றியது?"

"என்ன கேட்கிறாய்? எதைப்பற்றி?"

துணிந்து, "நீலன் சொல்வதற்கு முன்னால், பெண்களைப் பற்றி, உங்களுக்கு என்ன தோன்றியது என்று கேட்டேன்." என்று, மாதங்கி விளக்கினாள்.

தோளைக் குலுக்கிவிட்டு, காலி காஃபிகப்பைக் கீழே வைத்தான், அவன். "நான் என்ன நினைத்திருந்தாலும், அதெல்லாம் தப்பு என்றுதான் மாலி, தெளிவாக நிரூபித்துவிட்டாளே. இப்போது, எனக்கும், நீலனுக்கும் ஒத்த கருத்துதான். இதை ஏன்..ஓகோ, என்ன வீண் பயம்.

இதற்காகவெல்லாம், உன்னை, நான் ஒதுக்கி விடமாட்டேன்., கவலைப் படாதே." என்றவன், குனிந்து, அவள் நெற்றியில், லேசாக முத்தமிட்டான்.

அதை, அவள் உணருமுன்பாகவே நிமிர்ந்து, "இரவு எனக்காகக் காத்திராமல், சாப்பிட்டுப் படுத்துவிடு, மாதங்கி நீலனும், நானும், வெளியே போகிறோம், வர, நேரமாகும்." என்றவன், தன்வேகநடையுடன், வெளியேறிச் சென்று-விட்டான்.

தடுக்கும் வகையறியாமல் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள், அவள்.

அந்தப் பாவி, இன்னும் என்னென்ன விஷத்தை எல்லாம், ஏற்றப் போகிறானோ?

பாவி மாலி. உன்னால், எனக்கு, என்னென்ன அவலம் எல்லாம் நேரப் போகிறதோ! பெண் என்றாலே நம்பக்கூடாது என்கிற எண்ணத்தை என் கணவனுக்கு உருவாக்கி வைத்துவிட்டாயே. என் ஒரு வார்த்தையைக் கூட நம்பாத கணவனை வைத்துக் கொண்டு, இந்தப் பிரச்சினையை நான் எப்படிச் சமாளிக்கப் போகிறேன்?

அங்கே இல்லாதவளை நொந்து, தன்னிரக்கத்தில் மூழ்கி, இதனாலெல்லாம், ஒரு பயனும் இல்லை என்று கண்டு, ஒருவாறு தெளிந்த பிறகு, மாதங்கி, அடுத்து என்ன செய்வது என்று யோசித்தாள்.

கொண்டவன் துணையில்லாதபோது, வீட்டுப் புறாவான ஒரு பெண்ணின் முயற்சி, குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டுகிற மாதிரிதானே?

பெரிதாகச் செய்வதற்கு எதுவுமில்லை என்று உணர்ந்தபோது, அவளுக்கு, மனதுள், மிகவும் கஷ்டமாகத்-தான் இருந்தது.

ஆனால், அதற்காக, நடப்பது நடக்கட்டும் என்று, சும்மா இருந்துவிட முடியாதே.

நேரே தாக்கும் தைரியம் இல்லாவிட்டாலும், பின்னாலேயே அலைந்து, திரிந்து சோர்ந்த சமயம் பார்த்து, விழுந்து அடிக்கும் கழுதைப்புலி மாதிரி, நீலநாராயணன், இங்கே சுற்றிக் கொண்டு இருக்கும் வரை, மாதங்கி, மிகுந்த எச்சரிக்கையோடுதான், இருக்க வேண்டும்.

இந்தக் குடும்பத்தில் வாழ்வதில், சில சங்கடங்களை, மாதங்கி அனுபவித்தபோதும், அதில் ஒரு பெரிய வசதியும் இருந்தது. தனிமையில் ஒரு வில்லனிடம் மாட்டிக் கொள்ளும் வாய்ப்பு, மிகவும் குறைவு. எந்த நேரத்திலும், மாதங்கி, மாமியாரிடமோ, ஓரகத்தியிடமோ போய் உட்கார்ந்து கொள்ளலாம். மற்றபடியும், ஒரு குரல் கொடுத்தால், யாராவது வந்துவிடுவார்கள்.

எனவே, இந்த வீட்டினுள் இருக்கும்வரை, தனக்கு எந்த ஆபத்தும் நேராது என்கிற தைரியம் மாதங்கிக்கு இருந்தது.

வெளியே செல்லும்போதும், நீலனின் சூழ்ச்சியினால், அவனிடம் தனியே மாட்டிக்கொள்ள நேர்ந்தாலும்கூட, தன் சுயபலத்தாலேயே, அவனிடமிருந்து தப்பிவிட முடியும் என்ற தைரியமும், அவளுக்கு இருந்தது. ஆனால், நீலன் ஏதாவது மயக்கமருந்தைப் பயன் படுத்தினால்?

பேசாமல் வீட்டிலேயே இருந்துவிட்டால், இந்த மாதிரிப் பிரச்சினைக்கே இடமிராது என்று, அப்படியே இருந்தவளுக்கு, ஒரு நாள், வித்யாதரன் இல்லாத நேரத்தில், நீலன், வீட்டினுள் வந்து நிற்கவும் தூக்கிவாரிப் போட்டது.

21

நல்ல வேளையாக, நீலன் வீட்டினுள் வந்த சமயத்தில், மாதங்கி, அவளுடைய மாமியாருடன் உட்கார்ந்து, மணிப்பை போட்டுக் கொண்டிருந்தாள்.

"ஒரு முக்கியமான பத்திரம், நாளைக்கு, நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவேண்டியது, வித்யா, வீட்டில், விட்டுவிட்டு வந்துவிட்டானாம் என்னைக் கொண்டு வரச் சொன்னான், ஆன்ட்டி." என்று, ரொம்ப நல்லவனைப் போல, கோகிலத்திடம் விளக்கியவன், மாதங்கியிடம் திரும்பி, "உங்கள் அறையில், வித்யா அலமாரியில் இருக்கிறதாம், 'சிஸ்டர்' கூட வந்தீர்கள் என்றால். இருவருமாய்ப் போய் எடுத்து வந்து விடலாம்." என்று அவளை, உடன் வருமாறு, அழைத்தான்.

"நீதிமன்றத்தில், நாளைதானே கொடுக்க வேண்டும்? வித்யாவே வந்து எடுத்துக் கொள்ளட்டும்." என்று அசையாமல் உட்கார்ந்து, அலட்சியமாய் உரைத்தபடி, கோர்ப்பதற்கு, அடுத்த மணியை எடுத்தாள், மாதங்கி.

"ஆனால், இன்றே அதை வக்கீலிடம் காட்ட வேண்டுமே" என்றான், நீலன்.

"என்ன பத்திரம் என்று சொல்லுங்கள், நானே எடுத்து வந்து விடுகிறேன். அனாவசியமாகப் பாவம், உடம்பு சரியில்லாதவர், நீங்கள் அலைவானேன்?" என்றாள், அவள் கரிசனமாக.

ஆனால், நீலன் அப்படி எளிதாக விட்டுவிடுவதாக இல்லை. "சரிதான். அது, என்னவென்று விளக்கி, நீங்கள் அதைக் கண்டுபிடித்து, எடுத்து வருமுன், பொழுது விடிந்துவிடும். அதைவிட, நானே எடுத்துக் கொள்கிறேன்., வாருங்கள், 'சிஸ்டர்' என்றான். "சொல்லுங்கள் அம்மா." என்று கோகிலத்தையும் துணைக்கழைத்தான்.

அப்பாவி கோகிலமும், நீலனின் சூதறியாமல், "அவன் சொல்வது சரிதானேம்மா, தம்பியைக் கூட்டிப்போயே, எடுத்துக் கொடுத்துவிடேன்." என்று மருமகளிடம் கூறினாள்.

மாமியாரிடம் வாதாடிக் கொண்டிருக்க மனமில்லாத-தோடு, இந்த வீட்டில் நீலனால் ஒன்றும் செய்துவிட

முடியாது என்ற நிச்சயத்தினாலும், மாதங்கி, எழுந்து, சென்றாள்.

பேசுவது, யார் காதிலும் விழாத இடம் சென்றதும், அவள் நினைத்தது போலவே, "என்ன, ஒரு பதிலையும் காணோம்மே?" என்று கேட்டான், நீலன்.

இவனுக்கெல்லாம், உச்சந்தலையில் அடித்துச் சொன்னால்தான் புரியும்போல, என்று எண்ணிவளாய், "முதலும் கடைசியுமாக, அன்றே பதில் கொடுத்தாயிற்று." என்று அழுத்தமான குரலில் திடமாக இயம்பியவள், "தாயம்மா." என்று உரக்க விளித்தாள்.

"என்னாங்கம்மா?" என்று வந்த வேலைக்காரியிடம், "போய்த் துடைப்பத்தை எடுத்துக் கொண்டு வா. மேலே அறையில், தூசாக இருக்கிறது நன்றாக அடித்துப் பெருக்கித் தள்ளவேண்டும்." என்று உத்திரவிட்டாள்.

"சரிங்கம்மா" என்று, வேலைக்காரி துடைப்பம் எடுத்துவரச் சென்றதும், ஆத்திரத்துடன், "என்னைத் 'தூசு' என்று சொல்ல உனக்கு என்ன துணிச்சல்? இதற்கெல்லாம், நீ, ரொம்பவே படப்போகிறாய்." என்று எச்சரித்தான், நீலன்.

அலட்சியமாய் 'உச்'சுக் கொட்டிவிட்டு, மாதங்கி, மேலே நடக்கவும், "பாதுகாப்பாக வீட்டுக்குள் இருந்துவிட்டால், தப்பிவிடலாம் என்று நினைத்தாயா? என் துருப்புச் சீட்டு, வித்யா, உன் புருஷன், தெரியுமல்லவா? உனக்கு வேறு ஒருகாதலன் இருந்தான், காசு, பணத்துக்கு ஆசைப்பட்டு, அவனை 'அம்போ' என்று விட்டுவிட்டு, இவனை மணந்தாய் என்று சொல்லுவேன். வித்யா நம்பமாட்டான் என்று நினைத்தாயானால், நீ, ஒரு முட்டாள். மாதங்கி உன் கடந்தகாலம் பற்றி அவனுக்கு என்ன தெரியும்சொல்லு? உன் பெற்றோர் திடீரென்று இறந்ததிலிருந்து, உன் துயர வரலாறு பற்றி முழுமையாகத்

தெரிந்தால், உன் மேல் இரக்கம் வந்து, வீட்டில், உனக்காகப் பரிந்து பேசத் தோன்றிவிடுமோ என்ற பயத்தினாலேயே, அவன், அது பற்றி, உன்னை, அவன் பேசவிட்டதே இல்லையே. உன்னைப் பற்றிய, அவனது இன்றைய கருத்தும் உனக்குத் தெரிந்திருக்கும். இப்போது, கோவையிலிருந்து, நம்பகமான தகவல் கிடைத்தது என்று, இதை, நான் சொன்னால், உன்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடமாட்டானா? யோசித்து நட." என்று துடைப்பத்துடன் வேலைக்காரி வந்து விடுமுன், சொல்லி முடித்துவிட எண்ணி, வேகமாகச் சொன்னான், அவன்.

மாதங்கியின் உள்ளம் கலங்கிப் போயிற்று. ஏற்கனவே, அவள் பணத்துக்காகவும், அவன் குடும்ப அமைதிக்-காகவுமே, மணந்தார்களே தவிர, இருவருக்குமிடையே, காதல் என்று எதுவும் கிடையாது என்று வித்யாதரன், அவளிடமே, தெளிவாகச் சொல்லியிருக்கிறான்.

நண்பன் சொல்லே, அவனுக்கு வேதம்.

நீலனின் இந்தப் பொய்யை நம்பி-நீலன் சொன்னால் வித்யா நம்பத்தான் செய்வான். அப்படி நம்பி, அவளை, இங்கிருந்து வெளியேற்றினால்?

நெஞ்சு நடுங்கியது, அவளுக்கு. ஆயினும், தன் கலக்கத்தை நீலன் அறிவது கூடாது என்று உணர்ந்து. "வித்யா, என்னை, ஒருநாளும் வீட்டைவிட்டு வெளியேற்ற மாட்டார்." என்றாள் மாதங்கி. சொல்லும்போதே, அதன் உண்மை உணர்ந்து, அவளது குரல் திடமுற்றது. "கார்த்தவீரியார்ஜுனனைக் கண்ணால் கண்டதினாலேயே, மனைவியின் கற்பு கெட்டுவிட்டது என்று அவளைக் கொல்லும்படி, மகனுக்கு உத்திரவிட்ட முனிவரல்ல, வித்யா. மறுமணங்கள் சகஜமாகிவிட்ட இந்தக் காலத்தவர். பொறுப்பற்றவரும் அல்ல. உன்னைப் போன்ற ஒரு நன்றி கெட்ட பதரைக்கூடக் காப்பாற்றுகிற என் கணவர், நீ,

சொல்லக்கூடிய பொய்களை நம்பினாலும் கூட, அதற்காகப் பொறுப்பற்று, தொட்டுத் தாலிகட்டிய மனைவியான என்னைக் கைகழுவி விடமாட்டார். இது, நிச்சயம். இப்போது, பத்திரம் வேண்டுமா, வேண்டாமா?" என்று அழுத்தத்துடன் வினவினாள்.

அதற்குள், வேலைக்காரியும், துடைப்பத்துடன் வந்துவிடவே, வேறெதுவும் பேசாமல், பத்திரத்துடன், நீலநாராயணன், அங்கிருந்து வெளியேறினான்.

பத்திரம் எடுக்கவென்று, நீலன் வந்து சென்றதிலிருந்து, மாதங்கி, எப்போதும், உள்ளூர ஒரு பயத்துடனே வாழலானாள். அந்தப் பாவி, மீண்டும், எப்போது வந்து, என்னென்ன சொல்லி, மனதைக் கலக்குவானோ?

ஏனெனில், அவள் மனம் கலங்கியிருந்தது, உண்மை.

மணமான புதிதில், அவளது குடும்பம் பற்றிய பேச்சை, வித்யாதரன், ஊக்குவியாததற்கு, மாதங்கி, தன் மனதில், ஒரு காரணம் கண்டு வைத்திருந்தாள். அந்தக் காரணத்தில் அவளிடம், கணவனின், பரிவு, பாசம் எல்லாம் இருந்தன. ஆனால், அதற்கு, நீலநாராயணன் சொன்ன காரணம், அவளை நோகடித்தது. அது, போய்யென்று ஒதுக்கவும் முடியாது. ஏனெனில், குடும்ப அமைதிக்காக, அவளுடைய கணவன், எது வேண்டுமானாலும் செய்யக்கூடியவன், செய்வான்.

வருந்திப் பயனில்லாத பல விஷயங்களில், இதுவும் ஒன்று என்று. நன்றாகவே தெரிந்திருந்த போதும், மாதங்கியால், வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

அனால், ஒரு, சிறு, ஆறுதல் நீலனும் இப்போது, குமுறிக் கொண்டுதான் இருப்பான்.

ஏனென்றால், நீலனிடம் அவள் சொன்னது, வெறும் வாய்ச் சவடால், மட்டுமன்று. உண்மையே. வித்யாதரிடம்,

என்ன குறையிருந்த போதும், பொறுப்பைக் கை கழுவுகிறவன் அல்ல. அதிலும், நீலன் கூறியது போன்ற, சில்லரைத்தனமான காரணங்களுக்காக, அவன், மனைவியைத் துறப்பது, நடக்காத காரியம்.

ஆனால், இது, ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு, மாதங்கி, நிம்மதியாக இருக்க முடியாதே.

அதிலும், வித்யா இல்லாத சமயங்களில். வீட்டில் நீலனின் நடமாட்டம் அதிகரிப்பது அவளுக்கு, மிகவும் வெறுப்பாக இருந்தது. அப்படி வரும்போதெல்லாம், ஓர் அரை நிமிடமாவது. அவளைத் தனியே கண்டு, 'என்ன, என்ன?' எனவும், பற்றிக் கொண்டு வந்தது.

அவன் வரவைத் தடுக்க எண்ணி, மாமியாரிடம் சென்றாள். "வித்யா வீட்டில் இல்லாத சமயங்களில், இந்த ஆள், இப்படி அடிக்கடி வருவது, அவ்வளவு நன்றா-யில்லையே, அத்தை." என்று தொடங்கினாள்.

"யாரைச் சொல்லுகிறாய்? நீலனையா? அவன் நல்லபிள்ளை, அம்மா. வித்யாவுடைய சினேகிதன் வேறு, அவன் வந்தால் வந்துவிட்டுப் போகட்டுமேம்மா." என்று, அப்பாவியாய்ச் சொன்னாள், அந்த அன்னை.

இந்தப் பதரெல்லாம் நல்லபிள்ளையா?

மனதில் இருப்பதை அப்படியே வெளிக் காட்ட-முடியாமல், "பார்ப்பவர்கள் தப்பாக எண்ணக்கூடும், அத்தை. அதனால் இந்த ஆளை, வீட்டுக்கு அனுப்ப வேண்டாம் என்று, உங்கள் மகனிடம் சொல்லுங்கள்." என்று அவளைக் கிளப்பிவிட விடாப்பிடியாக முயன்றாள்.

அனால், "ஐயய்யோ.!" என்று, பதறிப் போய்க் கையால், மருமகளின் வாயைப் பொத்தினாள், கோகிலம். "அவனை, ஏதாவது சொன்னால், வித்யாவுக்குக் கோபம் வரும், மாதங்கி. 'என் சினேகிதனுக்கு இல்லாத உரிமையா' என்று,

குதிப்பான். எதற்கு, வீண்வம்பு? நீயே யோசித்துப் பார், நமக்கு, ஒரு காரியம் ஆகவேண்டும் என்றால், அதை நடத்தித் தருகிறவன், வித்யாதானே, அவனைப்போய் எரிச்சல் மூட்டுவானேன்? மேலும், தப்பாக..என்று நினைக்கிற மாதிரி, இங்கே, யார் இருக்கிறார்கள், சொல்லு? அதனால், இருக்கிறபடி, இருக்கட்டும் என்று, பேசாமல் இருந்துவிடுவோமே." என்று கெஞ்சுதலாகக் கேட்டாள்.

வீட்டுப் பெண்களுக்கு, வெளிக்குத் தெரியாமல், எத்தனையோ தளைகள்! அவற்றுள், இதுவும் ஒன்று.

மோட்டார் ஓடவில்லையா, வேலையாள் சரியில்லையா, குடிநீர் வரவில்லையா..இது போன்ற பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டவர், கருணாகரன், கேட்டாலும், சத்யாகர் செய்யமாட்டான். செய்கிற பிள்ளைக்குக் கோபமூட்ட, கோகிலம் தயாராயில்லை.

இவளை வற்புறுத்திப் பயனில்லை.

மாமியாரிடம் நடந்ததைச் சொல்லிவிடலாமா, என்று ஒரு யோசனை தோன்றி மறைந்தது.

அந்த வீட்டில் எந்தவித அதிகாரமும் இல்லாதவள் கோகிலம் என்பதோடு 'அவன் பார்த்தான்' இவன் கண்ணடித்தான் என்று, பாமா, அவ்வப்போது பீற்றுவதையே, அருவருப்பாய் நோக்குகிறவள், அவள். இது, அதைவிட, அசிங்கமான விஷயம்.

ஒருவேளை, வீட்டுத் தலைவியாக, கோகிலம், நீலன் விஷயத்தில், ஏதாவது நடவடிக்கை எடுக்கக் கூடுமானால், சொல்லிப் பார்க்கலாம்தான். ஆனால், அப்படி எதுவும் நடக்காது எனும்போது, எதற்கு, வீணாக?

ஆயினும், பாதுகாப்பு முயற்சியாக, மாதங்கி, வேறு ஒன்று செய்தாள். நீலன் வரும் சமயங்களில், மாமியார் தன்னோடு கூடவே இருக்கவேண்டும் என்று, கேட்டுக்-

கொண்டாள். "நான் இல்லாதவர் வீட்டுப் பெண், அத்தை. யாராவது, என்னவாவது, துணிந்து சொல்லிவிடுவார்கள். நீங்கள், என் கூடவே இருந்தால், அது முடியாதில்லையா? ப்ளீஸ், அத்தை!" குரலில் வருத்தம் தொனிக்க,அவள் கேட்கவும், உருகிப்போய்த் தலையாட்டினாள், அந்த அம்மாள்.

இரண்டு மூன்று தடவைகளிலேயே, விஷயம் புரிந்துவிட, கண்கள் கனன்ற போதும், நீலன், செய்கை-யற்றுத் திரும்பியது, மாதங்கிக்குத் திருப்தியாக இருந்த-போதும், அதிலேயே, அவள் நிம்மதியுற்று விடவில்லை. காலைச் சுற்றிய பாம்பான நீலனின் அடுத்த முயற்சிக்குக் கவனத்துடன் காத்திருந்தாள்.

விரைவிலேயே ஒருநாள், மனைவியை விசித்திரமாக நோக்கி, "நீ, யாரையேனும் காதலித்திருக்கிறாயா?" என்று வித்யாதரன் கேட்டபோது, அவளுள் ஓர் எச்சரிக்கை மணி அடித்தது.

அவன் வாயிலிருந்தே வரட்டும் என்று எண்ணி "க்கும்... உங்களை" என்றாள் விளையாட்டாக.

"ஷ், அதல்ல, மாதங்கி திருமணத்துக்கு முன்பாக காதலித்திருக்கிறாயா என்று கேட்டேன்" என்று வித்யாதரன் விளக்கவும், நீலனின் வேலை என நன்றாகப் புரிந்துவிட, மாதங்கி, கடைக்கண்ணில் கூர்மையுடன், கணவனை நோக்கினாள்.

22

இப்படி ஒரு குசும்பு செய்யப் போவதாக, நீல-நாராயணன், ஏற்கனவே மிரட்டியிருந்ததால், கணவனின் கேள்வியால், மாதங்கி, அதிர்ச்சியோ, ஆச்சரியமோ அடைந்து விடவில்லை.

மாறாக, இந்த மாதிரி ஒரு நிலைமை ஏற்பட்டால், அதை நல்லவிதமாகச் சமாளிக்கப் பலவழிகள் யோசித்து வைத்திருந்தாள்.

நீலனின் கூற்றை, அவள் மறுத்துப் பயனிராது. நண்பன் வார்த்தை வேதம் என்பதோடு, அவன் கணிப்பில், பெண்கள்தான், இலகுவாகப் பொய் சொல்லுகிறவர்கள் ஆயிற்றே.

ஆனால், வித்யாதரன் பல முற்போக்குச் சிந்தனைகளும் உள்ளவன் என்பதால், இதை, வேறுவிதமாய்ச் சமாளிக்க அவள் திட்டமிட்டிருந்தாள்.

ஆனால், என்னதான் முற்போக்குவாதி என்றாலும், வித்யாதர் ஆண்மகன், அதிலும் கணவன் ஆயிற்றே, என்று சஞ்சலமுற்று, மாதங்கி சற்றே தயங்குமுன், "என்ன, பேச்சையே காணோம்?" என்றான் அவன்.

கண்களில் லேசான சவாலுடன் நோக்கி, "ம் ம் 'மாலி'கள், பெண்ணினத்தில் மட்டும் தானா, இருப்-பார்கள்? கணவனுக்குப் பொருத்தமாய், நானும், ஓர் 'ஆண்மாலி'யிடம், ஏமாந்திருக்கக் கூடாதா?" என்று கேலிக்குரலில், வினவினாள்.

உதட்டைக் கடித்தபடி, வித்யாதரன் யோசனையாக நிற்கவும், "முன்பே நானும் சொல்யிருப்பேன். ஆனால், என் பழைய வாழ்வு பற்றிப் பேசினால். உங்களுக்குப் பிடிப்பதில்லையே, என்றுதான் வாயை மூடிக் கொண்டி-ருந்தேன்." என்று வாழைப் பழத்தில் ஊசி இறக்கிவிட்டு, "அத்தோடு, நீங்கள் முற்போக்குவாதி, இதைப் பெரிதாக எண்ண மாட்டீர்கள் என்பது வேறு சேர்ந்துகொள்ள, எனக்குச் சொல்லத் தோன்றவே இல்லை."என்று முடித்தாள்.

"அது... என்று தயங்கிவிட்டு, வித்யாதரன் லேசாக

முறுவலித்தான். பிறகு, தன் வழக்கமான வெளிப்படைப் பேச்சாக, "முற்போக்குப் பேச்சு, எண்ணம் எல்லாம், தன் மனைவி என்று வரும்போது, கொஞ்சம் ஆட்டம் கண்டுவிடும் போல உனக்கும், இப்படித்தானே, இருந்திருக்கும்? மடத்தனமாக, மாலி பற்றிப் பேசி, உன்னை வருத்தி விட்டேனே. சாரிம்மா." என்று, அவளை, ஆதரவாய் அணைத்து, முத்தமிட்டான், அந்தக் கணவன்.

உள்ளம் துள்ளியது, மாதங்கிக்கு.

பெரிதாக, 'என் துருப்புச் சீட்டு, உன் புருஷன்' என்றானே இப்போது, வந்து, பார்க்கட்டும்.

என்னவோ, விரட்டிவிடுவான், கழுத்தைப் பிடித்து, வெளியே தள்ளிவிடுவான் என்றெல்லாம் சொல்லிக் கலங்கவைத்தானே. ஆனால் நடந்தது, என்ன, என்ன என்று அவள் மனம் துள்ளாட்டம் போட்டது.

ஆனால், விரைவிலேயே, தன் களிப்பை, மாதங்கி கட்டுப் படுத்திக் கொண்டாள்.

தனக்காகக் கூடு கட்டத் தெரியாவிட்டாலும், கட்டிய கூட்டைப் பிய்த்தெறியும் குரங்கு போன்றவன், அந்த நீலன். ஒன்றில் வென்றதிலேயே உச்சி குளிர்ந்துவிடக்கூடாது. இந்தத் தோல்வி, அவனுக்கு இன்னமும், வெறியூட்டக்-கூடும்.

அடுத்த முயற்சியாக, நீலன், அவர்களது அந்தரங்க வாழ்வில் குறுக்கிட்டான்.

"இப்போதைக்கு, நமக்குக் குழந்தை வேண்டாம், கொஞ்சகாலம் தேனிலவைத் தொடர்ந்துவிட்டு, அப்புறம், பெற்றுக் கொள்வோமே." என்ற வித்யாதரன், அத்துடன் நிறுத்திக் கொண்டிருக்கலாம். தொடர்ந்து, "நீலன்கூட அப்படித்தான் சொல்லுகிறான்" எனவும், மாதங்கிக்கு, உள்ளே கனன்றது.

அடக்கமாட்டாமல், "இதிலெல்லாமா, அடுத்தவரிடம் யோசனை கேட்பீர்கள்?" என்று கேட்டுவிட்டாள்.

"யோசனை கேட்கவில்லையே. தற்செயலாக இந்தப்-பேச்சு வந்தபோது, நீலன் அபிப்பிராயம் சொன்னான். அவ்வளவே. ஆனால், நீலன், நமக்கு, அடுத்தவன் அல்ல நினைவிருக்கட்டும்." என்றான் அவன், தெளிவாக.

உடனே பெற்றுத்தான் தீரவேண்டும் என்கிற தீவிரம், மாதங்கிக்குக் கிடையாது என்ற போதும், இதில், நீலன் தலையிட்டதுதான் ஆத்திரமாக இருந்தது. 'தற்செயலாகப் பேச்சு வந்ததாமா?'

'ராஸ்கல்' என்று செய்கையற்ற சினத்துடன் குமுறும்-போதே, இவனை, என்னவாகுவெல்லாம் எண்ணுகிறோம் என்று, மனம் சிந்தித்தது.

வைக்கோல்போர் நாய், கழுதைப்புலி, குரங்கு, பதர். இத்தனையும் அவனுக்குப் பொருத்தமானவையே. ஆனால் அவளுடைய கணவனுக்கு, அது புரியவில்லையே அதுதான், சோகம்.

"என்ன, அம்மா ஆவது, தள்ளிப் போகிறதே என்று, வருத்தமா?" என்று, அப்பாவிபோல, நீலன் கேட்டபோது, அவனை அறையலாமா என்று வந்தது. அவளுக்கு. ச்ற்றுத் தள்ளி நின்ற கணவன் கண்பார்வையில், அது முடியாது என்பதால், பல்லைக் கடித்துக் கொண்டு, பேசாமல் நின்றாள்.

வீட்டுக்கு வந்தாலும், மாதங்கியிடம் தனியாகப்-பேசமுடியாமல் போகவே, நீலன், டெலிஃபோனைப் பயன்படுத்தத் தொடங்கினான்.

பொதுவாக, அந்த வீட்டில், ஃபோன் வந்தால், எடுத்துப் பேசுவது, மாதங்கிதான்.

பாமாவுக்குத் தனியாக 'செல்போன்' உண்டு. உண்ணும்,

உறங்கும் நேரம் போக, வீட்டில் இருக்கும்போதெல்லாம், பாமா அதனோடுதான் ஐக்கியமாகியிருப்பாள். வீட்டுஃபோன் எவ்வளவு நேரம் அலறினாலும் அவள் அதைக் கண்டுகொள்வதே கிடையாது. கோகிலத்துக்கு வயது. வேலையாட்களுக்கு, விஷயம் தெரியாது.

எனவே, ஃபோன் வந்தால், எடுத்து விஷயமறிந்து, பதிலுரைப்பதும், பேசியது யார் என்ன என்று குறித்து வைப்பதும், எல்லாமே, மாதங்கிதான். அதைத் திறம்படச் செய்கிறாள் என்று, வீட்டுத் தலைவரிடமிருந்து, அவளுக்குப் பாராட்டுக் கூடக் கிடைத்ததுண்டு.

இதையே நீலன் இப்போது, தன் வசதிக்குப் பயன்படுத்திக் கொண்டான்.

அவன் குரல் கேட்டதும், ரிசீவரை வைத்துவிடுவது, பட்டனை அமுக்கிக் கொண்டு கேளாதது போல நடிப்பது போன்ற யுக்திகளை, மாதங்கி பலமுறை கையாண்ட-போதும், அடியோடு, இந்தத் தொல்லையைத் தவிர்க்க, அவளால் முடியவில்லை. அதிலும், அவள் கணவனே ஏதாவது சொல்லச் சொன்னதாக, நீலன் கூறும்போது, அவள் கேட்டுத்தான் ஆகவேண்டியதாயிற்று.

அப்போதும், அவன் வேறு பேசினால், அவள் ரிசீவரை வைத்துவிடுவது உண்டு. ஆயினும், அதற்குள்ளாக நீலன் பேசிய சில வார்த்தைகளே, மாதங்கியின் காதல் வாழ்வை நாசம் பண்ணப் போதுமானதாக இருந்தது.

'இரவில், என்னை நினைத்துக் கொள்' என்பான், 'அந்தமாதிரிப் பெண்களிடம், நான் படித்ததில் சிலது, வித்திக்குக் கற்றுக் கொடுத்தேனே, எப்படி இருந்தது?' என்று கேட்பான்.

வித்யாதரன் நெருங்குவதே, வெறுப்பாக இருக்கத் தொடங்கிவிட, அவனே, "என்னடா, உடம்பு ஏதும் சரியில்லையா?" என்று, கேட்கும்படி ஆயிற்று.

பாவி, பழிகாரா, என்று மனதிற்குள் குமுறினாள், மாதங்கி வெளியே, "ஆமாம். தலைவலி" என்றாள்.

சிலதினங்களிலேயே, "இப்போதெல்லாம், உனக்கு, அடிக்கடி தலைவலி வருகிறதே" என்று, கணவன் கூறும் அளவுக்கு நிலவரம் ஆயிற்று. "எதற்கும், மருத்துவரைப் போய்ப் பார்க்கலாம்" என்று, பிடிவாதமாய் அழைத்தும் சென்றான்.

ஆனால், மருத்துவ ரீதியாகப் பிரச்சினை இல்லை, என்று ஆகவும், ஒருவிதமான முறுவலுடன், "ஆசை அறுபது நாள் என்று, ஆண்களுக்குச் சொல்லுவார்கள். அடுத்த வரி, பெண்களுக்காகச் சொன்னதே என்று, இப்போது தோன்றுகிறது" என்றான் அவன் கேலியாக.

மனதை அடக்கிக் கொண்டு அவனோடு இயல்பாக இருக்க முயன்றாள் மாதங்கி.

நீலன் டெலிபோனில் பேசும் போது அதை டேப்செய்து அதைக் கணவனிடம் கொடுக்கலாமா என்று சில தினங்கள் வெகு தீவிரமாக யோசித்துப் பார்த்தாள். ஆனால், அது தன் குரலே அல்ல என்று சத்தியமே செய்துவிடுவானே, அந்தப் பாவி.

முதலில், மாதங்கியின் பேச்சை நம்பி, வித்யாதர், அந்த 'டேப்'பைக் காது கொடுத்து கேட்பதே, சந்தேகம். நண்பனைப் பற்றிக் குற்றச்சாட்டு என்றதுமே, அவன் கொதிநிலைக்குப் போய்விடுவானே!

ஒரு வீண் முயற்சி செய்து, இருக்கும் உறவையும் கெடுத்துக் கொள்ளக்கூடாதே, என்றெண்ணி, அந்த யோசனையைக் கைவிட்டாள், அவள்.

அடுத்து, "உன் கணவனுக்கு, ஒரு புதுப் பழக்கம், அறிமுகப்படுத்தி இருக்கிறேன்" என்றான், நீலன்.

மேனகை என்ற அந்தப் பெண்ணைப் பற்றி, வித்யாதரன்,

ஏற்கனவே, மனைவியிடம் கூறியிருந்தான். "வெளியூரில், நீலனுக்கு, ஒருதரம் உடம்பு சரியில்லாமல் போனபோது, ரொம்பவும், உதவி செய்தாளாம். டூவி தொடர் சம்பந்தமாக, இங்கே வந்தாளாம். ஹோட்டலில் தங்க விருப்பம் இல்லையாம். சரி, நம் 'கெஸ்ட் உறவுசி'ல் தங்கிக் கொள்ளட்டும் என்றேன். நீலனுக்கு, அவ்வளவு உதவியவளுக்கு, நாமும் ஏதாவது, செய்தாக வேண்டும் இல்லையா?" என்றிருந்தான்.

ஆமாம். அதற்காகவே, அவளைத் தூக்கில் போடலாம் என்று, மனதில் எண்ணிக் கொண்டாள், மாதங்கி.

அவளது தோற்றத்தைப் பற்றிக் கூட, "உன்னைப் போல் அழகி என்று, அவளைச் சொல்ல முடியாது, மது, ஆனால் ஒரு. ஒருமாதிரியான கவர்ச்சி இருக்கிறது. வயதும், என்னைவிட ஒன்றிரண்டு, கூடுதலாகவே; இருக்கக் கூடும்." என்று விவரித்திருந்தான்.

எனவே, "தெரியும்." என்றாள் அவள், சுருக்கமாக.

நமுட்டுச் சிரிப்புடன், "தெரியாத விஷயமும் இருக்கிறது." என்றான் நீலநாராயணன். "மாமுனிவரான விசுவாமித்திரரையே மயக்கிவிட்ட அந்த மேனகை போலவே, இவளும், கை தேர்ந்த தொழில்காரி, நினைத்து விட்டாளானால், இவ்விடம் இருந்து, யாரும் தப்பவே முடியாது, என்பதோடு, இப்போது, என் உதவியோடு, வித்யாவுக்குக் கண்ணி வைத்திருக்கும் மேனகை, ஒரு 'எய்ட்ஸ்' நோய்க் களஞ்சியம் என்பதெல்லாம், உனக்குத் தெரிந்திருக்க வேண்டிய, புத்தம்புது விவரங்கள்.!" என்று முடித்தான், அவன்.

23

அந்தப் பெண் மேனகையைப் பற்றி, நீலநாராயணன் கூறிய விவரங்களைக் கேட்டதும், நெஞ்சுக்கூடு காலியா-

வது போல, மாதங்கி உணர்ந்தது, ஒருசில வினாடிகளே.

அதற்குள் அவள்மனம், மனம் என்பதை விட, மூளை எனலாம்., அவள் அயர்ந்து நின்ற, அந்தச் சில வினாடி-களுக்குள், அவளது மூளை சுதாரித்துக் கொண்டு, அவளை இடித்துரைத்தது.

எவனோ, ஒரு பொறுக்கி, எவளைப் பற்றியோ, என்னவோ சொன்னான் என்று, அவள் இப்படியா கலங்குவது?

அந்தப் பெண் எவ்வளவு பெரிய மேனகையாகத்தான் இருக்கட்டுமே.! அவள் விரிக்கும் கண்ணியில், அவள் கணவன், ஏன் விழப் போகிறான்?

அவசியம் இல்லையே!

"என்ன பதிலையே, காணோம்? 'எய்ட்ஸ்' வந்து, உன் கணவன் எப்படி நொந்து, எப்படிச் சாகப்போகிறான் என்று கற்பனை செய்து, பார்த்துக் கொண்டிருக்கிறாயா? அல்லது, நல்லபடியாக, அதைத் தவிர்க்கும் வழிக்கு வரத் தயாராகிக் கொண்டிருக்கிறாயா?" என்று, குரலில் எக்களிப்புடன், கேட்டான், அவன்.

"அவசியமற்ற கற்பனைகளில் நான் ஈடுபடுவது இல்லை." என்றாள் மாதங்கி, அழுத்தம்திருத்தமாக. "என் கணவர், உன்னைப் போல், 'அலைகிற' ஆள் இல்லை. தன்னை எப்படிக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று வித்யாவுக்குத் தெரியும். அதனால், அனாவசியமாக உளறிக் கொட்டாமல், ஃபோனைக் கீழே வை." என்று பேச்சை முடித்தவள், அதற்குமேல், அவன் பேச இடமளிக்காமல், ரிசீவரை வைத்துவிட்டாள்.

நீலநாராயணனிடம் பேசும் போது, மாதங்கிக்கு, மனதில், அதேதிடம், இருக்கத்தான், செய்தது.

வித்யாதரன் நல்லவன், ஒழுக்கம் தவறாதவன், எவளோ

ஒருத்தி, வலை வீசினாலும், அதில் சிக்கிக் கொள்ளும் அளவுக்கு அவன் முட்டாளோ, தரம்கெட்டவனோ அல்ல என்கிற நிச்சயத்துடன் தான் அவள், அவ்வளவு தைரியமாகப் பேசினாள்.

இணங்கி வந்த மாலியிடமே, அவளிடம் மயங்கிக்கிடந்த காலத்தில் கூட, தன்னை இழக்காதவன், அவள் கணவன், அப்படியிருக்க, இப்போது, எங்கிருந்தோ வந்த ஒரு நீலன் சொல்படிப் பார்த்தால், ஒரு தரம் கெட்டவளுடனா, அவன் பிழை புரிந்துவிடப் போகிறான்?

நிச்சயமாக மாட்டான்.

இந்தத்திடம், அவளுக்கு, இரவுவரை, முழுமையாக இருந்தது.

இரவில், வித்யாதரன், வெகு தாமதமாக வந்து, அந்த மேனகா, நீலனோடு, மூவருமாகப் பேசிக் கொண்டிருந்ததில் நேரமாகிவிட்டதாகக் கூறவும், அவளுக்குக் கொஞ்சம் ஒருமாதிரி இருந்தது.

அதிலும், "அந்த மேனகா, எவ்வளவு கலகலப்பாக, சிரிக்க சிரிக்கப் பேசுகிறாள், தெரியுமா?" என்றபடி, அவன், இரவுக் குளியலுக்குப் போனபோது, மாதங்கிக்கு ரொம்பவே, மனதுக்கு உறுத்தலாக இருந்தது.

மெல்லமெல்ல; அந்த மேனகா, வித்யாவைப் பிடித்து விடுவாளா?

சேச்சே.! ஒருநாளும், அப்படி நடக்காது. அவள் கணவனைப் பற்றி, இப்படி நினைப்பதே, தப்பு. அப்புறம், அவர்கள் இருவரும் கணவன்மனைவியாக இருப்பதி-லேயே, அர்த்தமில்லையே.

ஒருத்தி, கலகலப்பாகப் பேசுவதினாலேயே, ஒருவனை, அதிலும் மணமானவனைக் கவர்ந்துவிட முடியுமா?

முடியாது என்று முடிவு செய்தபோதும், அந்த மேனகா, அப்படி என்ன பேசி, அவனைச் சிரிக்க வைத்தாள் என்று, கணவனைக் கேளாதிருக்க, மாதங்கியால் முடியவில்லை.

மனைவி கொணர்ந்து கொடுத்த பாலை அருந்தி முடித்து கப்பைக் கொடுத்தவன், "இன்னதென்று, குறிப்பாகச் சொல்வதற்கில்லை. ஆனால், சிரிப்புச் சத்தம், கேட்டுக் கொண்டே இருந்தது. முன்னெல்லாம், நாம் பேசிக் கொண்டிருக்கும்போது போல" என்றபடி, மீண்டும் குளியலறைக்குள் சென்று, வாய் கொப்பளித்துவிட்டு, வந்தான்.

படுக்கையில் அமர்ந்து, கை மறைவில் ஒருசிறு கொட்டாவியை வெளியேற்றியவன், "நாளைக்கு, ஃபேக்டரியில் வேலை இருக்கிறது.. மது சற்று, சிக்கிரமாக எழ வேண்டும்" என்றவாறு, படுக்கையில் சரிந்தான்.

மேலே, மேனகாவைப் பற்றிய பேச்சு வேண்டாம் என்று, குறிப்புக் காட்டுகிறானா?

வித்யாதரன் தூங்கி வெகு நேரத்துக்குப் பிறகும், மாதங்கிக்குத் தூக்கம் வரவில்லை.

'முன்னேல்லாம் நாம் பேசிக் கொண்டிருக்கும் போதுபோல' என்று, கணவன் சொன்னது, அவளை மிகவும் பாதித்துவிட்டிருந்தது. அவன், இயல்பாகத்தான் சொன்னான். ஆனால், நடப்பைச் சொன்னானே.

இந்த நீலனால், அவளது வாழ்க்கை, எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறது?

மனதில் ஓர் உறுத்தலை வைத்துக் கொண்டு, கணவனிடம் இயல்பாகப் பேச, அவளால் முடியவில்லை. அதனாலோ, அல்லது அவன் மனதையும், நீலன் குழப்பிவிடுவதர்லோ, சின்னச்சின்ன சல்லாபங்களுக்கு, வித்யாதருக்கும் இயலவில்லை.

இந்த விரிசல், எங்கே போய் முடியக்கூடும்?

அவர்களிருவரும் முழுமையாகப் பிரிந்தால் கூடப் பரவாயில்லை, வித்யா, அந்தப் பெண்ணிடம், மாட்டிக் கொண்டுவிடக் கூடாதே என்று, அவளது அன்பு மனம் பதறித் துடித்தது.

மாட்டான் மாட்டான் என்று, மனது உருப்போடும்-போதே, வித்யாவை முழுமையாகப் பிரிவதா, எப்படி முடியும் என்று, அதுவேறு தவியாய்த் தவித்தது, அவளது பேதைப் பெண்மனது.

இதற்கு என்ன செய்வது, என்று அதே நினைவாய் இருந்தவளுக்கு, ஒரு சிறுவாய்ப்புக் கிடைத்தது.

வீட்டில் டெலிஃபோன் வேலைகளைக் கவனிப்பதின் மூலமாக, மத்தியத் தொழில் அமைச்சகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர், அவர்களது தொழில் தொடர்பான பேச்சுவார்த்தைக்காகச் சென்னை வருவதாக, மாதங்கிக்குத் தெரிய வந்தது.

இது போன்ற விஷயங்களை, முன்கூட்டியே தெரிவிக்க, தலைநகரில், அவர்களுக்கு ஆள் இருந்தது. 'இப்படி வருகிறவர்களை, அவர்கள் விரும்பியபடிக் கவனிக்கா-விட்டால், நாம் என்னதான், ஒழுங்காகத் தொழில் நடத்தினாலும், நம் வேலை, ஒன்றும் நடக்காது' என்று, அவள் கணவன், ஒருதரம், அவளிடம் கூறியதுண்டு.!

சற்று யோசித்துவிட்டு, மாதங்கி, இந்த விஷயத்தை, மாமனாரிடம் எடுத்துச் சென்றாள்.

டெல்லி ஆள் வரும் சேதியைச் சொல்லிவிட்டு, "இப்படி வருகிறவர்களை, நம் விருந்தினர் இல்லத்தில்தானே, மாமா, நாம் தங்க வைப்பது? இப்போது, அங்கே, யாரோ ஒரு பெண் இருக் ஒரு பெண் தனியாக இருப்பதாகப் பா.பாண்டி சொன்னானே.." என்று இழுத்தாள்.

கையிலிருந்த ஃபைலில் இருந்து, பார்வையை எடுக்காமலே, "அப்படியா? என்றார், அவர்.

அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்பதே இல்லாமல், "ஆமாம், மாமா. பாண்டிதான் சொன்னான்" என்றாள் மருமகள், அவசரமாக.

அன்று உணவு வேளையில், பெரியவர் இது பற்றிப் பேச்செடுத்தார். "டெல்லியிலிருந்து ஆள் வருகிற நேரம், இங்கே, 'கெஸ்ட் ஹவு'சில் யாரோ, பெண் இருக்கிறதாக.. பாண்டி சொன்னானே." என்றார்.

ஒருகணம் நின்றுவிட்ட மாதங்கியின் மூச்சு, மறுபடியு வேகமாக ஓடத்தொடங்க, வித்யாதரன், தந்தைக்குப் பதிலிறுத்தான். "ஆமாம், அப்பா. நம் நீலனுக்கு, மிகவும் வேண்டியவர்கள். நல்லவிதம். தனியே லாட்ஜில் தங்கத் தயங்கவே, இங்கே இருந்துகொள்ளச் சொன்னேன். டெல்லி ஆளுக்கு, ஏதாவது ஹோட்டலில் ஏற்பாடு செய்து விடலாம்" என்று முடித்தான்.

விஷயம், அத்தோடு முடியவில்லை.

மாதங்கியைத் தனியே அழைத்து, "சம்பாதிக்க வெளியே செல்லும் ஆண்களிடம், வீட்டுப் பெண்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும், அம்மா. இல்லாவிட்டால், அவனால், ஒன்றும் சாதிக்க முடியாது புரிகிறதில்லையா? நல்லபடியாக நடந்துகொள்" என்று கூறிவிட்டுப் போனார், பெரியவர்.

எங்கு திரும்பினாலும் பாறையில் முட்டிக் கொள்வது போல இருந்தது, அவளுக்கு. வீட்டுத் தலைவரிடமும் வாங்கிக் கட்டும்படி ஆயிற்றே.

நீலன் பிடித்து வந்த வாடிக்கைகளின், அளவினால், கருணாகரனும், அவனுக்குத் தனி மரியாதை கொடுப்பது, அவளுக்கு, அப்போதுதான் நன்றாகப் புரிந்தது. மற்றபடி,

அவனுக்கு உதவி செய்தவளுக்கு, நிறுவனச் செலவில் எதற்காக, வசதிகள் செய்ய வேண்டும்? அவள் ஓசியில் தங்குவதற்காக, அங்கே தங்கவேண்டிய ஆளுக்கு, ஹோட்டலில், அறை எடுத்து, இவர்கள் செலவு செய்ய வேண்டுமாக்கும்?

அந்தப் பக்கம், தினம் தினம், நீலனின் பேச்சிலும் விஷம் ஏறியது.

இன்று, கையைப் பிடித்தான், இன்று காலைப் பிடித்தான், இன்று வித்யா மார்பில் சாய்ந்தாள், 'க்ளைமாக்ஸ்' நெருங்குகிறது.. என்பதோடு நில்லாமல், "உன் பிடிவாதத்தால், சீக்கிரமே, 'எய்ட்ஸ்' வந்து, வித்யா சாகப் போகிறான்" என்று முடிப்பான்.

அதற்குச் சரியாக, அன்று, வித்யாதரின் ஆடையில் ஒருவிதமான வாசனை இருந்ததோடு, சட்டைக் காலரின் அடியில், பாதி மறைந்தும் மறையாமலுமாக, ஒரு ஜாதிப் பூவும், தலையைக் காட்டியது.

மனைவியின் பார்வை சென்ற இடத்தைக் கண்டதும், வித்யாதரன், சற்றுத் தயங்கிவிட்டு, "மேனகா பாவம், மாதங்கி, அவள் கஷ்டப்பட்ட கதையைச் சொல்லிக்-கொண்டே வந்தவள், முகம் கழுவ எழுந்தபோது, கால் தடுமாறி என்மேல் விழுந்துவிட்டாள். அப்படியே என்ன அழுகை, தெரியுமா? பாவம்! கண்ட கழுதைகளும், எப்படி எப்படியோ வாழும்போது, அதிசயமாய், ஒழுங்காக, ஒரு பெண் வாழ நினைத்தால், அவளுக்கு, எத்தனை சோதனைகள், பார்" என்று உருகினான். "அவளுக்கு, உடம்பு வேறு சரியில்லை."

என்ன நடந்திருக்கும் என்று, மாதங்கியால் புரிந்து-கொள்ள முடிந்தது. அந்தப் பெண்ணின் ஜாலத்தைப் புரிந்துகொள்ளக் கணவனுக்குத் தெரியவில்லையே! இதை, இவனுக்கு என்னவென்று, விளக்குவது?

செய்வதறியாமல் மாதங்கி திணறிக்கொண்டிருந்த-போது, ஒருநாள், "இன்று 'க்ளைமாக்ஸ்'" என்றான் நீலநாராயணன்.

இனிச் சும்மா இருக்கக் கூடாது. கணவனிடம் பேசியே தீரவேண்டும் என்று முடிவு செய்தாள், மாதங்கி. விளைவு என்னவானாலும், அதைப்பற்றி, இவ்வளவுக்கு மேலும், அவள் கவலைப்படுவதற்கில்லை.!

24

எவ்வளவுதான் இணங்கி வந்தாலும், சும்மா, இன்னொரு பெண்ணை, வித்யாதரன் தொடமாட்டான் என்கிற உறுதி, மாதங்கிக்கு இருந்தது.

ஆனால், குடிக்கும் பானத்திலோ, உண்ணும் உணவிலோ, அவன் அறியாமல், எதையாவது கலந்து கொடுத்துவிட்டால்? நினைவு மயங்கி, அரை மயக்கத்தில் அவன் இருக்கும் போது, ஏதாவது முயற்சித்தால்? சுய கட்டுப்பாடு இல்லாத நேரத்தில் ஒருவரை, என்ன வேண்டுமானாலும் செய்ய வைக்க முடியுமாமே.!

எத்தனை திரைப்படங்களில் பார்க்கவில்லை? அவனிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். பிரச்சினை குறித்து, வித்யாகரனிடம் பேசியாக வேண்டும் என்று, மாதங்கி முடிவு செய்து விட்ட போதும், என்ன பேசுவது எப்படிப் பேசுவது என்பது, அவளுக்குக் குழப்பமாகவே இருந்தது.

'என் கணவரிடம், நான் என்ன வேண்டுமானாலும் சொல்லுவேன்' என்று பெருமையடிக்கும் பெண்களை எண்ணி, அந்த நேரம், மாதங்கி, மிகவும் பொறாமைப்-பட்டாள்.

அவர்களால் எல்லாம், எப்படி முடிகிறது? ஒருவேளை,

மனம் ஒன்றுபட்டுவிட்டால், ஒளிவு மறைவுகளுக்கு, அவசியம் இராது போலும்.

பாமாவும், அப்படித்தான், அடிக்கடி, பீற்றிக் கொள்வாள். 'சத்யாவிடம், நான் எதையும் சொல்வேனே' என்பாள்.

அவள் சொல்வதென்ன? அவள் உரத்தகுரலில் அப்படிப் பேசுவதை, மாதங்கியே, கேட்டிருக்கிறாளே.! மாமியாரைப் பற்றி, மைத்துனனைப் பற்றி, எல்லோரையுமே, குறைகூறல், திட்டுதல், எல்லாமே செய்வாள். மாமனார் மட்டும் தான், விதிவிலக்கு.

ஆனால், இது ஒன்றும், கணவன் மனைவி ஒற்றுமையால், அவளுக்குக் கிடைத்த திடம் என்று சொல்ல முடியாது. பல சமயங்களில், சலித்த பாவனையுடன், சத்யாகர் மனைவி பின்னே, நிற்பதையும், மன்னிப்புக் கோரும் பார்வையை, பாமாவின் வாய்வீச்சுக்கு ஆளானவர்கள் மீது, அவன் வீசுவதையும்கூட, மாதங்கி கண்டிருக்கிறாளே.!

அவளது தைரியம், கணவனின் அன்பினால் மட்டுமாக வந்தது, இல்லை.

இயல்பிலேயே வந்தது என்றும், கூற முடியாது. ஏனெனில், மாதங்கியும் இயல்பில், தைரியசாலிதான். மற்றபடி, பெற்றோரின் இழப்பிலிருந்து, அவள் மீண்டிருக்கவே முடியாதே. அண்ணன் சிவாவைப் போல, அவளும் உடைந்துபோயிருப்பாள்.

சிவா மட்டும், நன்றாக இருந்தால்?

பாமாவின் பணக்காரப் பின்புலம்தான், அவளது தைரியத்துக்குக் காரணமோ, என்றுகூட மாதங்கிக்குத் தோன்றியது.

அவளுடைய பெற்றோர் உயிருடன் இருந்திருந்தால்?

அல்லது, சிவா, இப்படிப் போதைக்கு அடிமையாகாமல், தந்தையின் தொழிலை ஏற்றுச் செயலாக இருந்திருந்தால்? போக்கிடம் அற்றவள்தானே என்கிற அல்ட்சியமின்றி, வித்யாவும், அவளிடம் நல்லபடியாக நடந்து-கொண்டிருப்பானோ?

சற்றுநேரம் தன்னிரக்கத்தில் உழன்ற போதும், மாதங்கி, விரைவிலேயே, தன்னைத் திடப்படுத்திக் கொண்டாள்.

இதெல்லாம், போகாத ஊருக்கு வழி, அவளது எண்ணங்களின் போக்கே, தப்பு. திருமணமான ஒரு பெண், பிறந்த வீட்டு பலத்தில், வாழ்வது இல்லை. மாதங்கி, போக்கிடம் அற்றவளும் அல்ல. இன்றைக்கு, அந்த வீட்டைவிட்டு .வெளியேற நேர்ந்தாலும், தன் வருமானத்திலேயே, அவளால் நல்லபடியாகப் பிழைத்துக் கொள்ளமுடியும். அதனால், வயிற்றுப் பாட்டுக்கு என்ன செய்வது, என்ற பயத்தினால், மாதங்கி, எந்தவித ஈனத்துக்கும், அடிபணிய வேண்டிய அவசியம் இல்லை.

அத்தோடு, அவள் கணவனும் கெட்டவன் அல்ல. ஒரு பாதகனை, நண்பனாக எண்ணி, அவன் சாட்டைக்கு, ஏற்ப, சர்க்கஸ் புலி போல ஆடிக் கொண்டிருக்கிறான் அவ்வள-வே.

ஆனானப் பட்ட துரியோதனையே, சகுனி ஆட்டி வைக்கவில்லையா? அதேபோலத்தான் என்று எண்ணும் போதே, உவமை, நெஞ்சில் உறுத்தியது.

துரியோதனன் அழிந்து போனானே! இந்தப் பாதகனும், வித்யாவை அழித்துவிடுவானா?

முடியாது. அதற்கு, அவள் விடமாட்டாள்.

இவ்வளவு எண்ணிப் பார்த்த பிறகே, மாதங்கியால், நிமிர்ந்து அமர்ந்து, உடனடிப் பிரச்சினையின் அணுகுமுறை பற்றி, ஒரு தெளிவுடன் யோசிக்க முடிந்தது.

இப்போது, முதல் வேலை, வித்யாதரனுடன் பேசுவது.

இந்த விஷயம் டெலிஃபோனில் பேச முடியாது. பேசுகிற விஷயம் பிடிக்கவில்லையானால், பிறகு பேசலாம் என்று, வைத்துவிட முடியும். அப்படி, இடையில் பேச்சை நிறுத்திவிட முடியாதபடி, அவனுடன், நேரில்தான் பேசவேண்டும் அதுவும், இரவுக்குள்.

எப்படி?

எல்லாவித வசதிகளையும்வைத்துக் கொண்டு, கணவனுடன் எப்படிப் பேசுவது என்று தவிக்கிறோமே என்று, மீண்டும் தலைதூக்க முயன்ற தன்னிரக்கத்தை அடக்கிக் கொண்டு, மாதங்கி யோசித்தாள்.

நீலன் வந்ததிலிருந்து, பெரும்பாலான நாட்கள், மாலையில், வித்யாதரன் வீடு வருவது இல்லை. மேனகாவின் வருகைக்குப் பிறகோ, அடியோடு இல்லை என்றே, சொல்லலாம்.

சற்று யோசித்துவிட்டு, வித்யாதரனை டெலிஃபோனில் கூப்பிட்டாள். அவனது தனிஎண் என்பதால், அவனேதான் எடுத்தான். "மாலையில் கொஞ்சம் வீட்டுக்கு வருகிறீர்களா?" என்று கேட்டாள்.

"கொஞ்சம் என்றால்? ஒருகால், ஒருகை, நாலுவிரல், இப்படியா? நம்மால் ஆகாதேம்மா" என்று சிரித்தான், அவன்.

"எனக்கும் பிடிக்காது" என்றுரைத்துக் கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, "கொஞ்ச நேரத்தின் சுருக்கம், என் 'கொஞ்சம்'" என்றாள் கொஞ்சும் குரலில்

"அந்தக், 'கொஞ்ச' நேரத்தின் விரிவு, 'கொஞ்சுகிற' நேரமா?" என்று, வித்யாதர் வேடிக்கையாகக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, ஏதோ வேலை வந்துவிட,

மனைவியிடம், "ஒரு நிமிஷம்," என்று விட்டு, அதைக் கவனித்தான்.

அந்த வைக்கோல் போர் நாயின் தொல்லை மட்டும் இல்லையானால், இப்படி வெறும் பேச்சிலேயேகூட, மகிழ்ச்சியோடு வாழலாமே!

டெலிஃபோனில், வித்யாதரின் குரல் மீண்டும் கேட்டது. இடையிட்ட வேலையின் விளைவோ, என்னவோ, குரலில், முதலில் இருந்த இலகுத்தன்மை மறைந்து போயிருந்தது. அத்தோடு, "எதற்காக வரச் சொல்லுகிறாய்?" என்று, மாதங்கி, அஞ்சிக் கொண்டிருந்த கேள்வியும் வந்தது.

என்னோடு பேச வேண்டும் என்றால், இப்போதே சொல்லேன், என்றுவிடக் கூடும். அதற்கு இடமளிக்காமல், என்ன சொல்வது என்று, அவள் யோசித்து வைத்திருந்தபடி, "உங்களை வரச் சொல்லி" என்று இழுத்தாள்.

பொதுவாக, பாங்க் லாக்கரில் ஏதாவது எடுக்கிற வேளை, நகை, பட்டுச் சேலைக்கடைகளுக்குப் பணம் பட்டுவாடா செய்கிற சமயம், மாதிரி நேரங்களில், கூட வருமாறு, கோகிலம், இளைய மகனைத்தான் அழைப்பாள். அதையே பயன்படுத்திக் கொள்ளத்தான் மாதங்கி நினைத்திருந்தாள்.

மாதங்கி, இன்றுவரை, கணவனிடம், உண்மையேதான் பேசி வந்திருக்கிறாள் என்று, சொல்லிவிட முடியாதுதான். ஆனால், ஒருசமாளிப்பாக, அரைகுறையாக, உண்மைக்குப் புறம்பானதைக் கணவனிடம் கூறுவது வேறு, ஒரு முழுப் பொய்யை, அதில் மாமியாரையும் சம்பந்தப் படுத்தி, அவனிடம் சொல்வது மிகவும் சிரமம் என்று, அவளுக்கு, அப்போதுதான் தெரிந்தது.

இத்தனைக்கும், காஃப்மேயர் சொல்வதுபோலப் பலமுறை ஒத்திகை பார்த்ததுதான். ஆயினும், வாக்கியத்தை

முடிக்க முடியாமல், மாதங்கி, சற்றுச் சிரமப் பட்டுப் போனாள்.

ஆனால், அதற்கு அவசியமில்லாமல், வித்யாதரனே, "ஓ, அம்மா வரச் சொன்னார்களாக்கும்? சரி வருகிறேன். அவ்வளவுதானே, வைத்துவிடுகிறாயா? வேலை இருக்கிறது" என்று, பேச்சை முடித்து விட்டான்.

மாலையில் அவன் வீடு வந்தபோது, கோகிலம், கோயிலுக்குப் போயிருந்தாள்.

அப்போதும்கூட, வித்யாதரன் பெரிதாக ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லை. "திட்டம் மாறி விட்டதாக்கும்?" என்று சாதாரணமாகத்தான் சொன்னான்.

ஆனால், அவனுக்குக் காஃபி, பலகாரம் கொடுத்துவிட்டு, "உங்களிடம், ஒரு விஷயம் பேச வேண்டும்" என்று, மாதங்கி தொடங்கவும், அவன் பார்வையில், கூர்மை கூடியது. "ஓ, இதற்காக, அம்மா பெயரைப் பயன்படுத்திப் பொய் சொல்ல வேண்டுமா?" என்றான் சற்றுக் கசந்த குரலில்.

"அத்தை பெயரைச் சொன்னது, நானல்ல. நீங்கள்தான். ஆனால், கணவனுடன் கொஞ்ச நேரம் பேசியிருக்க வேண்டுமானால் பொய் சொல்ல வேண்டும் என்பது, ஆரோக்கியமான குடும்பச் சூழ்நிலை அல்லவே" என்றாள் அவள் பதிலுக்கு.

சிறு அமைதியின் பின், "எதுவானாலும், இரவில் பேசலாமே" என்றான் அவன்.

மாதங்கி, பேசாதிருக்கவும், "அவசரமா? என்ன விஷயம்?" என்று கேட்டான், அவன்.

"வந்து.. மேனகா பற்றி..." என்று, ஒருவாறு தொடங்கிய அவள் முடிக்குமுன், வித்யாதரின் முகம் கடுத்தது.

"அவளைப் பற்றி என்ன?"

"நான் சொல்லுவது உங்கள் நன்மைக்காகத் தான் என்கிற எண்ணத்தோடு கேட்க வேண்டும், வித்யா. அவள் நல்லவள் அல்ல." என்றவளை, இடைமறித்துப் பேசினான். அவன்

"தொடங்கிவிட்டாயா? முன்பு, நீலன் இப்போது மேனகாவா?" என்றான் மிகுந்த கோபத்துடன். "நீ என்னிடம் சொல்ல நினைத்தது. இதுதான் என்றால் நான் போகிறேன்" என்று திரும்பி நடந்தான்.

25

அந்த வினாடியில், கணவனை நிறுத்துவது ஒன்றே நினைவாக, ஓடிச் சென்று, அவன் முன்னே நின்று, மாதங்கி, அவனது வழியை மறித்தாள்.

வித்யாதரன் நின்று, அருவருப்புடன் மனைவியை நோக்கினான். "என்ன இது. அசிங்கமாய்? நாடகமேடையில் நடத்த வேண்டியதை எல்லாம், வீட்டில், அரங்கமேற்றிக் கொண்டு இருக்கிறாய்?" என்று, கோபமாகக் கேட்டான். அவளுக்கும், இது, கேவலமாகத்தான், பட்டது. தாலிகட்டிய கணவனிடம் பேசுவதற்கு,அவனை வழி மறித்து நிறுத்தியாக வேண்டும் என்றால் அது, மிகுந்த இழிநிலையாகத்தான் தோன்றியது. ஆனால், இந்த நிலைக்கு, இறங்குவதா என்று, கௌரவம் பார்த்துக் கொண்டு இருக்க, அவளால் இப்போது, முடியாதே.

கணவனை ஏறிட்டு நோக்கி, "என் மனைவி, இப்படிச் செய்யக் கூடியவளா, ஏன் செய்கிறாள் என்று, ஒருதரம், ஒரே ஒருதரம் யோசித்துப் பார்க்கக் கூடாதா?" என்று, வருத்தத்துடன் கேட்டாள்.

கைத்த பார்வையுடன், "பெண்கள் என்ன செய்வீர்கள் என்று, எங்கே சொல்ல முடிகிறது? கடலின் ஆழத்தைக்

கண்டுபிடித்தாலும், பெண்கள் மனதைக் கண்டு பிடிக்க முடியாது என்று, வெறுமனே மூச்சடக்கி முத்துக் குளிக்கிற காலத்துக்கும் முன்பே, எழுதி வைத்திருக்கிறார்களே!" என்றான் அவன்.

பெண்களைப் பலவீனர்களாக்கி, வாயில்லாப் பூச்சிகளாய் வீட்டுக்குள்ளே அடைத்து வைத்திருந்த காலத்தில், தட்டிக் கேட்கத் துணிவிராது என்ற தைரியத்தில், இது போல எத்தனையோ எழுதிவைக்கத்-தான் செய்தார்கள். 'கொல்லவரும் புலியையும், கொத்தவரும்பாம்பையும் கூட நம்பலாம்., பெண்ணை நம்பாதே' என்றார்களே. நம்பிக்கை வைக்க, தாயையும், மனைவியையும்விடத் தகுந்தவர்கள் யார் உண்டு? தாயும் மனைவியும் பெண்கள்தானே? அதைக்கூட எழுதியவர்கள் யோசிக்கவில்லையே!

ஆனால், இதையெல்லாம் எடுத்துச் சொல்லி, கணவனுடன் வார்த்தைப் போர் நடத்த, மாதங்கிக்கு, அப்போது விருப்பமில்லை. அப்புறம், அதற்குப் பதிலாக, அவன் ஏதாவது கூற, இவள் பதில் கொடுக்க என்று, விஷயமே, திசை மாறிவிடும். அது கூடாது.

எனவே, "ஆமாம், வித்யா. கையும் எழுதுகோலும், கைவசம் இருக்கிற திமிரில், யார்யாரோ, என்னென்னவோ, எழுதி வைத்திருக்கிறார்கள். ஒருபக்கம், பெண்மனம் ஆழம் என்பார்கள். உடனேயே, பெண்கள் மனதில் ரகசியமே நுங்கக் கூடாது என்று, தருமபுத்திரர் சபித்ததால், அப்போதிருந்து, பெண்களிடம், ரகசியமே நிற்பதில்லை, என்று, அதற்கு வேறு, கேலி இப்படி மாற்றி எழுது-கிறவர்களைப் பற்றிப் பேசிப் பயன் என்ன?" என்று, அவனது கணிப்பை, வெறும் ஏட்டுச் சுரைக்காய் அளவில் நிறுத்திவிட்டு, மீண்டும், விஷயத்துக்கு வந்தாள்.

"வித்யா, நன்றாக யோசித்துப் பாருங்கள்., நான்,

அடுத்தவர்களைச் சட்டென மட்டமாக எண்ணுகிறவளா, பேசுகிறவளா? காரணம் இல்லாமல், சொல்லமாட்டேன் என்று,"

-"எப்படி நம்புவது?" என்று குறுக்கிட்டுக் கேட்டான், அவளுடைய கண்வன். "நீலனைக் காணுமுன்பே, நீ, அவனை வெறுக்கத் தொடங்கிவிடவில்லை? என் நண்பன் என்பது தவிர, அவனைப் பற்றி, அப்போது, உனக்கு என்ன தெரியும்?"

தெரியாதுதான். ஆனால், பிறகு நடப்பது? பெண்மை-யின் உள்ளுணர்வு என்பார்களே, அதுதான், அவளுக்கு, நீலனை இனம் காட்டியதா?

ஆனால், வித்யாதரனிடம் இதைச் சொன்னால், ஒரு வார்த்தைகூட ஒத்துக் கொள்ள மாட்டானே!

செய்கையற்ற நிராசையுடன், மாதங்கி, விழி உயர்த்திக் கணவன் முகத்தையே பார்த்தாள்.

மேலும் ஏதோ சொல்லவந்தவன், அதை நிறுத்திக் கொண்டு, "என்ன?" என்று வினவினான்.

சொல்வதை அவன், அணுவளவுகூட ஏற்கப் போவதில்லை என்று, நிச்சயமாகத் தெரிந்தபோதும், கணவன் ஒரு வாய்ப்பு அளித்தபோது, அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டுவிட்டோமே என்று, பிற்பாடு வருந்தும்படி ஆகிவிடக்கூடாது என்பதற்காகவே, "நீலன் உங்களுக்குக் காட்டுகிற முகமே வேறு, வித்தியா. அவர் என்னிடம் என்று சொல்லிக்கொண்டே போனவளின் உதட்டின்மீது ஒருவிரலை வைத்து, அவளது பேச்சை, வித்யாதரன் நிறுத்தினான்.

"இதற்குமேல், நீலுவைப் பற்றி, ஒருவார்த்தை, நீ பேசக்கூடாது. தகுதியற்ற உனக்காகப் பரிந்து பரிந்து உருகுகிறானே, மடையன், அவனைச் சொல்ல வேண்டும்!

சரி, இப்போது, மேன்கா மீது, என்ன குற்றச் சாட்டு? அவளும், எனக்கு ஒருமுகமும், உனக்கு ஒருமுகமும் காட்டுவதாகச் சொல்லமாட்டாய் என்று, நினைக்கிறேன். ஏனென்றால், அவளை, நீ பார்த்ததே கிடையாது."

மேனகாவைப் பற்றிக் குறைகூற, உனக்கு வாய்ப்போ, தகுதியோ கிடையாது என்று, அவனது குரலும், சொற்களும், மறைமுகமாய் அவளை எச்சரித்தன.

அவனது எச்சரிக்கையை மீறும்போது, அவனுக்கு வரக்கூடிய கோபத்தை எண்ணி நெஞ்சு தடதடத்தபோதும், "அவள்.. அவள் நடத்தை கெட்டவள், வித்யா., பணத்துக்காகப் பலருடன் பழகுகிறவள்" என்று; சொல்லியே தீர்த்தாள் மாதங்கி.

"சை.!" என்று, கைகளை இறுக மூடிக் கொண்டான், வித்யாதரன்.

ஓங்கி ஓர் அறை வைக்கும் உந்துதலை, அடக்கும் முயற்சி போலும்! ஆனால், அவனது 'சை' அடியைவிட, அதிகநோவை, அவளுக்குக் கொடுத்ததே.! அத்தோடு நிருப்தியடையாமல், "உன்னை, என்னவெல்லாம் நினைத்து மணந்து கொண்டேன்., நீ, இவ்வளவு மட்டமாய் இருப்பாய் என்று, நான், கொஞ்சமும் எதிர்பார்க்கவே இல்லையே. உனக்கு அறிமுகமே இல்லாத ஒருத்தி., அவளைப்போய், ஒழுக்கம் கெட்டவள், என்று,.. சீச்சீ,சீ.! உன் முகத்தைப் பார்க்கக்கூட அருவருப்பாய் இருக்கிறதே. எப்படி, உன்னால் நாக்கூசாமல், இப்படிப் பொய் சொல்ல முடிகிறது?" என்று; மிகுந்த வெறுப்புடன் கூறினான்.

வேதனையை ஒதுக்கி, "இது பொய் அல்ல, வித்யா." என்றாள், மாதங்கி, முடிந்த அளவு உறுதியான குரலில். "அவள் நடத்தை கெட்டவள்தான்."

"திரும்பத் திரும்ப அதே பொய்யையே, சொல்லிக்

கொண்டிராதே." என்று, கடித்த பற்களுக்கிடையே, வித்யாதரன் வார்த்தைகளைத் துப்பினான். "உனக்குச் சின்னபுத்தி. உன் புருஷன் யாரிடமோ பேசினாலும், உனக்குப் பிடிக்காது என்பது, எனக்குத் தெரியும். ஆனால், ஒரு நல்ல பெண்மணியை, நடத்தை கெட்டவள் என்று சொல்லுமளவுக்குப் போவதா? சீச்சீ என்றான் மிகுந்த கோபமும், வெறுப்புமாக.

சீ... நாயே என்பதற்கு பதிலாக சீச்சீ என்கிறான் உண்மையிலேயே, யார் நாய் என்று, இவனுக்குத் தெரியவில்லையே!

இதற்குமேல், யாரோ சொன்னார்கள் என்று தகவல் அறிந்த விதத்தை, முக்கியமில்லாதது போலக் காட்ட முடியாது என்பதோடு, அப்படி முக்கியமில்லை என்று, சும்மா விட்டுவிடவும் முடியாத நிலை.!

அத்தோடு, கணவனின் 'சீச்சீ'யில் மனம் கனன்றதும் காரணமாக, "அப்படியெல்லாம், நானாகச் சொல்லவில்லை, அந்த மேனகாவைப் பற்றி, நான் அறிந்ததெல்லாம், உங்கள் அருமை நண்பர் கூறியதுதான். அது தப்பான விஷயம் என்றால், நீங்கள், இப்படிச் 'சீச்சீ' என்று, இகழ வேண்டியதும் மிஸ்டர் நீலனைத்தான்." என்று, மாதங்கி, திருப்பிக் கொடுத்தாள்.

"ஜாக்கிரதையாகப் பேசு, மாதங்கி, அவன் பெயரை அனாவசியமாக இழுக்காதே." என்றான், வித்யாதரன் சற்று அழுத்தமான குரலில்.

"சொன்னது, அவர்தான் என்றால், வேறு எப்படிச் சொல்லுவது?" என்று, வெறுத்த குரலில், கேட்டாள் அவள். "நீங்கள் வேண்டுமானால், அவரிடமே.."என்று தொடங்கியவளுக்கு, அவள் கணவனிடம், நீலன், இதை ஒத்துக் கொள்ள மாட்டான் என்பது, சற்றுக் காலம் கடந்து, புரிபட்டது.

இது மட்டுமல்ல, நீலன் எதையுமே ஒத்துக் கொள்ளமாட்டான்., ஐயமற நிரூபிக்கப் படாத வரை அவளுடைய கணவனும், அவள் கூறுவது எதையும் நம்பப் போவதும் இல்லை. நிரூபிக்க, அவளுக்கு வழியும் இல்லை. இப்போது, என்ன செய்வது?

கலங்கிப்போய், "வித்யா, நம் திருமணத்தின்மீது... என்மீது, உங்கள்மீது எதன்மீது, ஆணையிட்டுச் சொல்லவேண்டுமானாலும் சொல்லுகிறேன். வித்யா, நான் சொல்லுவது எல்லாம் உண்மை, வித்யா., நீங்கள் அறிந்தே ஆகவேண்டிய உண்மை. தயவு பண்ணி நம்புங்கள்." என்று, பரிதவித்தாள், அவள்.

ஒருகணம் பேசாதிருந்துவிட்டு, "இதோபார், நம்ப முடியாததையெல்லாம் சொல்லிவிட்டு, நம்புங்கள், நம்புங்கள் என்றால், எப்படி நம்புவது? அந்தப் பெண்ணாவது, என்க்கு, அவ்வளவாகத் தெரியாதவள்., ஆனால், நீலன்? அவன் சொன்னான் என்கிறாயே! அவளைப்பற்றி, என்னிடம் உயர்வாகக்கூறிவிட்டு, உன்னிடம் எப்படி மட்டமாகப் பேசுவான்? அவன் பெயரைப் பயன்படுத்தியதிலேயே, நீ சொல்வது பொய்யென்று, ஆகவில்லையா?" என்று, தன் நிலையைத் தெளிவுபடுத்திக் கேட்டான், அவன்.

நீலநாராயணன் பொய் சொன்னதையே நம்பாதவன், மற்றதை எங்கே நம்பப்போகிறான்? நம்பவைப்பது, பெரும் போராட்டம்.

ஆனால், அதைவிட, இன்றைக்குக் கணவனைக் காப்பதுதான் உடனடியாகச் செய்ய வேண்டியது, என்று உணர்ந்து, சோர்ந்தகுரலில், "நீலன் பெயரை விட்டுவிடுங்கள், வித்யா. ஆனால், மேனகா பற்றி, நான் சொன்னது, நிஜம். இன்னும் இன்னும்" என்று, மேலும் சொல்லத் தயங்கி நிறுத்தினாள். அடுத்ததை, இவன் எப்படி

எடுத்துக் கொள்ளக்கூடும்? அவனது கோபம் அதிகமாகுமா?

"இன்னும்?" என்றான் அவன், எங்கோ பார்த்துக் கொண்டு.

ஏற்கனவே, கோபம்தான். இது, வெள்ளநீர் இன்னும் ஒரு சாண் அதிகமாகி விடுவதால், தனியாக என்ன பாதிப்பு நேர்ந்துவிடப் போகிறது?

இப்படி எண்ணித்தான், மாதங்கி, மேலே பேசியது. சொல்லுவதைச் சொல்லிவிட்டால், கோபப்பட்டாலும், இந்த விஷயத்தில் எச்சரிக்கையோடு இருக்கமாட்டானா என்று நினைத்து, "எனக்குக் கிடைத்த தகவலின்படி, அவள் ஓர் 'எய்ட்ஸ்' நோயாளி, வித்யா" என்று, தெரிவித்தாள், அவள்.

செய்தியின் அதிர்ச்சியிலோ, என்னவோ, வித்யாதரனின் உடல், திடுமென விறைப்புற்றது. சட்டெனத் திரும்பி, மனைவியின் முகத்தை நோக்கியவனின் கண்களில், கூர்மையுடன், பளபளப்பும், கூடியிருந்தன. "பரவாயில்லை! நீ, இவ்வளவு கெட்டிக்காரி என்று, நான் நினைத்ததே இல்லையே.!" என்றான், ஒருமாதிரிக் குரலில்.

கணவனின் பேச்சை என்னவிதமாக எடுப்பது என்று புரியாமல், "வித்யா..?" என்றாள், மாதங்கி.

"திட்டம் பிரமாதம்.! மேனகாவோடு, நான், தகாத உறவு கொண்டுவிடுவேனோ, என்று, உனக்குச் சந்தேகம். அதற்காக, அவளைப்பற்றி, அநியாயமான குற்றச்சாட்டு அதை, நான் நம்பவேண்டும் என்பதற்காக, நீலன் சொன்னான் என்று, ஒரு பொய்! நாம் இருவரும் நல்லபடியாக வாழவேண்டும் என்பதற்காக, எவ்வளவோ பாடுபடுகிறானே, இதை, ஆமாம் என்றுவிடமாட்டானா என்கிற எண்ணம், உனக்கு! கணிப்பு, பிரமாதம்! கணக்கும் பிரமாதம்தான்.!"

"இல்லை, அப்படியில்லை.." என்று, மாதங்கி இடை-யிட்டதைக் காதிலேயே வாங்காமல் "ஆனால், கணவனிடம்தான், உனக்கு, எவ்வளவு நம்பிக்கை.! ஆகா.! நினைக்கும்போதே, உடம்பு புல்லரிக்கிறது.! இப்போது, ஒரு பிரச்சினை. இந்தமாதிரி உன்னதமான நம்பிக்கை, பொய்யாக விடலாமா? உண்மையாக்கியே தீரவேண்டும். அதனால், நான், இப்போது மேனகாவிடம் போகிறேன், அவள் அனுமதித்தால் அனுமதிப்பாள் என்றுதான் நினைக்கிறேன். ஏனெனில், ஒரு நல்ல துணைக்காக ஏங்குகிறவள், அவள். எனவே, இரவு முழுவதும் அங்கே தங்கிவிட்டு, நாளை வருகிறேன். "என்று எகத்தாளமாகக் கூறித் திரும்பி நடக்கவும், மாதங்கிக்குப் பகீரென்றது.

ஐயோ, இவன் இப்போது, வேண்டுமென்றே தப்பு செய்யப் போகிறான்!

"வித்யா, நான்.." என்று, ஓடிப்போய் அவன் கையைப் பற்றினாள்.

"சை.!" என்று, அவன் கையை உதறிய வேகத்தில் அவள் தாலெட்டுத் தள்ளப்பட்டுத் தடுமாறியவள், கீழே விழாமல் சமாளித்து நிற்கையில், வித்யாதரன் கோபக்குரலில் மீண்டும், பேசினான். "கவனி. அப்பாவிடம் சொல்லியோ, வேறு வழியிலோ, நீ, இதற்கு மேல் ஏதாவது செய்தால், நாளை இருக்கிறது என்பது நினைவிருக்கட்டும். ஒரேயடி-யாக என் விஷயத்தில், யாரும் குறுக்கிட முடியாது. அதையும் மறக்கவேண்டாம்" என்று எச்சரித்தவன், மேலே நில்லாமல், வேகமாக வெளியேறிச் சென்றுவிட்டான்.

தலை சுழல அப்படியே சரிந்துவிட்டாள், மாதங்கி.

சும்மா இருந்தால் தப்பு என்று சொல்லப்போய், சொன்னது, பெரும் தப்பாகிவிட்டதே.

வெகுநேரம் அசைவின்றிக் கிடந்து யோசித்தவள்,

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து, டெலிஃபோன்னைக் கையில் எடுத்தாள். அவள் டெலி ஃபோனில் பேச நினைத்தது, நீலநாராயணனுடன்.

26

எல்லா வழிகளும் மூடப்பட்டு, மூச்சுக் காற்றுக்குத் திணறுவது போல, மாதங்கி, உணர்ந்தாள். மீந்திருப்பது, ஒரே ஒரு சந்துதான். நரகல் செறிந்த வழி. அந்த நாற்றக் காற்றைச் சுவாசித்து, உயிர் பிழைப்பதைவிட... விட... வேறு என்ன செய்ய முடியும்?

இந்தப் பிரச்சினையின் தீர்வு, மாதங்கியின் அழிவு மட்டும்தானா?

ஒன்று, அவள் அழிய வேண்டும். அல்லது, அவளுடைய அருமைக் கணவன் அழிந்து போவான். அதுவும், எப்படிப் பட்ட அழிவு!

'உயிரினும் மேலாக' என்பார்கள்., அந்த மாதிரி, வித்யாதரனுக்கு, மாதங்கி இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவள், அவனை அப்படித்தானே நினைக்கிறாள்! உயிரைக் காட்டிலும் உயர்வாக, அவள் எண்ணுகிறவன் துடித்துச் சாகட்டும் என்று, அவளால், எப்படிச் சும்மா இருக்க முடியும்?

ஒருவேளை, அவள் செத்துவிட்டால், பிரச்சினை தீர்ந்துவிடக் கூடுமோ?

சாவைப் பற்றிய எண்ணம் வந்ததுமே, சட்டென, மாதங்கியின் உடல் குலுங்கியது.

செத்துப் போவதா? இந்த வயதிலா? அதற்குள்ளாகவா?

கணவனின் அச்சாகக் கற்பனை செய்துவைத்திருந்த குழந்தையின் நினைவில், கண்ணைக்கரித்துக் கொண்டு வந்தது.

ஆயினும், கண்கலங்கும்போதே, அதைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்.

இப்படி, எதைஎதையோ எண்ணிக் கண்ணீர் விடிப்பதால், நேரம் தான் வீணாகுமே தவிர, உருப்படியாக, ஏதுவும் நடக்காது, முக்கியமாக, இன்றைய ஆபத்திலிருந்து, வித்யாதரனைக் காப்பாற்ற முடியாது. இந்த வினாடியில், அதுதான் மிகமிக முக்கியம். அவள் மூச்சு விடுவதை விடவும்கூட.

மூச்சு விடுவதை நிறுத்திவிட்டால், கணவனுக்கு ஆபத்து நிச்சயமாக நீங்கிவிடுமா, என்று யோசித்தபோது, அதையும், உறுதியாக நம்பமுடியவில்லை.

சாகும் வழிதேடி, அவள் உயிரை விட்டு, அந்தச் சேதி வித்யாதரனை எட்டுமுன், என்னவெல்லாம் நடந்து-விடுமோ.!

இந்த விஷயத்தில், அவளுக்கு, உறுதி தரக் கூடியவன், அந்தப் பாவி, நீலநாராயணன் மட்டுமே அந்த உறுதியின் விலையோ...

வேறு எந்த ஒரு வழியிலும், வித்யாதரனைக் காப்பாற்று-வது, முடியாத காரியம் என்று, வெகு நிச்சயமாகத் தெரியவும், மனதைத் திடப்படுத்திக் கொண்டு, மாதங்கி, நீலநாராயணனை, டெலிஃபோனில், கூப்பிட்டாள்.

எதிர்பார்த்திருந்தவனைப் போல, நீலன் விரைவாகவே வந்துவிட்டான். வந்து, "என்னஎன்ன? வருகிறாய்தானே?" என்று, பரபரத்தான்.

வேறு வழியின்றி, "வருகிறேன்" என்றாள் மாதங்கி ஒற்றைச் சொல்லாக.

"எப்போது? இப்போதே வருகிறாயா?"

"இப்போது, நான் எப்படி வரமுடியும்?"

"ஏன்? ஓ இரவாயிற்றே! உன் மாமியாரிடம் எங்கே, என்ன, என்று, விளக்கம் தரவேண்டுமோ? அப்படியானால், நாளைக் காலை. வித்யா அலுவலகம் சென்றதும், ஒரு பத்துமணிக்கெல்லாம் வந்துவிடு" என்றான் அவன், எக்களிப்புடன்..

உதட்டைக் கடித்து, ஒருகணம் மௌனமாய் இருந்துவிட்டு, "அதற்குள், வித்யாவுக்கு, எதுவும் நேராது என்பதற்கு, என்ன உத்தரவாதம்?" என்று கேட்டாள், அவள்.

ஓகோவென்று, குதிரையாக கனைத்துவிட்டு, "கவலை படாதே, அவனுக்கு, ஒன்றும் ஆகாமல், நான் பார்த்து கொள்ளுகிறேன்" என்று, மிதப்பாகப் பதில் சொன்னான், அவன்.

"எனக்கு, என்ன உத்திரவாதம்?"

"என் சொல்தான், உத்திரவாதம்." என்று, அலட்சியமாகக் கூறியவன், எதிர்முனையில் சத்தமில்லாது போகவும், "ஒன்று செய். இரவில் எந்த நேரம் என்றாலும், ஃபோன் செய்து, வித்யா. இங்கிருப்பதை உறுதி செய்துகொள். ஏதாவது சாக்கிட்டு, அவனை, இரவு முழுவதும் இங்கே பிடித்து வைத்துக் கொள்ளுகிறேன்." என்றான். தொடர்ந்து, "ஆனால், ஒன்று. நீ மட்டும், என்னை ஏமாற்ற எண்ணியிருந்தால், அந்த எண்ணத்தை, அடியோடு விட்டுவிடு. இல்லையானால், விளைவு, பயங்கரமாக இருக்கும். அப்புறம், உன் தாத்தா வந்தாலும், அவனைக் காப்பாற்ற இயலாது" என்று, ஒரு மிரட்டலுடன் முடித்தான், நீலநாராயணன்.

ரிசீவரைக் கீழே வைத்துவிட்டு, அறைக்குள் சென்ற மாதங்கி, அதற்குமேல், எதுவும் செய்யத் தோன்றாமல், சோஃபா ஒன்றில், அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

இரவு முழுவதுமே, அப்படியேதான், கழிந்தது. எழுந்து படுக்கவேண்டும் என்கிற எண்ணமே, அவளுக்கு வரவில்லை.

வித்யாதரனும், இரவில் வீடு திரும்பவில்லை என்றாலும், தவறாக எதுவும் நடக்க, நீலன் விட்டிருக்க மாட்டான், எனும் நிச்சயமும் இருந்ததால், அதுபற்றி, அவளுக்கு அச்சம் ஒன்றும் ஏற்படவில்லை ஆனால், இனி?

அதற்குமேல், எண்ணிப் பார்க்கக்கூட முடியாமல், பனிப் பாறையாய், நெஞ்சு உறைந்து போயிற்று. ஏனெனில், இந்த வாழ்வு, மறுநாள் முடிந்து போவது மட்டும், அவளுக்கு நிச்சயம் ஆயிற்றே.!

இன்னும் ஒரேஒரு முயற்சியாக, வித்யாதரனைப் பத்துமணிக்கு, நீலனின் இடத்துக்கு வரச் செய்தால், பின்னவனின் வண்டவாளம், கணவனுக்கு வெளுத்து-விடாதா, என்ற நப்பாசையில், அவன் வரவுக்காகக் காத்திருந்தவளுக்கு, இன்னுமோர் இடியாக நீலன் ஃபோன் செய்தான்.

"ஒரு வாடிக்கையாளரைச் சந்திப்பதற்காக, வித்யா, வெளியூர் போகிறான். மதியத்துக்கு மேல்தான் திரும்பு-வான்" என்று, விவரம் சொன்னவன், "ஒரு முன்னெச்சரிக்-கை நடவடிக்கையாக நான் தான் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தேன்." என்று பீற்றி, அவளது, சிறு நம்பிக்கைப் பொறியையும், அணைத்தான். "கிளம்பி விட்டா-யில்லையா?"

நினைவூட்டுகிறானாம், பாவி.!

முகமே காட்டிக் கொடுத்துவிடும் என்ற பயத்தில், வேலையாளிடம் மட்டும், 'யாரும் தேடினால், வெளியே போயிருப்பதாகச் சொல்லும்'படிக் கூறிவிட்டு, ஒளிந்து மறைந்து வெளியேறிச் சென்றாள், மாதங்கி.

சொல்லியிருந்த நேரத்தில், வந்து சேர்ந்தவளை, அடக்கமாட்டாத சிரிப்பாக, "ஹாஹா.!" என்று தன் குதிரைக் கனைப்புடன், நீலன் வரவேற்றான்.

"வா, வா. பரவாயில்லை. சொன்ன நேரத்துக்கு, வந்துவிட்டாயே கொஞ்சம் காக்க வைத்து, எரிச்சல் மூட்டுவாயோ, என்று நினைத்தேன். நல்லவேளை., நீ, அப்படியெல்லாம் செய்யவில்லை: இங்கே, நானும் தயார்தான். அங்கே பார்த்தாயா?" என்று, கை நீட்டிக் காட்டினான்.

மூழ்கப் போகிறவன் மிதப்புக் கட்டையைப் பிடிப்பதுபோல, தன் கைப்பையை இறுகப் பற்றியவாறு, அவன் காட்டிய திசையில் பார்த்தவள், சட்டெனப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

படுக்கையில் மலர் தூவி வைத்திருந்தான், அவன்.

குமட்டலை அடக்கிக் கொண்டு, "உங்களிடம், கொஞ்சம் பேசவேண்டும், நீலன்." என்றாள், அவள்.

"'உங்களிட'மா? மரியாதை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், எனக்குப் பேசப் பிடிக்கவில்லையே.. போர்க் களத்தில், கண்ணனின் கீதோபதேசம் பொருத்த-மாயிருந்திருக்கலாம். ஆனால், காதல் களத்துக்கு, உபதேசம், ஒப்பாரி, இரண்டுமே சரிப்படாது" என்று அவனது அலட்டலை ஒதுக்கி, "வித்யா, உன்... உங்களை மிகவும் நம்புகிறார்... அவருக்குத் துரோகம் செய்யலாமா?" என்றாள், அவள்.

"என்னைத்தானே நம்புகிறான், அந்த முட்டாள்.! உன்னையில்லையே? அப்படியானால், நீ, அவனுக்குத் துரோகம் செய்யலாமில்லையா? தாராளமாய்ச் செய்." என்று, ஏளனமாய் உரைத்துவிட்டு, தன் பேச்சில், தானே மகிழ்ந்து, மீண்டும் சிரித்தான்.

"அவர் உப்பைச் சாப்பிட்டுக்கொண்டே, நீ..." என்று, மாதங்கி மீண்டும் தொடங்கவும், நீலனுக்குக் கோபம் வந்துவிட்டது.

"அதெப்படி, அவன் உப்பை நான் சாப்பிடுவது? என்மூலம் அவனுக்கு, வருமானம் வரவில்லை? சரியாகப் பார்த்தால், என் வேலை மூலமாய்க் கிடைக்கிற லாபத்துக்கு, அவனே, எனக்கு, எவ்வளவோ செய்யவேண்டும். பெண்டாட்டியைக் கொண்டுவந்து, அவனாக விட்டுவிட்டுப் போக வேண்டும். இப்போது, நானாக எடுத்துக் கொள்கிறேன். அவ்வளவுதான். இந்த உபதேசம், ஒப்பாரி எல்லாம், வேண்டாம் என்று, நான் முதலிலேயே, சொல்லவில்லை? நேரத்தை வீணாக்காமல், வாடி." என்றான், நீலன் ஆத்திரக் குரலில்.

"உ உனக்குப் புரியவில்லையே., அதைவிட நான் செத்துவிடுவேன், நீலன்." என்றாள் மாதங்கி, குமுறலாக.

அவளை முறைத்துப் பார்த்தான், நீலன். "என்னை யாரென்று உனக்கு, தெரியாது மாதங்கி. உன்னை எப்படி, இங்கே கொண்டுவந்தேன், அதை எண்ணிப் பார்த்தாயா? உன்னை, என் பலத்தால், ஒன்றும் செய்ய முடியாது. அதனால், பழைய காலக் கதை மாதிரி, உன் உயிர்நிலையைக் கண்டுபிடித்து, அதில் அடித்து, 'பிளாக்மெயில்' செய்து, உன்னை வரவழைத்தேன். மாதக் கணக்கில் செய்த வேலை, அவ்வளவு இலகுவாக 'வீணாக விட்டுவிடுவேனா? உன் சாவு, ஒருபோதும், வித்யாவைக் காப்பாற்றாதடி, கண்ணு. மாறாக, அப்படி நீ செத்துகித்து வைத்தாயானால், அவனை அடியோடு அழிக்கும் வரை, நான் விடமாட்டேன், தெரிந்துகொள்." என்று, எச்சரித்தான்.

உச்சந்தலையிலேயே இடி விழுந்தது போல, மாதங்கி விதிர்விதிர்த்து நின்றாள்.

இதுவரை, அவள் தன் சாவில் ஒரு வழி கண்டு-

வைத்திருந்தாள். முடிந்தவரை, நீலனிடம் சொல்லிப் பார்ப்பது, பயனில்லை என்றால், வாழ்க்கையை முடித்துக் கொள்வது, அவளது தீர்மானம்.

பயன் இருக்கக்கூடும் என்கிற நம்பிக்கை, அவளுக்குக் கொஞ்சமும் இல்லைதான். ஆயினும், நூலைக் கட்டி, மலையை இழுக்க முயற்சிக்கிற மாதிரி, ஒரு நப்பாசை, உள்ளூர இருந்தது.

ஆனால், நூற்றுக்கு, ஒரு சதவீதம் கூடப் பலிக்கமுடியாத அளவுக்கு, அது, வெறும் நப்பாசைதான் என்றும், அவள் நன்றாகவே, அறிந்திருந்தாள்.

எனவே, கணவனை, இந்தப் பாவியிடமிருந்து, காப்-பாற்றவில்லை., மாமியாருக்கு, ஒரு பேரக்குழந்தையைப் பெற்றுக் கொடுக்கவில்லை., அண்ணனின் வைத்தியம், அரைகுறையில் இருக்கிறது., இப்படி ஒரு கடமையையும், உருப்படியாகச் செய்யாமல், இடையில் விட்டுவிட்டுப் போவதை எண்ணியே, மிகவும் மனம் கலங்கிக் கொண்டிருந்தாள். மாதங்கி.

அத்தோடு, உயிரைவிட முடிவு செய்வது, ஒன்றும், எளிதான காரியம் அல்ல. பெற்றோர் இருவரையும், ஒருசேர இழந்து, அண்ணனும் உருப்படாமல் போய்த் தனியாளாக நின்ற நாளிலும்கூட, அவள், தற்கொலைக்குத் துணிந்தது, இல்லை.

வாழ்ந்து காட்டும் பிடிவாதம் உள்ள அவள், செத்துவிட்டால் என்ன, என்று, இதுவரை, எண்ணிப்-பார்த்ததுகூடக் கிடையாது.

இப்போதுதான், மிகுந்த யோசனைக்குப் பிறகு, முதல் தடவையாக, அவள் தன் உயிரைவிடத் துணிந்திருந்தாள்.

தான் செத்துவிட்டால், மிரட்டுவதற்கு ஆளில்லாமல், நீலன், வித்யாவை விட்டுவிடுவான் என்பது அவள்

எண்ணம்., ஆனால், அவள் சற்றும் எதிர்பாராவண்ணம், நீலன் வேறுவிதமாக மிரட்டவும், மாதங்கி கதிகலங்கிப் போனாள்.

சாவுகூடப் பயனில்லை என்றால், வேறு என்ன செய்வது?

அவள் முகத்தைப் பார்த்த நீலநராயணனுக்கு, விஷயம் புரிந்துவிட, 'ஓகோ' என்று, நகைத்தான்.

"ஆமாம்மா., நீங்கள் ஜாலியாகச் செத்துவைப்பீர்கள், பட்டபாடெல்லாம் வீணாகிவிட்டுவிட்டு, நான், 'மே' என்று, விழித்துக் கொண்டு நிற்பேனாக்கும்? அதற்கு, இந்த நீலன் ஒரு முட்டாளாய் இருந்திருக்க வேண்டும். சரி, சரி, வீண் பேச்சு எதற்கு? எத்தனை மாச ஆசை ஈடுகட்ட வேண்டியிருக்கிறது, தெரியுமில்லையா? வாவா." என்று, அவள் பக்கமாக, ஓர் எட்டு எடுத்துவைத்தான்.

தன்னையறியாமல் மாதங்கி பின்னடையவும், நின்று, அவளை உறுத்துவிழித்தான், நீலன். "இங்கே வரை வந்துவிட்டு, என்னடி பெரிய பத்தினித்தனம்? என்னோடு, ஓடிப்பிடித்து விளையாடவா, உன்னை, இங்கே வரவழைத்திருக்கிறேன்? அப்படி என்ன, கஷ்டம், உனக்கு? எத்தனையோ ஆண்களுக்கு, இரண்டு, பெண்டாட்டி இல்லை? நீ, இரண்டு புருஷன் வைத்துக் கொள்ளேன்.! இன்னும் இரண்டு என்றாலும், எனக்கு, ஒன்றும் ஆட்சேபனை இல்லை.! நான் கூப்பிடும்போது, நீ வந்தால் போதும்.!" என்றான், ஏளனமாக.

மூளை இருந்த இடம், வெற்றிடமாகத் தோன்றியது. நெஞ்சுக்கூடு, காலியாய் இருந்தது. வயிற்றுக்குள், ஒன்றுமே இல்லை.! பல்லி போலக் கெக்கலி கொட்டியபடி, நீல நாராயணன், மாதங்கியை நெருங்கி, அவள் தோளைப் பற்றக் கைநீட்டிய போது, ஐந்தரை அடி உயரம் இருந்த, 'என்புதோல் போர்த்த உடம்பில், சிந்திக்க, செயல்பட

என்று, எதுவுமே இல்லாததுபோல உணர்ந்து, திகைத்தவளின் சோர்ந்து தாழ்ந்த பார்வையில், அப்போது, அது தென்பட்டது.

27

நீலனின் இடத்தைவிட்டு, எப்போது, எப்படி வெளியேறினாள், என்பது பற்றி, மாதங்கிக்குக் கொஞ்சமும் நினைவு இல்லை.

அங்கிருந்து கிளம்பி, எங்கே சென்றாள் என்பதும், அவளுக்குச் சற்றும் ஞாபகத்தில் இருக்கவில்லை.

கால் போன போக்கில், ஒரு பைத்தியம் போலச் சுற்றிக் கொண்டிருதந்வளுக்கு, ஒருவாறு, சுரணை வரத் தொடங்கியது போலும், ஏனெனில், எதிர்ப்படுகிறவர்கள், தன்னை விசித்திரமாயப் பார்ப்பது, லேசாக, அவ்ளது மனதுக்குப் புரியலாயிற்று.

அப்போதும், அது ஏன், என்ன என்று யோசிக்கவோ, அந்த விசித்திரப் பார்வையின் காரணத்தை அறிந்து, அதை நிவர்த்திக்கவோ, தோன்றாமல், தொடர்ந்து நடந்து-கொண்டேதான் இருந்தாள்.

ஆனால், எல்லா ஜீவராசிகளுக்கும், இயற்கை அளித்-திருக்கும் தற்காப்பு உணர்ச்சி, அனிச்சையாகச் செயல்-பட்டதாலோ, என்னவோ, எந்த விபத்திலும் மாட்டிக் கொள்ளாமல் சென்று கொண்டிருந்தாள்போலும்!

இதுவும்கூட, மெல்லமெல்ல மனதில் உறைக்கத் தொடங்கிய பிறகு, அவளது நடையும், மெதுவாகத் தளர்ந்து, நின்றுவிட, தலையைத் திருப்பிச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

மாதங்கி, அப்போது நின்று கொண்டிருந்த இடம், அன்று வரை, அவள் சென்றறியாத பகுதி.

இங்கே, எப்படி வந்தாள்? நடந்து, என்பது புரிந்தது. குறைந்த பட்சம் எட்டுப் பத்து கிலோமீட்டர் தூரமாவது, நடந்திருக்கவேண்டும்.

இடையில், எத்தனை திருப்பங்கள்! எத்தனை சாலைக் கடப்புகள்! எண்ணிப் பார்க்கையிலேயே, சட்டென, அவளது உடல் குலுங்கியது.

ஏதேனும் விபத்தில், அவள் மாட்டிச் செத்திருந்தால், அவளுடைய கணவனுக்கு, எவ்வளவு ஆபத்தாகி-விட்டிருக்கும்?

இப்போது.. வீட்டுக்கு எப்படிப் போவது, என்று யோசித்தபோதுதான், ஏதோ, உயிருக்கே ஆதாரம் போலக் கையில் பற்றியிருந்த கைப்பை, கவனத்துக்கு வந்தது.

ஓர் 'ஆட்டோ'வை அழைத்து, ஏறி அமர்ந்தாள்.

ஆட்டோவிலிருந்து இறங்கி, மாதங்கி வீட்டினுள் சென்றபோது, அவளை முதலில், கண்டவள், பாமாதான். ஹால் சோஃபாவில், பாதி படுத்த நிலையில் அமர்ந்து, சினிமா பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தவள், வருகிறவளைப் பார்த்ததும், ஒரு கணம் திகைத்துவிட்டு, "அய்யய்யோ!" என்றாள்.

புரியாத பார்வையுடன், மாதங்கி தயங்கி நிற்கவும், "ஒரு செருப்பு, பிய்ந்துவிட்டதா, ஒற்றைச் செருப்போடு வந்திருக்கிறாயே?" என்றவள், 'கிக்கிக்கீ' என்று, சிரித்தாள். "ஒரு காலில் மட்டும் செருப்போடு, நீ, இப்படியும் அப்படியுமாகச் சரிந்து, சரிந்து நடப்பதைப் பார்த்தால், எனக்குச் சிரிப்பாக வருகிறதே." என்று விளக்கிவிட்டு, மீண்டும் சிரித்தாள்.

அறியாத மொழி பேச்சைக் கேட்பவள்போல, வெற்றுப் பார்வையுடன், மாதங்கி பார்த்துக் கொண்டிருக்க, பாமாவே, மீண்டும், தொடங்கினாள். "பிய்ந்த

செருப்போடு, இதையும் கழற்றி, வீசிவிட்டு வருவதற்-கென்ன, மாதங்கி? ஒருவேளை, இதற்கு ஜோடியாக, ஒரு செருப்பு மட்டும் வாங்கினால், பாதிச் செலவில் முடித்து விடலாம் என்று, சிக்கனம் பார்த்தாயா? ஐயோஐயோ, அப்படியெல்லம், ஒற்றைச் செருப்பாகக் கடைகளில் விற்கமாட்டார்கள் என்று, உனக்குத் தெரியாதா? ஆனால், பாவம்! செருப்புக் கடைகளுக்கு, அடிக்கடிப் போய்வந்து பழகியிருந்தால்தானே, அது தெரியும்? அதற்கெல்லாம் உன்வீட்டில் பணம் இருந்திராதே, நீ பாவம்தான். ஆனாலும், நீ, ஒற்றைச் செருப்புடன் நடந்ததை நினைத்தால், சிரிப்பாய் வருகிறதே!" என்று சொல்லி, மறுபடியும் பகபகவென்று நகைத்தாள்.

ஒருவாறு, செருப்பைப் பற்றிய பேச்சு, கருத்தை எட்டிவிடக் குனிந்து, காலை வெறித்தாள், மாதங்கி ஒரு காலில் மட்டும் இருந்த செருப்பை, வெறுப்புடன் உதறிவிட்டு, வழக்கத்துக்கு விரோதமாக, பாமா அங்கே இருப்பதையோ, அவள் பேசியதையோ கண்டுகொள்ளாத-வளாய், நேரே மாடிப்படியை நோக்கிச் சென்றாள்.

"பிய்ந்த செருப்பைத் தூர வீசிவிட்டுப் புதிது வாங்கி, அணிந்து கொண்டு வருவதற்கென்ன?" என்ற வித்யா-தரனின் தணிந்த குரல், சற்று அதட்டலாகக் கேட்ட-பிறகுதான், கணவனும், அங்கிருப்பதை, மாதங்கி உணர்ந்தாள்.

தாயும் மகனும், ஏதோ பேசிக்கொண்டிருந்திருப்பார்கள் போலும். ஏனெனில், கோகிலமும், அவன் அருகில் நின்று கொண்டிருந்தாள்.

கணவன் மார்பில் முகம் புதைத்துக் கண்ணீர் விட்டால், எவ்வளவோ நன்றாயிருக்கும்போல, ஒரு கணம் அவளது மனம் வெகுவாக ஏங்கியது.

ஆனால், அவனுக்குப் பிடிக்காதே! அசிங்கமாய்

நாடகமாடுவதாய், சொல்வானே! ஆனால், அவனிடம் என்னென்னவோ சொல்லியாக வேண்டுமே! என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? வாயைத் திறந்தால், கதறி விடுவாள் போல இருக்கும் இந்த நிலை கொஞ்சமேனும் சமனப் பட்டபிறகு, ஒருவேளை... ஆனால், வித்யாதரன், அவள் கூறுவதை நம்புவானா?

நம்பாவிட்டால்?

வெறித்த பார்வையுடன் அவள் நிற்கும் போதே, கோகிலம், அவளது கைப்பையிலிருந்து, ஒரு காகிதத்தை எடுத்து, மகனிடம் கொடுத்துவிட்டு, "மாலைச் சிற்றுண்டிக்கு, 'பேபிகார்ன்' பஜ்ஜி பண்ணச் சொன்னேன், பார்த்துக் கொள் மாதங்கி. நானும், வித்யாவும் போய், தனலட்சுமிக்குச் செய்யக் கொடுத்திருந்த ஒட்டியாணத்தை வாங்கி வந்துவிடுகிறோம்." என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

"அவளைப் 'பிங்க்கி' என்று சொல்லும்படி, உங்களுக்கு எத்தனை தடவை சொல்வது, அத்தை?" என்று மூத்த மருமகள் குறைப்பட, "அதற்கு, நீங்கள், அவளுக்குப் 'பிங்க்கி' என்றே பெயர் வைத்திருக்கலாமே, எதற்கு, இந்தத் 'தனலட்சுமி' யெல்லாம்?" என்ற இளைய மகளின் கையைப் பற்றிக் கெஞ்சுதலாக நோக்கினாள் கோகிலம்.

தோளைக் குலுக்கிவிட்டுத் திரும்பி நின்றான், அவன்.

"தெரியாமல் வாயில் வந்துவிட்டதம்மா. இனிமேல், நினைவு வைத்துக் கொள்ளுகிறேன்." என்று மூத்தவளிடம் சமாதானமாகப் பேசியபடி, இளைய மருமகளிடம் தலையசைத்து விடை பெற்றவாறே, "வா, வித்யா." என்ற கோகிலம், வாயிலை நோக்கி விரைந்தாள். நின்று பேசினால்தானே, வம்பு?

தாயுடன் செல்லத் தொடங்கிய வித்யாதரன், சற்று நின்று, மனைவியைத் திரும்பிப் பார்த்தான்.

குபுக்கென்று கண்களில் பொங்கிய நீரை அடக்க முயன்றபடி மாதங்கி, தலையைத் திருப்பிக் கொண்டு, படியேறிச் சென்றாள்.

மீண்டும் ஒருதரம் தோளைக் குலுக்கிவிட்டுப் பெற்றவளைப் பின் தொடர்ந்தான், அவன்.

அறைக்குள் சென்ற மாதங்கி, மீண்டும், செய்வதறியாது, கலங்கினாள். செய்ய வேண்டியது, செய்தே ஆக வேண்டியது என்னவென்று, அவளுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால், அதை எப்படிச் செய்வது?

வித்யாதரனை, வெளியே போக விட்டிருக்கக் கூடாதோ?

கணவன்தானே? கையைப் பிடித்து, இழுத்துப் போய்ச் சொல்வதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும் என்று, அவளது நியாயத்தைச் சொல்லியிருந்தால்... ஒரு வார்த்தை கூட ஒத்துக் கொண்டிருக்கமாட்டான்.

எல்லாம், அவளது குற்றமாகத்தான் முடிந்து விட்டிருக்கும்.

வெகுவாகக் களைத்திருந்த உடலோடு, உள்ளமும் சேர்ந்து சோர்ந்துவிட, ஓய்ந்து போய், சோஃபாவில் சாய்ந்து கிடந்தபடி, கணவனின் வரவுக்காகக் காத்திருக்கலானாள், அவள்.

தூக்குத் தண்டனைக் கைதியைப் போல, சூனியத்தில் பார்வை நிலைக்க உட்கார்ந்திருந்தவளுக்கு, நேரம் நின்றதா, சென்றதா என்று, ஒன்றும் புரியவில்லை.

நகைக் கடையிலிருந்து, திரும்பி வந்துவிட்ட கோகிலம், சின்னமருமகள், கீழே வரவே இல்லை என்று அறிந்து, மாடியில் அவர்கள் அறைக்கு வந்து, விளக்கைப் போட்டுவிட்டு, அழைத்தது வரை, மாதங்கி, எதையும் அறிந்தாளில்லை.

மாமியாரின் குரல், சற்று உரத்துக் கேட்கவும், பிரமை லைந்தவளாய், "கூப்பிட்டீர்களா, அத்தை" என்று வினவினாள்.

"ம். மூன்று முறை! ஏம்மா? உடம்பு ஏதும் ரியில்லையா?" என்று, மாமியார், அன்பாக விசாரித்தாள்.

"உ. உடம்புக்கு ஒன்றும் இல்லை, அத்தை. சும்மா, ஏதோ யோசனையில்..." என்று சொல்லும்போதே, மாதங்கிக்கு, ரனம் உறுத்தியது. இந்த வீட்டில், எப்போதுமே,அவள் பக்கம் இருப்பவள், இந்த அவளுடைய மாமியார்தான். முதலிலிருந்தே, ஒரு பிரதி பலன் கருதாமல் உதவுகிறவள், இவளே. இவள் கூப்பிடக் கூப்பிடக் கவனியாமல் இருந்தது, அநியாயம் அல்லவா?

உள்ளூர வருத்தமும் உறுத்தலுமாக "எவ்வளவோ, நன்றியுடன் இருக்க வேண்டியவள், நீங்கள் கூப்பிட்டதைக் கூடக் கவனியாமல் இருந்து விட்டேனே! மன்னித்துக் கொள்ளுங்கள், அத்தை" என்று மன்னிப்புக் கேட்டாள்.

"எதற்கம்மா, நன்றி? உங்கள் திருமணத்தை தடை செய்யாததற்கா? எப்படியோ, நல்லவிதமாக, என் மகனைக் குடும்பஸ்தன் ஆக்கியதற்கு, நானல்லவா, உனக்கு நன்றி செலுத்த வேண்டும்?" என்று சிரித்தாள், மாமியார்.

'நல்ல குடும்பஸ்தனா? உள்ளதுகூட இனி நிலைக்காதே' என்று, உள்ளூர நொந்தபடி, "அதில்லை, அத்தை. கல்யாணம் ஆனதிலிருந்து, நீங்கள், எனக்கு, வேண்டிய-தெல்லாம், பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறீர்கள், உங்கள் மகனையும் செய்ய வைத்திருக்கிறீர்கள். முதலில் இருந்தே, எனக்கு, நல்ல துணிமணி இருக்க வாய்ப்பில்லை என்று, நித்யாவிடம் சொல்லி, வாங்கித் தரச் செய்திருக்கிறீர்கள். அப்புறம், இந்த டீவி, கார்... எல்லாம் உங்களால் கிடைத்த வசதிதானே, அத்தை?" என்று, பணிவுடன் கூறினாள், மாதங்கி.

இன்னொரு தரம், இப்படி மனதில் இருப்பதைப் பிரியமும் அன்புமாகச் சொல்ல வாய்ப்பிருக்குமோ, என்னவோ?

கலகலவென்று, கோகிலம் குதூகலமாக நகைத்தாள். "உன் துணிமணியும், காரும், டீவியும், நான் ஏற்பாடு செய்ததாமா? சரியான ஜோடிதான். அசட்டுப் பையன், ஏற்ற பெண்! இவ்வளவு நாள், இப்படியா நினைத்துக் கொண்டு இருந்தாய்? ஆகா! இந்த நன்றியை ஏற்றுக் கொண்டு மகா மாமியாராக வளைய வர, எனக்கு, மிகவும் ஆசைதான். ஆனால், உண்மை அதுவல்லவே, மருமகளே! உன் எல்லா வசதிகளுமே, உன் கணவனின் ஏற்பாடுகள்-தான்., தெரிந்துகொள். நீயும், பா..ம..மற்றவர்கள் போல, .ஆடத் தொடங்கிவிடக் கூடாதே என்று, அவன் செய்ததை, நான் செய்ததாகச் சொல்லியிருக்கிறான். நீ, அப்படி ஆள் இல்லை என்று, அவனுக்குத் தெரியவில்லை, பாரேன்... அல்லது, ஒருவேளை, நீ மாறிவிட்டால், என்ன செய்வது என்று, பயந்திருப்பானோ, என்னவோ?" என்று, மகன் செயலையும் நியாயப் படுத்தி, முடித்துவிட்டுப் போனாள், அவள்.

கோகிலம் சொல்லச் சொல்ல, மாதங்கியினுள் ஒரு பெரிய சுமை வெடித்துச் சிதறிப் போயிற்று.

அவனுடைய கணவனுக்கு, அவளிடம், வெறும் ஆசை மட்டும் இருக்கவில்லை. அவளது, இதம் நாடும் அன்பும் இருக்கிறது முதலில் இருந்தே, நிறையவே, இருந்து வந்திருக்கிறது.

கப்பும் கிளையும், வேரும் விழுதுமாக செழித்து, ஒரு பெரும் ஆலமரமாக வளர்ந்திருக்க வேண்டிய அந்த அன்பை, வேரைத் தோண்டி, வெண்ணீரை ஊற்றி, அழிப்பதற்கு, இந்த நீலன் மட்டும் இல்லையானால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்?!

அவன் இல்லாததாகப் பாவித்து, கற்பனை சுகத்தில் ஆழ்ந்தவளுக்குச் சட்டென நினைவு வர, 'விலுக்'கென நிமிர்ந்தாள். அந்தப் பாவி இருக்கிறான் என்பதோடு, இப்போது, வித்யாதரன் எங்கே? நீலனுடன்தான் இருக்கிறானா?

அன்பு மரம் அவன் ஊற்றுகிற அமிலத்தில், அடியோடு பட்டுப்போய்விடுமே!

பெற்றவளோடு வெளியே சென்றவன், அவளோடு திரும்பி வருவான் என்று நினைத்தாளே!

வருகிறவன், தன்னை நம்புமாறு செய்வதற்கு, அவளிடம், பெரிய திட்டங்கள் ஏதும் இல்லைதான். ஆனால், முயற்சிப்பதற்கே வாய்ப்பில்லாமல், போவதா?

கோகிலத்திடம் ஓடிச்சென்று, விவரம் கேட்டாள். நகைக்கடை வேலை முடிந்து, திரும்பிவரும்போது, 'செல்'லை 'ஆன்' செய்தானாம். யாரோ, உடனே தொடர்புகொண்டு, உடனே வரச் சொன்னமாதிரி இருந்ததாம். இறங்கிக்கொண்டு, டிரைவரோடு, கோகிலத்தை அனுப்பிவிட்டானாம். செல்லுமிடம் பற்றி மகன் சொல்லவில்லையாம்.

தெரிந்தவரை சொல்லிவிட்டு, "என்னம்மா, எங்கேனும் வெளியே கூட்டிப் போவதாகச் சொல்லியிருந்தானா? இன்னும் வரக் காணோமே!" என்றாள், கோகிலம், பரிவாக.

"இல்லை அத்தை, அவரிடம், ஒன்று.. ஒன்று நினைவுபடுத்த வேண்டும் என்று.. என்று பரவாயில்லை, அத்தை பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று அவளிடம் சமாளித்துவைத்தாள், மாதங்கி.

தனியே வந்து, கணவனுடன் தொடர்பு கொள்ள முயன்றால், முடியவே இல்லை. அலுவலகம், தொழிற்சாலை இரு இடங்களிலும் அவன் இல்லை.

'செல்'லை வழக்கம் போல, 'ஆஃப்' செய்தே வைத்திருந்-தான்.

அவளுக்கு ஒரே கவலையாகிவிட்டது. நீலன்தான், வித்யாதரை இடையில் பிடித்துவிட்டானோ?

பாவி, பாவி! வாழ்க்கையைக் கெடுக்கிறானே! நோயாளியாம், செத்துத் தொலையக் கூடாதா?

இதே ரீதியில் பலமுறை, நீலநாராயணனை நொந்து சபித்தவளுக்கு, இரவு சுமார் பதினோரு மணியளவில், வித்யாதரன் டெலிஃபோன் செய்து, "நீலன் இறந்து-விட்டான். அது தொடர்பான வேலைகள் முடிந்து, நான் திரும்பிவர, வெகு நேரம் ஆகக் கூடும்." என்று விவரம் தெரிவித்தபோது, 'திக் கென்றது.

28

சற்றுநேரம், மாதங்கியால், தன் காதுகளையே நம்ப முடியவில்லை. அன்றைக்குத்தான், சுமார் பன்னிரண்டு மணி நேரமே முன்பாக, அவளிடம், அவன் பேசிய பேச்சு என்ன? என்னென்ன மிரட்டல்கள்! செத்துத் தொலையக் கூடாதா, என்று அவள் எத்தனை முறை குமுறியிருப்பாள்?

யோசிக்கும்போதே, மீண்டும், மனதில் 'திக்'கென்றது. ஓர் உயிரின் சாவை, அவள் விரும்பி, அது நடந்தும் விடுவதா? எப்படி...

மேலே, யோசிக்கப் பயந்தவளாக, "என்ன என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கணவனிடம், கேட்டாள்.

மனைவியின் கேள்வியை இயல்பாக ஏற்று "நம்பமுடிய-வில்லை, அல்லவா? எனக்கும் அப்படித்தான் இருக்கிறது. நேரில், பார்த்த பிறகும் அதுவும்... எல்லாம், பிற்கு சொல்கிறேன். இன்னும் காணோமே என்று; தேடிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பாயே என்றுதான்,

இப்போது, ஃபோன் செய்தேன். வைத்துவிடட்டுமா?" என்று, கேட்டபடியே, ரிசீவரை வைத்தான், அவன்.

வெகுநேரம், மாதங்கிக்கு, ஒன்றுமே ஓடவில்லை.

இரவு பதினொரு மணிக்குமேல் வீட்டில் எல்லோரும் படுத்து, உறங்கியபிறகு, செய்வதற்குப் பெரிதாக ஒன்றும் கிடையாதுதான் என்றாலும், அவளது மனம்கூடச் சரியாகச் சிந்திக்க மறுத்தது.

கச்சல் உடம்போடு, குண்டும் குழியுமான முகத்துடன், அவள் எதிரே நின்று, அவன் மிரட்டியதும், நெருங்கியதும் நினைக்கையில், அப்போதும்கூட, அருவருப்பினால், அவளது உடல் சிலிர்த்தது.

மேடு, பள்ளம் சாலைச் சந்திப்புகள் எதையும் அறியாமல், உடல் சோர நடந்ததும், வீடுவந்து, உடம்பில், சற்றுச் சுரணை வந்ததும், தோலைப் பிய்த்து-விடுவாள்போலத் தேய்த்துக் குளித்ததும், கணவனிடம் சொல்வதற்கும், அவனைப் பிரிவதற்கும், மனதைத் திடப்படுத்த அரும் பாடு பட்டதும், நீலனைச் சபித்ததுமே, மீண்டும் மீண்டும் நினைவு வந்தது.

அவளது துன்பங்களுக்கெல்லாம் காரணமாக இருந்தவன், இப்போது இல்லை என்பதே, சற்றுப் பொறுத்துதான், அவள் மனதில் உரைத்தது!

அதாவது, இனி அவன் அவளைத் துன்புறுத்த முடியாது!

'உன் கணவனை, அது செய்வேன், இது செய்வேன்' என்று மிரட்டி, அவளை நாசப் படுத்த முடியாது!

ஓர் உயிரின் மறைவில், மகிழ்ச்சி அடைவது சரியல்ல என்று, நன்றாகவே தெரிந்தபோதும், மனம், மிகப் பெரும் நிம்மதி அடைவதை, மாதங்கியால், தடுக்க முடியவில்லை.

அவளுடைய கணவனை, அவளிடமிருந்து பிரிக்க, இனி

ஆளில்லை. பெண்களே மோசம் என்று, உருவேற்றவும், அந்த மோசமான பெண்களில், மாதங்கியும் ஒருத்தி என்று காட்டவும் கூட. இனி மேல் யாரும் கிடையாது!

இந்த நீலன், என்னென்னவிதமாய்த் தாக்கக் கூடும், அந்தத் தாக்குதல்களை எப்படியெப்படிச் சமாளிப்பது என்று, மண்டையைப் போட்டு உடைக்கவோ, அந்தப் போராட்டத்தில்,அவ்வப்போது அடையும் தோல்விகளை எண்ணி வேதனைப் படவோ, அவசியமே, இராது!

இதை நினைக்கையில், ஆனந்தப் படாமல், மாதங்கியால் எப்படி இருக்க முடியும்?

ஆனால், தன் செயலாய் ஓர் உயிரைப் படைக்கமுடியாத நாம், அடுத்தவர் இறப்பில் ஆனந்தப்படுவது, அநாகரிகம் என்று, அறிவுறுத்தப்பட்டு வளர்ந்த விதத்திலேயே, அரும்பாடுபட்டு, மாதங்கி, தன் மகிழ்ச்சியை அடக்கிக் கொண்டாள்.

இப்போது, மீண்டும், பழைய நிலை நினைவு வந்தது.

ஒன்றைப் பத்தாய்த் திரித்துப் பேசவும், ஒன்று-மில்லாததை, ஊதிப் பெரும் தீயாக்கவும், இப்போது, நீலன் இல்லைதான். ஆனால், அதற்காக நடந்த எதையும் இல்லையென்று, ஆக்கமுடியாதே. அந்த நீலநாராயணன் செய்தது... மன்னிக்கவோ, மறக்கவோ, மறைக்கவோகூட முடியாத குற்றம் ஆயிற்றே!

அலுத்துக் களைத்து, வித்யாதரன் வீடு வந்து சேர்ந்தபோது, இரவு, இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

வாடிச் சுருங்கியிருந்த கணவனின் முகத்தைப் பார்த்ததும், மற்றதெல்லாம் மறந்துவிட, அவனைத் தேற்றுவதில் முனைந்தாள், மாதங்கி.

'ஹீட்டரை'ப் போட்டுக் குளிக்கச் செய்து, அவன்

குளித்து முடிக்குமுன், சமையலறையைப் பீராய்ந்து, கொஞ்சம் சாதம் பிசைந்து எடுத்துவந்து, உண்ணவைத்து, கூடான் பாலையும் அருந்தக் கொடுத்து, முகம் வருடி, தோள்தடவி, தட்டிக் கொடுத்துத் தெரிந்த வரையில், அவனுக்கு, ஆறுதல் அளிக்க முயன்றாள்.

அவளது முயற்சி வெற்றி பெற்றிருக்கவேண்டும். ஏனெனில், ஓய்ந்து, அவள்மீது சாய்ந்து கிடந்தவன், மெல்ல நிமிர்ந்து, அமர்ந்து, நீலனைப் பற்றியும், அன்றைய நிகழ்ச்சிகள் பற்றியும், சற்றுத்திடமுற்ற குரலில், அவளிடம், சொல்லத் தொடங்கினான்.

"நீலன் ரொம்ப நேரமாக, என்னைத் தேடியிருப்பான் போலத் தோன்றுகிறது, மது, அலுவலகத்தில், 'செல்' எண்ணைத் தொடர்ந்து, தொடர்பு கொள்ள முயற்சிக்-கும்படிச் சொல்லியிருக்கிறான். இங்கே, வீட்டுக்கு, ஃபோன் செய்தானா?"

"இல்.." என்று, தொடங்கியவளுக்கு நினைவு வர, "தெரியவில்லையே, வித்தி. எனக்குக் களைப்பாக இருந்ததால், நான் இங்கே வந்து, படுத்துவிட்டேன். அக்கா ஃபோனை எடுத்தார்களா, இல்லையா என்று, தெரியாதே!" என்றாள், தணிந்த குரலில்.

"ச்சு எடுத்திருந்தால், சொல்லவும் மாட்டார்கள். ஆனால், வீட்டுக்கு, அவன் ஃபோன் செய்திருக்கமாட்டான் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அலுவலகத்தில் கூட, வீட்டில் என்னைத் தேடவேண்டாம் என்றானாம். 'செல்'லைத்தான், முயற்சித்துக் கொண்டே இருக்கும்படிச் சொன்னானாம். ஒருவேளை, பெண்கள் பயந்துவிடுவீர்கள் என்று நினைத்திருப்பானோ, என்னவோ?" என்றான் அவன், யோசனையாக.

அவனது முயற்சி, அவளுக்குத் தெரியக் கூடாது, என்று எண்ணியிருக்கிறான் என்பது மாதங்கிக்குப் புரிந்தது.

அப்புறம் என்ன நடந்தது? எப்படி இறந்தான்? இதில், அவள் பயப்பட என்ன இருக்கக் கூடும்?

கணவன் கையைப் பற்றி, "என்ன பயம், வித்யா?" என்று, மெதுவாகவே, கேட்டாள்.

வேதனையோடு, ஒருதரம் கண்மூடியிருந்துவிட்டு, "நீலன் தற்கொலை செய்துகொண்டான், மது!" என்று, துயரத்துடன் கூறினான், வித்யாதரன்.

"என்னது?!" என்று, அதிர்ச்சியுற்றுக் கூவினாள், மாதங்கி.

அவளால் இதைக் கொஞ்சமும் நம்பவே முடியவில்லை! நீலனாவது, தற்கொலை செய்வதாவது? பத்துப் பேரைக் கொலை செய்தாவது , தான் பிழைக்க - பிழைப்பதற்காக ஒரு பிழை செய்வதைக்கூட, ஏதோ ஒரு வகையில், அரைகுறை நியாயமான ஒரு காரணமாகச் சொல்லவேனும் முடியும். ஆனால், நீலன் தன் இன்பத்துக்காகவே, பத்துக் கொலை செய்யக் கூடியவன், இவனாவது, தன்னைத் தானே, மாய்த்துக் கொள்வதாவது? இதில் என்னவோ, குசும்பு, ஏதோ சூழ்ச்சி இருக்கிறது! ஆனால், செத்து விட்டானே!

"தற்கொலையா? மெய்யாகத்தான் சொல்லுகிறீர்களா?"

அவளும் கலங்கிவிட்டாள் என்று எண்ணி, அவளைத் தன் தோளோடு அணைத்தபடி, வித்யாதரன் மேலே சொன்னான்.

"நம்ப முடியவில்லையல்லவா? நேரில் பார்த்த என்னாலேயே, இன்னமும் நம்பக்கூட வில்லையே. நீ, எப்படி? அநியாயம் என்னவென்றால், சமயத்தில் நான் போய்ச் சேர்ந்திருந்தால், அவனைக் காப்பாற்றியிருக்கக் கூடும். ஆனால், வழக்கம்போல நான், செல்லை 'ஆஃப்' பண்ணி வைத்திருந்ததால், யாரும் என்னோடு, தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது. கடைசியாக, நீலன்

அவசரமாக அழைக்கும் விவரம் தெரிந்து, நான் அவன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தபோது, அவனைக் காப்பாற்றுவதற்கான காலம் கடந்துவிட்டது. கண்டவனும், கூப்பிட்டு அறுக்கிறானே என்று, 'ஆஃப்' செய்து வைத்தது, காலன் வர வழி வகுத்துவிட்டது" என்று மிகவும் வருந்திப் பேசினான்.

பெரும்பாலும், வித்யாதரன், 'செல்ஃபோனை' அணைத்துதான் வைத்திருப்பான். 'செலவு பண்ணி, நான் இதை வாங்கி வைத்திருப்பது நான் பேசத்தானே தவிர, மற்றவர்கள் அரட்டை அடிப்பதற்காக அல்ல' என்பான். தனக்குத் தேவைப்படும்போது, 'ஆன்' செய்து பேசிவிட்டு, மீண்டும், நிறுத்திவிடுவான். இதைச் சுட்டிக் காட்டித்தான், முன்பு, நீலனின் முகவரியை, மாதங்கி, கணவனிடம் வாங்கியதே.

சிலசமயங்களில், கணவனோடு அவசரமாகத் தொடர்பு கொள்ள முடியாமல், மாதங்கியே சிரமப்பட்டது உண்டு. இதற்கு, இந்த செல்ஃபோன் இல்லாமலே, இருந்திருக்கலாம் என்று எரிச்சலோடு, அவள் நினைத்ததும், உண்டுதான்.

ஆனால், இப்போது, தன் ஒரு பழக்கத்தினால், தகுதியற்ற ஒருவனைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே என்று, கணவன் வருந்துவது தாங்காமல், பரிவாக அவன் நெற்றியில் முத்தமிட்டு, "அவர் கூப்பிடுவார் என்று, உங்களுக்கு, எப்படிம்மா, தெரியும்? அத்தோடு, உங்கள் வழக்கம், நீலனுக்கும் தெரியும் தானே? அவ்வளவு அவசரம் என்றால், வீட்டில் தகவல் சொல்லியிருக்கலாமே! ஏதோ, விதி முடிகிற நேரம், அது, உங்கள் இருவர் கண்களையும் மறைத்துவிட்டது என்ன செய்வது?" என்று தேற்றினாள்.

மேலும் தொடர்ந்து, "ஆனால், நீங்கள், இதை 'ஆப்' பண்ணி வைத் ததால், காலம் கடந்துவிட்டது என்றீர்களே, அது, எப்படி? மருத்துவ உதவிதானே, உயிரைக் காப்பாற்ற

முடியும்? அதற்கும், நீங்கள், உங்களையே நொந்து-கொண்டால் எப்படி?" என்று வினவி, கணவனின் குற்ற உணர்வை நீக்க முயன்றாள்.

ஆனால், "மருத்துவ உதவியையே, என்னைப் பாராமல், ஏற்க முடியாது என்றுவிட்டானே, அந்த முட்டாள்!"

என்று, வித்யாதரன் கூறவும், மாதங்கி, திகைத்துப் போனாள்.

கூடவே, உள்ளூர ஒரு கலக்கமும் தோன்றி, நெஞ்சைப் பிசைய, "ஏன்?" என்றாள்.

"யாருக்குத் தெரியும்?" என்றான், கணவன் அலுப்பாக. "என்னவோ, என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமாம். என்னைப் பார்த்து, என்னிடம் மன்னிப்பு பெறுமுன், டாக்டர், பக்கத்திலேயே வரக் கூடாது, என்றுவிட்டானாம். சும்மா என்றால், அவன் உட்கொண்டிருந்த விஷத்துக்கு, அவனைக் காப்பாற்றியிருக்கலாமாம். ஆனால், நீலுவுக்குச் சும்மாவே, நோயினால், வலுவிழந்த உடம்பு. இந்தத் தாமதம், அவனுக்கு எமனாகி விட்டது!" என்றான், வேதனையோடு.

வியப்பளித்தபோதும், மாதங்கிக்கு, விஷயம் புரிந்தாற்-போல இருந்தது. உள்ளூரப் பொங்கிய சீற்றத்தை அடக்கிக் கொண்டு, மடிமீதிருந்த அவனது கைவிரல்களை, மெல்ல வருடிக் கொடுத்தபடி, "மன்னிப்பு, எதற்காகவாம்? கொஞ்சமாவது, சொன்னாரா?" என்று, தாழ்ந்த குரலில் வினவினாள்.

"இல்லையேடா!" என்று கையை விரித்தான், வித்யாதர். "'வித்யாவின் மன்னிப்பு கிடைக்காவிட்டால், நான் உயிர் வாழ்வதிலேயே அர்த்தம் இல்லை, அதனால், அவன் வந்து, மன்னித்தேன் என்று சொல்லுமுன், எனக்கு வைத்தியம் செய்யக் கூடாது' என்று, டாக்டரிடம், பிடிவாதமாகச்

சொல்லியிருந்தானாம். நான் போய், நிலைமை தெரியவும், அவன் கொலையே செய்தாலும், மன்னிப்பேன், என்று கூறி, வைத்தியத்தைத் தொடங்கச் செய்தேன். ஆனால், டாக்டரோடு உள்ளே போனவன்.. அப்புறம், உயிரோடு திரும்பிவரவில்லையே, மது!" என்று, தலை திருப்பி, மனைவியின் கழுத்து வளைவில் முகம் புதைத்துக் குமுறினான்.

ஆறுதலாய், அவன் தலையை வருடிய மாதங்கிக்கு, நன்றாகவே, விஷயம் புலப்பட்டுப் போயிற்று.

ஆயினும், ஒரு சின்ன உறுத்தல் உந்த, "வைத்தியர், அங்கே எப்படி வந்தார்?" என்று, விசாரித்தாள். "அவரது வைத்தியம் பலனளிக்கவில்லை என்றாலும், சமயத்தில் அவர் கிடைத்தது பெரிதுதானே? இல்லாவிட்டால், அந்த நேரத்தில், அவருக்காக வேறு, அலைய நேர்ந்திருக்குமே!"

"யாரோ வாடிக்கையாளர், ஃபோன் செய்தாராம். இவன் குழறிக் குழறிப் பேசவும், டாக்டரை வரவழைத்துவிட்டு, ரயிலுக்குப் போயிருக்கிறார். ஆனால், என்ன செய்து, என்ன? பயன் இல்லாது போய்விட்டதே!" என்று, வருத்தத்துடன் உரைத்தான், அவன்.

விளைவு என்ன ஆனாலும், கணவனிடம், நடந்தை-யெல்லாம் சொல்லிவிடுவது, அவளையே வெறுத்து விரட்டினாலும் பரவாயில்லை என்று எண்ணியிருந்த மாதங்கிக்கு, இப்போது மனம் மாறியது.

அவள் பிழை புரிந்தவளில்லை, தப்பு செய்தவனோ, உயிரைக் கொடுத்து, மன்னிப்புக் கேட்டிருக்கிறான். மன்னிக்க முடியாத குற்றம் என்று, எதுவும் கிடையாது. இப்போது, இந்த விஷயத்தைப் போட்டு உடைப்பதால், யாருக்கும் லாபம் இல்லை, வீண் அருவருப்புதான் மிஞ்சும், போகட்டும். இது, இப்படியே, மனதிற்குள்ளேயே, புதைந்து, போய்விடட்டும். நண்பன் என்று வித்யா நம்பியவன்,

நல்லவனாகவே, அவன் மனதில் இருந்தவிட்டுப் போகட்டுமே!

எப்படியும், அவளது குடும்ப அமைதியை, நீலனால் கலைக்க முடியாது.

இப்படி எண்ணித்தான், நீலனைப் பற்றி எதுவும் கூறாமல், மாதங்கி, கணவனின் தேவைகளைக் கவனித்துத் தென்பூட்ட முனைந்தது. ஆனால், நீலநாராயணன், செத்தபின்னும் செயல்படும், ஒரு கொடும் விஷப் பாம்பு என்பது, அவளுக்குக் கொத்துப் பட்டு, விஷமேறித் தவிக்கும் போதுதான் தெரிந்தது.

29

நீலநாராயணனிடம், வித்யாதரனுக்கு, மிக உயர்ந்த அபிப்பிராயம் என்பது மாதங்கி, ஏற்கனவே அறிந்த விஷயம்தான். அந்த நன் மதிப்பை, அவன் எப்படி வளர்த்துக் கொண்டான் என்பதை அன்றிரவில், அவள் தெளிவாகத் தெரிந்துகொண்டாள்.

பெரிய தர்மதாதா போலப் பல சிறுவர்களுக்குப் பள்ளிச் சம்பளம் கட்டியிருக்கிறான்.

நல்ல செயல்தான். ஆனால், தொடர்ந்து, அந்தப்-பணத்தைக் கட்டுவது, வித்யாதரன்தான். "அவனுக்கு, அளவுக்கு உட்பட்ட வருமானம்தானே? இந்தப் பையன்களுக்குப் பணத்தைக் கட்டிவிட்டு, சொந்தச் செலவுக்கு அவன் திண்டாடுவதைப் பார்த்துவிட்டு, நானே கட்டத் தொடங்கினேன்." என்றான்.

என்ன நடந்திருக்கும் என்பது, மாதங்கிக்குப் புரிந்தது. ஆனால், அதை வெளிப்படையாகச் சொல்ல முடியாமல், "ஆமாம். மிக நல்ல காரியம் தொடர்ந்து செய்யுங்கள்." என்றாள்.

செத்தபின் உடல் உறுப்புகளை, மருத்துவக் கல்லூரிக்குத் தானம் செய்திருந்தான்!

இறந்த பின்னும் பயனாக வேண்டுமாம், எவ்வளவு பெரிய மனம் பார், என்றான் வித்யாதரன். ஆனால், உறவென்று யாரும் இல்லாத நிலையில்-உறவினரை இல்லையோ, அன்றி, வெறுத்து ஒதுக்கிவிட்டார்களோ - அனாதைப் பிணமாகக் கிடந்து நாறுவதைவிட, இது மேல் என்று, எண்ணியிருப்பான் என்றே, மாதங்கிக்குத் தோன்றியது. வித்யாவிடமும் பெரிதாகக் காட்டிக் கொள்ளலாமே!

இன்னும், இந்தத் தானம், அந்தத் தானம் என்றான். ஆனால், எல்லாவற்றுக்குமே, கடைசியாகப் பணம், வித்யாதர்தான் கொடுத்துக் கொண்டிருந்தான்.

இந்த உண்மையை, இப்போது எடுத்துச் சொன்னால் நன்றாயிராது என்பதோடு, இப்போது இல்லாதவனைப் பற்றிக் கெடுதலாகப் பேச மனமும் இல்லாமல், சரிசரி என்று கேட்டுக் கொண்டிருந்தாள், அவள்.

எப்படியோ, மனதை விட்டு, இதையெல்லாம், கொட்டிவிட்டால், வித்யாதரனின் மனப் பாரம், இறங்கி, நீலன் ஒரு குறுகியகாலப் பழக்கம் என்பதாக மட்டுமே, அவனை நினைக்கத் தொடங்கிவிட மாட்டனா, என்ற எண்ணமும், மாதங்கிக்கு இருந்தது.

எனவே, பேச்சிலும், செயலிலும், கணவனுக்கு, இதமாகவே, நடந்து கொண்டாள், அவள்.

காலையில் எழுகையில், இதழ்க் கடையில் புன்னகையின் சாயலோடு ஆழ்ந்த துயிலில் இருந்த கணவனைக் காண்கையில், உள்ளூர ஒரு வெற்றிப் பெருமிதம்கூட, அவளுக்கு உண்டாயிற்று.

இனி, இந்த இன்பத்தைக் கெடுக்க யாரும் இல்லை என்று

மகிழ்ச்சியோடு எண்ணமிடும்போதே, மாதங்கிக்கு, அந்த மேனகாவின் நினைவு, வந்தது.

ஆனால், அவள் வெறும் பம்பரம் மாத்திரமே. நீலன் ஆட்டி வைத்தபடி, ஆடிக் கொண்டிருந்தாள். சூத்திர-தாரியே இல்லை எனும்போது, பம்பரத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை! அத்தோடு, அந்த ரதியே வந்து நின்றாலும், வித்யாதரன், தானாக, இன்னொரு பெண்ணை, வேறு எண்ணத்தோடு பார்க்கக்-கூடமாட்டான்!

வெகுநேரம் அயர்ந்து உறங்கி விழித்தெழுந்த வித்யாதரன், அவன் எழுவதைக் கவனித்திருந்து, பல் துலக்கிவரும்போது, காஃபியுடன் வந்த மனைவியைப் பார்த்ததும், மகிழ்ச்சியோடு, முறுவலித்தான். கப்பை வாங்கி, டீபாயில் வைத்துவிட்டு, அவளது இரு கைகளையும் பற்றி, அருகில் இழுத்தான்.

புன்னகையோடு ஏறிட்டவள்ளின் முகத்தை ஏந்தி, "உன் அன்பும், ஆதரவும் இல்லாமல், நேற்றைய இரவை, என்னால், கடந்திருக்க முடியாது, கண்மணி! மனமுணர்ந்த நன்றி." என்றுரைத்து, அவள் நெற்றியில், மென்மையாக முத்தமிட்டான்.

சன்னச் சிரிப்புடன் விலகி, காஃபி கப்பை எடுத்து, மீண்டும் கணவன் கையில் கொடுத்தாள், அவள். "இனிமேல், உணவை அள்ளித் தருகிறதே என்று, உங்கள் கைக்குக் கூட நன்றி கூறுவீர்கள் போல?" என்று, அவள் கேலியாகக் கேட்கவும், அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"ஆனால், இந்தமாதிரி எத்தனை மனைவிகள் இருக்கிறார்கள்; சொல்லு? ஏதோ, எனக்குக் கிடைத்தது வைரம் என்றால், அதைச் சொல்லக் கூட விடமாட்டேன் என்கிறாயே!" என்று, போலியாகக் குறைப்பட்டபடி,

ரிஷ்யாதரன் குளிக்கச் செல்லவும், மாதங்கி, வானத்திலேயே பிறந்தாள் எனலாம்!

நீலனின் இறப்பு பற்றி, வீட்டில் ஏற்பட்ட பிரதிபலிப்பு, மாதங்கி எதிர்பார்த்ததைவிடக் குறைவாகவும், மாறுபட்டதாகவும் இருந்தது.

தற்கொலை என்பது, எல்லோருக்குமே, சற்று அதிர்ச்சிதான்.

"என்ன, இப்படிப் பண்ணிவிட்டான்? இனி, வெளியூர்த் தொடர்புகளை, யாரைக் கொண்டு கவனிப்பது?" என்றார் கருணாகரன், யோசனையோடு. பாவம், அவருக்குத் தொழிலைப் பற்றிக் கவலை!

"தற்கொலையா? பாவம்!" என்றதோடு நீலனை மறந்துவிட்டு, "இன்னும் இரண்டு வடையும், கொஞ்சம் தொத்துமல்லிச் சட்டினியும் வைக்கிறாயா, மாதங்கி?" என்று, சத்யாகர், சாப்பாட்டில் இறங்கினான்.

பாமா, எப்போதும் முதலில் சாப்பிடுகிறவள் என்பதால், மணியாள் பரிமாறுவதைக் கவனிப்பதும், சமயத்தில் பரிமாறுவதும் கூட, கோகிலமும், அவளுடைய இளைய மருமகளும்தான்.

காலைச் சிற்றுண்டியின் போதுதான், இந்தப் பேச்செல்லாம் நடந்தது.

"நம் வீட்டுக்கெல்லாம் வருவானே, அவனா? வித்யா தினேகிதன். என்ன வேதனையோ பாவம்!" என்றாள், யோகிலம்.

வாயில் திணித்திருந்த தோசைவிள்ளலை அவசரமாக விழுங்கிவிட்டு, "யார்? அந்த ஒல்லியாகக் கரடுமுரடான முகத்தோடு, வருவாரே, அவர்தானே, வித்யா? ஏன் தற்கொலை செய்தானாம்? காதல் தோல்வியா? அப்படித்தான் இருக்கும். அந்த மூஞ்சியைப் பார்த்து, எவள்,

காதலிப்பாள்?" என்றாள், பாமா அலட்சியமாக.

"அப்படிச் சட்டென்று, ஒருவரை, ஒன்று சொல்ல கூடாதம்மா பாவம், அந்தப் பிள்ளைக்கு, என் வேதனையோ? ஏதோ, உடம்பு சரியில்லாதவ என்றுகூடச் சொன்னாயில்லையா, வித்யா?" என்று, கோகிலம், பரிந்து பேசினாள்.

"ஆமாம், அம்மா, நோயின் உபாதைதாங் முடியவில்லை போல" என்றான், மைந்தன்.

வெளியே கிளம்புமுன், தனிமையில் மனைவியிடம், "உடம்பு வாதனை என்றுதான், முதலில் நானும் நினைத்தேன், மது. ஆனால், இந்த மன்னிப்பு விவகாரம்தான், மனதைக் குழப்புகிறது. வேலையை, இடையில் விட்டுச் செத்துப் போவதற்காகவோ என்றும் எண்ணிப் பார்த்தேன். ஆனால், அதுவும் சரியென்று படவில்லை. உனக்கு, ஏதாவது தோன்றுகிறதாம்மா?" என்று நேரடியாகக் கேட்டான்.

காரணம் புரியாத குழப்பத்தில் கேட்டதுதான். ஆனால், இந்த நேரடிக் கேள்வியில், மாதங்கிதான் சற்றுத் தடுமாறிப் போனாள். ஏனெனில், அவளுக்கு, விடை தெரியுமே!

தெரிந்த மெய்யைச் சொல்லவும் முடியாமல், முழுப் பொய்யைக் கணவனிடம் கூறவும் முடியாமல் அவள் திணறிக் கொண்டிருந்தபோது, அவனே, "பாவம், உன்னைப் போய்க் கேட்கிறேன் பார். நீலனை நன்றாக அறிந்த எனக்கே, ஒன்றும் புரியவில்லை, உனக்கு எப்படித் தெரியமுடியும்? இப்போது, நான் கிளம்பட்டுமாடா? அங்கே, நீலன் விஷயமாக இன்னும் என்னென்ன செய்யவேண்டியிருக்குமோ?" என்று, ஒரு பெருமூச்சுடன் கிளம்பினான்.

'அப்பாடி' என்று, நிம்மதியாக மூச்சு விட்டாள் மாதங்கி.

அதுதான், அவள் கடைசியாக விட்ட நிம்மதிப் பெருமூச்சு! அதன்பிறகு, அவளது வாழ்வில் நிம்மதி என்பதே, இல்லாது போயிற்று!

திருமணமான புதிதில், நீலநாராயணன், அவர்கள் வாழ்வில் தலைநீட்டு முன்னால், காலையில் அலுவலகம் செல்லும் வித்யாதரன், மதியத்துக்கு முன், ஒருதரமாவது, மாதங்கிக்கு, டெலிஃபோன் செய்வான். மனைவியின் குரல் கேட்டு, ரொம்ப நேரம் ஆகிவிட்டதென்று, காரணம் சொல்வான். 'ஸ்வீட் நத்திங்க்ஸ்' என்பார்களே, அதுபோல, ஏதையாவது பேசி, அவளைக் கிளுகிளுக்கச் செய்துவிட்டு, ரிசீவரை வைப்பான்.

வெகுநாட்களுக்குப் பிறகு, கணவன் வாயிலிருந்து வந்த 'வைரத்'தினாலோ, என்னவோ, பழைய விதமான டெலிஃபோன் பேச்சை, மாதங்கியின் மனம் வெகுவாக எதிர்பார்த்தது.. எதிர்பார்த்து, ஏமாந்தது.

நேரம் இருந்திராது, வழக்கமான வேலைகளோடு, நீலன் சம்பந்தமான பிரச்சினைகளையும் பார்க்க வேண்டியதாய் இருந்திருக்கும், இன்னும் கூட, ஏதேனும் அதிகப்படி வேலைகள்கூட கவனிக்கும்படியாகி இருக்கலாம். இன்னோரன்ன பல காரணங்களைத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டபோதும்கூட, உள்ளூர ஏதோ, நெருஞ்சியாய், அவளை, உறுத்தத் தொடங்கியது.

மதியம் தாண்டும் வரை பொறுத்துப் பார்த்துவிட்டு, அவளாகவே, வித்யாதரனுக்கு, ஃபோன் செய்தாள். அப்போதுதான், அவளுக்கு, முதல் அதிர்ச்சி! அப்புறம் பல.

எப்போதுமே, நீலனால் குழப்பப்பட்டிருந்த சமயத்திலும்கூட, டெலிஃபோனில் கலகலப்பாகப் பேசுகிறவன், வித்யாதரன். எனவே, வேலை மும்முரத்தின் நடுவே என்றாலும், மனதிற்கு இதமாக, இரண்டு வார்த்தைகளை எதிர்பார்த்த மாதங்கிக்கு, அவளது

குரலைக் கேட்டதுமே, "வேலை நேரத்தில் தொந்திரவு செய்யாதே, மாதங்கி" என்று கடுமையாகக் கூறி, மேலே பேச இடமும் கொடாது, வித்யாதரன் 'ரிசீவரை'ப் பட்டென்று வைத்துவிடவும், ஓங்கி, முகத்தில் அறைந்த மாதிரி, இருந்தது.

மெய்யாகவே, அதிக வேலையே என்றாலும், அதை, அமைதியாகவும் சொல்லலாமே! 'இப்போது பேச நேரம் இல்லையம்மா., பிறகு பேசலாம்.' என்று, மெதுவாகச் சொல்லக்கூடாதா? 'சுள்'ளென்று துளிர்த்த கோபத்தை அடக்கிக் கொண்டு, 'பாவம், இந்த நீலனின் தற்கொலை-யால் என்னென்ன தொல்லைகளை போலீஸ் விசாரணை கூட நடந்திருக்கக் கூடும், நண்பன் என்று எல்லாம் வித்யாதானே பார்க்கும்படியாகியிருக்கும்? இதெல்லாமே, அவனுக்கு எரிச்சல் மூட்டியிருக்கக் கூடும் அந்த நேரத்தில், மாதங்கியும் 'போன்' செய்யவே, கோபத்தை, அவளிடம் காட்டிவிட்டான் போலும்.

இவ்வளவையும் யோசித்து, மனதை அமைதிப் படுத்திக் கொள்ள மாதங்கி எவ்வளவோ முயற்சித்தபோதும், அவளால், தன் கவலையை, அடியோடு நீக்கிக் கொள்ள முடியவே இல்லை.

முன் தினம், மாதங்கி, நீலன் இருப்பிடம் சென்றது, எப்படியாவது, வித்யாதருக்குத் தெரியவந்திருக்குமோ? மேலும்.. ஏதேதோ எண்ணி, உள்ளம் கலங்கியது, அவளுக்கு.

ஏற்றாற்போல, "ராத்திரி வரலையின்னு, சின்னய்யா சொல்லச் சொன்னாரம்மா." என்று, டிரைவர் வந்து சொல்லவும், மாதங்கிக்குப் பகீர் என்றது.

ஏன்? என்ன ஆயிற்று?

எங்கிருக்கிறான், என்ன செய்கிறான் என்று, எதுவும் தெரிவியாமல், மொட்டையாக, இது என்ன செய்தி?

அதுவும் டிரைவரிடம்! அவனது 'செல்ஃபோனை'ப் பயன் படுத்தி, இந்தச் செய்தியை, வித்யாவே, அவளிடம் தெரிவித்திருக்கலாமே? அதாவது, டிரைவரிட்டம் சேதி அனுப்பியதின் அர்த்தம், அவளிடம் பேச அவனுக்கு விருப்பமில்லை! ஏன்?

'கண்ணிழந்தான் பெற்றிழந்தான் போல்' என்று, கம்பராமாயணத்தில், ஓர் இடத்தில் வரும். அது என்ன என்பதை, மாதங்கி, தொடர்ந்த பல நாட்களில், நன்றாகப் புரிந்து கொண்டாள். கைக்குக் கிட்டியது போல, இருந்த சொர்க்கம், பாலை நிலத்தில் கொட்டிய நீரைப் போல, அடையாளமே இல்லாமல், மறைந்து போயிற்று.

முன்பு, நீலன் அவளைக் குணம் கெட்டபெண்ணாகச் சித்தரித்து வைத்திருந்தபோதும்கூட, பிழை பொறுத்து, அன்பு செலுத்தும் பாவனையில், வித்யாதரன், மனைவியிடம், ஒருமாதிரி, மிகவும் பிரியமாகத்தான் இருந்தான்.

ஆனால், இப்போதோ, மாதங்கி இருக்கும் இடத்தில் நிற்பதுகூடப் பாவம் என்று, கருதுகிறவனைப் போல நடந்துகொண்டான். அவள் முகத்தைப் பார்ப்பது இல்லை. அவளது கண்களைச் சந்திப்பது இல்லை. முடிந்த அளவு நேரத்தை, வெளியே செலவிட்டான். ஓரேயடியாக, வீட்டுக்கு வராமல் இருந்தால், என்ன, ஏது, என்று கேள்வி எழுமே என்றுதான், அவன் வீட்டுப் பக்கம் வந்ததே, என்று உணர்ந்த மாதங்கி, குழப்பமும் பயமுமாகத் தவித்துப் போனாள்.

கள்ளமற்ற விஷயங்களைக் கூடக் குற்றமாகத் திரித்துகூறி, மனதைக் கெடுக்க, நீலன்கூட இல்லாதபோது, ஏன் இப்படி?

நீலனின் பணியை, அவனுடைய கூட்டாளி மேனகா தொடர்கிறாளோ, என்பதற்கும் இடமில்லாமல், அவன்

இறந்த சேதி வெளியானதுமே, அவளும் சொல்லாமல் கொள்ளாமல், மறைந்துவிட்டாளே.

அது பற்றி, 'கெஸ்ட் ஹவு'சிலிருந்து, சேதி வர, "நீலன் சிபாரிசில் வந்தவர்கள், அவன் இல்லாமல், நாம் எந்த உதவியும் செய்யமாட்டோம் என்று எண்ணிவிட்டாள் போல. நீலன் இறந்து விட்டால், அவன் நட்பும், இறந்து போய்விடுமா? எவ்வளவு மட்டமாக, நம்மை மதித்துவிட்டாள், அந்தப் பெண்!" என்று, வித்யாதர், சத்யாகரிடம், வருத்தமாய்ச் சொன்னது, மாதங்கியின் காதுகளிலும், விழுந்தது.

அவள் வந்த காரியமே, வேறு. அதை, இனிச் செய்யத் தேவையில்லை என்பதோடு, அதற்குப் பணம் தரவும், ஆளில்லையே என்றும் போயிருப்பாள், என்றெண்ணிய மாதங்கிக்கு, அப்போது, உள்ளூரச் சிரிப்பு கூட வந்ததே!

ஒருவேளை, நண்பன் இறந்த அன்று, அவனைப் பிடிக்காதவளான மனைவியோடு சுகித்தோமே என்ற குற்ற உணர்வில் இப்படி இருக்கிறானோ, என்று தோன்றவும், மாதங்கியும், கணவன் போக்கில் குறுக்கிடாமல், ஒருசில நாட்கள், ஒதுங்கியே இருந்து பார்த்தாள். ஆனால், வித்யாதரனின் போக்கில் சற்றும் மாறுதல் ஏற்படாது போகவும் அவளது பொறுமையும் வற்றி வரண்டது.

முடிந்தவரை எரிச்சலை அடக்கிக் கொண்டு ஒருநாள் வித்யாதரனிடம், நேரடியாகவே, "ஏன் இப்படி நடந்துகொள்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"எப்படியாம்?" என்று, ஏளனமாகப் புருவம் உயர்த்தியவன், உடனேயே, "இதோபார், நீ, எதெதை விரும்பி என்னை மணந்தாயோ, அந்தப் பணம், நகை, துணிமணி, மற்ற வசதிகளெல்லாம், உனக்குத் தொடர்ந்து கிடைக்கும். அதற்குமேல் எதற்கும், முக்கியமாக என் உறவுக்கு, ஆசைப்படாதே. அது, இனி ஒருநாளும் உனக்குக்

கொ...க்காது. நான் உனக்கு, இனி ஓர் அன்னியன்." என்றான் புயு.வாக.

"அதெப்படி? நாமிருவரும் கணவன் மனைவி.." என்று தொடங்கியவளின் பேச்சைக் கை உயர்த்தி, அடக்கினான் அவன். "இனி நான் இந்த வீட்டுக்கு வரவேண்டாம் என்று நினைத்தால், தொடர்ந்து இந்தப் பேச்சைப் பேசு. அல்லது, இத்துடன் நிறுத்திக் கொள். ஆனால், நீ, என்ன சாதாடினாலும் என் முடிவு ஒருநாளும் மாறாது என்பதையும் நிச்சயமாகத் தெரிந்துகொண்டு, மேலே, பேசு" என்றான், மிகமிக உறுதியான குரலில்.

மாதங்கி பேச்சிழந்து நிற்கையிலேயே, தோளைக் குலுக்கிவிட்டு, அங்கிருந்து, அகன்றான், அவன்.

கணவனின் அகன்ற முதுகை வெறித்த மாதங்கிக்கு, நிலனை மணந்து, இத்தனை மாதங்களில், எத்தனை முறை இப்படிச் செய்கையற்றுத் தவிக்கும்படியாகி விட்டது, என்று, எண்ணம் ஓடியது.

இந்த நிலைமையை எப்படிச் சீர்ப்படுத்துவது என்று, அதே நினைவாக இருந்த மாதங்கிக்குத் தன்னைப் பற்றிய மற்ற விஷயங்கள் எல்லாமே, அப்போதைக்கு, மறந்து போயின. மறக்கமுடியாத அளவுக்குத் தோன்றிய உடல் பாதைகளும் எரிச்சலைத்தான் மூட்டின.

வாழ்க்கைதான் சரியில்லை, எப்போதும் உள்ள, ஒரோக்கியமுமா, கைவிட வேண்டும்? என்று, அலுப்பும் வெறுப்புமாகச் சென்று, வாந்தியெடுத்துவிட்டு, கால்கள் நடுங்கி, தள்ளாடியபடியே, திரும்பி வந்தவள், திடுமென ஒன்று தோன்றவும், திகைத்து நின்றாள். உலகமே எழில் மயமாகி விட்டது போன்ற ஓர் உணர்வு!

இல்லை, கடவுள் அவளைக் கைவிடவில்லை!

ரத்த சம்பந்தம் இல்லாத மனைவியைக் காரணம

இல்லாமல்கூட, வெறுத்து ஒதுக்கமுடியும் தான். ஆனால், சொந்தப் பிள்ளையை?

பிள்ளையுடைய தாயிடம் மட்டும் பிரியம் வராது போய்விடுமா, என்ன?

30

இரவில் வெகு நேரம் கழித்து வந்து, அப்போதும் ஃபைலுடன் உட்கார்ந்த கணவனிடம் எண்ணற்ற ஆசைக் கனவுகளோடு, விஷயத்தைச் சொன்னவளுக்கு, மேலுமோ அடி, வலுவாக விழுந்தது.

மிகுந்த அருவருப்புடன் அவளை இகழ்ந்து நோக்கிச் "சீ" என்றான், அவளுடைய அருமைக் கணவன்!

'சீ'யா? அவளுடைய குழந்தையையா? அவனுடைய பிள்ளையையா? என்ன அநியாயம்?

சொல்லாலும் முக பாவனையாலும் அருவருப்பைக் காட்டியது மட்டுமின்றி, அந்த இடத்தில் இருப்பதே அசிங்கம் போல, எழுந்து, நடக்கத் தொடங்கினான், வித்யாதரன்.

ஆனால், 'இது பொறுப்பதில்லை, தம்பி., எரிதழல் கொண்டு வா.' என்று கொதிநிலையில் இருந்தாள், மாதங்கி! தாய்மையின் சீற்றம்!

அவளை, ஆயிரம் சொல்லட்டும்., நீலன் கற்பித்த அத்தனை தீய குணங்களுக்கும் மொத்த உருவமாகவே, அவளை, எண்ணிவிட்டுப் போகட்டும்! ஆனால், அவளுடைய பிள்ளையைச் 'சீ'யென்பதா?

நாடகம், நடிப்பு, அரங்கம் ஏற்றுகிறாள் என்று, என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்! ஆனால், இந்தச் 'சீ'க்கு மன்னிப்புக் கேளாமல், வித்யா, அங்கிருந்து, போய்விட

முடியாது.!

இரண்டெட்டில் கணவனை நெருங்கி, அவன் தோளை அழுந்தப் பற்றித் தன்புறம் திருப்பி நிறுத்தினாள். "டிராமா, மண்ணாங்கட்டி என்று, என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். ஆனால், சந்தோஷப்பட வேண்டிய குழந்தையை ஏன் 'சீ' என்றீர்கள்? காரணம் சொல்லுங்கள், சொல்லாமல், நீங்கள் இங்கிருந்து, போக, நான் விடமாட்டேன்." என்றாள் ஆத்திரத்துடன்.

அவனைப் பற்றியிருந்த மனைவியின் கரங்களை, ஓர் அசூசியான நோக்குடன், விலக்கினான், வித்யாதரன். பின்னர், தன் ஆறடி உயரத்துக்குமாக உயர்ந்து, கீழ்க் கண்ணால், அவளை ஒரு பார்வை பார்த்தான். "இப்போது, காரணம் உனக்குத் தெரிந்தாக வேண்டும், என்கிறாயா? அதாவது, உனக்கு, ஒன்றுமே, தெரியாதில்லையா? சரி உன் விருப்பம் போலவே, தெரிந்துகொள்." என்றவன், மீண்டும், பழையபடி, சோஃபாவுக்குச் சென்று அமர்ந்தான். கைப்பெட்டியைத் திறந்து, ஒரு சாவியை எடுத்து, அவள் புறமாய், டீபாயில் வைத்தான்.

"இது, என் அலமாரியின் சாவி என்பது, உனக்கு, மறந்திருக்காது என்று, நினைக்கிறேன் கொண்டு போய், என் அலமாரின்யைத் திறந்து, அடித் தட்டில் இருக்கும் அட்டைப் பெட்டியை எடுத்து வா." என்று ஏவினான்.

அவளை, மகா மட்டமாய்க் கழித்து ஒதுக்கிய அந்தக் குரலுக்குப் பணிய, மாதங்கிக்கு விருப்பம் இல்லைதான். ஆனால், அவளுக்கு இப்போது, விவரம் தெரிந்தாக வேண்டியிருந்தது. ஒருநாள் வைரம் என்றவன், மறு நாளிலிருந்து, அவளைக் கரிக் கட்டையிலும் கேவலமாய், அருவறுத்து ஒதுக்குவது என்றால், அது என்ன நியாயம்? அதன் காரணத்தை, அவள் அறிந்துதானே, ஆகவேண்டும்?

எடுத்து வந்த அட்டைப் பெட்டியோடு, சாவியையும்,

வித்யாதரின் முன் வைத்துவிட்டு, 'இனி என்ன' என்பது போல நின்றாள்.

"பரவாயில்லை., திறந்து பார்த்துவிட்டுக் கொண்டு வருவாய் என்று, நினைத்தேன் அப்படியே, கொண்டு வந்திருக்கிறாயே!" என்றான் அவன், சிலாகிப்பது போல.

உள்ளர்த்தம் புரிந்து, "நீங்கள், எடுத்துவர மட்டும்தான் சொன்னீர்கள். அத்தோடு, அடுத்தவர் பொருட்களை, அவர்கள் அனுமதி இல்லாமல், நோண்டும் பழக்கம் எனக்குக் கிடையாது. அது கணவனே ஆனாலும்." என்றாள் அவள், பதிலுக்கு.

கசந்த குரலில், "ஆமாமாம், அதிலெல்லாம், உன்னை, ஒரு குறையும் சொல்ல முடியாதுதான்." என்றவன், "வேறெதில்?" என்று அவள் திருப்பிக் கேட்கவும், பதில் சொல்லாமல், தோளைக் குலுக்கிவிட்டு, "இப்போது, நான் அனுமதி தருகிறேன் பெட்டியைத் திறந்து பார்."

என்னவாக இருக்குமோ என்று, உள்ளூர எழுந்த கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல், மாதங்கி, பெட்டியைத் திறந்தாள்.

உள்ளே, ஒரு செருப்பு இருந்தது. ஒற்றைச் செருப்பு "யார் செருப்பு தெரிகிறதா?"

"செருப்பில் என்ன..." என்று தொடங்கியவள், உற்று ஒருதரம் நோக்கி, "இது, என் செருப்பு" என்றாள்.

"ஆமாம். இதைத்தான் தொலைத்துவிட்டு, ஒற்றைச் செருப்புடன் திரும்பி வந்தாய். எங்கே தொலைத்தாய் என்று நினைவிருக்கிறதா?"

எங்கே, தொலைத்தாள்? என்றைக்கு என்பது, நினைவு இருந்தது. ஒரு காலில் மட்டும் செருப்புடன் வந்தது பற்றி, அன்று மட்டுமில்லாமல், பிறகும், பலமுறை, பாமா கிண்டல் செய்திருக்கிறாள்; அதனாலேயே, செருப்பு

அன்றைக்குத்தான், தொலைந்திருக்க வேண்டும். ஆனால், அந்தப் பொல்லாத நாளின் நிகழ்வுகள் பற்றி, அவளுக்கு, அவ்வளவு தெளிவாக, ஒன்றும் ஞாபகம் இல்லையே.! ஒரேயடியாக நினைவில்லை என்று சொல்ல முடியாது. சில விஷயங்கள் நன்றாகவே, மனதில் பதிந்திருந்தன. அவற்றுள் ஒன்று, நீலநாராயணன் மிகவும் கொடியவன் என்பது! மற்றபடி, செருப்பை எங்கே விட்டிருக்கக்கூடும்?

மாதங்கி பேசாமல் நிற்கவும், "இறக்குமுன் நீலன் என்னிடமும் மன்னிப்புக் கேட்டான். பாவ மன்னிப்பு." என்றான் வித்யாதரன்.

தொடர்பற்று எதையோ பேசுவது மட்டுமின்றி, என்னவோ, அவளது குற்றம்போலக் கூறுகிறானே என்று எரிச்சலுற்று, "கேட்கவேண்டியிருந்திருக்கும்." என்றாள், அவள், விட்டேற்றியாக.

முகம் இறுக, "ஆண் என்பதால், உண்மையைச் சொல்லி, மன்னிப்புக் கேட்டான்." என்றான் அவன். "ஆனால், காரணம் எதுவும் சொல்லவில்லை என்றீர்களே?"

"நேரில், சொல்லவில்லைதான், ஆனால், கடிதம் எழுதலாம் இல்லையா?. சாகுமுன் சந்திக்க முடியாமல் போய்விட்டாலும் மன்னிப்புக் கேட்டே ஆகவேண்டும் என்று கடிதம் எழுதியிருக்கிறான்."

வித்யாதரின் குரலில் இருந்த கசப்பு, இரக்கம், இரண்டையுமே, மாதங்கியால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால், அவளிடம், அவன் காட்டிய வெறுப்பின் காரணம்தான், அவளுக்குக் கொஞ்சமும் புலப்படவில்லை. அத்தோடு, இதற்கும், அவளுடைய குழந்தைக்கும் என்ன தொடர்பு இருக்கக் கூடும்?

என்ன தொடர்பு என்பதை, வித்யாதர் விளக்கினான். "குழந்தை பற்றிச் சந்தோஷம் இல்லையா, என்று

கேட்டாயே, இந்தக் குழந்தை என்னுடையதா, அவனுடையதா என்று சந்தேகம் இருக்கும்போது, சந்தோஷம் எப்படி வரும்?"

பிரமித்து நின்றாள், மாதங்கி! "உங்கள் நண்பர் பாவமன்னிப்புக் கேட்டதாகச் சொன்னீர்களே?"

"ஆமாம். கேட்டான். பிறன் மனை விழைந்ததற்காகக் கேட்டான். அதுவும், நண்பனுடைய மனைவியை!"

இதென்ன பைத்தியக்காரத்தனமாக படுமுட்டாள்த்-தனமாக பேச்சு, இது? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிற மாதிரி!

"ஒருவன் விரும்பியதாலேயே பிள்ளை பிறந்துவிட, இதென்ன புராண் காலமா? அல்லது, உங்கள் நண்பர்தான், அப்படி ஏதாவது விசேஷ சக்தி உடையவரா?" என்றாள் அவள், ஏளனமும், சினமுமாக.

எரித்துவிடுவான்போல அவளை நோக்கிவிட்டு, "இரண்டும் இல்லை தான். ஆனால், அவன் உண்மையான மனிதன். குற்றம் குறைகள் உள்ளவன்தான் செய்த தவறுக்காக மனம் வருந்தி, அதை மறையாது, மன்னிப்பும் கேட்டவன்!" என்று, நீலனை உயர்த்திப் பேசினான், வித்யாதரன்.

எங்கோ, ஏதோ, தப்பாகத் தெரிகிறதே என்று யோசித்தபடி, "புரியவில்லை" என்றாள் மாதங்கி,

"அவனுக்கு இருந்த மனிதத் தன்மை உனக்கு இல்லை."

"இன்னமும் புரியவில்லை தப்பு செய்தவர் மன்னிப்புக் கேட்டார். இதில் என் மனிதத்தன்மை பற்றிய பிரச்சின்னை எங்கே வந்தது?"

"இந்தத் தப்பு செய்ய இருவர் வேண்டும். செய்த தப்புக்காக வருந்தி, இருவரில், ஒருவர் மன்னிப்புக் கேட்க,

அடுத்தவர், அது பற்றிய எண்ணமே இல்லாதிருந்தால், அவர் மனிதத்தன்மை உடையவராக இருக்க முடியாது."

மீண்டும் அதிர்ந்து நின்றாள், மாதங்கி. பாம்பு, கொத்தியே விட்டதே! ஆனால் இவன் அதை எப்படி நம்பலாம்? இவ்வளவு நாள் கணவன் மனைவியாக வாழ்ந்ததற்கு. ஒருவித அர்த்தமும் கிடையாதா?

"என்னைக் குற்றவாளியாக்க, நீலனின் ஒரு கடிதம் போதுமா?"

"போதாது." என்றான், அவனும் அழுத்தத்துடன். "ஆனால், நீலனின் கடிதம், ஒரு மரண வாக்குமூலம். சாவின் சந்நிதானத்தில், யாரும் பொய் சொல்லுவதில்லை. சான்றாக, உன் செருப்பையும் அனுப்பியிருந்தான். அவைகளையும்கூட, ஒதுக்கி, நான் யோசித்துப் பார்த்தேன்." என்று தொடங்கி, வித்யாதரன், மாதங்கியின் தலைமீது கொட்டியது, கூடைகூடையாகத் தீக் கங்குகளை!.

அன்று, அவள் நீலனின் இருப்பிடத்துக்கு, வீட்டில் யாரும் அறியாதபடி, சென்றாளாம். தப்பு நடந்தபின், அங்கே ஏதோ அரவம் கேட்கவும், யாரும் தெரிந்துகொண்டுவிடுவார்களோ என்று, பயந்து இரண்டாவது கால் செருப்பைக் கூட, நின்றுபோட நேரமின்றி, ஒற்றைச் செருப்புடன் ஓடிப் போனாளாம்.

இதுவரை, நீலன் எழுதியது. இதற்குமேல், வித்யாதரின் ஊகம்.

காரை எடுக்காமல், போகுமிடம் பற்றி யாரிடமும் கூறாமல் அவள் சென்றது, மெய்தானே? எதிர்ப்பட்ட வேலையாளிடம்கூட, வெளியே போவதாக மட்டும்தான் சொல்லியிருக்கிறாள்.

அப்புறம், அவளது மதியத் தூக்கம். பொதுவாகப் பகலில் படுக்காதவள், அவள். அங்கே, நீலனோடு ஆடிய

களைப்பில்தான், மதியம் முழுதும் படுத்துத் தூங்கியிருக்க-வேண்டுமாம். களைப்பில் படுத்திருந்தது, அவளே, சொன்னதுதானாம்.

"ஏன், இதில் மட்டும்தான், மனிதர்களுக்குக் களைப்பு ஏற்படுமா? மற்றபடி, உடம்பு, ஓய்ந்தே போகாதா?" என்று, ஆத்திரத்துடன், இடையிட்டாள், மாதங்கி.

"தாராளமாக களைப்படையும். ஆனால், அப்படி வெட்டி, கொத்தி, உடம்பு களைக்கிற வேலை, நீ, என்னம்மா, செய்தாய்?"

மனம் அதிர்ந்து போனாதால், காடுமேடு என்றில்லாமல், சுற்றிக் கொண்டிருந்தேன், என்று சொன்னால், ஒத்துக் கொள்ள மாட்டானே!

"நீங்கள் ஊகித்ததுபோல, எதுவும் நடக்கவில்லை, என்று, நான் சொன்னால், நம்ப மாட்டீர்களா, வித்யா?"

"நீலன் எழுதியது எல்லாமே பொய் என்று, சொல்லப் போகிறாயா?" என்று, உணர்ச்சியற்ற குரலில், வித்யாதரன் வினவினான், பார்வையை, அவளது ஒற்றைச் செருப்பில் பதித்து.

உள்ளூர முடிவே செய்துவிட்டான்., இனி, என்ன சொல்லி, என்ன? என்று, சோர்ந்த மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "நான், அங்கே போனது, நிஜம், வித்யா. ஆனால், போன காரணம் வேறு, வித்யா, நீலன் என்னிடம், என்னிடம் தவறாக நடக்க முயற்சித்ததால்..." என்று தொடங்கினாள்.

"தவறாக நடக்க முய்ன்றவனிடம், தனியாகச் சென்றாயாக்கும்? உன் பேச்சு, உனக்கே, விசித்திரமாக இல்லை?"

"அது தப்பு என்று சொல்லத்தான் போனேன்..."

"வேதம் ஓதப் போனதாகச் சொல்லுகிறாயா?" என்று, அவளைச் சைத்தானாக்கிக் கேட்டான், அவன். "அப்படியே வைத்துக் கொண்டாலும், திடுமென, ஒருவன் ஒரு பெண்ணிடம், அதுவும் நண்பன் மனைவியிடம், தவறாக நடப்பானா?"

"திடீரென்று இல்லை. பல நாட்களாகவே, நீலன் நடந்துகொண்ட விதம், சரியில்லைதான்."

"பல நாட்களாகவா? என்னிடம், ஏன் சொல்லவில்லை?"

குற்றவாளிக் கூண்டில் நிறுத்திக் குறுக்குவிசாரணை செய்வது போல, அவன் கேட்டவிதம் எரிச்சலூட்ட, "எப்படிச் சொல்வது? என்னவோ, பெரிய இடத்துப் பெண்களுக்கு, இந்த மாதிரிப் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அதற்கெல்லாம் கணவனிடம் வந்து நிற்காமல், அவர்களாகவேதான் சமாளித்துக் கொள்ளவேண்டும் என்று, நீங்கள்தானே, சொன்னீர்கள்?" என்று திருப்பிக் கேட்டாள் மாதங்கி.

இந்தக் கேள்வியில் அவனும் ஆத்திரமுற்று, "அதற்காக, உன்னையே கொடுத்து, சமாளித்தாயாக்கும்?" என்று, கேட்டுவிட, மாதங்கியின் நம்பிக்கை மடிந்து போயிற்று.

மெல்ல நிமிர்ந்து, கணவனை நேராக நோக்கி, "இல்லை, நடந்தது வேறு என்றால், நம்பப் போகிறீர்களா?" என்று, நிதானமாக வினவினாள்.

"இல்லை" என்று, கடினமான குரலில், தெளிவாகப் பதில் வந்தது.

"பின்னே, உங்களிடம், சொல்லி என்ன பயன்?" என்றவள், அதற்குமேல் எதுவும் பேசாமல், திரும்பிச் சென்றாள்.

அன்றிரவில், வித்யாதரன் வீடுவந்தபோது, மாதங்கி வெளியே சென்றிருந்தாள்.

"யாரோ, உடம்பு சரியில்லாத சினேகிதியைப் பார்க்க, மருத்துவ மனைக்குப் போயிருக்கிறாள். உடம்பு கழுவிவிட்டுவா நான் சாப்பாடு வைக்கிறேன்." என்றாள் கோகிலம்.

"வேண்டாம்மா. நான் வெளியே சாப்பிட்டுவிட்டேன்" என்று, உணவை மறுத்துவிட்டு, மாடிக்குச் சென்றான், மகன்.

மாதங்கி திரும்பி வர, இரவு பத்து மணியாகிவிட்டது.

வெளுத்த முகத்துடன், லேசாகத் தடுமாறியபடி வந்தவளைப் பார்த்து, "என்ன?" என்று கேட்டான், அவன்.

"பெரிதாக ஒன்றும் இல்லை." என்றாள் அவள். "கருவைக் கலைத்து கலைத்து விட்டேன். அவ்வளவு தான்." என்றாள், உணர்ச்சியற்ற குரலில்.

அவன் திடுக்கிட்டு நோக்கவும், "பிறப்பிலேயே சந்தேகம் இருக்கும் ஒரு குழந்தை, பிறப்பதைவிடப் பிறவாதிருப்பதே, மேல்" என்று, கைத்த குரலில் உரைத்தவள், விழிகளில் பெருகிய கண்ணீரை , அவன் அறியாமல் உள்ளுக் கிழுக்க முயன்றபடி, மெதுவாக, அங்கிருந்து, செல்லலானாள்.

தள்ளாட.லைச் சமாளித்தபடி, மாதங்கி செல்வதை, வெறித்து நோக்கினான், அவன். "அதை, நீ, செய்திருக்க வேண்டியதில்லை."

சட்டெனத் திரும்பியவளின் கண்களில் தோன்றிய பிரகாசம், அவன் முகத்தைப் பார்த்ததுமே, மறைந்தது.

ஏற்றாற் போல, "எப்படியும், அது, உன் குழந்தை என்பது, நிச்சயம் தானே" என்றான், அவள் கணவன்.

முடிந்தவரை நிமிர்ந்து, "என் குழந்தை., என் விருப்பம் போலச் செய்தேன். உங்களுக்குச் சம்பந்தம் இல்லாததில், நீங்கள் தலையிடாதிர்கள்." என்று முடித்துவிட்டு,

பால்கனிக்குச் சென்றவள், அங்கே கிடந்த பிரம்பு இருக்கையில் சோர்ந்து, விழுந்தாள்.

31

தொடர்ந்த சில நாட்கள், மாதங்கிக்கு, வித்யாதரனின் முகத்தைப் பார்த்துப் பேசக்கூடப் பிரியமில்லாது போயிற்று.

கணவனின் குழந்தைப் பருவப் படங்களையும், கன்னவைகளையும் எடுத்து வைத்து, வருவதாக இருந்த குழந்தை முகத்தை; அந்த ஒரு நாளில் சுற்பனை செய்து மகிழ்ந்ததெல்லாம், திரும்பத் திரும்ப மனதில் வந்து, அவளைத் துடிக்கச் செய்தது.

குழந்தையாவது மிஞ்சியிருக்குமோ? அதை அழிப்பதில், ரொம்பவும் அவசரப் பட்டுவிட்டோமோ! வாழ்க்கைதான், அந்தப் பாவியால் போயிற்று., குறைந்த பட்சமாய், அவர்களுடைய குழந்தையாவது அவளுக்குக் கிடைத்-திருக்கக் கூடுமோ., அதையும் தானாகவே அழித்து-விட்டோமே என்று, அந்த வேதனை வேறு, புழுவாய் அவள் நெஞ்சை அரித்தது.

நண்பனாம், நண்பன்! இப்படியா ஒருவன் கண்மூடித் தனமாக, ஒரு நயவஞ்சகனை, நம்புவான்? அதனாலல்ல-வோ, அவளுடைய அருமைக் குழந்தை அழியும்படி ஆயிற்று.

குழந்தை, குழந்தை என்று வேறு எதையும் எண்ண-மாட்டாமல், இதே நினைவில் உழன்று தவித்தவள், யார் முகத்தையும் பார்க்கப் பிடிக்காமல், முடிந்தவரை, அறைக்குள்ளேயே, அடைந்துகிடந்தாள். வித்யாதரன் வீட்டிலிருக்கும் நேரம், அவர்கள் அறையை ஒட்டியிருந்த பால்கனி, அவளுக்குப் புகலிடமாயிற்று.

இரண்டு, மூன்று தினங்களாக, இளைய மருமகள் கண்ணிலேயே படவில்லையே, என்று, கோகிலம் மாடியேறி வந்து, "உடம்பு ஏதும் சரியில்லையா?" என்று விசாரித்தாள்.

அன்பாகத்தான் கேட்கிறாள். ஆனாலும், இவளிடம் என்னவென்று விளக்குவது? 'உன் மகனுக்கு என் நடத்தையில் சந்தேகம்., அதனால், உன் பேரக் குழந்தையை அழித்துவிட்டேன்.' என்றால், தாங்கமாட்டாள் என்பதோடு, சொல்லி என்ன பயன்?

கண்ணீரினால் சிவந்திருந்த கண்களும் வீங்கியிருந்த இமைகளும் நினைவுவர, "சனி, நன்றாகப் பிடித்திருக்கிறது, அத்தை. கீழே வந்தால், சின்னப்பிள்ளைகளுக்குத் தொற்றிக் கொள்ளுமே என்று, இங்கேயே இருக்கிறேன்." என்று கோவையாக மாதங்கி கூறவும், அந்த அப்பாவிப் பெண்மணி, சமாதானமாகிவிட்டாள்.

"அப்படியாம்மா? சரி, இப்போது, சளிக்கு, டாக்டரை வரச் சொல்லுவோமா? அல்லது, கஷாயம் போட்டுத் தரவா?" என்று பரிவுடன் கேட்டாள்.

பிரியமாகப் பேசுகிறவளிடம், என்னைத் தனியாக விட்டால் போதும் என்று, எப்படிச் சொல்லுவது?

"மருந்து கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், சனி, ஏழு நாட்களில் குணமாகி விடும் என்பார்கள். எதற்கு,அத்தை, அனாவசியமாக, மருந்து? இன்னும் நாலு நாட்களில் குணமாகாவிட்டால் பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்குக் கொஞ்சம் ஓய்வாக இருந்து கொள்கிறேன். அது போதும்" என்று முடித்தாள், மருமகள்.

அரைமனதாய் மருமகளின் பேச்சை ஒத்துக் கொண்டுவிட்டு, "ஆனால், நாலு நாளில் சரியாக்கா-விட்டால், அப்புறம், உடனேயே, டாக்டரைப்

பார்த்துவிடவேண்டும்." என்ற நிபந்தனையோடு, கோகிலம் மீறிறங்கிச் சென்றாள்.

"நாடகம் பிரமாதம்!" என்றான், வித்யாதரன்.

அறையின் ஒரு கோடியில், கம்ப்யூட்டரின் முன் அமர்ந்து, ஏதோ வேலையில் வழக்கம் போல மூழ்கி-யிருந்தவன், மாமியார், மருமகள் உரையாடலைக் கவனித்திருக்கக்கூடும் என்ற எண்ணமே இல்லாமல், தன் இடத்துக்கு-பால்கனிக்குத் திரும்பியவள், கண்வனின் குரலில், நின்றாள்.

"என்ன நாடகம்?"

"சளியும், மருந்தில்லாமல் குணமாவதும் ஏன்? மூன்று நாட்களாக, நீ, கண்ணீரில் கரைந்து கொண்டிருக்கிறாய் என்று, எனக்குத் தெரியவைக்க வேண்டுமாக்கும்? இப்படி அழுகிறவள், நல்லவளாகத்தான் இருப்பாள் என்று, நான் நினைக்க வேண்டும். அதுதானே?"

சிற்றம் பொங்க, "அப்படி நினைத்திருந்தால், நீங்கள் வருகிற நேரத்தில் தூக்கில் தொங்கப் போவது போலத் தோற்றம் காட்டியிருக்கலாம். உங்கள் கண் முன்னே இருந்து, அழுதிருக்கலாம். அது போலெல்லாம் தரமிறங்கக் கூடாது என்று இருந்தால்..., ஏன், நீங்கள் சொன்ன நாடகம் நடத்த, இரண்டுபேர் வேண்டுமே.,

"உங்கள் அம்மாவும் நடித்தார்கள் என்றா சொல்லு-கிறீர்கள்? அவர்களிடம், என்ன சொல்லி, இப்படி நடிக்க வைத்திருப்பேன் என்கிறீர்கள்?" என்று கோபத்துடன் படபடத்தாள், மாதங்கி.

"சாரி" என்றான், அவன் தணிந்துவிட்ட குரலில். "அப்படி நான் சொல்லியிருக்கக்கூடாது. ஆனால், நீ அழுதிருப்பது, தெரிகிறது. எதற்காக அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டும்? உன் கண்ணீரினால்,

நிலைமை எதுவும் மாறிவிடப் போவதில்லை. ஒருவேளை, உன்னை, வீட்டைவிட்டு, அனுப்பிவிடுவேன் என்று நினைத்தாயா? அது போன்ற பயம் தேவையற்றது. நான், முதலில் சொன்னதுபோல, நம் தனி உறவுதான் முடிந்துவிட்டதே தவிர, இந்த வீட்டில், உன் உரிமைகள் அப்படியேதான் இருக்கும் கவலைப்படாதே" என்று தொடர்ந்து கூறி முடித்தான்.

ஆக, இந்த வசதியான வாழ்க்கை போய்விடுமோ என்று, அவள் அஞ்சுவதாக, அதற்காக அழுவதாகவா, இவன் எண்ணிவிட்டான்? நீலன் உருவேற்றியது, அவ்வளவு அழுத்தமாகவா, இவன் மனதில் படிந்துவிட்டது?

தன் குழந்தையாக இருக்குமோ என்ற சந்தேகம்கூட இல்லையே!

இந்த வீட்டிலிருந்து வெளியேறி விடலாமா, என்கிற எண்ணம், முதல் முறையாக மாதங்கிக்குத் தீவிரமாகத் தோன்றியது, அப்போதுதான்.

அதை, அப்போதே அவனிடம் சொல்லிவிட நினைத்து வாயைத் திறந்தவளுக்குத் திடுமென, வேறொன்று தோன்றியது.

வித்யாதரன் அவளிடம் 'கவலைப் படாதே' என்றல்லவா சொன்னான்! மாதங்கியை, அவன் மோசமாக எண்ணியபோதும், அவள் அழுவது பிடிக்காமல், அவளது கவலையை-அவளது கவலையென்று, அவன் கருதியதைப் போக்கத்தானே, முயன்றான்? அப்படியானால், அவனுக்கு, அவளிடம் அக்கறை இருக்கிறது என்றுதானே, அர்த்தம்?

மூழ்குகிறவனைப் போலத் துரும்பைத் தூணாக எண்ணிப் பற்றுகிறோமோ என்று தோன்றியபோதும், நெஞ்சுக்குள் துளிர்விடத் தொடங்கிய நம்பிக்கையை, அவளால் அலட்சியமாய் விட்டுவிட முடியவில்லை.

அத்தோடு, இன்னொரு காரணத்துக்காகவும், மாதங்கி அந்த வீட்டில் இருப்பது, அவசியமாய் இருந்தது. மறுவாழ்வு மையத்தில், வித்யாதரனால் சேர்க்கப்-பட்டிருந்த, அவளுடைய அண்ணன் சிவாவின் நிலையில், இப்போதுதான் பெருமளவு முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியிருந்தது. இந்தச் சமயத்தில், மாதங்கி, தன் விருப்பு வெறுப்புகளைப் பெரிதாகக் கருதி, இங்கிருந்து வெளியேறிவிட்டால், அது, அவனை, மீண்டும் பாதாளத்தில் தள்ளிவிட்ட மாதிரி, ஆகாதா?

மறுவாழ்வு மையச் செலவைத் தனியாளாக, அவளால் செய்ய இயலாது என்பது, நிச்சயம். இன்றைய நிலையில் இந்த வீட்டுவாசம், அவளுக்கு நரக வேதனையாக இருந்த போதும் அவளுடைய அண்ணனுக்காக, அவள் அதைச் சகித்துத்தான் ஆக வேண்டும்.

ஒருவேளை, இந்த நரகம் மாறினால்? மாற்றக்-கூடுமானால்..? ஏதோ ஒரு வகையில் அவளது கவலையை அகற்ற அவனும் முயன்றான்தானே?

கம்ப்யூட்டரை மூடி வைத்துவிட்டு எழுந்தவனிடம் சென்று, "வித்யா", என்று அழைத்தாள்.

சற்றுத் திடுக்கிட்டாற்போல, அவளைத் திரும்பிப் பார்த்தான், அவன்.

"வித்யா, ஒருதரம்- ஒரே ஒருதரம், நான் நல்லவளாக இருக்கக் கூடும் என்று நம்பி, அந்த நோக்கிலிருந்து, யோசித்துப் பாருங்களேன். என்னை நம்பக் கூடாது, என்ற முடிவுடன் சிந்திப்பதை விடுத்து, நடுநிலையிலிருந்து, எண்ணிப் பாருங்கள், வித்யா ப்ளீஸ், வித்தி, இதை, நான் ஒரு பிச்சைக்காரியாகக் கையேந்தி யாசிக்கிறேன், தயவு பண்ணி, ஒருமுறையாவது, முயற்சி செய்யுங்களேன்..." என்றவள், தன்னை மீறி, விம்மி அழுதாள்.

மனைவியின் கண்ணீரைத் துடைக்கத் தானாக எழுந்த கரங்களைக் கட்டுப் படுத்திக் கொண்டு, வித்யாதரன், அந்த அறையிலிருந்து வெளியே சென்றான்.

அடியோடு, நம்பிக்கை இழந்து, மாதங்கி கைகளால் முகத்தை மூடிக் கொண்டு, அழுதாள்.

அதற்குமேல் கணவன், மனைவிக்கிடையே, எந்தவித-மான உரையாடலும், நடக்கவில்லை, நடக்க வழியும், இல்லை.

ஏனெனில், அன்றிரவே, வித்யாதரன், வெளியூருக்குச் சென்றுவிட்டான்.

நீலன் இறந்ததால், வாடிக்கையாளர் பணியில் ஏற்பட்டிருந்த மந்த நிலையை மாற்றுவதற்காக என்று, பொதுவாக, ஒரு காரணம் சொல்லப்பட்டது.

ஆனால். உண்மையான காரணம், இன்னதென்று அறிந்திருந்த மாதங்கி, வேதனையை விழுங்கிக்கொண்டு, ஒன்றும் நடவாதது போல வளைய வந்தாள்.

அது தவிர, அவளுக்கு, வேறு வழியும் இல்லை. விபத்துகளில், குடும்பத்தை இழந்த பெண்களைப் போன்றதொரு வாழ்க்கை மனதளவில் கணவனையும், உயிரளவில் குழந்தையையும் இழந்துவிட்டவள்தானே, அவளும்!

ஒரே ஒரு வேறுபாடு, இவள் எதையும் வெளிக்-காட்டாமல், புன்னகையோடு, அன்றாட வாழ்வில் ஈடுபட்டாக வேண்டும்!

வித்யாதரன் வெளியூர் சென்று, பத்து நாட்களிலேயே, கோகிலம் முணுமுணுக்கத் தொடங்கினாள். "இவர்கள் யாரும் விரலசைக்க மாட்டார்கள், செய்கிற பிள்ளை-யையும், ஊரைவிட்டு, ஓட்டி விடுவார்கள் நேற்று, முழுவதும் குடிதண்ணீர் வரவில்லை, இரண்டு பேரிடமும்

சொல்லிச் சொல்லி, வாய்தான் வலிக்கிறது." என்றாள்.

வித்யாதரின் டெலிஃபோன் டைரியை வ்வத்துக் கொண்டு, தன்னால் ஆனமட்டும், கணவன் செய்துவந்த வேலைகளை, மாதங்கியே, சமாளித்து வந்தாள்.

ஆனால், நாளாக, ஆக அதிகரித்த, கோகிலத்தின் புலம்பலுக்குக் காரணம், பிள்ளையைக் காணாத ஏக்கமே, என்று உணர்ந்த போது, குற்ற உணர்வால், மாதங்கி, மிகவும் குறுகிப் போனாள்.

அவனது எச்சரிக்கையை மீறி, அவனால் தடுக்கப்பட்டிருந்த விஷயத்தை எடுத்து, அவள் பேசினாள் என்பதற்காக வித்யாதரன் அவளுக்கு, இவ்வளவு பெரிய தண்டனையையா கொடுப்பது?

அவனது சொல்லை மீறியதற்காக மட்டும் என்றால், 'இது ஒரு 'சாம்பிள்' மட்டுமே, ஜாக்கிரதை!' என்ற மிரட்டலுடன் அவன் திரும்பி வந்திருப்பான். ஆனால், அவளைக் கண்ணால் பார்க்கவே, அவனுக்கு அருவருப்பு, அவள் அந்த வீட்டில் இருக்கும் வரை, அவன் திரும்பி வருவது, சந்தேகமே.

சந்தேகம் என்ன? அந்தப் பிடிவாதக்காரன், நிச்சயமாக வரவே மாட்டான். மனைவியான இந்த மோசமான பெண், இன்னும் என்னென்ன வகையில் கேவலப்படுத்துவாளோ என்றே, இந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்க மாட்டான்!

எவ்வளவு மனமெர்த்து வாழ்ந்திருக்கக் கூடியவர்கள்! ஒரு கிராதகனின் சூழ்ச்சியால், அவளை, அவன் அருவறுத்து ஒதுக்கி விட்டானே!

அவளுக்குத்தான், அது தலைவிதி என்றால். அவனுடைய நல்ல மாமியாரும் பிள்ளையைப் பிரிந்து வாடும்படி ஆயிற்றே! கோகிலம், மகனைப் பற்றிப் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், மாதங்கியைக் குத்திக் குடைந்தது.

ஒரு முயற்சியாக, 'சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசுவதில்லை' என்று சத்தியம் செய்து, வீடு திரும்பும்படி அழைத்து, வித்யாதருக்கு ஒரு கடிதம் எழுதி, 'கூரியரி'ல் அனுப்பி வைத்தாள்.

கடிதத்துக்குப் பதிலே வராதது, மாதங்கியின் சந்தேகத்தை உறுதிப்படுத்திவிட, அங்கிருக்கும் ஒவ்வொரு வினாடியும், முள்ளாய் அவளைக் குத்தலாயிற்று. எடுத்து வைக்கும் ஒவ்வொரு கவளமும், தொண்டையில் சிக்கியது.

வீட்டைவிட்டு வெளியேறும் எண்ணம் திரும்பத் திரும்ப, மாதங்கிக்கு வரலாயிற்று. ஆனால், பழைய பிரச்சினையே-எங்கே போய் என்ன செய்வது, என்பதைவிட, சிவா விஷயமே, அவளைத் தேக்கி நிறுத்தியும் வைத்தது.

ஆனால், விரைவிலேயே, ஒரு பெண்ணின் வடிவத்தில், இதற்கொரு தீர்வும் வந்து சேர்ந்தது.

அவள் பெயர் சுரபி.

அந்த அமுத சுரபியே பெண்ணுருக் கொண்டு வந்தாற்போல, அவளது தோற்றம் மட்டுமின்றி, அவளது சொல்லும் செயலும் கூட, மாதங்கியின் கண்களைக் கசிய வைத்தன. இன்றையப் பெண்களின் பிரதிநிதியான இவளை, வித்யாதரன் சந்திக்கவில்லையே என்று, ஏங்கவும் வைத்தன.

32

சுரபியின் வரவு, மாதங்கிக்கு, இன்பம், துன்பம், இரண்டையுமே ஒருங்கே அளித்தது, எனலாம்.

சொந்த வீட்டுக்கு வராமல், பெற்றதாயைப் பாராமல், வித்யாதரன் இருந்த நிலையை, முடிவுக்குக் கொணர்ந்ததால், அது, அவளுக்கு, மகிழ்ச்சிதான். ஆனால், கணவன்

இருந்த இடத்திலிருந்து, விலகிச் செல்ல வழி வகுத்ததால், கடைசித் தொடர்பும் அறுகிறதே என்று, வருத்தமாகவும் இருந்தது.

ஆனால், சகிக்க முடியாமல் நீண்டுகொண்டிருந்த அன்றைய நிலைமைக்கு, இது ஒன்றுதான் தீர்வு என்பதோடு, கூடுதல் நன்மையாக சிவாவின் வாழ்க்கை-யையும் சீர்ப்பட வைத்ததால், மாதங்கி, அதை முழு மனதோடு ஏற்றுக் கொண்டாள்!

சுரபியும், ஒருவகையில், அனாதைதான். போதை மருந்தின் பிடியில் சிக்கிய சகோதரிக்காகக் குடும்பத்தை எதிர்த்து வெளியேறியவள்.

அவளுடைய அக்கா வசந்தி, போதை மருந்துக்கு அடிமை ஆனதின் காரணமே, அக்காவுடைய கணவன்-தான் என்பது, சுரபியின் கருத்து. அப்படியிருக்க, அக்காவை, அறைக்குள் அடைத்து வைத்துப் பார்த்துக் கொள்ளுகிறோம், வசதியுள்ள அக்கா கணவரையே மணந்து கொள் என்று, பெற்றோரும், அண்ணனும் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

மறுத்துவிட்டு, அக்காவோடு, வீட்டைவிட்டுக் கிளம்பிவிட்டாள்.

மறுவாழ்வு மையத்தில், அவள் தன் சகோதரியை இழந்தது ஒரு பெரும் சோகம். சேர்க்கும் போதே, வசந்தியின் உள்ளுறுப்புகள், மருந்தின் பாதிப்பினால், சிதிலமாகத் தொடங்கிவிட்டிருந்தனவாம். கணவனின் புறக்கணிப்பினால், அவளுக்குப் பிழைக்கும் ஆர்வமும், இல்லாது போயிற்று. கடைசி வினாடித் தென்பில், 'யார் என்ன சொன்னாலும், அத்தானுக்குக் கழுத்தை நீட்டி, உன் வாழ்வையும் பலி கொடுத்து விடாதே.' என்றாளாம்.

அவள் அஞ்சியது போலவே, குடும்பத்தில், மீண்டும் ஒரு

படையெடுப்பு நடக்கத்தான் செய்தது. அவள் கொஞ்சமும் வளைந்து கொடுப்பதாக இல்லை, என்று ஆகவும், பணக்காரமருமகனின் உறவுக்காக, அவளைக் கைகழுவி-விட்டுப் போய்விட்டார்கள்.

அது பற்றி, சுரபிக்கு, வருத்தமும் இல்லை.

ஏனெனில், அதற்குள்ளாக, அவள், மறுவாழ்வு மையத்தில், சிவாவைச் சந்தித்திருந்தாள்!

சிவா, விரைவாகச் சீர்பட, சுரபியும் ஒரு காரணம் என்று அறியவும், மாதங்கி, அவளை நன்றியுடன் நோக்கினாள்.

வசந்தா அனுபவித்த வேதனையையும், அக்காவுக்காக, சுரபி பட்ட துன்பத்தையும், பார்த்துக் கொண்டே இருந்த சிவாவுக்குப் போதை மருந்துகளிடம் வெறுப்பே உண்டாகி விட்டதாம். இப்போது, அவைகளைத் தொட்டுக் கூடப் பார்ப்பது இல்லையாம்!

கொஞ்சகாலமாக அனுபவித்து வந்த வேதனைகளின் பின்னே கிடைத்த, இந்த விவரம் மிகுந்த மகிழ்ச்சியைத் தர, சுரபியின் கையைப் பற்றி, "இந்த நல்ல செய்தி சொன்னதற்கு மிக்க நன்றி, சுரபி" என்றாள் மாதங்கி.

உதட்டைக் கடித்து, ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு, "உங்களுக்கு, இந்த நல்ல சேதியைச் சொல்வதற்காகவோ, சொல்லி, உங்கள் நன்றியைப் பெறுவதற்காகவோ, நான் இங்கே வரவில்லை மாதங்கி" என்றாள் சுரபி. "எனக்கு, ஓர் உதவி தேவை அதை, நீங்கள் செய்ய முடியுமா என்று கேட்பதற்காகத்தான் நான் இங்கு வந்தேன். ஏனென்றால், உங்களால் மட்டும்தான், இந்த உதவியைச் செய்ய முடியும்" என்று தொடங்கி, அது பற்றிய விவரத்தையும் கூறினாள்.

சிவா இப்போது, போதை மருந்தின் பிடியிலிருந்து, முழுமையாக மீண்டுவிட்டிருந்தான். மறுவாழ்வு மையத்தி-லிருந்து, வெளியேறவேண்டிய நிலை.

மையத்திலிருந்து வெளியேறியபின், திருமணம் செய்துகொண்டு வாழவும், இருவரும் சேர்ந்து முடிவெடுத்-திருந்தனர்.

"கேட்கவே, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது, சுரபி இதில், நான் செய்யவேண்டிய உதவி என்ன? அதை, இன்னமும் நீங்கள் சொல்லவில்லையே" என்று, மாதங்கி வினவ, அவள் சொன்னாள்.

எதிர்காலம் பற்றி, சுரபி, சிவா. இருவருமே தெளிவாக இருந்தார்கள். இருவருமே, வேலைக்குப் போனால்தான் நல்லபடியாகக் குடும்பம் நடத்த முடியும் என்பதிலும் தெளிவுதான். சுரபியுடைய அலுவலகத்திலேயே, சிவாவுக்கு, வேலை தருவதாகவும், சொல்லியிருக்கிறார்கள். "ஆனால், சிவா பற்றி அறிந்திருந்ததால், மையத்திலிருந்து வெளியே வந்து, ஒரு மூன்று மாதம் பார்த்துக் கொண்டு, அவன் நல்லபடியாகவே இருந்தால், அதன்பின், அந்த வேலையைத் தருவதாகச் சொல்லுகிறார்கள்" என்று, நிறுத்தினாள் சுரபி.

சிறு கேள்வியாய், மாதங்கி பார்த்துக் கொண்டிருக்க, மூச்செடுத்துக் கொண்டு, சுரபி தொடர்ந்தாள்.

மறுவாழ்வு மையத்திலிருந்து, நாலைந்து நாட்களில், சிவாவை, வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள். சுரபி, அவனைத் தன் வீட்டுக்கே அழைத்துச் செல்வதாக இருக்கிறாள். அதுவரை, பிரச்சினை இல்லை. ஆனால், சுரபி தொடர்ந்து. வேலை செய்தாக வேண்டும். சிவாவுக்காக விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டில் இருக்க முடியாது. அதேசமயம், சிவாவை, இந்த மூன்று மாதங்களும், பகல் முழுவதும் தனியே விடுவதும், கூடாது. அந்தத் தனிமை, அவன் மனதைப் பாதித்துப் பழைய பாதையில் போகச் செய்துவிடக் கூடும். அதனால், சிவா வேலைக்குச் செல்லும்வரையிலான, இந்த மூன்று மாதங்களும், மாதங்கி,

அங்கு வந்திருந்து, சிவாவுக்குத் துணையிருந்து பார்த்துக் கொள்ள வேண்டும்!

மூன்று மாதங்களா?! இங்கிருந்து, அப்படிப் போக முடியுமா, என்று முதலில் மலைத்த மாதங்கிக்கு, உடனேயே, ஏன் கூடாது என்று தோன்றிவிட்டது.

மூன்று மாதங்கள் என்ன, வாழ்க்கை முழுமைக்குமே விலகிவிட, இதை, அடிப்படையாகக் கொண்டாலென்ன? எங்கே என்றாலும், ஒரு வேலை தேடிக் கொள்வது, அவளால் இயலாத காரியம் அல்ல. வயிற்றுப் பாட்டுக்குக் கிடைத்தாலே, போதும்.

அவள், அங்கே இருப்பதாலேயே, வீட்டுக்கு வராமல், வெளியூரில் சுற்றும் கணவன் திரும்பிவந்து, தாய்க்குப் பிள்ளையாக, வீட்டில் தங்கட்டுமே! அது, ஒரு நன்மையாவது, நடக்குமல்லவா? மற்றபடி, அவளுடைய பிடிவாதக்காரக் கணவன், மனைவி இந்த வீட்டில் இருக்கும்வரை, இங்கே திரும்பி வரவே போவதில்லை...

மாதங்கியின் யோசனையைத் தயக்கமாக எண்ணிய சுரபி, "தன் வீட்டை விட்டு, மூன்றுமாதம் வேறிடத்தில் தங்குவது, உங்களை மாதிரிக் குடும்பப் பெண்களுக்குக் கஷ்டம்தான். ஆனால், உங்கள் அண்ணனின் நலனைக் கருதி, இந்தத் தியாகத்தை, நீங்கள் செய்ய வேண்டும், மாதங்கி ப்ளீஸ்" என்று சுரபி, கெஞ்சிக் கேட்டபோது, மாதங்கிக்குச் சிரிப்புதான் வந்தது; வேதனைச்சிரிப்பு!

"என்ன, ஒரு மாதிரிச் சிரிக்கிறீர்கள்? இங்கே, அனுமதிக்க மாட்டார்களா? அல்லது..." என்று, கவலையுடன் கேட்டாள், சுரபி.

"அதற்குச் சிரிக்கவில்லை! சுர்பி நான் வருவதைத் தியாகம் என்றீர்களே! இது, நான் செய்யும் தியாகமல்ல, நீங்கள் எனக்குச் செய்யும் உதவி.. அண்ணனுக்கு, உதவ

வாய்ப்புத் தருகிறீர்கள், அல்லவா? அதிருக்கட்டும், நான் எப்போது வரவேண்டும்?" என்று மாதங்கி விசாரித்தாள்.

"இந்த வாரக் கடைசியில் சிவாவை அனுப்புவார்கள். ஞாயிறு வரை நான் பார்த்துக் கொள்ள முடியும். நீங்கள், திங்களன்றேனும் வந்துவிட்டால், நன்றாக இருக்கும். எந்த ரயில் என்று, சொல்லுங்கள். நாங்களே வந்து, அழைத்துப் போகிறோம்." என்று, கவலை இறங்கிய கலகலப்புடன், சுரபி பேசினாள்.

"இல்லை, விலாசம் தந்துவிட்டுப் போங்கள். நானே, வந்து விடுகிறேன்." என்ற மாதங்கி ஏதோ எண்ணியவளாய், "நீங்களும் எனக்கு, ஓர் உதவி பண்ண வேண்டும், சுரபி நான் உங்களோடு வருவது பற்றி, யாரிடமும், மூச்சுகூட விடக்கூடாது" என்றாள்.

பார்வை கூர்மை பெற, "யாரிடமும் என்றால்? யார் யாரிடம்?" என்று, விசாரித்தாள், மற்றவள்.

சிறு மவுனத்தின் பின், "நதி மூலம், ரிஷி மூலம் ஆராயக் கூடாது, என்பார்கள். இந்த உதவிக்கும் அப்படித்தான் வைத்துக் கொள்ள வேண்டும்." என்று, வேடிக்கை போலப் பதிலிறுத்தவளின் முறுவலில், வருத்தம்தான், அதிகம் இருந்தது.

சற்றுத் தயங்கிவிட்டு, "எங்களுக்கு உதவுவதற்காக, நீங்கள் சங்கடத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாதே, என்றிருக்கிறது. அதனால்தான் கேட்டேன்" என்றாள், சுரபி.

"சிவா கூட, இதனால், உங்களுக்கு பிரச்சினை என்றால், வருமாறு; வற்புறுத்தவேண்டாம் என்று, சொல்லித்தான், அனுப்பினார். உங்களுக்கே, வர விருப்பம் இருக்குமோ, என்னவோ, என்றுகூட யோசித்தேன். சிவாவை, மறு வாழ்வு மையத்தில் சேர்த்தபிறகு, முதலில் ஒருதரம் வந்தது தவிர, மறுபடி வந்து பார்க்கவே இல்லையல்லவா? ஒருவேளை, நீங்களும் என் பெற்றோரைப் போலவோ,

என்று, எனக்குச் சந்தேகம். சிவாதான், அப்படியிராது, நீங்கள் வராததற்கு, வேறு காரணம் இருக்கும் என்று சொன்னார். நீங்களும் வருவதற்குத் தயங்கவில்லை என்பதால்தான், விவரம் கேட்டேன்..."

பழையகாதல், அது, இது என்று, நீலன் கதை கிளப்பிய பிறகு, கோவைப் பக்கம் செல்லவேண்டும் என்று, சொல்லவே, மாதங்கிக்குத் தயக்கமாகி விட்டிருந்தது. சொல்லவே, தயக்கம் என்றால், செல்வது எப்படி? அண்ணன் நினைவு வரும்போது, டெலிஃபோன்னில், விசாரித்துக் கொள்வதோடு, சரி.

இதையெல்லாம் விளக்க மனமின்றி, "குடும்பம் என்று வந்துவிட்டால், பெண்களால், திடுமெனக் கிளம்ப முடியாது..." என்றவள், பேச்சை, வேறுபுறம் திருப்ப எண்ணினாள்.

ஏற்கனவே, சிவாவைத் தன்னோடு இணைத்து, 'நாங்கள்', 'எங்கள்' என்று, சுரபி பேசியது, அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. திருமணமான பிறகுகூடப் பல பெண்களுக்குப் புகுந்த வீட்டைத் தன் வீடாக, எண்ண முடிவதில்லை. இவள், இப்போதே, அந்த உரிமையோடு பேசுகிறாளே.!

அண்ணனோடு, இவ்வளவு மனம் ஒன்றிவிட்டாள் என்பது, இதம் தந்ததோடு, இன்னோர் எண்ணமும் ஏற்பட்டது. அதை, வெளிப்படையாகச் சொன்னாள். "சீக்கிரமே, எனக்கு அண்ணியாகப் போகிறீர்கள், உங்களைப் பேர் சொல்லிப் பேசுவது, எப்படியோ, இருக்கிறது உங்களை, 'அண்ணி' என்றே, கூப்பிடட்டுமா?" என்று கேட்டாள்.

"செய்யுங்கள், அண்ணி" என்று, சுரபி உடனடியாகச் சம்மதம் கொடுத்த தினுசில், மாதங்கிக்கு, மெய்யான சிரிப்புகூட வந்தது.

முகவரியைத் தந்துவிட்டு, மனதில் நிம்மதியோடு சென்ற சுரபி, கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டி-ருந்துவிட்டு, மாதங்கி மெதுவாக, உள்ளே சென்றாள்.

என்ன செய்யவேண்டும் என்பது முடிவாகிவிட்டது, அதை, எப்படிச் செய்வது என்று, திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.

பாமாவோடு, அவளுடைய உறவில் ஒரு விழாவில் கலந்து கொள்ளவென்று, கோகிலமும் சென்றிருந்தாள். சாதாரணமாக, இது போன்ற சமயங்களில், விசேஷச் சடங்குகள் முடிகிற நேரத்தில், வித்யாதரன் சென்று, தாயை மட்டும், அழைத்து வந்துவிடுவான். இன்று, அதற்கு வழியில்லை. தன் சொந்தக்காரர்கள், அத்தனை பேருடனும், உரையாடி முடித்துவிட்டு, பாமா கிளம்பும்வரை, கோகிலமும் காத்திருந்தாக வேண்டும். அதிக நேரம் உட்காருவதால், மாமியாருக்கு ஏற்படும் முதுகுவ்லியைப் பாமா, ஒரு பொருட்டாகக் கருதுவது கிடையாது. திரும்பி வந்ததும், தைலம் தேய்த்துக் கொண்டு, கோகிலம் படுத்தாக வேண்டும். போகட்டும், ஏதோ, ஒரு லாபமாக, இனி, இந்த நிலையேனும் மாறுமே.

கிளம்புவது பற்றிக் குறுக்கீடின்றி, யோசித்து திட்டமிட, மாதங்கிக்கும், இந்தத் தனிமை தேவையாகத்தான் இருந்தது.

இந்த வீட்டுடன் உள்ள தொடர்பை, அடியோடு வெட்டிவிடுவதற்காகத் திட்டமிடுவதை எண்ணி, மாதங்கிக்கு, அழுகைதான் முதலில், முட்டிக் கொண்டு வந்தது.

வீட்டோடு உள்ள தொர்டர்பு என்றால். அது, அவளுடைய கணவனோடான தொடர்பல்லவா? அவனை விட்டு, அடியோடு விலகுவது எப்படி என்றுதான், அவள் அழுததே.

ஆனால், இப்போது மட்டும் கணவனோடு இணை பிரியாமல் கூடிக் குலாவிக்கொண்டா இருக்கிறாள், 'மற்ற நின் வரவு, வாழ்வார்க்குச் சொல்'என்றதுபோலப் பிரிவை நினைத்து அழுவதற்கு? உறவு முறிந்தது, என்று, அவன்தான் ஏற்கனவே முடித்துவிட்டானே! முகத்தில் விழிக்கக் கூடாது என்று, வீட்டை விட்டே வித்யாதர் சென்றுவிட்ட பிறகும், அவள் அங்கேயே உட்கார்ந்திருப்பதுதான் அசிங்கம். அழிச்சாட்டியமாகக் கூடத் தோன்றும்.

பிடிவாதமாக மனதைச் செய்யவேண்டிய காரியத்தில் திருப்பி, வெகுவாக யோசித்து, மாதங்கி, வித்யாதரனுக்கு, ஒரு கடிதம் எழுதினாள்.

"நான் போய் விடுகிறேன். உங்கள் வாழ்வை விட்டு, அடியோடு போய்விடுகிறேன். தாய்க்குப் பிள்ளையாக, இனியேனும் வீட்டுக்குத் திரும்பி வாருங்கள். அத்தை, உங்களுக்காக ஏங்குகிறார்கள்.

"இத்தோடு, இரண்டு வெற்றுக் காகிதங்களில், கையெழுத்திட்டு, வைத்திருக்கிறேன். விவாகரத்திற்கோ, மறுமணத்திற்கோ, தேவைப்பட்டபடி, மேலே எழுதி, பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

"உங்கள் மனைவி, வீட்டைவிட்டு வெளியேறுவது. உங்களுக்கு அவமானமாக இருக்கலாம். ஆனால், இந்தப் பொய்வாழ்வு எனக்குப் பிடிக்கவில்லை. அதனால், தயவுபண்ணித் தேடாதீர்கள். ஏனெனில், நான் திரும்பி வருவதாக இல்லை.

"வேறு நான் என்ன எழுதட்டும்? அன்று, உங்களிடம் சொன்னதையே திரும்பவும் எழுதி, உங்களைப் போரடிப்பதில் என்ன லாபம்? எனவே, கடிதத்தை முடிக்கிறேன்." என்று எழுதிக் கையெழுத்திட்டாள்.

கடிதத்தில் எழுதியது போலவே, இரண்டு வெற்றுக்

காகிதங்களில் கையெழுத்திட்டு, அவற்றையும், கடிதத்தோடு சேர்த்து வைத்தாள்.

அன்றுவரை, கணவனும் மாமியாரும் வாங்கித் தந்த அனைத்தையும், வரிசையாக அடுக்கிவைத்தாள்.

உடம்பு சரியில்லாத தோழியைப் பார்க்க, அரக்கோணத்துக்குப் போவதாகச் சொல்லி, அறைச் சாவியை, மாமியாரிடம் கொடுத்தாள். செல்லுமிடத்து முகவரி கேட்டவளிடம், 'உங்கள் பிள்ளைக்கு எழுதி வைத்திருக்கிறேன்.' என்று சமாளித்து விட்டுக் கிளம்பினாள்.

வீட்டை விட்டுச் செல்லுமுன், நிரபராதி என்று, நிரூபிக்காமலே போகிறோமே என்பது, நெஞ்சில் ஒரு சுமையாக இருந்து அழுத்தியது.

ஆனால், அவளுடைய பிடிவாதக்காரக் கணவனிடம் நிரூபிக்க, வழியுமில்லை, வாய்ப்புமில்லை.

எப்படியோ போகட்டும். நாளை 'கூரியரி'ல் வித்யாதரனுக்கு, அவளது கடிதம் கிடைக்கும். தொல்லை விட்டது என்று, திரும்பி வருவான் கோகிலத்துக்காவது. சந்தோஷமாக இருக்கும்.

இப்படி, ஏதேதோ எண்ணங்களை, மனதில் முயன்று ஓட விட்டுக் கொண்டிருந்தபோதும், வீட்டை விட்டு வெளியேறும்போது, மாதங்கிக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு 'ஹோ' என்று, வந்துவிட, அதைச் சமாளிக்க, அவள் அரும் பாடு பட்டுப் போனாள்.

மாதங்கி எதிர்பார்த்தது போலவே, அவளது கடிதம் சென்ற அன்றே, வித்யாதரன் வீடு திரும்பி விட்டான். முகம் இறுக, தானுண்டு, தன் வேலையுண்டு என்று இருந்தவனிடம், நெருங்கிப் பேச எல்லோருக்குமே, தயக்கமாக இருந்தது.

மாதங்கி, அவன் வரும் வரை காத்திராமல், தோழியைப்

பார்க்கச் சென்ற கோபமோ, நீலன் இல்லாததால் அதிக வேலையோ, என்று, ஆளாளுக்கு ஒரு காரணத்தைக் கற்பனை செய்துகொண்டு, மற்றவர்கள் ஒதுங்கிப் போய்க்கொண்டிருந்த போது, ஒருநாள், அலுவலகத்தில், அவனது அறைக் கதவை, சுவாதீனமாகத் திறந்து கொண்டு, ஒரு பெண் உள்ளே வந்தாள்.

ஒரு தரம் இமை இடுங்கியது தவிர, முற்றபடி உணர்ச்சியற்று நோக்கியவனிடம், "என்ன வித்யா, மாலியின் முகம், உனக்கு, அதற்குள்ளாகவா மறந்து விட்டது?" என்று, கேலியாகக் கேட்டாள்.

33

கோவை மாநகர், மாதங்கிக்குப் பழக்கமான ஊரே என்பதால், சுரபியின் வீட்டைக் கண்டுபிடிப்பது, அவளுக்கு, எளிதாகவே இருந்தது. விரிந்துகொண்டே வந்த புறநகர்ப் பகுதியில், ஓர் 'அப்பார்ட்மென்ட்' அது. வீடு சிறியதாக இருந்தாலும் அதில் வசித்தவர்களின் மனம் பெரிதாக இருந்தது.

முதலில் ஓரிரு நாட்கள், அண்ணனுக்கும் தங்கைக்கும், ஒருவரைஒருவர் பார்த்துக் கொண்டு இருப்பதே, போதுமானதாக இருந்தது. அதிலும், சிவாவைக் கண்களில் தெளிவோடும், உடலில் ஆராக்கியத்தோடும் கண்ட மாதங்கிக்கு, சுரபியை என்ன புகழ்ந்தாலும், போதவில்லை.

ஆனால், குணமாகிவிட்டிருந்த அண்ணனின் கண்கள், தங்கையின் முகத்தில், நடப்பில், எதை எதையோ, கண்டுபிடித்தன.

வருங்கால மனைவியுடன் கலந்து பேசிவிட்டு, இருவருமாகக் கேட்டபோது, மாதங்கியும் எதையும் மறைத்தாளில்லை. நடந்தது அனைத்தையும், அப்படியே

வார்த்தை பிசகாது சொல்லாவிடினும், மொத்தக் கதையை, முக்கியமாக முடிவை, அவர்களிடம், தெளிவாகவே தெரிவித்து விட்டாள்.

மழுப்புவதில் பயனில்லை என்பதோடு, சொல்வதற்கு, ஒரு காரணமும் இருந்தது.

உதவி செய்ய வந்தேன் என்று, உட்கார்ந்து சாப்பிட அவளுக்கு, மனமில்லை.

ஒன்று. இந்த உதவிக் காலம் முடிந்தபின், அவளுக்குத் திரும்பிப் போக இடமில்லை. இனி, அவளது வாழ்வை, அவளேதான் நடத்தியாக வேண்டும். இந்த மூன்று மாதம் முடிந்த பிறகு செய்வதை, இப்போதே, தொடங்கி-னிட்டாலென்ன, என்ற எண்ணம்.

அடுத்தது; சுரபி ஒன்றும், அதிகம் சம்பாதிக்கவில்லை. மூன்று பேர் சாப்பாட்டுக்குப் போதுமானதே என்றாலும், சாப்பாடு தவிர, மற்ற செலவுகளும் இருக்கின்றனவே. அத்தோடு, அவர்கள் இருவரும் திருமணத்துக்குத் திட்டமிடுகிறவர்கள். குடும்பம், குழந்தை, என்று, செலவுக்கும் சேமிப்புக்கும், அதிகப் பணம் தேவைப்படும். இதில், தானும் ஓர் அசையாச் செலவாக உட்கார்ந்து கொள்ள, மாதங்கி, சற்றும், விரும்பவில்லை.

எப்படியும், அவளுடைய குடும்பத்தோடு, அவள், எந்தவிதத் தொடர்பும் இல்லாமல் இருப்பது பற்றி, இருவரும் யோசிப்பார்கள்தானே?

எனவே, மாதங்கி, அது பற்றிய கேள்விக்கும் தயாராக இருந்தாள். எதிர்காலத்துக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டுமிருந்தாள். உள்ளே பளுவாய் அழுத்திக் கொண்டிருந்த வேதனையை, விலக்க முடியாவிட்டாலும், மற்ற இருவரையும் பார்க்கப் பார்க்க, அந்த வேதனை-யுடன்கூட வாழும் தைரியம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

மாதங்கியின் வாழ்வு சஞ்சலமற்றது அல்ல என்று, சுரபி ஏற்கனவே, ஊகித்திருந்தாள். ஆனால், பிரச்சினை இந்த அளவுக்குப் போய்விட்டது அறிந்து, வருந்தினாள். கூடவே, தன்னால் ஆன உதவின்யச் செய்யவும் முன்வந்தாள்.

சுரபி வேலை செய்தது, ஒரு பெரிய, நட்சத்திர ஹோட்டலின், அலுவலகப் பிரிவில், உடன் பிறந்தவளுக்காக, அவள் பட்டபாட்டைப் பார்த்து, ஹோட்டல் உரிமையாளர் குடும்பத்துக்கு, அவளிடம், ஒரு தனிப் பரிவு இருந்தது. அதனால்தான், சிவாவுக்கும் அங்கேயே வேலை கொடுக்க, அவர்கள் முன்வந்ததும்.

அந்த ஹோட்டலில், ஒரு 'பியூட்டி பார்ல'ரும் இருந்தது. அதன் வேலைத் தரத்தினால், வெளியில் இருந்தும், பலர், அந்தப் பார்லருக்கு வருகை தருவதுண்டு. வாடிக்கை அதிகமாகி வருவதால், இன்னொரு ஆள் வேண்டும் என்று, பார்லரில் கேட்டிருந்தது, சுரபிக்குத் தெரியும். மாதங்கியின் தகுதிகளை அறிந்திருந்த சுரபி, அந்த வேலைக்கு, மாதங்கியை விண்ணப்பிக்கச் சொன்னாள்.

"ஆனால். அண்ணனுக்குத் துணை..." என்று, தயங்கிய மாதங்கியை, எம்டி.யுடைய மனைவியிடம் அழைத்துச் சென்றாள்.

பார்லர், ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், என்று, சிலபிரிவுகள், அந்த அம்மாளின் பொறுப்பில் இருந்தன.

சுரபி சொன்ன விவரங்கள், அந்த அம்மாளுக்கும் பிடித்துப் போயின.

"'மயூரி'யிலா வேலை பார்த்தாய்? அதற்கு மேல், உனக்குச் சிபாரிசு, எதற்கு? இதைக் கட்டு முன்னெல்லாம், நானே, 'மயூரி'யில்தான், எல்லாம் செய்து கொள்வேன். ம் ம், இப்போது, பிரச்சினை நேரம் என்கிறீர்களா?" என்று கேட்டு, அதற்கொரு, தீர்வும் சொன்னார்.

மாலை மூன்று மணியிலிருந்து, ஏழு வரைதான் பார்லரில், கூட்டம் அதிகம். அந்த நாலு மணிநேரம், அதாவது உறுதிப்படுத்தப் படாத, அரைநாள் வேலை, அரைநாள்ச் சம்பளம்.

"சிவா, வேலையில் சேர்ந்த பிறகு, உன் வேலையையும் முழுநாளாக்கி, உறுதிப் படுத்தி விடுவோம்." என்று முதலாளி அம்மாள் கூறியதற்குத் தலையாட்டி விட்டு, இரு பெண்களும் திரும்பி வந்தனர்.

பெருமளவு திருப்தியோடுதான் மாதங்கி கிளம்பி, சுரபி திரும்பி வரும் வரையிலான, இரண்டு மணி நேரத்தை, முன்னால், நல்லபடியாகக் கழிக்க முடியும் என்று, சிவாவும் உறுதியோடு கூறவும், திருப்தி முழுமை ஆயிற்று.

இவ்வாறுதான், மாதங்கி, வேலை பார்க்கத் தொடங்கினாள்.

முன்பே, 'மயூரி'யில் வேலை பார்த்த அனுபவம் கை கொடுக்க, பார்லரில் நல்ல பெயரும் கிடைத்தது.

காலை எழுவதிலிருந்து, இரவு மீண்டும், படுக்கையில் தலை சாய்க்கும் வரை. மாதங்கியின் வாழ்க்கை. கிட்டத் தட்ட முன்போலவே, - திருமணத்துக்கு முன்னிருந்தது போலவேதான் சென்றது. முன்பு, பெற்றோரை இழந்த துக்கம் மனதை அழுத்தியது. இப்போது, வித்யாதரன் நினைவு, சற்றுக் கூடுதலாக, வேதனை தந்தது வேறுபாடு, அவ்வளவுதான்.

ஆனால், இரவுதான், மாதங்கியை, மிகவும் சோதனை செய்தது. இமைகளை மூடினாலும், திறந்தே வைத்-திருந்தாலும், வித்யாதர், அவளது, கண்ணிலேயே நின்றான்.

அவளது, கடிதம் கிடைத்திருக்கும். இவ்வளவுதூரம் மனம் வெறுத்து எழுதியிருக்கிறாளே, உண்மையாக

இருக்குமோ, என்று எண்ணுவானா? அல்லது, நீலன் எழுதியதுதான் இன்னமும் மெய்யென்பானா?

வேறென்ன? அந்த ரத்தக் காட்டேறிதான், வித்யாவுக்கு உண்மை விளம்பி. அவன் சொன்னதுதான் எப்போதும் சரி. மாதங்கிக்கு, அவளை யாரும் பொய் சொன்னாள் என்று சொன்னால் கூடப்பிடிக்காது. இப்போது. இவ்வளவு பெரிய பழியை ஒரு பொறுக்கி சொல்ல, கணவன் அதை நம்ப, இதையும் சகித்து வாழ வேண்டியதாகி விட்டதே! என்ன அநியாயம்! எவ்வளவு பெரிய அநியாயம்!

பெற்றோரை இழந்து, சொந்தக் காலில் வாழும்போதுப் சில நியாயமற்ற நிலைமைகளை, அவள் முகம் மாறாமல் சகிக்க நேர்ந்தது, உண்டுதான். வேறு வழியில்லை என்று, அவள் சகித்துமிருக்கிறாள். போய்த் தொலைகிறது, என்று அலட்சியப்படுத்தி, மனதை விட்டு ஒதுக்கி மறந்தும் இருக்கிறாள். ஆனால், இன்றைய நிலைமையைச் சகிப்பதே, பெரும் பாடாக இருந்தது. அலட்சியப்படுத்தி மறப்பதோ, அடியோடு முடியாத காரியமாயிற்று.

இத்தனைக்கும் மேல், அந்தக் கணவனைப் பார்க்கவும் பழகவும் மனம் ஏங்குவதை எண்ணுகையில். அவளுக்கு, அவமானமாகவும் இருந்தது.

தன் மனம் இவ்வளவு ஏங்கும்போது,இந்த ஏக்கம், அவனுக்குக் கொஞ்சமேனும் இராதா, என்று யோசனை ஓடியது. எங்கே? உடும்பு போன்ற பெரிய தொல்லை, தானாக விட்டுத் தொலைந்தது, என்று, நிம்மதியாக இருப்பான் என்று எண்ணி, மேலும் சோர்ந்தாள்.

அவ்வப்போது, சுலேகாவைப் பார்க்கும் ஆவல் தோன்றும். ஆனால், அவளிடம், இங்கு வந்திருக்கும் காரணம் சொல்லவேண்டியிருக்கும். சொல்வது ஒரு வேதனை என்பதோடு, தோழி நன்றாயிருப்பதாய் எண்ணி

மகிழ்ந்து கொண்டிருக்கும் அவளையும், அனாவசியமாக நோகடிப்பானேன் என்று, அந்த ஆவலை அடக்கிக் கொண்டாள்.

உள்ளூர அல்லல் பட்டபோதும், அதை, முகத்தில் காட்டாமல் புன்னகையைப் பூசியபடி, மாதங்கி சமாளித்து வாழ்ந்த சமயத்தில் ஒரு நாள் சுமார் ஐந்து மணிக்கு, நாலு பெண்கள் சேர்ந்து, பார்லருக்கு வந்தார்கள்.

உரத்தகுரலில் பேச்சும், பகபகவென்ற சிரிப்பும், அதிகப்படியான அங்க நெளிப்புகளும். இந்த ரகப் பெண்களை, மாதங்கி. 'மயூரி'யிலும் அவ்வப்போது, கண்டிருக்கிறாள்.

இவர்களைத் திருப்திப் படுத்தவே முடியாது. இப்படி உட்கார்ந்தால் வசதியாக இருக்கும் என்றால் காதிலேயே போட்டுக் கொள்ள மாட்டார்கள். அவர்களாக, அழகு என்று பயின்று வைத்திருக்கும் 'போஸ்' தவிர, வேறு மாதிரியாக ஒரு விரலைக் கூட அசைக்க மாட்டார்கள். ஆனால், 'பார்லரி'ல் இருப்பவர்கள், இன்னொரு பிரம்மாவாக மாறி, அவர்களை அழகு ரதிகளாக மாற்றிவிட வேண்டும் என்பார்கள். முகத்தையும் உடம்பையும், பதினாறு வயதாக்கிக் காட்ட வேண்டும் என்று வாதாடுவார்கள்.

இந்த அனுபவம், அங்கும் வழமைதான் என்று சொல்லாமல் சொல்வது போல, 'பார்லரி'ல் பணி புரிந்த மற்ற பெண்கள், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, உள்ளடக்கிய பெருமூச்சுடன், வேலைக்குத் தயாராயினர்.

நல்ல வேளையாக, மாதங்கி, ஏற்கனவே, ஒரு பெண்ணுக்கு, 'ஷாம்பூ'. போட்டு, கூந்தல் அலங்காரம் செய்து கொண்டிருந்ததால் தப்பித்தாள்.

ஆயினும், அவர்கள் சத்தம் போட்டுப் பேசியது,

வேலையில் அவளது கவனத்தைக் கலைக்கத்தான் செய்தது. பேசியது மட்டுமின்றி, அவர்கள் 'மாலி, மாலி' என்று, அவர்களுள் ஒருத்தியைக் கூப்பிட்டதும்தான்.

அவளைப் பார்த்ததுமே,இவள்நான் இந்த 'மாலி' என்று மாதங்கிக்குத் தோன்றிவிட்டது. அவளது துன்பங்களின் மூல காரணம்!

யாரோ, சில ஆண்களைப் பற்றிய அப்பட்டமான வர்ணனைகள், அங்கிருந்த மற்ற பெண்களை முகம் சுளிக்க வைத்தன.

இருந்திருந்து, இப்படி ஒருத்தியையா, தன் முதல் காதலுக்கு, வித்யாதரன் தேர்ந்தெடுக்க வேண்டும்? எல்லாம், அவள் தலையில் வந்து விடிந்து விட்டதே!

"ஏய், மாலி, இந்தப் பெண், உன்னையே பார்க்கிறாள்யா" என்றாள், ஒருத்தி உரத்த குரலில்.

"பெண்ணுக்குப் பெண்ணே ஆசை என்பார்களே, அதுபோல, இவளுக்கு, உன் மேல் காதல் வந்து விட்டதா?" என்றாள், மற்றொருத்தி.

"அப்படி, ஒரு பணக்காரிக்கு வந்திருந்தாலும் பரவாயில்லை. இப்போதுதான் ஓரினக் காதலை, ஒரு மாதிரி, ஒத்துக் கொள்ளுகிறார்களே. ஆனால், இந்த அன்றாடம் காய்ச்சியின் காதல், யாருக்கு வேண்டும்?" என்று அந்த மாலி கேட்க, மற்ற மூவரும், பிரமாதமான நகைச்சுவையைக் கேட்டவர்கள் போலக் கைதட்டி, நகைத்தார்கள்.

உள்ளுக்குள் மூண்ட அருவருப்பை, வெளியே காட்டாமல், வெறுமனே மாலியை ஒருதரம் நோக்கிய மாதங்கி, மீண்டும் திரும்பி, தன் வேலையில் ஈடுபட்டாள்.

"இது மாதிரி ஜன்மங்களின் பேச்சையெல்லாம் அலட்சியப் படுத்தப் பழகிக் கொள்ளுங்கள்." என்ற

மெல்லிய குரலைக் கேட்டு, மாதங்கி திடுக்கிட்டு நிமிர்ந்தபோது, எதிரில் இருந்த கண்ணாடியில், அவளைப் பார்த்து, முறுவலித்துக் கொண்டிருந்தாள், தன் தலையை, அவளிடம் கொடுத்திருந்தவள்.

ஒருதரம் உதட்டைக் கடித்துவிட்டு, "சாரி!" என்றாள், மாதங்கி.

"உங்கள் 'சாரி'யை வேண்டி, நான் இதைச் சொல்லவில்லை, சகோதரி. உங்கள் மன அமைதிக்காகத் தான், சொன்னேன். அவர்களுக்கு, உங்கள் அழகைக் கண்டு, பொறமையாகக் கூட, இருக்கலாம். ஏனென்றால், நீங்கள், மெய்யாகவே, அழகாக இருக்கிறீர்களே!" என்று சிரித்துவிட்டு, எழுந்தாள், அவள். "எனக்கு, எல்லாம் முடிந்துவிட்டதல்லவா? நன்றி" என்றுரைத்து எழுந்து சென்றாள்.

நல்ல பெண்! ஆனால், மாதங்கியின் வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றி, அவளுக்கு எதுவும் தெரிந்திருக்க முடியாதே! முதல் கோணல் முற்றும் கோணல் என்பதுபோல, முதலில் இந்த ஸ்வர்ணமாலா தொடங்கி வைத்ததுதானே, அவளது துன்பங்கள் அனைத்திற்கும் அடிப்படை?

மீண்டும், மாலியைப் பாராதிருக்க, அவளால், முடியவில்லை. இவளிடம், வித்யாதரன், எதைக் கண்டு மயங்கினான்? அழகு அவ்வளவும் செயற்கை; குணம் அப்படி ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை!

இந்த மாலியின் அறிமுகம் மட்டும், அவனுக்கு இல்லாமல் போயிருந்தால்...? பெண்களைப் பற்றித் தவறான கருத்து ஏற்பட்டிராது, மனைவியையும் தப்பாக நினைக்கத் தோன்றியிராது அப்புறம்...

கற்பனைக்குக் கடிவாளம் ஏது?

கையிலிருந்த பத்திரிகையால், அவள் தோளில் தட்டி,யாரோ, அழைத்த பிறகுதான், மாதங்கி தன் கனவுலகிலிருந்து, திரும்பி வந்தாள்!

அழைத்தது, வேறு யாருமில்லை. மாலிதான். மாதங்கியைக் கூப்பிட்டு. "ஏன் என்னையே பார்த்தாய்?" என்று கேட்டாள்.

மாதங்கி, சுற்று முற்றும் பார்க்கவும், "அவர்களை எல்லாம், போகச் சொல்லிவிட்டேன். உன்னிடம் பேசிவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு, நின்றேன். சொல்லு ஏன் அப்படிப் பார்த்தாய்? சீக்கிரம் சொல்லு இல்லாவிட்டால் நம் இருவரையும் பற்றித் தப்பாகப் பேசத் தொடங்கி விடுவார்கள்" என்று மாலி கண்ணடிக்கவும், அருவருப்புடன், இரண்டடட்டு பின்னடைந்து, "உன் உங்களை எனக்குத் தெரியும்" என்றாள், முன்னவள்.

"தெரியுமா?" என்று, விழிகளை, முடிந்த அளவு விரித்தாள், மாலி. "எப்படி? எனக்கு, உன்னைப் பார்த்ததாகவே, நினைவில்லையே!"

"கேள்விப் பட்டிருக்கிறேன்" என்றாள் மாதங்கி, சுருக்கமாக.

"அப்படியா?!" என்று, மீண்டும் விழி விரித்துவிட்டு, "எந்த ஏமாந்த காதலன், உன்னிடம் வந்து புலம்பினான்?" என்று கேட்டுப் பகபகவென்று நகைத்தாள். திடுமெனச் சிரிப்பை நிறுத்திவிட்டு, "ஆமாம், அவனை, நன்றாய்த் தேற்றி அனுப்பினாயல்லவா?" என்று, முத்தமிடுவது போல உதட்டைக் குவித்துக் காட்டினாள் மாலி.

ஒரு தரம், கண்களை மூடித் திறந்தவள், இவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த நிர்வாகியிடம், சிறு கையசைவாலும் பார்வையாலும், அனுமதிபெற்றுக் கொண்டு, " வெளியே போய்ப் பேசலாம்" என்று,

ஸ்வர்ணமாலாவை, 'லாபி'க்கு அழைத்துச் சென்று, "என் பெயர் மாதங்கி" என்றாள்.

"ம்ம்ம்?" என்று மாதங்கியை ஏற இறங்கப் பார்த்தாள், மாலி. "நீ என்ன, இந்தியாவுடைய பிரதம மந்திரியா? அல்லது, தமிழ்நாட்டு முதன் மந்திரியா, உன் பெயரிலேயே, உன்னை அறிய?" என்று ஏளனமாகக் கேட்டாள்.

"இரண்டும் இல்லை நான், வித்யாதரனுடைய மனைவி" என்றாள், மாதங்கி.

ஒரு சில வினாடிகள், தன் மேல் பூச்சுகள் எல்லாம் உதிர, மாலி, மாதங்கியை வெறித்து நோக்கினாள். விரைவிலேயே சுதாரித்துக் கொண்டு, "வித்யாதருடைய மனைவி, இங்கே, என்னம்மா, செய்கிறாய்?" என்று, 'பார்லர்' பக்கம் காட்டி, ஏளனக் குரலிலேயே வினவினாள்.

அலுப்பும் வெறுப்புமாக, "உன்னால் வந்தது, என்னைக் கேட்கிறாயே!" என்றாள், மாதங்கி, பதிலுக்கு.

மாலி திகைத்து நோக்கவும், "பெண்ணை நம்பக் கூடாது என்று, அவர் மனதில், அழுத்தமாக எழுதி வைத்து விட்டாயல்லவா? அப்புறம் வேறென்ன நடக்கும்? ஏன், ஏன் இப்படி இருக்கிறாய்?" என்று மாதங்கி வேதனையோடு கேட்க, மாலியின் முகமூடி அடியோடு கழன்றது.

"எப்படி? இப்படியா?" என்று, ஒருகையால். தன்னையும், 'ஷாப்பிங்' பகுதியில் நின்ற தோழிகளையும் காட்டிவிட்டுச் சொன்னாள். "இதெல்லாம் பிறகு வந்தது, மாதங்கி முன்பும், எனக்குப் பணம், அலங்காரத்தில் ஆசை உண்டுதான். ஆனால், இந்த மாதிரி அல்ல.. நான் வித்யாதரை, விரும்பினேன். மெய்யாகவே, விரும்பினேன், மாதங்கி, அவனிடம் பணமும் இருந்ததால், இருமடங்கு விருப்பம்! வலைபோட்டு, அவ்னை வளைத்துப் பிடித்தேன். நான் செய்த தப்பு, பெருமை பேசும் போது, அவன் பணத்தைப்

பற்றி, அதிகமாகப் பீற்றிவிட்டேன். என் கெட்ட நேரம், வித்யா அதைக் கேட்டுவிட்டது. உன் புருஷனுக்கு, மன்னிக்கத் தெரியாது என்பது. உனக்கும் தெரிந்திருக்கும்... கிட்டத் தட்டத் திருமணம் வரை வந்துவிட்டு, வித்யாதரை இழப்பது என்றால், சும்மாவ்வா, சொல்லு? என் வேதனையை, இப்படி மறக்கிறேன்...” என்று பெருமூச்-செறிந்தாள்.

சற்று நேரம் அங்கே, நிசப்பதம் நிலவியது.

பிறகு, “என் விஷயம், மண்ணில் சிந்திய பால் அதைப் பற்றிச் சிந்தித்தோ, வருந்தியோ, ஒரு பயனும் கிடையாது. ஆனால், நீ? மனைவியான பிறகும் இப்படிக் தனியாய் எப்படி...?” என்றாள். யோசனையோடு.

“மனைவிகளுக்காகத்தானே, விவாகரத்து, என்று ஒன்று ஏற்பட்டிருப்பதே!” ஜோக்கடிக்க முயன்று, முடியாமல் நடுங்கிய கீழுதட்டைப் பற்களால் அழுத்திச் சமாளித்தாள், மாதங்கி. இன்னும் ஒரு மாதம் போனால், அதுதானே நடக்கப் போகிறது?

“திமிர்ப் பிடித்த ஆண்களைத் தட்டிக் கேட்காத-வரைக்கும், அப்படித்தான் நடக்கும்” என்றாள், மாலி.

அப்படித் தட்டிக் கேட்கும் எண்ணத்தில்தான், மாலி, வித்யாதரனைச் சந்திக்கச் சென்றது.

34

மாதங்கி நினைத்தது போலத் தொல்லை விட்டதென்று, வித்யாதரன், மனைவி பற்றிய சிந்தனைகளை ஒதுக்கி, நிம்மதியாக இருக்கவில்லை. இரவும் பகலும், அவளைப் பற்றியேதான், யோசித்துக் கொண்டிருந்தான்.

ஒரு முக்கியமான தருணத்தில் கை கொடுத்த நண்பனின்

மீதுள்ள நன்றியுணர்ச்சி கலந்த பாசமும், முதல் பார்வையிலேயே மனதைக் கவர்ந்து, பத்து மாதங்களாக மனைவியாக வாழ்ந்துவிட்டவளிடம் இயல்பாகத் தோன்றியிருந்த அன்பும், அவன் மனதில், ஒன்றோடொன்று மோதியவண்ணமாகவே, இருந்தன.

இந்த மோதல், அவனை ஒரு கணமும், நிம்மதியாக இருக்க விடவில்லை.

மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொள்வது, அவனைப் பொறுத்தவரையில், மகாக் கேவலமான காரியம். தன்னிடமே நம்பிக்கை இல்லாதவன்தான், மனைவியிடம் அவநம்பிக்கை கொள்வான் என்பது, அவனது திடமான நம்பிக்கை.

மற்றவகையில் எப்படியோ, அவர்களது, அந்தரங்க-வாழ்வு, இருவருக்குமே திருப்தி தருவதாக, இனிமை-யாகத்தான், இருந்தது.

அப்படியிருக்க, மாதங்கி,இன்னொருவனின் உறவை நாடினாள் என்பது, அவனது தன்மானத்துக்குப் பெருத்த அடியாக இருந்தது: அதிலும், நீலனை என்றால், அவனால் கொஞ்சமும் ஒத்துக்கொள்ள முடியவில்லைதான். அதைப் பற்றி, தன் கடிதத்தில், நீலனும் குறிப்பிட்டிருந்தான். 'கிளி போல மனைவி இருக்கக் குரங்கு போல ஒருத்தியிடம் போனதாக ஆண்களைப் பற்றிச் சொல்வார்களப்பா. பெண்களுக்கும், அது பொருந்தும் என்று, அனுபவப்பட்ட பிறகுதான் தெரிகிறது., மற்றபடி. சிங்கம் போல உன்னை விட்டு, கிழட்டு நரி மாதிரி இருக்கும் என்னிடம், உன். மனைவி உறவுநாடி வரக் கூடுமா?' என்று, நீலன், தன்னையே தாழ்த்தி எழுதியிருந்ததும், 'பெண்கள் விஷயத்தில், நான் பலவீனன், அப்பா. அது, உனக்கே, தெரியும். என்னிடம், மறுக்க முடியாத தோற்றத்துடன், ஓர்

அழகான பெண், நெருங்கி வந்து ஆசை காட்டியபோது, அவள் என் உயிர் நண்பனுடைய மனைவி என்பதெல்லாம், எனக்கு, நினைவே, வரவில்லை. ஆனால், பிறகோ...என் மரணம் தவிர, எனக்குத் தகுந்த தண்டனையே, கிடையாது, என்று, தெளிவாகத் தெரிந்துவிட்டது என்று, தனக்குத் தானே, அவன் தண்டனை கொடுத்துச் செத்தே போனதும், பொய்யென்று, அலட்சியப் படுத்த முடியாதனவாக இருந்தன.

இத்தனைக்கும்மேல், நீலன் இன்னமும் எழுதியிருந்தான். நண்பனுக்கு வேதனையாக இருக்கும் என்பதால், இதையெல்லாம் சொல்லாமலே, செத்துவிடலாம் என்றுதான், அவன் எண்ணினானாம். ஆனால், செய்த தப்பு கொடியது., மிகவும் பெரியது. இந்த உண்மையைச் சொல்லி மன்னிப்புக் கேளாமல், எப்படிச் சாவது?

அத்தோடு, மனைவி எப்படிப் பட்டவள் என்று, வித்யாவும் அறிந்திருந்தால்தானே, இன்னொருதரம் அவள் பிழை புரியாமல், காப்பாற்ற முடியும்?

தன் சொல்லின் உண்மையை நிரூபிப்பதற்காகவே, மாதங்கி, அவசரத்தில் விட்டுப் போன செருப்பையும் சேர்த்து அனுப்புவதாக எழுதியவன், மாதங்கியை மன்னித்துவிடுமாறும், நண்பனைக் கேட்டுக் கொண்டிருந்தான்..

அவள் சின்னப் பெண்ணாம். எதிலும் புதுமையை விழைகிற, இந்தக் காலப் பெண்கள், முன்னைப் போல ஒழுக்கத்துக்கு மதிப்புக் கொடுப்பதில்லை என்பதால் அவர்களுள் ஒருத்தியான, மாதங்கியை, வித்யா, மன்னித்து விட வேண்டுமாம்.

அவளுக்காக, இவ்வளவு பரிகிறவன், பொய் சொல்லக் கூடுமா?

ஒருவகையாகப் பார்த்தால், நீலனின் கடிதம், மாதங்கியை, மிகவும் கேவலமானவளாகக் காட்டுவதுதான். உருகுவது போலக் காட்டியே, அவளைக் குற்றவாளியாக்குவதுதான். ஆனால், நீலன், அவனது உயிரைக் கொடுத்தல்லவா, நிரூபித்திருக்கிறான்!

நடந்த குற்றத்தை நினைக்கவே, வித்யாதரனுக்கு, மிகவும் அருவருப்பாக இருந்தது. ஆயினும், செய்த தப்புக்காக மனம் வருந்தி, உயிரைவிட்ட நீலநாராயணனை, அவனால், ஒருவாறு, மன்னிக்க முடிந்தது. தன் உயிரையே காவு கொடுத்து, பிராயச்சித்தம் செய்து விட்டவன், அல்லவா?

ஆனால், மாதங்கி நடந்துகொண்ட விதம்தான் அவனுக்குப் பொறுக்கமுடியாது போயிற்று.

செய்தது, எவ்வளவு பெரிய பிழை என்கிற எண்ணமே இல்லாமல், என்னவோ, கணவனுக்காக உருகுகிறவள் போல நடித்ததும், சரசமாடியதும், ஒன்றுமே நடவாததுபோலக் காட்டிக் கொண்டதும், அவனுக்கு மிகவும் ஆத்திரமூட்டின. குழந்தையாம்.! அதைப்பற்றி, மகிழ வேண்டுமாம்.

அவன் மனைவி, இந்த அளவுக்கு, ஒழுக்கத்தை அலட்சியப் படுத்தக் கூடியவளா? இந்தக் காலத்துப் பெண்களின் சில அசட்டு ஆசைகள் தவிர, மற்றபடி, நல்லவள் என்று நினைத்தானே.! அவளை அறிந்துவிட்டதாக எண்ணியதெல்லாம், முட்டாள்த் தனமா?

முழு மூடத்தனமேதான் என்று, மூளை சொன்ன போதும், உள்ளுர வித்யாதரனுக்கு, நெருடிக் கொண்டேதான், இருந்தது.

மாதங்கி, கருவைக் கலைத்துக் கொண்டு வந்து நின்றது, அவனுக்கு, அதிர்ச்சிதான்.

அது, தன் பிள்ளை இல்லை என்று, வித்யாதர், வெளிப்படையாகக் கூற முடியாத நிலையில், அதைப் பெற்றுக் கொள்வது, அவளுக்குப் பெரும் லாபம் அல்லவா? வளம் நாடும், இந்தக் காலத்துப் பட்டாம் பூச்சி, குழந்தையை ஏன், அழித்தாள்?, அதிலும், குழந்தைக்காக ஆசைப்படுகிறவள் வேறு.!

எல்லா வகையிலும், கணக்கு உதைத்தது.

கடைசியாக, நடுநிலையிலிருந்து யோசிக்கும்படி, மாதங்கி கெஞ்சியது, வித்யாதரனை, வெகுவாகவே, உலுக்கிவிட்டது.! அவள், தான் நல்லவள் என்று, கண்ணைமூடிக் கொண்டு நம்பச் சொல்லவில்லை, நல்லவளாக இருக்கக்கூடும் என்ற நோக்கிலிருந்து, யோசிக்கத்தான் சொன்னாள்.!

தப்பு செய்தவளால், அப்படிச் சொல்ல முடியாது.

நடுநிலையிலிருந்து யோசிக்கும்போது, உண்மை-யல்லவா, வெளிப்படும்? தப்பு செய்தவள், உண்மையை எப்படி விரும்புவாள்?

நீலனின் கடிதம், அவனைச் சிந்திக்கவே சொல்லவில்லை என்பது, சட்டென நினைவு வரவும், வித்யாதர் திடுக்கிட்டுப் போனான். அப்படியானல், அவன் சிந்திப்பது, நீலனுக்கு, விருப்பம் இல்லையா?

இங்கேயே இருந்தால், மாதங்கிபக்கம் மனம் சாய்ந்துவிடுமோ என்று தோன்றிவிடவும், அவளும் இல்லாத இடத்துக்குச் சென்றுதான் யோசிக்கவேண்டும், என்று தீர்மானித்துத்தான், வித்யாதரன் வெளியூர் கிளம்பியது.

நினைத்துப் பார்க்கப் பிடிக்காமல், ஒதுக்கி வைத்திருந்த-வைகளை எல்லாம், மனதுள், திரும்ப ஒரு தரம் ஓட்டிப் பார்த்தான்.

குற்றம் நடந்த, குற்றம் நடந்ததாக, நீலன் குறிப்பிட்டிருந்த நாளில், சோர்வுடன், மாதங்கி திரும்பி வந்தது, நினைவு வந்தது, காதல் களியாட்டத்தில், திருப்தி அடைந்தவளின் தோற்றம் அல்ல, அது. அலுத்துக் களைத்து, ஓய்ந்தல்லவா, போயிருந்தாள். நிராசையே உருக்கொண்டதுபோலல்லவா, இருந்தாள்.

மாதங்கியின் கோபங்கள், தப்பு செய்தவர்களுக்கு வரக் கூடியவை அல்ல. அவளது நேர்ப் பார்வையும், பிழையுடன், நோக்குப் போகக் கூடியது. அல்ல.

ஒருவேளை, நீலனைப் பற்றிய மாதங்கியின் குற்றச்சாட்டு உண்மையானதாக இருந்தால், தொடர்ச்சியாக, அவளது நடவடிக்கைகள் எல்லாமே, ஒரு நல்ல பெண், இயல்பாகச் செய்யக் கூடியவைதான்.

ஆனால், நீலன், செய்த தப்புக்குப் பிராயச்சித்தமாக, உயிரையல்லவா, விட்டுவிட்டான். அவனது கடிதம், ஒரு மரணவாக்குமூலம். மரண வாக்குமூலத்தில், யாராலும் பொய் சொல்ல முடியுமா?

வெறுமனே யோசிப்பதோடன்றி, வேலையையும் சேர்த்துப் பார்க்கலாம் என்று வந்திருந்த வித்யாதர், அந்தப் பயணம் முடியும்போது, ஒரு முக்கியமான விஷயத்தைக் கண்டுபிடித்தான்.

முதலில் சிறு சந்தேகம்தான். சென்னைக்குத் தொடர்பு கொண்டு, அந்த விவரத்துடன் ஒத்துப் பார்த்தவன், உடனே ஊர் திரும்பிவந்தான்.

தன் கண்டுபிடிப்பைப் பற்றி, மனைவியிடம், நேரில் தெரிவித்து, நடந்த அனைத்தையும், அவளோடு அலசி ஆராய எண்ணியே, அவன், அவசரமாக வீடு திரும்பியது.

ஆனால், மாதங்கி, அதற்குள் கிளம்பி விட்டிருந்தாள்.

"சினேகிதிக்கு உடம்பு சரியில்லை என்று, போயிருக்கிறாள் வித்யா. போகிற இடம், உனக்கு எழுதியிருப்பதாகச் சொன்னாளே, 'கூரியரி'ல் அனுப்பினாளேம்மர்." என்று, கோகிலம் சொன்னதற்கிணங்க, மாதங்கியின் கடிதம், மறுநாளே, வித்யாதரைப் பின்தொடர்ந்து, சென்னைக்கு வந்து சேர்ந்தது.

அந்தக் கடிதமும், வித்யாதரனின் மனதில் இருந்ததோடு ஒத்துப் போகவே, உள்ளம் வலிக்க, மனைவியைத் தேடத் தொடங்கினான். பாமாவின் வாய்க்கும் வம்புப் பேச்சுக்கும் பயந்து, வெளியே தெரியாமல், ரகசியமாகத் தேடினான்.

மாதங்கி செல்வதாகச் சொல்லியிருந்த அரக்கோணத்தில், வித்யாதரனுக்கு நம்பிக்கையில்லாததால், அதை விடுத்து, கோவைக்குச் சென்றான். சுலேகாவின் இருப்பிடம்தான், அவன் மிகவும் நம்பிச் சென்ற இடம். அங்கே அவள் இல்லை என்று தெரிந்ததும், சிவா இருந்த மறுவாழ்வு மையத்துக்குச் சென்றான்.

அவன் குணமாகிச் சென்றிருந்தான், தற்கால இருப்பிடம் பற்றி எந்தத் தகவலும், கொடுக்காமல்.

அண்ணனோடுதான் மாதங்கி இருப்பாள் என்று ஊகித்தாலும், ஊகத்தை உறுதி செய்து கொள்ள முடியாமலும், மனைவியை நேரில் பார்க்க இயலாமலுமாக, வித்யாதர் தவித்தான்.

இந்த நிலையில்தான், மாலி என்கிற ஸ்வர்ணமாலா, அவனைத் தேடி வந்தாள்.

திடுமென்றுத் தன்னைக் கண்டதும், வித்யாதரன் திகைத்துத் தடுமாறிப் போவான் என்று எதிர்பார்த்த மாலிக்கு, அவன், அவளை எதிர்கொண்ட விதம் மிகுந்த ஆச்சரியத்தை, அளித்தது. எதற்கும் சட்டென உணர்ச்சிவசப்பட்டுப் படபடக்கும் வித்யாதரன், இவ்வளவு

ரோரம் தன்னை அடக்கக் கற்றுக் கொண்டிருக்கிறானே.

கூடவே, அவளுக்கு, ஒரு பயமும் உண்டாயிற்று. முன்பே, வித்யா பிடிவாதக்காரன். இப்போது அந்தப் பிடிவாதம், எத்தனை மடங்கு பெருகியிருக்கிறதோ?

ஆனால், அவன் பிடிவாதம் அவனோடு. அதைக் கண்டு, அவள் ஒன்றும் கவலையோ, பயமோ கொள்ளத் தேவையில்லையே. அவள் எண்ணி வந்த வேலையை முடித்துக் கொண்டு போய்க் கொண்டே இருக்கலாமே.

இந்த எண்ணம் தோன்றவும், வித்யாதரனின் முன்னே போய் அமர்ந்துகொண்டு, அவள் கேட்டாள். "நீ, என்ன, எந்தப் பெண்ணோடும், ஒழுங்காக வாழவே மாட்டாயா? நானாவது பரவாயில்லை., மணமாகு முன்பே, விட்டு-விட்டாய். தொலைகிறது. ஆனால், மாதங்கி? மனைவி என்பதுகூட இல்லையே. ஆமாம், ஒரு தப்பு பொறுக்காமல் குதிப்பதற்கு, நீ என்ன, குற்றம் குறையே இல்லாத சுத்புத்திரனா?" என்று, ஆத்திரத்துடன் கேட்டாள்.

மாலியின் பேச்சில் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தவன், அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கி, "மாதங்கியை எங்கே பார்த்தாய்?" என்று, அந்த விவரம் மட்டும் கேட்டான்:

சற்றுத் திகைத்தபோதும், "அவளை, நான் பார்த்தேனா? இதென்ன கதை?" என்று, தோளைக் குலுக்கினாள், ஸ்வர்ணமாலா.

பார்வையில் சிறு ஏளனத்துடன், "கதையல்ல. நீ, அவளைப் பார்த்திருக்கிறாய். மற்றபடி, இப்படிக் கேட்டிருக்க மாட்டாய்." என்றான் அவன்.

"ஏனோ? நீ, மாதங்கியைப் பிரிந்து வாழ்வது, எல்லோரும் அறிந்த விஷயம்தானே? பேச்சுவாக்கில்

தெரிந்துகொண்டேன்." என்று, விளக்கம் சொன்னாள், மாலி.

"சாத்தியமில்லை" என்றான், வித்யாதரன். "உடல்நிலை சரியில்லாத தோழியைப் பார்த்துக் கொள்ளுவதற்காக, மாதங்கி சென்றிருப்பதாகத்தான், வீட்டினர் உட்பட, எல்லாரும் எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால், நீ, அவளை, எங்கோ பார்த்தது மட்டுமின்றி, அவளோடு, நன்றாகப் பேசியும் இருக்கவேண்டும்..."

அவன் பேச்சில் குறுக்கிட்டு, "ஓகோ! எல்லாரும், அப்படியே நினைத்துக் கொண்டு, இருக்கட்டும் என்று நீயும், அவளை 'அம்போ' என்று விட்டுவிட்டாயாக்கும்?" என்றாள், மாலி.

"அப்படி விடுவதானால், அவள் எங்கே என்று, உன்னிடம், நான் கேட்பானேன்? உனக்குச் சம்பந்தம் இல்லாததில் ஏன் தலையிடுகிறாய், என்று கேட்டு, உன்னை, விரட்டியிருக்க மாட்டேனா? சொல்லு, மாதங்கி எங்கே இருக்கிறாள்? எப்படி இருக்கிறாள்? அங்கே, என்ன செய்கிறாள்.?" என்று, அவளை வற்புறுத்தி விவரம். கேட்டான், வித்யாதரன்.

அவன் முகத்தை ஒருதரம் வெறித்துவிட்டு, "இதை, உனக்கு, நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், அவளது துன்பங்களின் மூல காரணம், என்னால் உனக்கு உண்டான நம்பிக்கையின்மை - பெண்கள் மீதான அவநம்பிக்கை என்று, மாதங்கி சொன்னாள். அதனால், ஒருவிதமான பிராயச் சித்தம் என்று, வைத்துக் கொள். அவள், இப்போது, ஒரு யோகினி போல இருக்கிறாள். மெலிவைக் காட்டாதவாறு, வட்டமும் கட்டமுமாகக் கட்டிய போதும், மெலிந்திருப்பது, நன்றாகத் தெரிகிறது. சிரிக்கவே, மறந்த கண்கள். ஒரேயடியாக, மறக்கடித்து-

விடாதே." என்று, மாலி கூறுகையில், வித்யாதரன் இடையிட்டு, "எங்கே இருக்கிறாள்?" என்று, மீண்டும் கேட்டான்.

"ஏன், மறுபடியும் காயப்படுத்தவா?"

"இல்லை. காயம் ஆற்ற. நான் தெளிந்துவிட்டேன், மாலி. சொல்லு, என் மனைவி எங்கே இருக்கிறாள்?" என்று, மாலியை வற்புறுத்திக் கேட்டு, மாதங்கியின் இருப்பிடத்தை, வித்யாதரன் அறிந்து கொண்டான்.

"நானாவது பாதி, உன் பணத்துக்காகவும், உன்னை விரும்பினேன், வித்யா. ஆனால், பாவம், மாதங்கிக்கு, உன்னைத் தவிர, வேறு நினைப்பே இல்லை. அவளை நல்லபடியாக வைத்துக் கொள்." என்று சொல்லி, அவன் விரும்பிய தகவலைக் கொடுத்தாள், மாலி.

அன்றிலிருந்து மூன்றாவது தினம், மாதங்கி வேலை செய்த 'பார்லரு'க்குப் போய் நின்றான் வித்யாதரன்.

35

வித்யாதரன் மாதங்கியைப் பார்த்தபோது, அவள் ஒரு பெண்ணுக்கு, காலில், 'பெடிக்யூர்' செய்து கொண்டிருந்தாள்.

காத்திருப்போர் அமர்ந்திருக்கும் பகுதியில் அமராமல், அவன் உள்ளே செல்லவும், "இது, பெண்களுக்கான பார்லர், சார். ஆண்களுக்கு, அந்தப் பக்கம் இருக்கிறது." என்றாள், நிர்வாகி.

சொன்னவளைத் திரும்பிக் கூடப் பாராமல், "நான் அழகுபடுத்திக் கொள்ள வரவில்லை." என்றான் அவன்.

அவன் குரலில், மாதங்கி சட்டென நிமிர்ந்து நோக்க,

அவளையே பார்த்தபடி, "நான் மாதங்கியோடு பேச வேண்டும்., உடனே." என்ற வித்யாதரன், நிர்வாகியின் முகம் மறுப்பைக் காட்டவும், அவர் அதை வார்த்தையில் சொல்லுமுன், "நான், அவளுடைய கணவன்." என்று சேர்த்துச் சொன்னான்.

அப்போதும் தயங்கி, "இங்கே சம்பளம் போக, அவரவர் வேலைக்கு, ஓர் ஊக்கத் தொகையும் உண்டு. அதனால்..." என்று நிர்வாகி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வித்யாதர் பர்சை எடுத்தான்... "எவ்வளவு சொல்லுங்கள்."

மாதங்கியும், கூடப் பணிபுரியும் இன்னொரு பெண்ணிடம், ஏதோ சொல்லிவிட்டு, எழுந்து வந்தாள், "ஓர் அரைநாள் விடுப்பு வேண்டும், மேடம்," என்றாள், நிர்வாகியிடம்.

கணவன் மனைவி, இருவர் முகங்களையும் பார்த்துவிட்டு, நிர்வாகி தலையாட்ட, "வாருங்கள்," என்று, மாதங்கி முன்னே நடந்தாள்.

இருவரும் செல்வதை நோக்கியவாறு, "இவள், இனி வேலைக்கு வருவது சந்தேகம்தான்" என்று, நிர்வாகி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வித்யாதரன் திரும்பி, "சந்தேகமே படாதீர்கள்." என்றுவிட்டுப் போனான்.

வெளியே சென்று கதவு சாத்தியதும், "தேடவேண்டாம் என்று எழுதியிருந்தேனே, ஏன் வந்தீர்கள்?" என்று, மாதங்கி, சற்று வெறுத்த குரலில் வினவினாள்.

மனைவியின் ஆத்திரம் புரிந்தவனாய், "உன்னிடம் பேசவேண்டும், மாதங்கி, முக்கியமாக, உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்மா." என்றான், அவன், தணிவாகவே.

"மன்னிப்பா? கேட்டுவிட்டீர்கள், அல்லவா? சரி

மன்னித்தேன். அவ்வளவுதானே?" என்று, மாதங்கி திரும்பவும் சட்டென முன்னே வந்து, அவளது வழியை மறைத்து நின்று, "பேசவும் வேண்டும், என்றேனேம்மா. நிறையப் பேசவேண்டும்." என்றான், அவன்.

"நாம் பேசுவதற்கு, எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதனால், வழியை விட்டீர்களானால்..."

"மாதங்கி, ப்ளீஸ்." என்றான், வித்யாதரன். "நீ பேசுவதற்கு இடம் கொடாமல், நான் ஒரு பெரிய பிழை செய்தேன். அது, நம்மைப் பிரிக்கும் அளவுக்குக் கொண்டு வந்து விட்டது. தயவு பண்ணி, நீயும், அதே தப்பைச் செய்யாதே. என் நியாயத்தையும், கொஞ்சம் காது கொடுத்துக் கேள்." என்று, கெஞ்சுதலாகக் கேட்டான்.

"என்ன நியாயம்?" என்று, கசப்புடன் கேட்டாள், மாதங்கி. "ஒரு பெண்ணுக்கு, ஒரு கணவன் செய்யக் கூடிய பெரிய அநியாயம், அவளைக் கொலை செய்வதையும் கூடக் கொடியது, அவளது வயிற்றுச் சிசு, தன்னுடையது இல்லை என்பது. அதையே சொல்லிவிட்டு, வேறு என்ன..." என்றவளுக்கு, மேலே பேச மாட்டாமல், உதடு நடுங்கத் தொடங்கவும், பேச்சைநிறுத்தித் தன்னை அடக்கிக் கொள்ள முயன்றாள்.

அவள் அருகே நெருங்கி, தணிந்த குரலில், "சாரி, மது. நான் செய்தது, மன்னிக்க முடியாத குற்றம்தான். ஆனால், அதற்கு, ஒரு காரணம் இருக்கிறது." என்று, அவன் கூறவும், சட்டென நிமிர்ந்து, "என்ன காரணம்? உங்கள் மனைவி நடத்தை கெட்டவள் என்பதா?" என்று சீறினாள், மாதங்கி.

'காரிடா'ரில் சென்றுகொண்டிருந்த சிலர் திரும்பிப் பார்த்தார்கள்.

தன்னை அடக்கிக் கொள்ளப் பாடுபட்டுக் கொண்டி-ருந்த மாதங்கியை, மற்றவர் பார்வையிலிருந்து

மறைத்தாற்போல, அவள் முன்னேவந்து நின்றான், வித்யாதரன். "ப்ளீஸ், மாதங்கி, எல்லாம் பேசுவோம், ஆனால், தனிமையில் பேசுவோம். நாலுபேர் பார்க்க, இங்கு வேண்டாம் வா." என்று அழைத்தான்.

மனமற்றவளாக, ஒரு கணம் தயங்கிய மாதங்கி, ஒரு முடிவுக்கு வந்து, "எங்கே?" என்று கேட்டாள்.

வித்யாதரன் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குள் செல்லும்வரை, இருவருமே, எதையும் பேசவில்லை. அறையினுள் சென்று, அவளை சோஃபாவில் அமர்த்திய பிறகு, விட்ட இடத்திலிருந்து வித்யாதரன் தொடர்ந்தான். "உன் கோபம் நியாயமானதுதான், மாதங்கி, அதனால், உன் காலைப் பிடித்து மன்னிப்புக் கேட்கவும், தயாராகத்தான் நானும், இங்கே வந்தேன்." என்று தணிவாகவே தொடங்கினான்.

ஆனால், "நீங்கள் கையைப் பிடித்தாலும், காலைப் பிடித்தாலும், விஷயம் அதேதானே? நான் அப்படிப் பட்டவள் என்று, நீங்கள் எண்ணினீர்கள். அப்புறம் நம் வாழ்வில் என்ன இருக்கிறது?" என்றாள், மாதங்கி எங்கோ பார்த்தபடி.

"இல்லை, எளிதில், உன்னை நான் அப்படி எண்ணி-யிருக்க மாட்டேன். உன்னை, அந்த மாதிரி நினைப்பது, எனக்கு எவ்வளவு கடினமாக இருந்தது என்று, உனக்குத் தெரியாது, மாதங்கி," என்றவன், அவள் குறுக்கே பேச இடம் கொடாது, வேகமாகச் சொன்னான். "நீலனின் கடிதம், ஒரு மரண வாக்குமூலம், மாதங்கி. சாகிற சமயத்தில், யாரும் பொய் சொல்லமாட்டார்கள். அதைச் சத்தியவாக்கு என்றுகூடச் சொல்வதுண்டு.

"அன்று 'சத்யவாக்'காக இருந்தது, இப்போது, திடீரென்று, எப்படி வேறாகிவிட்டது?"

மனைவியின் கிண்டலில் கோபமுறாமல், "ஏனென்றால், அது, மரண வாக்குமூலமே அல்ல." என்றான் வித்யாதரன், நிதானமாக.

மாதங்கி திகைத்து நோக்கவும், "நீலன் சாவதாகவே இல்லையம்மா." என்று, அவன் விள்க்கியதும், அவளுக்குப் புரியவில்லைதான்.

விஷம் அருந்திச் செத்துவிட்டவனைப் போய், அவன் சாவதாக இல்லை என்றால் எப்படி?

எப்படி என்று, அவள் கணவன் விளக்கினான்.

நீலநாராயணன் உட்கொண்டிருந்த விஷத்தின் அளவு, அவனைச் சாகடிக்கக் கூடியது அல்ல. ஆனால், அவன் நடத்த இருந்த 'மன்னிப்பு' நாடகத்தை அரங்கேற்றாமல், வைத்தியத்தைத் தொடங்க, அவனுக்கு மனமில்லை. நாடகத்தின் பாதிப்பு. தேவையான அளவு, இராது என்று, எண்ணினான் போலும், ஆனால், பல்வேறு கெட்ட பழக்க வழக்கங்களினால்; சீர் கெட்டிருந்த அவனது உடலும், இந்தத் தாமதமும் சேர்ந்து, சாவைக் கொணர்ந்து விட்டன. "தற்கொலை போல நாடகம் நடித்து என்னை ஏமாற்றிவிட்டுப் பிறகு பிழைத்து விடுவதே, நீலனின் திட்டம். கடைசி நேரத்தில், தன்னை எப்படியாவது காப்பாற்றும்படி, டாக்டரிடம், கெஞ்சியிருக்கிறான்.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று, அன்றளவில் முதன்முறையாக வெறுப்போ, கோபமோ இல்லாத குரலில், வியப்புடன் மாதங்கி கேட்டாள்.

"உன்னால்தான்" என்று லேசாக முறுவலித்தான், வித்யாதரன்.

"நானா?" என்றவளின் அருகே அமர்ந்து, கையைப் பற்றி அழுத்தி, "நீதானே, முதலில், டாக்டர் அங்கே எப்படி

வந்தார் என்று கேட்டாய்? அதுதான் அடிப்படை. முதலில் இல்லாவிட்டாலும், பிறகு, அது மனதில் உறுத்திக்-கொண்டே இருந்தது. நீலன் குழறிப் பேசுவதைக் கேட்ட யாரோ வாடிக்கையாளர் டாக்டரை வரவழைத்ததாக, லேசாக மூச்சு வாங்கத் தொடங்கியிருந்த அந்த நேரத்திலும், நீலன் சொன்னான். அப்படி, அவனது வழக்கமான வைத்தியரைக் கூப்பிட்டு அனுப்பி வைத்த வாடிக்-கையாளர், எப்படியும், நன்றாகப் பழக்கமானவராக இருக்கவேண்டும்., அப்படிப்பட்டவர், நீலனுக்கு என்ன ஆயிற்று என்று, அன்றையத் தினத்தைக் குறிப்பிட்டு விசாரிக்காமல் இருப்பாரா? இந்த எண்ணத்தோடு, இந்தப் பயணத்தில், நம் வாடிக்கையாளர்கள் அத்தனை பேரையும் சந்தித்தேன். ஒருவர்கூட, அந்தமாதிரிக் கேட்கவில்லை.

"கடைசி வாடிக்கையாளர் வரையும், ஆராய்ந்து முடித்ததும், டாக்டரைக் கூப்பிட்டு விசாரித்தேன். அங்கேயும், அவன் குயுக்தியாகத்தான் செயல்பட முயன்றிருக்கிறான். முதலில், வாடிக்கையாளர் போல, நீலனே, டாக்டரைக் கூப்பிட்டிருக்கிறான். அறியாத, தெரியாத ஆட்கள் சொல்கிற இடத்துக்கெல்லாம் போக முடியாது என்று அவர் மறுத்துவிடவே, இவனே, அவரை வரச் சொல்லியிருக்கிறான். குரலை மாற்றிப் பேசிய போதும், முதலில் அழைத்ததும் நீலன்தான் என்கிறார், டாக்டர்.

"கூரியரி'ல் செருப்பும் கடிதமும் அனுப்பியது, இன்னுமொரு குள்ளநரித்தனம். நேரே பார்த்து, வாயால் சொல்லமுடியாததை எல்லாம், எழுத்தில் கொணர்ந்-தாயிற்று. மறுக்க முடியாத சான்றாக, ஒற்றைச் செருப்பையும், வைத்து, அனுப்பிவிட்டான். அவன் இடத்தில் நடந்தது, உனக்கும் அவனுக்கும் மட்டும்தானே, தெரியும்? செருப்பு இருக்கும்போது, நீ, அங்கே சென்றதை மறுக்க முடியாதே.

"விசாரித்து அறிந்ததும், யோசித்துப் புரிந்து கொண்டதுமாக, நடந்தது எல்லாமே, நன்றாகத் தெரிந்து போயிற்று. உன்னிடம் சொல்வதற்காக ஓடிவந்தால், நீ இல்லை. இந்த ஒன்றரை மாதங்களாக, நான் என்ன பாடுபட்டுவிட்டேன், தெரியுமா?"

மனைவியின் கையைத் தன் இருகைகளுக்கிடையே எடுத்து வைத்துக் கொண்டு, வித்யாதரன் கேட்டான். "எல்லாமே சொல்லிவிட்டேன். இன்னும்கூட, என்னை மன்னிக்க முடியாதா, மதும்மா?"

முடியாது என்று, ஒரேயடியாகக் கூற முடியாமல், "எனக்கு, எவ்வளவு கஷ்டமாக இருந்தது, தெரியுமா?" என்று, மாதங்கி முணுமுணுத்தாள்.

அவளை இழுத்துத் தோளோடு சாய்த்துக்கொண்டான், அவன். "என் வேதனை, இன்னும் அதிகம். அது உனக்குத் தெரியுமா? இந்தமாதிரிப் பேசிவிட்டோமே, என்று மறுகி மறுகி நொந்தேன்."

"பேசியிருக்கக் கூடாதுதானே?" என்றாள், அவள் அப்போதும், குறையோடு.

"பேசியிருக்கக் கூடாதுதான்." என்று உடனே ஒப்புக் கொண்டான், அவன். ஆதரவாய், அவள் கூந்தலை வருடியபடி, "ஆனால் கொஞ்சம் யோசித்துப் பார், கிட்டத் தட்ட இதேமாதிரி சந்தேகம், நீ, என்மீது படவில்லையா?" என்று கேட்டான்.

"நானா?" என்று, புருவம் சுருக்கிக் கேட்டவள், உடனேயே தெளிந்து, "மேனகா." என்றாள்.

"ஆமாம், அவளேதான், அவளைப் பற்றி எச்சரித்தாயே, நினைவிருக்கிறதா? அதன் அர்த்தமும், இதுதானே?"

"அது,... அரை மயக்கம் தரக்கூடிய எதையாவது

உங்களுக்குக் கொடுத்து, மறுக்கும் வலுவிழக்கச் செய்து, தப்பு செய்ய வைத்துவிடுவார்களோ என்றுதான்..." என்றவளுக்கு, அதற்கு மேல், அழுத்தமாகப் பேச முடியவில்லை. ஏனெனில், மேனகாவைப் பற்றி, வித்யா பேசும்போதெல்லாம், அவள் சஞ்சலப்பட்டது, உண்மை தானே? அந்த சஞ்சலம் ஏற்பட்டிருக்கக் கூடாதுதானே?

அதையே, அவனும், "எந்த மயக்கத்திலும், நான் இன்னொருத்தியைத் தொடுவேன் என்று, நீ நினைக்கலாமா?" என்று கேட்டான்.

உதட்டைக் கடித்து, சற்று மவுனமாக இருந்தாள். மாதங்கி. இவனைப் பிரிந்து, அவளால், இனி வாழமுடியுமா? இந்த ஒன்றரை மாதத் தவிப்பு, நிச்சயமாக முடியாது, என்றது. அவனும் வேதனைப் பட்டிருக்கிறான். இப்படித் தேடி, ஓடி வந்து மன்னிப்பும் கேட்பவன் - மன்னிப்புக் கேட்பது, அவனுக்கு, எவ்வளவு கடினம் என்பது அவளுக்குத் தெரியும். அப்படிப்பட்டவன், அவளை இனித் தனியாக, இங்கே விட்டுவிட்டுப் போகப் போவதில்லை. ஆனால், சேர்ந்து வாழ்வது என்றால், மனம் தெளிவாக இருக்கவேண்டும். 'ஜெராக்ஸ்' காப்பி மாதிரி, ஒரே மனமாக இருப்பது கடினம் என்றாலும், ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

இந்த எண்ணத்தோடு, மேனகா பற்றிய விவரங்களை, வித்யாதரனிடம் கூறினாள்.

குறுக்கிடாமல் கேட்டிருந்துவிட்டு, "ஆக, இந்த மிரட்டலுக்குப் பயந்துதான், அவன் இருப்பிடத்துக்குப் போனாயா? ஏதாவது ஒரு காரணம் இருந்திருக்கும் என்றுதான், நானும் நினைத்தேன். ஆனால், இப்படி என்று, எண்ணவில்லையே! எவ்வளவு பயமும் கவலையும் அனுபவித்திருப்பாய், கண்மணி"! என்று, அந்தக்

கலையை அடியோடு போக்குகிறவன் போல, அவளை நிறுத்து அணைத்து, இதமாய் வருடினான்.

அவளுக்கும் மிகவும் ஆறுதலாகத்தான் இருந்தது. ஆயினும் தன் தீர்மானம் நினைவு வர, "ஆனால் முன்பு வேறு" என்று தொடங்கியவளின் உதட்டில் விரல் வைத்து, அவள் பேச்சை நிறுத்தினான், அவள் கணவன்.

"முன்பு, என் கண்களை நீலன் என்கிற திரை மறைத்திருந்தது, மாதங்கி. என்னையே நம்புவது போல, நான் நம்பியிருந்தவன், அவன். அந்தத் திரை அகன்றதுமே, நான், உள்ளது, உள்ளபடி பார்க்கத் தொடங்கி விட்டேனே."

"நீலனிடம், ஏன், அவ்வளவு பிரியம், உங்களுக்கு?"

"அவன் நெருங்கி வந்த நேரம். அவனுக்குத் தெவைப்பட்ட ரத்தம், என் பிரிவு என்று, தற்செயலாகத் தெரிந்து, ரத்தம் கொடுத்துவிட்டு வந்தபோதுதான், மாலியின் சுயரூபம் தெரிந்தது. அதில், நான் ரொம்பவும் நொந்து போனேன், மது. அப்பாவின் பணம் தவிர, நம்மிடம் எதுவும் இல்லை., நம்மால் எதுவும் முடியாது, என்கிற மனச் சோர்வு. தேவதாஸ் மாதிரி. அதாவது, காதலுக்காக எனலாம். இது, என் தன்னம்பிக்கையை, அடியோடு அழித்துவிட்டது. அப்போதுதான் நீலன் என்னைத் தேடி வந்தான். அவன் நிலைமை அவன் நிலைமை என்று, அவன் சொன்னது, என்னைவிட மோசமானது. ரொம்பவே, தன் துன்பத்தை ஒதுக்கி, எனக்குத் தைரியமூட்டி, என்னால் முடியும் எனும் தன்னம்பிக்கையைத் தந்தான். உண்ணவே பிடிக்காமல் நான் இருந்தபோது, எனக்கு, ஊட்டிக்கூட விட்டிருக்கிறான். டென்னிஸ், அது, இது என்று, மற்ற விஷயங்களில் ஈடுபட வைத்து, உற்சாக மூட்டினான். சுருக்கமாகச் சொன்னால்,

என்னை மீண்டும் திடமான மனிதனாக்கினான். அது, தடையின்றி என் ரத்தத்தைப் பெறவும், என் மூலம் நோகாமல், நிறையச் சம்பாதிக்கவும் என்று, இப்போது தோன்றுகிறது. ஆனால், அப்போது, எனக்கு மிகவும் தேவைப்பட்டது." என்று, அவனும் மறையாமல் உரைத்தான்.

அவள் கேளாமலே, கொசுறாக, இன்னொன்றும் சொன்னான். "நீலனிடம் அவ்வளவு பிரியம் வைத்திருந்த போதும், அவன் இல்லாத சமயத்தில், நம் திருமணத்தை, அவசரமாக ஏன் நடத்தினேன் என்று, நான் பலமுறை யோசித்திருக்கிறேன், மது. மடத்தனமாக, நொந்து-மிருக்கிறேன். பொதுவாகப் பெண்களின் விரோதியான அவன், நம் திருமணத்தைத் தடுத்து நிறுத்தி விடுவானோ, என்கிற அச்சம்தான். அப்போது என்னை இயக்கி-யிருக்கிறது என்று, இப்போதுதான் புரிகிறது." என்று, கணவன் கூறவும், மாதங்கியின் முகம் பூவாய் மலர்ந்தது.

வாகாக, அவனோடு அவள் ஒட்டிக் கொள்ள, கனிவோடு குனிந்து, அவளது முன்னுச்சியில் முத்த-மிட்டான், அவன்.

இந்த நெருக்கமே சுகமாக, அசையக்கூட மனமில்லாமல் இருவரும் அப்படியே, அமர்ந்திருந்தனர்.

சற்று நேரம் பொறுத்து, ஏதோ நினைவு வந்தாற்போல, மாதங்கியை எழுப்பி, சற்று விலக்கி நிறுத்திப் பார்த்துவிட்டு,

"மாலி சொன்னது, சரிதான். இன்னும் கொஞ்சநாளில், காற்றிலேயே கரைந்து விடுவாய் போல, மெலிந்-திருக்கிறாயே.! உண்பதே இல்லை போல. வா, போய் எதையாவது, சாப்பிடலாம்" என்று அழைத்தான்.

அவனது லேசாக ஒட்டியிருந்த கன்னங்களைப்

[illegible]த்துவிட்டு, "நீங்களும்..." என்று தொடங்கியவளுக்கு, [illegible]லை பேச முடியாமல், 'குபுக்'கென்று, கண்ணீர் வந்தது.

"ஸ்ஷ்... என்று, கண்களைத் துடைத்து, அவளைச் [illegible]'ll.டம் அழைத்துச் சென்றான், வித்யாதர்.

இலகுவாகப் பேசியவாறே, இருவரும் உணவருந்தினர்.

"என்னம்மா, உன் அண்ணன்? மறுவாழ்வு [illegible]யத்திலிருந்து, திடீர் என்று, அந்தர்த்தானம் ஆகி-[illegible]ிட்டான்? ஒரு நன்றிகூடச் சொல்லுவதில்லையாக்கும்?" என்று, கணவன் கேட்க விழிவிரித்துப் பார்த்தாள் அவள்.

"பாவம், அங்கெல்லாம், தேடிப் போனீர்களா?" என்று, [illegible] நீட்டி, அவன் கன்னத்தை ஒருதரம் வருடிவிட்டு, "அண்ணனும் பாவம்தான். முதலில், என்னோடு நீங்களும் [illegible]ருவீர்கள், கூடை நன்றியையும் நேரிலேயே கொட்டி-[illegible]விடலாம் என்று, எண்ணம். பிறகு, எனக்காக, வாயை மூடிக் [illegible]கொண்டு உட்கார்ந்திருக்கிறார்." என்றவள் சிவா, சுரபி பற்றி எல்லாம் சொன்னாள்.

"இப்போது, எனக்கு ஒன்று சொல்லுங்கள். என்னதான் கோபம் என்றாலும், உங்கள் சொல்லை மீறிக் கேட்டேன் என்பதற்காக, அப்படியா, வீட்டைவிட்டுக் கிளம்பி விடுவது? அத்தை, பாவம்., தவித்துப் போனார்கள்." என்று குறைப்பட்டாள், அவள்.

"ம். கூம்? அத்தைமட்டும் தான் தவித்தார்களா? உங்களுக்கு ஒன்றுமே இல்லையாக்கும்?" என்று கேலி பேசிவிட்டு" அதுவும் உன்னால்தான்" என்றான் அவன்.

"என்னாலா?"

"ஆமாம். நீதானே, நடுநிலையிலிருந்து, யோசிக்கச் சொன்னாய்? நீ வேதனைப் படுவது தெரிகிறது. உடம்பின் ஒவ்வோர் அணுவும், உன்னை அணைத்து, ஆறுதல்

படுத்தத் துடிக்கும்போதும், நடுநிலையில் இருந்து எப்படி யோசிப்பதாம்? அதுதான் ஓடிவிட்டேன்." என்று வித்யாதர் கூறியவிதத்தில், மாதங்கிக்குச் சிரிப்பு வந்தது.

"துன்பம் தாளாமல், தப்பு முடிவு எதுவும் செய்து விட்டிருப்பாயோ என்று, எத்தனை தரம், நான், உடல் நடுங்கியிருப்பேன், தெரியுமா? 'நீ, அப்படிப்பட்ட கோழை அல்ல, தைரியசாலி' உருப்போட்டு, உருப்போட்டு, என்னை, நானே திடப் படுத்திக் கொள்வேன்." என்றான், அவன் ஒருதரம்.

"கோழை? நா...ன்" என்று, கேள்வியாய் நோக்கியவள் உடனே விஷயம் புரிந்து, முறுவலித்தாள். மறுப்பாகத் தலையசைத்து, "என் பெற்றோர் இறந்து, அண்ணனும் போதைக்கு அடிமையான போது, கடவுளிடம் நான் கேட்டது, மனோதிடத்தைத்தான். வாழ்வதற்கான வல்லமையைத்தான். அப்போதே, கடவுள், அதைக் கொஞ்சம், அதிகமாகவே, எனக்குத் தந்துவிட்டார்." என்று சிரித்தாள்.

மனைவியின் கையைப் பற்றி, அழுத்தி, "தாங்க், காட்!" என்று, உணர்ந்து சொன்னான், வித்யாதரன்.

"இது பிரச்சினை; இதற்கு, இதைத்தீர்க்க என்ன செய்வது, என்று யோசிப்பேனேதவிர, பிரச்சினைகளுக்குப் பயந்து, செத்துவிடலாம் என்று, நான் நினைத்துப் பழக்கம் இல்லை." என்றவளுக்கு, நீலனிடமிருந்து, கணவனைக்-காப்பதற்காகச் சாவை ஒரு வழியாகத் திட்டமிட்டது நினைவு வந்தது. அதைச் சொன்னால், கணவன் மேலும் வருந்துவானே என்று எண்ணிப் பேச்சை, வேறு புறம் திருப்பினாள்.

இப்படி விளையாட்டும், விஷயமுமாகப் பேசியபடியே, இருவரும் உணவருந்தி முடித்தனர்.

கடைசியாக, ஐஸ் கிரீமைப் பார்த்ததும், இருவருக்கும் பழைய நினைவு வந்தது. இதில் தொடங்கி, இன்பமும் துன்பமுமாக என்னென்ன அனுபவங்கள்!

அங்கே உட்கார்ந்து உண்ண மனமில்லாமல், கையில் கிண்ணத்தோடு, பக்கவாட்டுக் கதவு வழியே தோட்டத்துக்குச் சென்று, அங்கிருந்த பலவண்ணக் குடைகளுள் ஒன்றின் கீழ் அமர்ந்து, உண்ணலாயினர்.

சற்று நேரம் அமைதியில் கழிய, யாரோ, "மாதங்கி" என்று, உரக்க அழைத்தார்கள்.

திகைப்புடன் இருவரும் திரும்பும் போதே, "என்னம்மா?" என்றபடி, ஊஞ்சலிலிருந்து குதித்து, ஒரு சிறுமி ஓடினாள்.

"அம்மையார் புகழ் ஊரெங்கும் பரவி, பிள்ளைகளுக்கு, உங்கள் பெயரைச் சூட்டத் தொடங்கி விட்டார்களே!" என்று, மனைவியின் காதோரம் குனிந்து கிசுகிசுத்தான், வித்யாதரன்.

மாதங்கி முகம் மலர்ந்து முறுவலிக்கும்போதே, "சே, பாப்பா பேரா இது" என்று சலித்துக் கொண்டது, ஒரு குரல். "எனக்கு, அந்தம்மா மாதங்கி, அந்த பத்தினித் தெய்வத்தோட முகத்தை, ஒரு தபாவச்சும் பார்த்து விடவேணுமின்னு ஆசை. ஒத்தைக் காலிலே மட்டும் செருப்போட., கேணால் மாணலா, அவங்க ஓடினதைப் பின்னாடி இருந்துதான் பார்த்தேன். ஆனா, அதுக்கு மின்னாடி என்னாப் பேச்சு தெரியுமாடா? 'ஏண்டா, ஒருபொண்ணு, உயிருக்கு மன்றாடுறேன், உனக்குக் கேலியா இருக்கா? மாதங்கின்னா அர்த்தம் தெரியுமாடா? பராசக்திடா, மகாகாளியடா! காளியையா, நீ பெண்டாள நினைத்தே? பாவீ, வாங்கிக்கோ, இந்தச் செருப்பாலேயே, உன்னை அடித்துக் கொல்லப் போறேன், ஒவ்வொரு

அடிக்கும், என் பேருக்கு, என்ன அர்த்தம் இன்னு புரிந்துக்கோ.' அப்படீன்னு, அடி பின்னிட்டாங்க. 'போடா நீ என்ன வேணுமானாலும் பண்ணிக்கடா'ன்னு அந்தம்மா ஓடினப்போதான் லேசா எட்டிப்பார்த்தேன். இப்பத்-தண்ணி கொண்டு வைக்கப் போனா அந்தாளு நம்மைக் குதறுவான்னு சத்தம் காட்டாம ஓடிட்டேன். அப்படியே, எங்கப்பாருக்கு ஒடம்பு சரியில்லேன்னு தகவல் வந்து, ஊருக்கும் போயிட்டேனா, அப்பால, இங்கேவந்து சேர்ந்தேன். ஆனா, அந்தம்மா மூஞ்சைப் பார்க்கணும்னு. மட்டும் ஒரு ஆசை..."

சிலையாய் அமர்ந்திருந்தவளின் கையிலிருந்த கிண்ணத்தை வாங்கி, உள்ளே கொண்டுவைத்து, 'பில்'லில் கையெழுத்திட்டுவிட்டு வந்த வித்யாதரன், மனைவியை எழுப்பி, அறைக்கு அழைத்துச் சென்றான்.

கணவனை நிமிர்ந்து நோக்கி, "அந்தச் செருப்பை எப்படித் தொலைத்தேன் என்று, இப்போது நினைவு வந்துவிட்டது. வித்யா, 'வாடி' என்று, அவன் என் தோளைத் தொட்டதும், ஒருமாதிரி வெறிப்பிடித்தமாதிரி, ஆகிவிட்டது. கைசோர அடித்துவிட்டுக் கடைசியாகப் 'போடா' என்று, அவன் மேலேயே செருப்பை வீசிவிட்டு, வெளியே வந்துவிட்டேன்., என்ன நடந்தது என்று, தெளிவாக இல்லாமல், இவ்வளவு நாள், ஒரே குழப்பமாகவே..." என்று சோர்வுடன் நிறுத்தியவளை, ஆதரவாக அணைத்து, ஆறுதல் படுத்தினான், வித்யாதரன்.

"'சைகாலஜி'ப்படி, மிகவும், வெறுப்பாகவும், வேதனையாகவும் இருப்பவைகளை, மனம் தானாகவே, ஒதுக்கிவைத்துவிடும் என்கிறார்கள். உன் மனமே, வேண்டாம் என்று விட்டுவிட்டதை, ஏன் கண்ணம்மா, இழுத்து வைத்து வேதனைப் படுகிறாய்? விட்டுவிடு, கண்மணி," என்று, பரிவுடன் தேற்றினான்.

விழி உயர்த்தி, கணவன் முகத்தை, ஒரு திகைப்புடன் நோக்கினாள், மாதங்கி. "ஆனால், விவரம், உ... உங்களுக்கும் தெரியாதே., நான் போனது, தெரியும். ஆனால், அங்கே என்ன நடந்தது என்று தெரியாமலே, என்னைத் தேடி வந்தீர்களா?" என்றாள், குரல் நடுங்க.

அவள் முகத்தைக் கைகளில் ஏந்தி முத்தமிட்டான், வித்யாதரன். "அதுதான் சொன்னேனேம்மா. மறைத்திருந்த நிரை விலகிய பிறகு, உன்னைப் பற்றி அறிய, எனக்கு, வேறு என்ன வேண்டும்? தேவையற்றது என்பதோடு, முடிந்து போனதும்கூட. அனாவசியமாக, அந்தத் துன்பங்களை, ஏன் கிளர வேண்டும்? நீயும்கூட மறந்து விடும்மா."

கண்மூடித் திறந்து, "முடிந்து போனவை. விட்டு-விடவேண்டும்தான். ஆனால், எவ்வளவு பலி கொடுத்து விட்டோம்.! நம் இனிய இல்லறம்., நம் மகிழ்ச்சி., மிகப் பெரிய பலியாக, நம் குழந்தை..." என்றபோது, தன்னையறியாமல், மாதங்கியின் கண்களில் நீர் பெருகிச் சிந்தியது.

சிரமப்பட்டுத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "சாரிடா, கண்மணி. எல்லாம், என் முட்டாள்த் தனத்தினால் வந்தது. தயவு பண்ணி மன்னித்து விடும்மா." என்று அவள், கண்ணீரைத் துடைத்துவிட்டான், வித்யாதரன். "இனி இந்தக் கண்களில், நான் கண்ணீரையே பார்க்கக்கூடாது. என்ன?" என்றான் கனிவோடு.

கணவனின் கனிந்த முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தவளின் கண்களில், மீண்டும் நீர் நிறைந்தது.

"சொன்னேனில்லையா?" என்றபடி, அவளது கண்களைத் திரும்பவும் துடைக்க முயன்றவனின் கையைப் பற்றி. "இது ஆனந்தக் கண்ணீர், வித்தி. ஒன்றுபட்ட மனதுடன், இனி நாம் பெறப் போகும் பிள்ளைகளை

எண்ணி... உங்களை மாதிரியே, ஒரு மகன், அப்புறம்..." என்று, முகம் மலர்ந்து விகசிக்க அவள் உரைத்தபோது, அவன் விழிகளிலும், லேசாக நீர் அரும்பியது.

அதுவும் ஆனந்தக் கண்ணீரே.!

*****

வல்லமை தந்துவிடு

ரமணிசந்திரன்

